ஜூன் 2021


WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

# நடப்பு நிகழ்வுகள்







**1. COVID-19 திரிபுகளை அடையாளங்காண, "பன்னாட்டு நோய்க் கிருமி கண்காணிப்பு வலையமைப்பை" தொடங்கவுள்ளதாக அறிவித்துள்ள நாடு எது?**



அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**ஆ) ஐக்கியப் பேரரசு ☑**

இ) இந்தியா

ஈ) ஜெர்மனி

✓ உலக நலவாழ்வு அமைப்பு (WHO) மற்றும் உலகெங்கிலும் உள்ள பிற தலைவர்களுடன் இணைந்து, இங்கிலாந்து, "பன்னாட்டு நோய்க்கிருமி கண்காணிப்பு வலையமைப்பை" உருவாக்கும் என்று இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் அறிவித்துள்ளார். இந்த வலையமைப்பு, புதிய COVID-19 திரிபுகளை அடையாளங்கண்டு, நிகழ்நேர தரவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**2. NIDHI4COVID2.0 என்பதை அமைத்துள்ள அமைச்சகம் எது?**

அ) பாதுகாப்பு அமைச்சகம்

ஆ) சுகாதார அமைச்சகம்

இ) வர்த்தக அமைச்சகம்

**ஈ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

✓ மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையானது 'NIDHI4COVID2.0'ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இது உயிர்வளி, மருத்துவ பாகங்கள், உபகரணங்களின் பெயர்வுத்திறன், நோயறிதல்போன்ற துறைகளில் தீர்வுகளை வழங்குகிற இந்தியாவில் பதிவுசெய்யப்பட்ட துளிர் நிறுவனங்களுக்கு நிதியளிக்கும். COVID-19 சிகிச்சைக்கு தேவையான பல்வேறு மருத்துவ உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் இறக்குமதி செய்யப்படுவதால், அவற்றை இந்தியாவில் தயாரிப்பதை ஊக்குவிப்பதற்காக இது செய்யப்படுகிறது.

---

**3. ரோசாலிண்ட் பிராங்க்ளின் ஊர்தியானது எந்தக் கோளுக்கு ஏவுவதற்காக ESA'ஆல் கட்டப்பட்டு வருகிறது?**



அ) திங்கள்

ஆ) வெள்ளி

**இ) செவ்வாய் ☑**

ஈ) வியாழன்

✓ செவ்வாய் கோளுக்கு ஏவப்படவுள்ள ஐரோப்பிய விண்வெளி முகமை (ESA) உருவாக்கி வரும் ரோசாலிண்ட் பிராங்க்ளின் ஊர்தி அதன் சோதனைகளின்போது வெற்றிகரமான செயல்பாடுகளை நிரூபித்துள்ளது.

✓ 2023'இல் தொடங்க திட்டமிடப்பட்டுள்ள ESA'இன் எக்ஸோமார்ஸ் திட்டத்தின் ஒருபகுதியாகும் இந்த ஊர்தி. முன்னதாக, இந்தப்பணி, 2020ஆம் ஆண்டில் தொடங்க திட்டமிடப்பட்டது. ஆனால், தற்போது நிலவிவரும் COVID தொற்று பரவலால் அப்பணிகள் தாமதமானது.

---

**4. நைராகோங்கோ மலை அமைந்துள்ள நாடு எது?**



அ) நைஜீரியா

ஆ) அல்பேனியா

**இ) காங்கோ ☑**

ஈ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

✓ நைராகோங்கோ மலை என்பது காங்கோ மக்களாட்சிக் குடியரசில் அமைந்துள்ள ஒரு செயலிலுள்ள அடுக்கு எரிமலை ஆகும். 3,470 மீட்டர் உயரங்கொண்ட இவ்வெரிமலை சமீபத்தில் வெடித்து எரிமலைக்குழம்பை கக்கியது. இதன் காரணமாக அங்கிருந்த வீடுகள் மற்றும் நெடுஞ்சாலைகள் பலத்த சேதத்துக்கு உள்ளாகின.

---

**5. உலக கடலாமை நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**




அ) மே 22

**ஆ) மே 23 ☑**

இ) மே 21

ஈ) மே 20

✓ ஆண்டுதோறும் மே.23 அன்று உலக கடலாமை நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. இது கடலாமைகள் மற்றும் அவற்றின் வாழ்விடங்கள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. "Turtles Rock!" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

✓ அமெரிக்க ஆமை மீட்பு என்ற இலாப நோக்கற்ற அமைப்பால் 2000ஆம் ஆண்டிலிருந்து பரவலாக இந்த நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

---

**6. நடப்பாண்டில் (2021) வரும் உலக அளவீட்டியல் (Metrology) நாளுக்கான கருப்பொருள் என்ன?**




அ) Precision in Measurement

**ஆ) Measurement for Health ☑**

இ) Accuracy Matters

ஈ) Measurement for Science

✓ கடந்த 1875ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட மீட்டர் சாசனத்தை நினைவுகூரும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் மே.20 அன்று உலக அளவீட்டியல் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. அறிவியல் கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்கம், தொழிற்துறை உற்பத்தி மற்றும் பன்னாட்டு வர்த்தகம் அத்துடன் வாழ்க்கைத்தரம் மற்றும் பன்னாட்டுச் சூழலின் பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்தும் ஓர் சீரான அளவீட்டு முறையை இந்தச் சாசனம் வழங்குகிறது.

✓ "Measurement for Health" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்தச் சிறப்பு நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**7. ஆண்டுதோறும், "ஆப்பிரிக்கா நாள்" கொண்டாடப்படுகிற தேதி எது?**




**அ) மே 25 ☑**

ஆ) மே 26

இ) மே 27

ஈ) மே 28

✓ ஐம்பத்தேழு ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட 'ஆப்பிரிக்க ஒற்றுமை' அமைப்பின் நிறுவுநாளை நினைவுகூரும் வகையில், 'ஆப்பிரிக்கா நாள்' கொண்டாடப்படுகிறது. அவ்வமைப்பானது கடந்த 1963ஆம் ஆண்டு மே 25 அன்று நிறுவப்பட்டது. அதன்பின், 2002ஆம் ஆண்டில் அவ்வமைப்பு, 'ஆப்பிரிக்க ஒன்றியம்' என்று நிறுவப்பட்டது. ஆப்பிரிக்காவின் வலிமை மற்றும் பன்முகத்தன்மையையும், ஆப்பிரிக்க ஒற்றுமையை வளர்ப்பதற்கும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

✓ "Arts, Culture and Heritage: Levers for Building the Africa We Want" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**8. ஆண்டுதோறும் மே.25 அன்று, நாளமில்லா சுரப்பிச் சீர்கேடுடன் தொடர்புடைய எந்தச் சிறப்பு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது?**




அ) உலக நீரிழிவு நாள்

**ஆ) உலக தைராய்டு நாள் ☑**

இ) உலக எலும்புத்துளை நோய் நாள்

ஈ) உலக அடிசன் நோய் நாள்

✓ கடந்த 2008ஆம் ஆண்டு முதல், ஆண்டுதோறும் மே.25 அன்று உலக தைராய்டு நாள் உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

✓ தைராய்டு நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐரோப்பிய தைராய்டு சங்கமும், அமெரிக்க தைராய்டு சங்கமும் இணைந்து உலக தைராய்டு நாளை நிறுவின. தைராய்டு என்பது மிகப்பொதுவான நாளமில்லா சுரப்பிச்சீர்கேடாகும். தைராய்டின் அறிகுறிகளுக்கு சிகிச்சையளிப்பதிலும், எடை குறைக்க உதவுவதிலும் தண்ணீர் முக்கியப்பங்கு வகிப்பதாக ஜல் சக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

**9.** **வேளாண் துறையில் ஒத்துழைப்புக்காக, எந்த நாட்டுடனான 3 ஆண்டு வேலை திட்டத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது?**

அ) ஐக்கிய அரபு அமீரகம்

**ஆ) இஸ்ரேல் ☑**

இ) பிரான்ஸ்

ஈ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்



✓ இந்தியா–இஸ்ரேல் நாடுகளுக்கு இடையேயான வேளாண் கூட்டமைப்–பை வலுப்படுத்துவதற்காக வளர்ந்துவரும் இருதரப்பு கூட்டணி மற்றும் இருநாட்டு உறவுகளில் வேளாண்மை மற்றும் நீர் துறைகளை மையப்ப–டுத்தி அங்கீகாரம் வழங்கி, வேளாண் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்–கான மூன்றாண்டுகால செயல்திட்ட ஒப்பந்தத்தில் இருநாடுகளும் கையெழுத்திட்டுள்ளன. இந்தியாவும் இஸ்ரேலும் "இந்திய–இஸ்ரேல் வேளாண் சிறப்புத்திட்ட மையங்கள்" மற்றும் "இந்திய–இஸ்ரேல் சிறப்பு கிராமங்கள்" திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன.

---

**10.** **2020-21 காலப்பகுதியில் அதிகபட்ச அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்த மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

ஆ) கர்நாடகா

**இ) குஜராத் ☑**

ஈ) மகாராஷ்டிரா



✓ 2020–21ஆம் நிதியாண்டில், இந்தியா, மொத்தம் $81.72 பில்லியன் அமெரிக்க டாலர் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்துள்ளது. கடந்த 2019–20 நிதியாண்டுடன் ஒப்பிடும்போது இது 10% அதிகமயக்கும். 2020–21 நிதியாண்டில் அதிகபட்ச அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்த மாநிலங்களு–ள் குஜராத் முதலிடத்தைப் பிடித்துள்ளது. ஈர்க்கப்பட்ட மொத்த அந்நிய நேரடி முதலீட்டு வருவாயில் 37% பங்கை குஜராத் மாநிலம் கொண்டுள்–ளது. அதைத்தொடர்ந்து மகாராஷ்டிரா (27%), கர்நாடகா (13%) ஆகிய மாநிலங்கள் உள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நாட்டின் பொருளாதார வளர்ச்சி –7.3 சதவீதமாக சரிவு**

நாட்டின் பொருளாதாரம் கடந்த நிதியாண்டில் –7.3 சதவீதமாக சரிவைச் சந்தித்துள்ளது என ஒன்றிய அரசு தெரிவித்தது. இதுகுறித்து தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்ட புள்ளிவிவரத்தில் மேலும் தெரிவித்–திருப்பதாவது: கடந்த 2020–21 நிதியாண்டில் இந்திய பொருளதாரம் –7.3 சதவீத சரிவைச் சந்தித்துள்ளது. இது, எதிர்பார்த்ததைக் காட்டிலும் குறைவான பின்னடைவேயாகும். உலகின் மிகமோசமான COVID தொற்று இந்தியாவை தாக்குவதற்கு சற்று முன்னதான நான்காவது காலாண்டில் (ஜனவரி–மார்ச்) இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வேகம் மற்றும் விகிதம் சிறப்பான நிலையில் காணப்பட்டது. அதன் காரணமாகவே நாட்டின் பொருளாதாரம் அஞ்சிய அளவுக்கு வீழ்ச்சியை சந்திக்கவில்லை.

ஆசியாவின் மூன்றாவது மிகப் பெரிய பொருளாதார பலத்தைக் கொண்ட இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளா்ச்சி ஜனவரி–மார்ச் காலகட்டத்தில் 1.6 சதவீதமாக இருந்தது. இது, முந்தைய டிசம்பர் காலாண்டு வளர்ச்சியான 0.5 சதவீதத்தைக் காட்டிலும் குறிப்பிடத்தக்க அளவு அதிகமாகும். முந்தைய ஆறு மாதங்கள் கரோனா பேரிடரின் மோசமான பாதிப்பிலிருந்து மீண்டு வருவதை எடுத்துக்காட்டும் வகையில் டிசம்பர் காலாண்டு வளர்ச்சி அமைந்திருந்தது. அதேசமயம், 2020 ஜனவரி– மார்ச் காலகட்டத்தில் நாட்டின் பொருளாதாரம் 3 சதவீத வளர்ச்சியை பதிவு செய்திருந்தது.

COVID பேரிடரை கட்டுக்குள் கொண்டுவர தேசிய அளவில் பொதுமுடக்க–ம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நுகர்வு மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இது, 2020 ஏப்ரல் முதல் 2021 மார்ச் வரையிலான காலகட்டத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி –7.3 சதவீதம் அளவுக்கு சரிவு ஏற்பட முக்கிய காரணமாக அமைந்தது.

கடந்த 1979–80ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதாரம் 5.2 சதவீதமாக சரிவடைந்ததே இதுவரை மோசமான வளர்ச்சியாக பார்க்கப்பட்டது. இந்த நிலையில், 40 ஆண்டுகளுக்கு பிறகு, கரோனா தொற்றுகாரணமாக, நாட்டின் பொருளாதார வளர்ச்சி 2020–21ஆம் நிதியாண்டில் மிக மோசமான நிலைக்கு சென்றுள்ளது.

முந்தைய 2019–20ஆம் நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் நான்கு சதவீதமாக காணப்பட்டது என NSO தெரிவித்து–ள்ளது. நடப்பு 2021–22ஆம் நிதியாண்டில் நாட்டின் பொருளாதாரம் 10–11 சதவீத வளர்ச்சிகண்டு ₹145 லட்சம் கோடி அளவை மீண்டும் எட்டும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில், கரோனா இரண்டாவது அலை பொருளாதார வளர்ச்சியில் தேக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

---

**2. எவரெஸ்டில் ஏறி சாதனை படைத்த சீனாவை சேர்ந்த மலையேற்ற வீரர்!**

எவரெஸ்ட் மலைமீது ஏறி சாதனை படைத்துள்ளார் சீனாவைச் சேர்ந்த பார்வையற்ற மலையேற்ற வீரர். எவரெஸ்டில் ஏறிய ஆசியாவை சேர்ந்த முதல் பார்வையற்றவர், உலகின் மூன்றாவது பார்வையற்றவர் என்கிற சாதனையையும் அவர் சொந்தமாக்கியுள்ளார்.

சீனாவை சேர்ந்தவர் ஷாங் காங் (44), பார்வையற்றவரான இவர், மலையேறும் வழிகாட்டிகளுடன் எவரெஸ்ட் மலை மீது ஏறத்தொடங்கி, கடந்த மே 24ஆம் தேதி உச்சியை அடைந்தார். பின்னர் பாதுகாப்பாக காத்மாண்டு திரும்பினார்.

---

**3. சிஐஐ கூட்டமைப்பின் புதிய தலைவராக நரேந்திரன் தேர்வு**

இந்திய தொழிலக கூட்டமைப்பின் புதிய தலைவராக டி வி நரேந்திரன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதுகுறித்து CII வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: டாடா ஸ்டீல் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியும், நிர்வாக இயக்குநருமான டி வி நரேந்திரன் CII கூட்டமைப்பி–ன் புதிய தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர், 2021–22 ஆண்டுக்கான புதிய தலைவராக இருப்பார். முன்பு இப்பதவியில் இருந்த கோட்டக் மஹிந்திரா வங்கியின் தலைமைச்செயலதிகாரியும், நிர்வாக இயக்குநருமான உதய் கோட்டக்கிடமிருந்து நரேந்திரன் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டுள்ளார்.

CII கூட்டமைப்பில் நரேந்திரன், மண்டல, மாநில, தேசிய அளவில் பல்வே–று பொறுப்புகளை வகித்துள்ளார். மேலும், ஹீரோ மோட்டோகார்ப்பின் தலைவரும், தலைமைச் செயல் அதிகாரியுமான பவன் முன்ஜால் CIIஇன் துணைத்தலைவராக பொறுப்பேற்றுக்கொண்டுள்ளதாக அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**4. சேதி தெரியுமா?**

**மே.22:** 'A76' என்று பெயரிடப்பட்ட உலகின் மிகப் பெரிய பனிப்பாறை அண்டார்டிகா பனிப்பிரதேசத்திலிருந்து பிரிந்து கடலில் மிதக்கத் தொடங்–கியிருப்பதாக ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**மே.23:** கரோனா காரணமாக இந்தியாவில் இந்த ஆண்டு ரத்து செய்யப்ப–ட்ட 17 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி அடுத்த ஆண்டு நடைபெறும் என்று சர்வதேச கால்பந்து சங்கக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

**மே.24:** தமிழகத்தில் காஞ்சிபுரம் கோவில்கள் உள்பட இந்தியாவில் ஆறு இடங்கள் UNESCO'இன் உத்தேச உலகப் பாரம்பரிய தளங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

**மே.25:** நேபாளத்தில் பிரதமர் சர்மா ஒலி அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியடைந்தால், நாடாளுமன்றத்தைக் கலைத்து 6 மாதங்களில் தேர்தல் நடத்த அந்நாட்டு அதிபர் வித்யாதேவி பண்டாரி உத்தரவிட்டார்.

**மே.26:** தமிழகச் சட்டப்பேரவை காங்கிரஸ் கட்சித் தலைவராக ஸ்ரீபெரும்புதூர் ச ம உ., கு செல்வபெருந்தகை நியமிக்கப்பட்டுள்ளார்.

**மே.27:** வங்கக்கடலில் உருவான அதிதீவிர 'யாஸ்' புயல் ஒடிஸாவின் பாலசோர் அருகே கரையைக் கடந்தது.

**மே.28:** தமிழகத்தில் தளர்வில்லாத கரோனா முழு ஊரடங்கை ஜூன்.7 வரை நீட்டித்துத் தமிழக அரசு உத்தரவிட்டது.

---

**1.** **2020-21ஆம் ஆண்டில் இந்தியாவின் முதலீட்டாளர் நாடுகளின் பட்டியலில் முதலிடம் வகிக்கிற நாடு எது?**

அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஆ) சீனா

**இ) சிங்கப்பூர் ☑**

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

✓ 2020-21 காலப்பகுதியில் இந்தியாவில் அந்நிய நேரடி முதலீடு வரத்து குறித்த அண்மைய தகவல்களின்படி, சிங்கப்பூர் 29% உடன் முதலிடத்தி -லும், ஐக்கிய அமெரிக்க நாடுகள் 23%) மற்றும் மொரீஷியஸ் (9%) ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.

✓ மொத்த அந்நிய நேரடி முதலீடு வரத்துகளில் சுமார் 44% பங்கைக் கொண்டு 'கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள்' துறையானது முதலிடத்தில் உள்ளது. அதைத்தொடர்ந்து கட்டுமான நடவடிக்கைகள் (13%) மற்றும் சேவைத்துறை (8%) ஆகிய துறைகள் உள்ளன.

---

**2.** **மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளை மாநில கூட்டுறவு வங்கிக -ளுடன் இணைப்பதற்கு அனுமதி வழங்கும் நிறுவனம் எது?**

**அ) ரிசர்வ் வங்கி ☑**

ஆ) நபார்ட்

இ) நிதி அமைச்சகம்

ஈ) மாநில அரசு

✓ வங்கி ஒழுங்குமுறை (திருத்த) சட்டம், 2020 ஆனது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் மாநில கூட்டுறவு வங்கிகளுடம் இணைந்து அறிவிக்கப்பட்டுள்ளது. வங்கிகளின் இந்த ஒருங்கிணைப்பிற்கு ரிசர்வ் வங்கி தனது அனுமதியைத் தர வேண்டும். அண்மையில், ரிசர்வ் வங்கி, பல்வேறு நிபந்தனைகளுக்கு உட்பட்டு மாநில கூட்டுறவு வங்கிகளுடன் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளை இணைப்பது குறித்து பரிசீலிப்ப -தாக கூறியது. இதில் சம்பந்தப்பட்ட மாநில அரசால் ஒரு முன்மொழிவு செய்யப்படவேண்டும். NABARD'இன் பரிந்துரை, நிதியுதவி தொடர்பான உத்தரவாதம் போன்றவை அடங்கும்.

---

**3.** **CPEC என்பது எந்த உலகளாவிய முன்முயற்சியின் முதன்மை திட்டமாகும்?**

அ) Global Infrastructure Connectivity Alliance



**ஆ) Belt and Road Initiative ☑**

இ) EU Connectivity partnership

ஈ) Central Asia Regional Economic Cooperation Program

✓ சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித்தடம் (CPEC) என்பது சீனாவின் பட்டை மற்றும் பாதை முன்முயற்சியின் (BRI) முதன்மை திட்டமாகும்.

✓ இந்தத் திட்டத்தை பாகிஸ்தான் ஆக்கிரமித்த காஷ்மீர் (PoK) வழியாக செல்வதால், இந்தியா, இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. சீனாவும் பாகிஸ்தானும் அண்மையில் தங்களது 70 ஆண்டுகால அரசியல் உறவுகளை கொண்டாடின. பாகிஸ்தானுடனான $60 பில்லிய -ன் டாலர் CPEC திட்டத்தை சீனா மீண்டும் தக்கவைத்துள்ளது.

---

**4.** **சமீபத்தில், IAEA அணுசக்தி கண்காணிப்பு ஒப்பந்தத்தை நீட்டிக்க ஒப்புக்கொண்ட நாடு எது?**

அ) ஐக்கிய அரபு அமீரகம்

ஆ) இஸ்ரேல்

**இ) ஈரான் ☑**

ஈ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

✓ பன்னாட்டு அணுசக்தி முகமையை (IAEA) அணுவாற்றல் தளங்களில் கண்காணிப்பு கேமராக்களை ஒரு மாதத்திற்குள் வைக்க அனுமதிக்கும் ஒப்பந்தத்திற்கு ஈரான் ஒப்புக்கொண்டுள்ளது. IAEA'இன் தலைவர் ரபேல் கிராஸியின் கருத்துப்படி, இந்த ஒப்பந்தம் ஜூன்.24 அன்று முடிவடையும்.

---

**5.** **இந்திய ரிசர்வ் வங்கி (RBI) புத்தாக்க மையத்தின் தலைமைச் செயலதிகாரியாக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ) R காந்தி



**ஆ) இராஜேஷ் பன்சால் ☑**

இ) நந்தன் நிலேகனி

ஈ) உர்ஜித் படேல்

✓ ரிசர்வ் வங்கி புத்தாக்க மையமானது ஆதார் நிறுவனக் குழுவின் உறுப்பினரான இராஜேஷ் பன்சாசலை அதன் தலைமைச் செயலதிகாரி -யாக நியமித்துள்ளது. அவர் முன்னர் ரிசர்வ் வங்கியில் தொழில்நுட்பம், நிதி சேர்க்கை மற்றும் கொடுப்பனவு முறைகள் போன்ற பல்வேறு துறைகளில் பணியாற்றியுள்ளார். UIDAI'இல் இந்தியாவின் நேரடி பயன் -கள் பரிமாற்றத்தை வடிவமைப்பதில் அவர் முக்கிய பங்குவகித்தார்.

---

**6.** **"பாதுகாக்கப்பட்ட கோள் அறிக்கை" என்றவோர் அறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?**

அ) FAO

**ஆ) UNEP ☑**

இ) IUCN

ஈ) IMF

✓ பாதுகாக்கப்பட்ட கோள் அறிக்கை என்பது ஐநா சுற்றுச்சூழல் திட்டத்தால் (UNEP) வெளியிடப்படுகிற ஓர் அறிக்கையாகும். இந்த அறிக்கை உலகெ -ங்கிலும் உள்ள பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் நிலையை மதிப்பிடுகிறது. பாதுகாக்கப்பட்ட கோள் அறிக்கை 2020'இன் படி, உலகளாவிய சமூகம், பாதுகாக்கப்பட்ட பகுதியின் பாதுகாப்பு குறித்த இலக்கை நோக்கி பெரும் முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. ஆனால் தரம்குறித்த அதன் உறுதிப்பா -ட்டை நிறைவேற்றவில்லை.

---

**7.** **இந்தியாவுடனான கட்டற்ற வர்த்தக பேச்சுவார்த்தைகளுக்கான ஆலோசனை செயல்முறையை தொடங்கியுள்ள நாடு எது?**

அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்



**ஆ) ஐக்கியப் பேரரசு ☑**

இ) ஆஸ்திரேலியா

ஈ) பிரான்ஸ்

✓ இந்தியாவுடனான கட்டற்ற வர்த்தக பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வணிகபிரதிநிதிகள் சம்பந்தப்பட்ட பதினான்கு வார ஆலோசனை செயல்முறையை ஐக்கியப்பேரரசு தொடங்கியுள்ளது. இந்தச்செயல்முறை செப்-அக்டோபரில் எதிர்பார்க்கப்படும் முறையான கட்டற்ற வர்த்தக பேச் -சுவார்த்தைகளுக்கு முன்னால் நடத்தப்படும். விஸ்கி, கார்கள் மற்றும் சேவைகள்போன்ற பிரிட்டிஷ் தயாரிப்புகளுக்கான மிகப்பெரிய சந்தை -யாக இந்தியா பார்க்கப்படுகிறது.

---

**8.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற கில்லர்மோ லாசோ, எந்த நாட்டின் அதிபராக பதவியேற்றார்?**

**அ) ஈக்வடார் ☑**



ஆ) ஜிம்பாப்வே

இ) தென்னாப்பிரிக்கா

ஈ) ஆஸ்திரேலியா

✓ கில்லர்மோ லாசோ, ஈக்வடாரின் புதிய அதிபராக பதவியேற்றார். நாடு பெரும் பொருளாதார மற்றும் சமூக சவால்களை எதிர்கொண்டுள்ள இச் சமயத்தில் அவர் பதவியேற்றுள்ளார். பதவியேற்ற பின்னர், பொருளாதார நிபுணரான சிமன்கியூவாவை அவர் தனது நிதியமைச்சராக நியமித்தார். ஈக்வடார் என்பது தென் அமெரிக்காவின் மேற்கு கடற்கரையில் பூமத்திய ரேகைக்கு அருகில் அமைந்துள்ள ஒரு நாடாகும்.

---

**9.** **அழிவின்விளிம்பிலிருக்கும் ஆப்பிரிக்காவை பூர்வீகமாககொண்ட பூக்குந்தாவரமான 'ஆப்பிரிக்க வயலட்', பின்வரும் எந்த மாநிலத்தில் முதன்முறையாக காணப்பட்டுள்ளது?**

அ) கேரளம்

ஆ) கோவா

**இ) மிசோரம் ☑**

ஈ) சிக்கிம்



- ✓ இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் போபாலைச் சார்ந்த அறிவியலாளர்கள் மிசோரம் மாநிலத்தில் பூக்குந்தாவரமான ஆப்பிரிக்க வயலட்டுகளின் ஒரு வகையினைக் கண்டறிந்துள்ளனர்.
- ✓ *Didymocarpus vickifunkiae* என்று பெயரிடப்பட்ட, அழிவில் விளிம்பிலுள்ள இவ்வினங்கள் இந்தியாவில் முதல்முறையாக அறிவியல் பூர்வமாக பதிவுசெய்யப்பட்டுள்ளன. தான்சானியா மற்றும் கென்யாவை பூர்வீகமா -கக்கொண்ட இந்த ஆப்பிரிக்க வயலட்டுகள், மரங்களில் வளர்ந்து மழை -க்காலங்களில் வெளிர் இளஞ்சிவப்பு பூக்களை உருவாக்கும் தொற்று தாவரமாகும்.

---

**10.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற மேகேதாட்டு அணை அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

**ஆ) கர்நாடகா ☑**

இ) கேரளா

ஈ) தெலுங்கானா



- ✓ கர்நாடகாவின் மேகேதாட்டில் காவிரியாற்றின் குறுக்கே அணை கட்டு -வதில் விதிமுறைகளை மீறியதாகக்கூறப்படும் அறிக்கையை சமர்ப்பிக் -க தேசிய பசுமைத்தீர்ப்பாயம் ஒரு குழுவை அமைத்துள்ளது.
- ✓ முன்னதாக இப்பகுதியில் அணைகட்ட, கர்நாடகா திட்டமிட்டிருந்தது. மேலும் இத்திட்டத்தை காவிரி நீர் மேலாண்மை ஆணையம் இரண்டு முறை ஒத்திவைத்தது. உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப் -பதைக்காரணம்காட்டி தமிழ்நாடு அரசு தனது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. உருமாறிய கரோனா தீநுண்மிகளுக்கு புதிய அடையாளப் பெயர்**

பல்வேறு நாடுகளில் கண்டறியப்பட்ட உருமாறிய கரோனா தீநுண்மிக -ளை எளிதில் அடையாளம் காணும் நோக்கில் அவற்றுக்குப் புதிய பெய -ர்களை உலக நலவாழ்வு அமைப்பு வழங்கியுள்ளது. அதன்படி, இந்தியா -வில் கண்டறியப்பட்ட கரோனா தீநுண்மிகளுக்கு 'கப்பா', 'டெல்டா' என்ற பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

உருமாறிய கரோனா தீநுண்மிகள், அவை முதன்முதலில் கண்டறியப்பட் -ட நாடுகளின் பெயரால் அழைக்கப்படுவதற்கு பல நாடுகள் எதிர்ப்பு தெரி -வித்த நிலையில் இந்த அறிவிப்பை உலக சுகாதார அமைப்பு வெளியிட் -டுள்ளது. மரபணுமாற்றமடைந்த உருமாறிய கரோனா தீநுண்மிகள் பல நாடுகளில் பரவின. அவற்றை வேறுபடுத்திக் காட்டுவதற்காக அறிவியல் பெயார்கள் வழங்கப்பட்டன.

உருமாறிய கரோனா தீநுண்மிகளுக்கு கிரேக்க எழுத்துகளைப் பெயரா -க வைக்கலாம் என்று உலக சுகாதார அமைப்பு முடிவு செய்தது.

**புதிய பெயர்கள்:** இந்தியாவில் முதன்முதலாகக் கண்டறியப்பட்ட பி.1.617.1 வகை கரோனா தீநுண்மிக்கு 'கப்பா' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் கண்டறியப்பட்ட பி.1.617.2 வகை தீநுண்மிக்கு 'டெல்டா' என பெயர்சூட்டப்பட்டுள்ளது. பிரிட்டனில் முதன்முதலில் கண்டறியப்பட்ட பி.1.1.7 என்ற உருமாறிய வகை கரோனா தீநுண்மிக்கு 'ஆல்பா' எனவும், தென்னாப்பிரிக்காவில் தோன்றிய பி.1.351 என்ற தீநுண்மிக்கு 'பீட்டா' எனவும், பிரேஸிலில் கண்டறியப்பட்ட பி.1 வகை கரோனா தீநுண்மிக்கு 'காமா' எனவும் பெயரிடப்பட்டுள்ளது.

பிரேஸிலில் கண்டறியப்பட்ட மற்றொரு பி.2 வகை உருமாறிய கரோனா தீநுண்மிக்கு 'ஜீட்டா' எனவும், அமெரிக்காவில் முதன்முதலாகக் கண்டறி -யப்பட்ட கரோனா தீநுண்மிகளுக்கு 'எப்சிலான்', 'லோட்டா' எனவும் உலக சுகாதார அமைப்பு பெயர்சூட்டியுள்ளது.

**2. 1 முதல் 8ஆம் வகுப்புவரை அனைவரும் தேர்ச்சி: எந்த மாணவரையும் தேக்கநிலையில் வைக்கக்கூடாது**

தமிழகத்தில் 2020-21ஆம் கல்வியாண்டில் 1 முதல் 8ஆம் வகுப்புவரை அனைவரும் தேர்ச்சிபெற்றுள்ளதாகப் பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள் -ளது.

தமிழ்நாட்டில் மாநிலப்பாடத்திட்டத்தின்கீழ் செயல்படும் அனைத்து அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் மற்றும் சுயநிதிப் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் அனைவரும் முழு ஆண்டுத் தேர்வு மற்றும் 10, 11ஆம் வகுப்புப்பயிலும் மாணவர்கள் அனைவரும் பொதுத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக்கல்வி உரிமைச்சட்டம் 2009'இன்கீழ் எட்டாம் வகுப்பு முடியும் வரையில் எந்த ஒரு மாணவனையும் தேக்கநிலையில் வைத்தல்கூடாது. அதாவது அனைவரும் தேர்ச்சி அடையவேண்டும். எந்தக்குழந்தையும் பள்ளியை விட்டு வெளியேறக்கூடாது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. கரோனா சிகிச்சை: புதிய வழிகாட்டி நெறிமுறை வெளியீடு**

கரோனா சிகிச்சைக்கான புதிய வழிகாட்டி நெறிமுறைகளை மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலர் ஜெ ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ளார்.

**இதுகுறித்து வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு:**

இரத்த ஆக்சிஜன் அளவு 94 சதவீதத்துக்கு அதிகமாக இருப்பவர்கள் குறைந்த பாதிப்புடையவர்கள் என்றும், 90-94 வரை உள்ளவர்கள் மிதமான பாதிப்புடையவர்கள் என்றும், 90'க்கும்கீழ் உள்ளவர்களை தீவிர பாதிப்புக்குள்ளானவர்களாகவும் கருதவேண்டும்.

ஆக்சிஜன் அளவு, 90 முதல் 94'க்குள் இருப்பவர்கள், ஆரம்ப சுகாதார நிலையம், கரோனா சிகிச்சை மையங்களில் சிகிச்சைபெறலாம். ரத்த ஆக்சிஜன் அளவு, 90'க்குகீழ் உள்ளவர்களை மட்டுமே, மருத்துவமனை -யில் அனுமதித்து சிகிச்சையளிக்க வேண்டும். ஆக்சிஜன் அளவை அதிகரிக்கும் வகையிலான குப்புறக்கவிழ்ந்து படுப்பதை உறுதிசெய்ய வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**4. ஹர்ஷ் வர்தனுக்கு உலக சுகாதார அமைப்பு விருது**

புகையிலை கட்டுப்பாடு தொடர்பாக தனி நபர் அல்லது அமைப்புகள் செய்த பணிகளை பாராட்டி உலக சுகாதார அமைப்பு ஆண்டுதோறும் சிறப்பு விருது வழங்கி வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டுஉலக புகையிலை ஒழிப்பு தினத்தையொட்டி, உலக சுகாதார அமைப்பு இயக்குநரின் சிறப்பு அங்கீகார விருது மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தனுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2019-ம் ஆண்டு இந்தியாவில் இ-சிகரெட்டை ஒழிக்கவும், சூடுபடுத்தப்பட்ட புகையிலைப் பொருட்களை ஒழிக்கவும் சட்டம் இயற்றியதை பாராட்டும் வகையில் ஹர்ஷ் வர்தனுக்குஇந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**1. உயர்நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களின் வழக்கு நிலை மற்றும் வழக்கு விவரங்களை அறிய உதவும் செயலியின் பெயர் என்ன?**

அ) e–Justice

**ஆ) e–Courts Services ☑**

இ) e–Nyay

ஈ) e–Netra



✓ தமிழ், தெலுங்கு, பஞ்சாபி, ஆங்கிலம், ஹிந்தி, அஸ்ஸாமி, பெங்காலி, குஜராத்தி, கன்னடம், காசி, மலையாளம், மராத்தி, நேபாளி மற்றும் ஒடியா உள்ளிட்ட 14 மொழிகளில் "இ–கோர்ட்ஸ் சர்வீசஸ் திறன்பேசி செயலிக்கான" கையேட்டை இந்திய உச்சநீதிமன்றத்தின் மின்னணு குழு வெளியிட்டுள்ளது. இந்தச் செயலி வழக்குரைஞர்கள், குடிமக்கள், காவலர்கள் மற்றும் பிற அரசு நிறுவனங்களுக்கு பயன்தருவதை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**2. 'புவி அமைப்பு கூர்நோக்கு ஆய்வகத்தை' உருவாக்கவுள்ள விண்வெளி நிறுவனம் எது?**

**அ) NASA ☑**

ஆ) ISRO

இ) ESA

ஈ) JAXA

✓ அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான NASA, ஒரு புவி அமைப்பு கூர்நோக்கு ஆய்வகத்தை உருவாக்கவுள்ளது. அது காலநிலை மாற்றம், பேரிடர் தணிப்பு, காட்டுத்தீயை எதிர்த்துப்போராடுவது மற்றும் நிகழ்நேர வேளாண் செயல்முறைகளை மேம்படுத்துவது தொடர்பான முக்கிய தகவல்களை வழங்கும். இந்த வடிவமைப்பு, செயற்கைக்கோள்களின் தொகுப்பை உள்ளடக்கியது. அது புவியின் முழுமையான 3D மாதிரியை அடிப்பாறை முதல் வளிமண்டலம் வரை உருவாக்கும்.

---

**3. விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு நோய்கள் பரவாமல் தடுக்க WHO மற்றும் அதன் பங்காளர்கள் அமைத்த குழுவின் பெயர் என்ன?**

**அ) ஒரு நலவாழ்வுக் குழு ☑**

ஆ) உலக நலவாழ்வுக் குழு

இ) விலங்குவழி நோய்கள் குழு

ஈ) உலக நலக்குழு

✓ WHO ஆனது FAO, UNEP மற்றும் விலங்குகள் நலத்துக்கான உலக அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து, விலங்குகளிடமிருந்து மனிதர்க–ளுக்கு நோய்கள் பரவாமல் தடுப்பதற்காக நிபுணர் குழுவொன்றை அமைத்துள்ளது. 'One Health' உயர்மட்ட நிபுணர் குழு என பெயரிடப்பட்ட இது, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியால் தொடங்கப்பட்ட ஒரு முயற்சியாகும்.

✓ இடர் மதிப்பீட்டை உருவாக்குவதற்கும், விலங்குவழி நோய்ப்பரவலைத் தடுப்பதற்கு, பயன்தரும் நடைமுறைகளை ஏற்படுத்துவதற்கும் இது ஐநா அமைப்புகளுக்கு அறிவுறுத்தும்.

---

**4. ஒருநிறுத்த (One–Stop) மையங்கள் என்பவை கீழ்காணும் எந்த நடுவண் அமைச்சகத்தின் முதன்மை திட்டமாகும்?**

அ) நலவாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சகம்

**ஆ) பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ☑**

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) AYUSH அமைச்சகம்

✓ பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டமைச்சகமானது ஒரு–நிறுத்த மையங்களை அமைப்பதாக அறிவித்துள்ளது. இத்திட்டம் பொது மற்றும் தனிப்பட்ட இடங்களில், குடும்பம், சமூகம் மற்றும் பணியிடத்தில் வன்மு–றையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இம்மையங்கள் முதன்முறையாக மத்திய வெளியுறவு அமைச்சகத்தின் ஒத்துழைப்புடன் 10 வெளிநாடுகளில் அமைக்கப்படவுள்–ளன.

---

**5. 2021'இல் அறிவிக்கப்பட்ட புதிய சமூக ஊடக விதிகளுடன் தொடர்புடைய அமைச்சகம் எது?**

அ) உள்துறை அமைச்சகம்

**ஆ) மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

இ) வெளியுறவு அமைச்சகம்

ஈ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

✓ மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், அனைத்து சமூக ஊடக இடையீட்டாளர்களிடமிருந்தும் புதிய 'தகவல் தொழில்நுட்பம் (இ–டைநிலை வழிகாட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல் நெறிமுறைக்குறியீடு) விதிகள், 2021' தொடர்பான இணக்க விவரங்களைக் கேட்டுள்ளது.

✓ புதிய சமூக ஊடக விதிகளுக்கு இணங்க, சமூக ஊடக தளங்களுக்கு வழங்கப்பட்ட மும்மாத அவகாசம் மே.26 அன்று முடிவடைந்தது. இந்தப் புதிய விதிகள் நெறிமுறைகளை விதிக்கின்றன மற்றும் மூன்றடுக்கு குறைதீர்க்கும் கட்டமைப்பை அமைக்க நிர்பந்திக்கின்றன.

---

**6. மே மாதத்தில் வரும் பௌர்ணமி விசாகம், எந்த மதத்தின் புனித நாளாக கருதப்படுகிறது?**

அ) சீக்கியம்

ஆ) சமணம்

**இ) பௌத்தம் ☑**

ஈ) இஸ்லாம்



✓ பௌத்த பூர்ணிமா அல்லது வைசாகம் என்பது மே மாத முழு நிலவன்று உலகிலுள்ள அனைத்து பௌத்தர்களாலும் சிறப்பாகக் கொண்டாடப்படும் பண்டிகை ஆகும். பொ ஆ மு 623ஆம் ஆண்டில் வந்த வைசாக நாளில் தான் புத்தர் பிறந்தார். அதேநாளில், புத்தர் ஞானமடைந்தார். தனது 80ஆம் ஆண்டில், மற்றொரு வைசாக நாளில் அவர் காலமானார்.

---

**7. எந்த மாதத்தின் முழு நிலவு, பொதுவாக, 'பூ திங்கள்' என்று குறிப்பிடப்படுகிறது?**

அ) ஏப்ரல்

**ஆ) மே ☑**

இ) ஜூன்

ஈ) ஜூலை



✓ உலகெங்கிலும் ஏராளமான பூக்கள் இருப்பதால் மே மாதம் வரும் முழு நிலவு, 'பூ திங்கள்' என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆண்டு, இது சந்திர கிரகணத்துடன் ஒத்துப்போனது. அதன்சமயம், நிலா சிவப்புவண்ணமாக காட்சியளித்தது. பூமிக்கு மிகநெருக்கமாக நிலா வந்ததால், அது பெரியதா–கவும் பிரகாசமாகவும் தோன்றியது. இந்த சூப்பர் பூ சிவப்பு நிலவு தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் தென்கிழக்காசியாவின் சில பகுதிக–ளில் மட்டுமே காணப்பட்டது.

---

**8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற 'டாஸ்மேனியன் டெவில்' என்றால் என்ன?**

அ) தீம்பொருள்

ஆ) கிரிப்டோகரன்சி

**இ) வனவிலங்கு ☑**

ஈ) நீர்மூழ்கிக்கப்பல்



✓ டாஸ்மேனிய பிசாசு என்றும் அழைக்கப்படும் *Sarcophilus harrisii* ஒரு மாமிச உண்ணியாகும். இது தசையால் உருவான உடலமைப்பு, கருப்பு ரோமங்கள், கொடுமையான வாசனை, அதிக ஒலியில் கத்தும் திறன், அதீத மோப்ப உணர்வு மற்றும் விரைவாக உணவு உண்ணும் பழக்கம் ஆகியவற்றை கொண்டுள்ளது.

✓ ஊடக அறிக்கையின்படி, கடந்த 3,000 ஆண்டுகளில், முதன்முறையாக ஆஸ்திரேலியாவின் பிரதான நிலப்பரப்பில் 7 விலங்குகள் பிறந்துள்ளன. அழிவின் விளிம்பிலிருக்கும் இவ்விலங்குகளை இது ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---


**9.நோய்ப்பூச்சிக்கட்டுப்பாட்டில் பயன்படுத்தப்படும் eDNA பகுப்பாய்வு என்றால் என்ன?**

அ) ecological DNA

**ஆ) environmental DNA ☑**

இ) entomological DNA

ஈ) endemic DNA



✓ சுற்றுச்சூழல் DNA (eDNA) என்பது மண், கடல்நீர் அல்லது வளிபோன்ற பல்வேறு சுற்றுச்சூழல் மாதிரிகளிலிருந்து சுற்றுச்சூழலுடனான தொடர்பு–களின்மூலம் சேகரிக்கப்பட்ட DNA ஆகும். ஜப்பானில், 2 இடங்களில் இருந்து, மேற்பரப்பு மண் மாதிரிகளிலிருந்து அர்ஜென்டினா எறும்பின் சுற்றுச்சூழல் DNA (eDNA)'ஐ ஆராய்ச்சியாளர்கள் வெற்றிகரமாக கண்ட–றிந்துள்ளனர். நோய்ப்பூச்சிக்கட்டுப்பாட்டில் பயன்படுத்தப்படும் 'வாழ்விட–த்தை புரிந்துகொள்ளுதல் செயல்முறை'க்கு இது பயன்படுத்தப்படலாம்.

---

**10. நாடோடி பழங்குடியினமான 'வான் குஜ்ஜார்', பொதுவாக, இந்தியாவின் எந்தப் பகுதியில் வசிக்கின்றனர்?**

**அ) இமயமலைப் பகுதி ☑**

ஆ) தக்காண பிராந்தியம்

இ) மேற்குத்தொடர்ச்சி மலை

ஈ) தெற்கு கடற்கரை



✓ நாடோடி பழங்குடியினமான 'வான் குஜ்ஜார்' பொதுவாக இமயமலை பகுதியில் வசிக்கின்றனர். அவர்கள் வழக்கமாக இமயமலையின் அடிவா–ரத்திலும், ஜம்மு–காஷ்மீர், ஹிமாச்சல பிரதேசம் மற்றும் உத்தரகண்ட் மாநிலங்களிலும் வசிக்கின்றனர். அண்மையில், அந்தப்பழங்குடியினரை மனிதாபிமானமற்ற நிலையில் வாழ கட்டாயப்படுத்தியதற்காக மாநில அரசை உத்தரகண்ட் உயர்நீதிமன்றம் குற்றஞ்சாட்டியது.

✓ உத்தரகாஷியில் உள்ள கோவிந்த் பாஷு விகார் தேசிய பூங்காவிற்குள் நுழைய அனுமதிக்க அஞ்சிய மாநிலத்திடம், அவர்களுக்கு தங்குமிடம் வழங்குமாறு உச்சநீதிமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. NHRC தலைவராக அருண் மிஸ்ரா பொறுப்பேற்பு**

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (NHRC) தலைவராக ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி அருண் மிஸ்ரா பொறுப்பேற்றார்.

முன்னதாக, அப்பொறுப்பிலிருந்த உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி HL தத்துவின் பதவிக்காலம் கடந்த ஆண்டு டிசம்பரில் நிறைவ–டைந்தது. இந்நிலையில், சுமார் 5 மாதங்கள் காலியாக இருந்த அந்தப் பதவிக்கு ஓய்வுபெற்ற நீதிபதி அருண் மிஸ்ரா தற்போது பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். உச்சநீதிமன்ற நீதிபதியாக கடந்த 2014 ஜூலையில் பொறுப்பேற்ற அருண் மிஸ்ரா, கடந்த ஆண்டு செப்டம்பரில் அந்தப் பொறுப்–பிலிருந்து ஓய்வுபெற்றார்.

---

**2. தேவேந்திரகுல வேளாளர் எனும் பொதுப்பெயரில் ஜாதிச்சான்றிதழ் வழங்கலாம்: தமிழ்நாடு அரசு உத்தரவு**

ஆறு ஜாதிப் பிரிவுகளை உள்ளடக்கி தேவேந்திரகுல வேளாளர் எனும் பெயரில் ஜாதிச்சான்றிதழ் வழங்கலாம் என்று மாவட்ட ஆட்சியர்களுக்கு தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச்செயலாளர் கே மணிவாசன் வெளியிட்ட உத்தரவு: பள்ளர், தேவேந்திர குலத்தான், குடும்பன், காலாடி, பண்ணாடி, கடையன் ஆகிய ஜாதிப்பிரிவுகளை உள்ளடக்கியவர்களை தேவேந்திரகுல வேளாளர் எனும் பொதுப்பெயரில் அழைக்கலாம் என பல்வேறு தரப்பினரும் அரசுக்குக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதுதொடர்பாக ஆய்வுசெய்து அரசுக்கு அறிக்கை அளிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சட்டத்துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் ஆகியோரைக்கொண்ட குழு அமைக்கப்பட்டது. இந்தக்குழு தமிழ்நாடு அரசுக்கு கடந்த ஆண்டு நவம்பர்.28'இல் அறிக்கை அளித்தது. மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு அறிக்கையை அனுப்பிவைத்தது.

இதனை ஆய்வு செய்த மத்திய அரசு உரிய சட்டத்திருத்தத்தைச்செய்தது. இதற்கு குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த், கடந்த ஏப்ரல்.13'இல் ஒப்புதலளித்தார். சட்டத்திருத்தம் அரசிதழில் வெளியிடப்பட்டது. இதனால், அது நடைமுறைக்கு வந்தது. இதனை மாவட்ட ஆட்சியர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் சான்றிதழ் வழங்க அதிகாரம் பெற்ற அதிகாரிகள் பின்பற்ற வேண்டும் என்று தனது உத்தரவில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் தெரிவித்துள்ளார்.

---

**3. இந்தியாவில் கண்டறியப்பட்ட 'டெல்டா' வகை கரோனா அச்சுறுத்தலாக உள்ளது: உலக சுகாதார அமைப்பு**

முதல் முறையாக இந்தியாவில் கண்டறியப்பட்ட 3 வகையான கரோனா தொற்றுகளில், 'டெல்டா' வகை (பி.1.617.2) தொற்று கவலையளிக்கும் வகையில் தீவிரமாக இருக்கிறது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது. உலக அளவில் கரோனா பாதிப்பு குறித்த விவரங்களை உலக சுகாதார அமைப்பு ஒவ்வொரு வாரமும் வெளியிட்டு வருகிறது.

அதுபோல, புதிதாக வெளியிட்ட புள்ளிவிவரங்களில் கூறியிருப்பதாவது: பொதுமக்களுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்துவதுடன், வேகமாக பரவும் வகையாக 'டெல்டா' (பி.1.617.2) வகை தீநுண்மி வரையறுக்கப்பட்டுள்ள–து. மற்ற இரு உருமாறிய வகைகள் (பி.1.617.1 மற்றும் பி.1.617.3) குறை–வான பரவல் மற்றும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகைகளாக கண்ட–றியப்பட்டிருக்கின்றன. 'டெல்டா' வகை கரோனா இப்போது 62 நாடுக–ளில் பரவியிருக்கிறது.

இந்தியாவில் முதலில் கண்டறியப்பட்ட 'கப்பா' (பி.1.617.1) வகை தொற்று குறிப்பிட்ட பகுதிகளில் வேகமான பரவலைக் கொண்டிருந்தபோதும், உலக அளவில் இந்த வகை கரோனாவின் பாதிப்பு குறைந்து வருவதாக புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. மூன்றாவது வகையான பி.1.617.3, இதுவரை அச்சுறுத்தக்கூடிய வகையிலானதா, அல்லது மிதமானதா என இதுவரை வரையறுக்கப்படவில்லை.

**இந்தியாவில் பாதிப்பு விகிதம் 26 சதவீதம் குறைவு:** இந்தியாவில் கடந்த வாரத்தில் 13,64,668 பேர் புதிதாக கரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இருந்தபோதும், அது முந்தைய வாரத்துடன் ஒப்பிடும்போது 26 சதவீதம் குறைவாகும்.

**குறைந்துவரும் உயிரிழப்புகள்:** கரோனா பாதிப்பால் ஏற்படும் உயிரிழப்பு–களைப்பொருத்தவரை தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் இந்தியாவி–ல்தான் அதிக உயிரிழப்புகள் (26,706) பதிவாகியிருக்கின்றன.

இருந்தபோதும், இது முந்தைய வாரத்துடன் ஒப்பிடும்போது 8 சதவீதம் குறைவாகும். ஒட்டுமொத்தமாக உலக அளவில் கரோனாவால் பாதிக்கப்படுபவா்களின் எண்ணிக்கையும், உயிரிழப்புகளும் தற்போது தொடா்ந்து குறைந்து வருகிறது. கடந்த வாரத்தில் உலக அளவில் 35 லட்சம் போ் புதிதாக கரோனோவால் பாதிக்கப்பட்டனர். இது முந்தைய வாரத்துடன் ஒப்பிடும்போது 15 சதவீதம் குறைவாகும்.

78,000 புதிய உயிரிழப்புகள் பதிவாகின. இது முந்தைய வாரத்தைக் காட்டிலும் 7 சதவீதம் குறைவு என்றும் உலக சுகாதார அமைப்பின் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**4. மாதிரி வாடகை ஒப்பந்தச் சட்டம்; 10 முக்கிய அம்சங்கள் என்ன?**

மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், வாடகை சட்டங்களில் திருத்தம் கொண்டுவர மாதிரி வாடகை சட்டத்துக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

வாடகை மற்றும் குத்தகை முறைகளில் புதிய சட்டங்களை கொண்டு வரவும் அல்லது தற்போதுள்ள வாடகை சட்டங்களில், பொருத்தமான முறையில் திருத்தங்கள் கொண்டுவரவும், மாதிரி வாடகை சட்டம் உருவாக்கப்பட்டது.

வீட்டு வாடகை உயர்வு, வாடகை முன்பணம், வாடகை ஒப்பந்தம் புதுப்பிப்பது, வீட்டைகாலி செய்வதில் ஏற்படும் தகராறுபோன்ற பிரச்சனை–களுக்கு தீர்வுகாண இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

*மத்திய அரசின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தை தொடர்ந்து புதிய மாதிரி வாடகை ஒப்பந்த சட்டமும் கொண்டுவரப்பட்டது.

*வாடகைதாரர்களிடம் 2 மாத வாடகைக்கு மேல் பாதுகாப்பு வைப்புத் தொகை (அட்வான்ஸ்) வாங்க முடியாது என்பது உள்ளிட்ட அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

*வாடகை ஒப்பந்த நகலை, மத்திய வீட்டுவசதி, நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யலாம்.

*முன்பெல்லாம் பத்திரப் பதிவு அலுவலகத்தில் வாடகை ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தத்தை பதிவு செய்யாவிட்டாலும் இரு தரப்பும் நீதிமன்றம் செல்லமுடியும்.

*ஆனால், புதிய சட்டத்தின்படி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பகுதி வாரியாக அமைக்கப்பட்டுள்ள வாடகை ஆணையத்திடம் பதிவுசெய்ய வேண்டும்.

*ஆன்லைன் அல்லது நேரடியாக வாடகை ஒப்பந்தத்தை பதிவுசெய்ய வேண்டும். இந்த ஒப்பந்தத்தை பதிவு செய்யாவிட்டால், நிவாரணம் கோரி இருதரப்பும் நீதிமன்றம் செல்லமுடியாது.

*அதே சமயம், ஒப்பந்தம் போடாத நிலையில், வீட்டு உரிமையாளர் மட்டும் நீதிமன்றத்தை நாட புதிய சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

*வீட்டை காலி செய்யாவிட்டால் சட்டப்படி வாடகையை அதிகரிக்க உரிமைஉண்டு.

*வாடகை தொடர்பான புகார்களை விசாரிக்க தனி வாடகை ஆணையம் அல்லது வாடகை தீர்ப்பாயம் அமைக்க புதிய சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

*காலியாக இருக்கும் வீடுகளை எல்லாம், வாடகைக்குவிட இந்த மாதிரி வாடகை சட்டம் உதவும். வாடகை வீடுகளை, வணிகமாக நடத்துவதில் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பை இந்தச் சட்டம் ஊக்குவிக்கும்.

---

**5. ஈரான் போர்க் கப்பல் எரிந்து மூழ்கியது**

ஈரானின் மிகப்பெரிய போர்க் கப்பல் ஓமன் வளைகுடாவில் மர்மமான முறையில் எரிந்து மூழ்கியது. கடல் பகுதியில் மேற்கத்திய நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே தொடர்ந்து பதற்றம் நிலவி வரும் சூழலில், இந்த சம்பவம் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து அசோசியேட்–டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது: ஓமன் வளைகுடா பகுதியில் ஈரான் கடற்படைக்குச் சொந்தமான 'கார்க்' கப்பலில் தீப்பிடித்த–து. 207 மீட்டர் நீளம்கொண்ட அந்தக் கப்பல்தான் ஈரானின் மிகப்பெரிய போர்க்கப்பலாகும். கப்பலில் பற்றிய தீயை அணைக்க தீயணைப்புக் கப்பல்கள் அந்தப் பகுதிக்கு விரைந்தன. தீயணைப்பு வீரர்களின் கடும் முயற்சிக்குப் பிறகும் அந்தக் கப்பல் கடலுக்குள் மூழ்கியது.

தலைநகர் டெஹ்ரானுக்கு 1,270 கிமீ தொலைவில், ஈரானின் ஜாஸ்க் துறைமுகப்பகுதியில் கார்க் கப்பல் மூழ்கியது.

---

**6. இஸ்ரேல் புதிய அதிபராக ஐசக் ஹெர்ஸாக் தேர்வு**

இஸ்ரேலின் 11 ஆவது அதிபராக மூத்த அரசியல்வாதி ஐசக் ஹெர்ஸாக் தேர்வு செய்யப்பட்டார். நாடாளுமன்றத்தில் இதுதொடர்பாக நடைபெற்ற ரகசிய வாக்கெடுப்பில் அவர் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். இதுகுறித்து பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவ–து: இஸ்ரேலின் 10ஆவது அதிபராக கடந்த 2014ஆம் ஆண்டுமுதல் பொறுப்புவகித்து வரும் ரூவன் ரிவ்லினின் பதவிக்காலம் அடுத்த மாதம் 9ஆம் தேதியுடன் நிறைவடைகிறது.

புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஐசக் ஹெர்ஸாக் தொழிலாளர் அமைப்பின் தலைவராக இருந்துள்ளார். 2005ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை வீட்டு வசதி, சுற்றுலா, சமூகநலம் உள்ளிட்ட பல்வே–று துறைகளில் இவர் அமைச்சராக பொறுப்புவகித்துள்ளார். இஸ்ரேலில் மிகநீண்டகாலம் பிரதமராக இருந்த பெஞ்சமின் நெதன்யாகுவின் ஆட்சிக் காலம் நிறைவடைந்து, புதிய பிரதமரின் தலைமையில் அரசு அமையவிருக்கும் பரபரப்பான சூழலில் ஐசக் ஹெர்ஸாக் அதிபராகத் தேர்–ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

---

**1. பிரதமர் உஜ்வாலா யோஜனாவை செயல்படுத்துகிற அமைச்சகம் எது?**

அ) எரிசக்தி அமைச்சகம்

**ஆ) பெட்ரோலிய அமைச்சகம் ☑**

இ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ) புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

✓ பிரதமர் உஜ்வாலா யோஜனாவின் அடுத்த சுற்றுக்கான வழிகாட்டுதல்க–ளை மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் இறு–திசெய்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் மேலும் பத்து மில்லியன் புதிய LPG இணைப்புகளை அரசாங்கம் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வறுமைக்கோட்டுக்குக்கீழுள்ள குடும்பங்களுக்கு LPG எரிவாயு இணை–ப்புகளை இலவசமாக வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற சுபோத் குமார் ஜெய்ஸ்வால், எந்த அமைப்பின் புதிய இயக்குநராக நியமிக்கப்பட்டார்?**



அ) CVC

ஆ) CIC

**இ) CBI ☑**

ஈ) NITI ஆயோக்

✓ மகாராஷ்டிரத்தின் 1985 தொகுதி இ கா ப அதிகாரியான சுபோத் குமார் ஜெய்ஸ்வால், ஈராண்டுகாலத்திற்கு மத்திய புலனாய்வுப்பிரிவின் தலை–வராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் மத்திய தொழிலக பாதுகாப்புப் படை–களின் (CISF) தலைவராகவும் பணியாற்றிவருகிறார். அவர் புலனாய்வு பணியகம் & ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவு (ரா) ஆகியவற்றின் ஒரு பகுதியாகவும் இருந்தார்.

**3. எந்த நாட்டின் அட்டு நகரத்தில், இந்தியாவின் புதிய துணைத் தூதரகத்தை திறக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?**



**அ) மாலத்தீவுகள் ☑**

ஆ) இலங்கை

இ) பூட்டான்

ஈ) மியான்மர்

✓ 2021ஆம் ஆண்டில் மாலத்தீவின் அட்டு நகரத்தில் இந்தியாவின் புதிய துணைத்தூதரகத்தைத் திறப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. 'Neighbourhood First Policy' மற்றும் 'SAGAR – Security & Growth for All in the Region' ஆகியவற்றில் மாலத்தீவுக்கு ஒரு முக்கிய இடமுண்டு. அட்டு நகரத்தில் ஒரு துணைத்தூதரகம் திறக்கப்படுவது மாலத்தீவில் இந்தியாவின் அரசியல் இருப்பை மேம்படுத்த உதவும்.

**4. தேசிய டிஜிட்டல் நலவாழ்வு திட்டத்தின்கீழ் அரசாங்கம் தொடங்க உள்ள UHI என்றால் என்ன?**



அ) Union Health Institution

**ஆ) Unified Health Interface ☑**

இ) United Health Institute

ஈ) Union Health Initiative

✓ தேசிய டிஜிட்டல் நலவாழ்வு திட்டத்தின்கீழ் செயல்பாடுகளை விரைவாக விரிவாக்கம் செய்ய அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. இது ஓர் ஒருங்கி–ணைந்த நலவாழ்வு இடைமுகத்தை (UHI) தொடங்கவுள்ளது. இது, இணையவழி மருத்துவ ஆலோசனை மற்றும் ஆய்வகசோதனைகளை முன்பதிவு செய்வது உள்ளிட்ட நலவாழ்வு சேவைகளை வழங்க டிஜிட்ட–ல் தளத்தைப்பயன்படுத்த மக்களுக்கு உதவும்.

**5. SARS–CoV–2 வைரஸின் மரபணு பொருளான மூலக்கூறு எது?**



அ) DNA

**ஆ) RNA ☑**

இ) மேற்கண்ட இரண்டும்

ஈ) மேற்கூறிய எதுவும் இல்லை

✓ வைரஸ்கள் அவற்றின் மரபணுப்பொருளாக RNA அல்லது DNA'ஐக் கொண்டுள்ளன. நியூக்ளிக் அமிலமானது ஒற்றை அல்லது இரட்டை இழைகளாக இருக்கலாம். SARS–CoV–2 வைரஸ் அதன் மரபணுப் பொருளாக RNA'ஐக்கொண்டுள்ளது.

✓ சமீபத்தில், தைவானில், அறிவியலாளர்கள் ஒரு புதிய DNA அடிப்படையி–லான COVID–19 தடுப்பூசியை உருவாக்கியுள்ளனர். இது எலிகள் மற்றும் வெள்ளெலிகளில், நாவல் கொரோனா வைரஸுக்கு எதிராக ஆன்டிபாடிகளை வெற்றிகரமாக தூண்டியது. தற்போது கிடைக்கக்கூடி–ய COVID–19 தடுப்பூசிகள், SARS–CoV–2 வைரஸை மனித நோயெதி–ர்ப்பு மண்டலம் அங்கீகரிக்க, மெசஞ்சர் RNA (mRNA)'ஐப் பயன்படுத்துகி–ன்றன.

**6. அதிவேகமாக எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்த பெண்ம–ணியான சாங் யின்–ஹங் சார்ந்த நாடு எது?**



அ) சீனா

**ஆ) ஹாங்காங் ☑**

இ) வியட்நாம்

ஈ) ஜப்பான்

✓ ஹாங்காங் மலையேற்ற வீராங்கனையான சாங் யின்–ஹங், அதிவி–ரைவாக எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்த முதல் பெண்மணி என்ற சாதனையை பதிவுசெய்துள்ளார். 44 வயதான அவர், 25 மணி 50 நிமிடங்களில் இந்தச் சாதனையை பதிவுசெய்தார்.

✓ மற்றொரு மலையேற்ற வீரரான, 75 வயதான ஆர்தர் முயர், 8,848.86 மீட்டர் உயரங்கொண்ட உலகின் மிக உயர்ந்த சிகரத்தை ஏறிய மிக வயதான அமெரிக்கரானார்.

**7. "Action and Investment in Menstrual Hygiene and Health" என்பது மே.28 அன்று கொண்டாடப்படும் எந்த நாளின் கருப்பொருளாகும்?**




**அ) உலக மாதவிடாய் சுகாதார நாள் ☑**

ஆ) உலக மகளிர் சுகாதார நாள்

இ) உலக தனிநபர் சுகாதார நாள்

ஈ) உலக சுகாதார நாள்

✓ உலக மாதவிடாய் சுகாதார நாளானது மே.28 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. "Action and Investment in Menstrual Hygiene and Health" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

✓ மாதவிடாயுடன் தொடர்புடைய சமூக களங்கத்தை மாற்றுவதை இந்த நாள் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. மாதவிடாய் சுழற்சியான 28 நாட்களையும் மாதவிடாய் இருக்கும் ஐந்து நாட்களையும் குறிக்கும் வகை–யில் மே.28ஆம் தேதி தேர்வுசெய்யப்பட்டது.

✓ இந்த நாள், WASH யுனைடெட் என்ற ஜெர்மனியின் இலாப நோக்கற்ற அமைப்பால், கடந்த 2013ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

**8. ஸ்பெயினின் மிகவுயர்ந்த 'Princess of Asturias' விருதை வென்ற இந்திய பொருளாதார வல்லுநர் யார்?**



**அ) அமர்த்தியா சென் ☑**

ஆ) உர்ஜித் படேல்

இ) மன்மோகன் சிங்

ஈ) அரவிந்த் சுப்பிரமணியன்

✓ இந்திய பொருளாதார வல்லுநரும் நோபல் பரிசு பெற்றவருமான அமர்த்–தியா சென் சமூக அறிவியல் பிரிவில், ஸ்பெயினின் மிகவுயர்ந்த 'Princess of Asturias' விருதை வென்றுள்ளார்.

✓ சமூக அறிவியல் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட 20 நாடுகளைச் சார்ந்த 41 நபர்களுள் ஒருவரான அமர்த்தியாசென் இவ்விருதை வென்றுள்ளார். பஞ்சங்கள்பற்றிய அவரது ஆராய்ச்சி மற்றும் மனித வளர்ச்சி, நலன்புரி பொருளாதாரம் மற்று –ம் வறுமையின் அடிப்படை வழிமுறைகள்பற்றிய அவரது கோட்பாடுகள் இந்த நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**9.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற டைக்ரே அமைந்துள்ள நாடு எது?**

**அ) எத்தியோப்பியா ☑**

ஆ) ஐக்கிய அரபு அமீரகம்

இ) இஸ்ரேல்

ஈ) ஜிம்பாப்வே



- ✓ எத்யோப்பியாவின் சிக்கலான பிராந்தியமான டைக்ரேயில் பஞ்சத்தைத் தவிர்க்க அவசர நடவடிக்கைகள் தேவை என்று ஐக்கிய நாடுகள் அவை எச்சரித்துள்ளது. ஆயிரக்கணக்கான மக்களின் இறப்புக்குக் காரணமான டைக்ரே மோதல் ஏற்பட்டு ஏழு மாதங்கள் ஆன நிலையில், சுமார் ஐந்து மில்லியனுக்கும் அதிகமானோருக்கு உதவி தேவைப்படுவதாக மதிப்பிட–ப்பட்டுள்ளது. எத்தியோப்பிய பிரதமர் அபி அகமது, கடந்த 2020ஆம் ஆண்டில் டைக்ரேயில் இராணுவ நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

---

**10.சமீப செய்திகளில் இடம்பெற்ற சமூகத்திற்கு எதிரானச்செயல்கள் தடுப்புச்சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ள யூனியன் பிரதேசம் எது?**

அ) அந்தமான் & நிக்கோபார் தீவுகள்

**ஆ) இலட்சத்தீவுகள் ☑**

இ) சண்டிகர்

ஈ) புதுச்சேரி



- ✓ இலட்சத்தீவுகளில், சமூகத்திற்கு எதிரானச்செயல்கள் தடுப்புச்சட்டம் மற்–றும் இலட்சத்தீவுகள் மேம்பாட்டு ஆணையம் ஒழுங்குமுறை – 2021 ஆகியவற்றை அமல்படுத்தவுள்ளதாக இலட்சத்தீவுகள் நிர்வாகம் அறிவித்–துள்ளது. பழங்குடியினத்தைச்சார்ந்த தீவுவாசிகளுக்குச் சொந்தமான சிறு பங்கின் சொத்துரிமையை அகற்ற, இலட்சத்தீவுகள் மேம்பாட்டு ஆணையம் ஒழுங்குமுறை சட்டம் நிர்வாகத்திற்கு அதிகாரமளிப்பதால் அது நாடு முழுவதுமிருந்து விமர்சனங்களை எழுப்பியுள்ளது.
- ✓ ஒரு நபரை எந்தவொரு காரணமும் இல்லாமல் ஓராண்டு வரை தடுத்து வைக்க, சமூகத்திற்கு எதிரானச்செயல்கள் தடுப்புச்சட்டம், லட்சத்தீவுகள் நிர்வாகத்திற்கு அதிகாரங்களை வழங்குகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஆசிரியர் தகுதித்தேர்வு சான்றிதழ் வாழ்நாள் முழுதும் செல்லும்: மத்திய அரசு அறிவிப்பு**

ஆசிரியர் தகுதித்தேர்வு (TET) சான்றிதழ் வாழ்நாள் முழுவதும் செல்லும் என்று மத்திய கல்வி அமைச்சகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இலவச கட்டாயக்கல்வி உரிமைச்சட்டப்படி அனைத்து வகை பள்ளிகளிலும் ஆசிரி–யராகப் பணியில் சேர மத்திய அரசு, மாநில அரசுகள் நடத்தும் ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும். அதன்படி நடத்தப்படும் ஆசிரியர் தகுதித்தேர்வு மொத்தம் 2 தாள்களைக் கொண்டது. முதல் தாளில் தேர்ச்சி பெறுபவர்கள் இடைநிலை ஆசிரியராகவும், இரண்டாம் தாளில் தேர்ச்சி அடைபவர்கள் பட்டதாரி ஆசிரியராகவும் பணிபுரியலாம்.

இதற்கிடையே டெட் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களின் சான்றிதழ்கள் 7 ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும் என்ற நிலை இருந்தது. அந்நிலையை மாற்றித் தற்போது ஆயுள் முழுவதும் டெட் சான்றிதழ் செல்லும் என்று மத்திய கல்வி அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு 2011'இலிருந்து தேர்வு எழுதியவர்களுக்கும் பொருந்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**ஜூன்.3 – உலக மிதிவண்டி நாள்**

---

**2. 'இலக்கிய மாமணி' விருது**

தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில், 'இலக்கிய மாமணி' என்ற விருது உருவாக்கப்படுகிறது. தமிழ் இலக்கியத்துக்கு வளம் சேர்க்கும் எழுத்தாளர்கள் மூவருக்கு ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்–படும். விருதாளர்களுக்கு பாராட்டுப்பத்திரம், ₹5 இலட்சம் ரொக்கப்பரிசு அளிக்கப்படும்.

---

**1.அண்மையில் 6 வேள்விகுண்டங்கள் கண்டறியப்பட்ட சான்சிங்டு நகரம் அமைந்துள்ள நகரம் எது?**

அ) ஜப்பான்

**ஆ) சீனா ☑**

இ) வியட்நாம்

ஈ) வட கொரியா



✓ தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் சான்சிங்டுயில் ஆறு வேள்விகுண்டங்களைக்கண்டுபிடித்தனர். அவ்வேள்விகுண்டங்களில் தங்கம் மற்றும் வெண்கல முகமூடிகள் உட்பட சுமார் ஐந்நூறு கலைப் பொருட்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. பெய்ஜிங்கிலிருந்து தென்மேற்கே 1500 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள ஒரு பழங்கால சீன நகரந்தான் சான்சிங்டுய். இந்தக்கலைப்பொருட்கள் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முந்தையவை. சீனாவின் இப்பகுதி பண்டைய இராச்சியமான ஷூவால் ஆளப்பட்டது.

---

**2. மருத்துவ தகவல் களஞ்சிய இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ள அமைச்சகம் எது?**

அ) நலவாழ்வு மற்றும் குடும்பநல அமைச்சகம்

**ஆ) AYUSH அமைச்சகம் ☑**

இ) தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்

ஈ) வெளியுறவுத்துறை அமைச்சகம்

✓ AYUSH மருத்துவ தகவல் களஞ்சிய இணையதளம் மற்றும் ஆயுஷ் சஞ்சீவனி செயலியின் மூன்றாவது பதிப்பை மத்திய AYUSH இணையமைச்சர் கிரண் ரிஜிஜூ அறிமுகம் செய்து வைத்தார். ஆயுஷ் மருத்துவர்கள் மற்றும் பொது மக்களுக்கு உதவும் வகையில் ஆயுஷ் மருத்துவ தகவல் களஞ்சிய இணையதளம் அமைந்துள்ளது.

---

**3. "The Very Hungry Caterpillar" என்ற நூலை எழுதியவர் யார்?**

அ) ரோவன் அட்கின்சன்

**ஆ) எரிக் கார்லே ☑**

இ) JK ரௌலிங்

ஈ) சல்மான் ருஷ்டி



✓ "The Very Hungry Caterpillar" என்ற புகழ்பெற்ற குழந்தைகள் நூலை எழுதிய எரிக் கார்லே (91) சமீபத்தில் சிறுநீரக செயலிழப்பு காரணமாக காலமானார். இந்நூல் உலகின் சிறந்த விற்பனையான நூல்களுள் ஒன்றாகும். முதன்முதலில் 1969ஆம் ஆண்டில் இது வெளியிடப்பட்டது, இன்றுவரை, எழுபதுக்கும் மேற்பட்ட மொழிகளில் இந்த நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

---

**4. 2020-21ஆம் ஆண்டுக்கான இந்திய ரிசர்வ் வங்கியின் ஆண்டு அறிக்கை, ரிசர்வ் வங்கியின் எத்தனை மாத செயற்பாடுகளை உள்ளடக்கியது?**

அ) 6

**ஆ) 9 ☑**

9

இ) 11

ஈ) 12

✓ இந்திய ரிசர்வ் வங்கியானது 2021 மார்ச்.31ஆம் தேதியுடன் முடிவடைந்த 2020-21ஆம் நிதியாண்டிற்கான தனது ஆண்டறிக்கையை வெளியிட்டது. இந்திய ரிசர்வ் வங்கி ஜூலை முதல் ஜூன் வரையிலான கால கட்டத்தை தனது நிதியாண்டாக ஏற்றுக்கொண்டிருந்தது.

✓ ஆனால், 2020-21ஆம் நிதியாண்டிலிருந்து ஏப்ரல்-மார்ச் வரையிலான காலகட்டத்தை தனது நிதியாண்டாக ரிசர்வ் வங்கி திருத்தியுள்ளது. எனவே, 2020-21ஆம் நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை, இந்திய ரிசர்வ் வங்கியின் செயல்பாடுகளை, 2020 ஜூலை முதல் 2021 மார்ச் வரையிலான ஒன்பது மாத காலத்தை மட்டுமே உள்ளடக்கியுள்ளது.

---

**5.பன்னி புன்னிலக் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

**ஆ) குஜராத் ☑**

இ) மேற்கு வங்கம்

ஈ) ஒடிஸா



✓ பன்னி புன்னிலக் காப்பகம் என்பது குஜராத் மாநிலத்தின் கட்ச் மாவட்டத்தில் அமைந்துள்ள வறண்ட புல்வெளிச் சூழலமைப்பு ஆகும். தேசிய பசுமைத் தீர்ப்பாயமானது அண்மையில் இந்தப் பிராந்தியத்தில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் ஆறுமாதகாலத்திற்குள் அகற்ற வேண்டும் என உத்தரவிட்டது. அதற்கான கூட்டுக்குழு ஒரு செயல்திட்டத்தை உருவாக்க வேண்டும் என்றும் அது உத்தரவிட்டது.

---

**6. மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு நிறுவனம் அமைந்துள்ள இடம் எது?**

**அ) சென்னை ☑**

ஆ) கொச்சி

இ) மும்பை

ஈ) கொல்கத்தா

✓ மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு நிறுவனமானது தமிழ்நாட்டின் சென்னையில் அமைந்துள்ளது. இந்த நிறுவனம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின்கீழ் செயல்பட்டு வருகிறது. சமீபத்தில் இந்நிறுவனம், வைரல் நெர்வஸ் நெக்ரோசிஸ் எனும் நோய்க்கான ஓர் உள்நாட்டு தடுப்பூசியை உருவாக்கியுள்ளது. இந்நோய், பல்வேறு மீனினங்களைப்பாதிக்கும் ஒரு வைரஸ் நோயாகும்.

---

**7. 2020ஆம் ஆண்டுக்கான எனி விருது வழங்க் கௌரவிக்கப்பட்ட இந்தியர் யார்?**

**அ) CNR ராவ் ☑**

ஆ) நரேந்திர மோடி

இ) ரகுராம் ராஜன்

ஈ) விராத் கோலி



✓ 'இந்திய மாமணி' விருதுபெற்றவரான பேராசிரியர் CNR ராவ் அவர்கட்கு, 2020ஆம் ஆண்டுக்கான சர்வதேச எனி விருது வழங்கப்பட்டுள்ளது.

✓ புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்கள் மற்றும் எரிசக்தி சேமிப்பில் தனது அர்ப்பணிப்புமிக்க ஆராய்ச்சிக்காக அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. எரிசக்தி ஆராய்ச்சியின் நோபல் பரிசாகவும் இது கருதப்படுகிறது.

---

**8. SeHAT OPD என்ற இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ள ஒன்றிய அமைச்சகம் எது?**

அ) நலவாழ்வு அமைச்சகம்

**ஆ) பாதுகாப்பு அமைச்சகம் ☑**

இ) நிதி அமைச்சகம்

ஈ) வர்த்தக அமைச்சகம்

✓ ஒன்றிய பாதுகாப்பு அமைச்சகமானது SeHAT OPD இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அது ஆயுதப்படை வீரர்கள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு தொலை மருத்துவ சேவைகளை வழங்குவதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

✓ SeHAT என்பது "Services e-Health Assistance & Tele-consultation" என்பதைக் குறிக்கிறது, பாதுகாப்பு அமைச்சகத்தின் வலைத்தளமான https://sehatopd.in/'இல் பதிவுசெய்துகொள்வதன்மூலம் இச்சேவையைப் பெறமுடியும்.

---

**9.** **ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்குப் (USA) பிறகு 20 கோடி தடுப்பூசி செலுத்திய இரண்டாவது நாடு எது?**

அ) சீனா

ஆ) பிரேஸில்

இ) இத்தாலி

**ஈ) இந்தியா ☑**



- ✓ ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்குப் (USA) பிறகு இருபது கோடி தடுப்பூசி செலுத்திய இரண்டாவது நாடாக இந்தியா ஆகியுள்ளது. இந்தச் சாதனை -யை, இந்தியா, 130 நாட்களில் அடைந்துள்ளது. முதலிடத்தில் உள்ள அமெரிக்கா, 124 நாட்களில் 20 கோடியை எட்டியது.
- ✓ 45 வயதிற்கு மேற்பட்டவர்களில் 34 சதவீதத்துக்கும் அதிகமானோர் ஒருமுறையாவது தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக ஒன்றிய நலவாழ்வு அமைச்சகம் கூறியுள்ளது.

---

**10.** **"The Eclipse and After" என்ற திருவிழாவைத் தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

**அ) தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் ☑**

ஆ) உள்துறை அமைச்சகம்

இ) வெளியுறவுத்துறை அமைச்சகம்

ஈ) எரிசக்தி அமைச்சகம்




- ✓ மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம், "The Eclipse and After" என்ற திரைப்பட விழாவைத் தொடங்கியுள்ளது. இதில் பெண்கள் குறித்த திரைப்படங்களும் அடங்கும். இவை, 2021 மே.28-30 வரை இணைய வழியில் திரையிடப்படுகின்றன. இவ்விழாவில் சமத்துவமின்மை மற்று -ம் அநீதியிலிருந்து வெளிவரும் பெண்களின் கதைகளை விவரிக்கும் 10 திரைப்படங்களின் தொகுப்பு இடம்பெற்றுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஆறு அதிநவீன நீர்மூழ்கிக் கப்பல் தயாரிக்க ரூ.50 ஆயிரம் கோடி திட்டத்துக்கு அனுமதி**

'புராஜக்ட் 75 இந்தியா' என்ற பெயரில் அதிநவீன நீர்மூழ்கிக் கப்பல்களைத் தயாரிக்கும், ₹50,000 கோடி மதிப்புள்ள திட்டத்துக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் இராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற, இராணுவ தளவாடங்கள் கொள்முதல் கவுன்சில் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது. இதையடுத்து, மும்பையில் அரசுக்கு சொந்தமான மஸாகான் கப்பல் கட்டுந்தளம் மற்றும் தனியார் நிறுவனமான L&T'க்கு விரைவில் ஒப்பந்தம் அளிக்கப்படவுள்ளது.

இந்த இரண்டு நிறுவனங்களும் வெளிநாடுகளின் தொழில்நுட்பத்துடன் இந்தியாவிலேயே 6 அதிநவீன நீர்மூழ்கிக் கப்பல்களை தயாரிக்கும். மஸாகான் – L&T இணைந்து ரஷ்யா, பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்பெயின், தென்கொரியா ஆகிய ஐந்து நாடுகளில் ஏதாவது ஒரு நாட்டின் நிறுவனத் -துடன் தொழில்நுட்ப ஒப்பந்தம் மேற்கொண்டு ஒன்றிய அரசுக்கு அறிக்கை அளிக்கும் என்று பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

---

**2. நடப்பு நிதியாண்டுக்கான பொருளாதார வளர்ச்சி 9.5%-ஆக இருக்கும்: முந்தைய கணிப்பை குறைத்தது ஆர்பிஐ**

நடப்பு 2021-22-ஆம் நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 9.5 சதவீதமாக இருக்கும் என்று இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) கணித்துள்ளது. முன்பு பொருளாதார வளர்ச்சி 10.5 சதவீதமாக இருக்கும் என்று கணித்திருந்த நிலையில், கரோனா தொற்றின் 2-ஆவது அலை பரவல் காரணமாக மதிப்பீட்டை ஆர்பிஐ குறைத்துள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழுக் கூட்டம் ஆளுநர் சக்திகாந்த தாஸ் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் குறித்து அவர் செய்தியாளர்களிடம் வெள்ளிக்கிழமை கூறியதாவது:

கடந்த ஆண்டில் கரோனா தொற்று பரவல் காரணமாக பொருளாதார வளர்ச்சி சரிவைச் சந்தித்தது. எனினும், கடந்த 2020-21-ஆம் நிதியாண்டின் இரண்டாவது அரையாண்டில் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் மீளத் தொடங்கியது. பல்வேறு துறைகள் வளர்ச்சிப் பாதைக்குத் திரும்பின. அந்த வளர்ச்சியைத் தக்கவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. கரோனா தொற்று பரவல் காரணமாக பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட தாக்கத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளில் தொடர்ந்து கவனம் செலுத்தப்படும். இத்தகைய இக்கட்டான சூழலில், மத்திய அரசு அதிக அளவில் கடன் பெறுவதைக் குறைக்கும் நோக்கில், மத்திய அரசின் நிதிப் பத்திரங்களை வாங்குவதற்கான திட்டத்தை ஆர்பிஐ அமல்படுத்தி வருகிறது.

அத்திட்டத்தின்படி நடப்பு நிதியாண்டின் ஏப்ரல், மே மாதங்களில் ரூ.1 லட்சம் கோடி மதிப்பிலான நிதிப் பத்திரங்களை வாங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. நடப்பு மே மாதத்தில் ரூ.40,000 கோடி மதிப்பிலான நிதிப் பத்திரங்கள் வாங்கப்படவுள்ளன. இத்திட்டத்தை மேலும் நீட்டிக்க ஆர்பிஐ முடிவெடுத்துள்ளது. நடப்பு நிதியாண்டின் 2-ஆவது காலாண்டில் ரூ.1.2 லட்சம் கோடி மதிப்பிலான மத்திய அரசின் நிதிப் பத்திரங்களை ஆர்பிஐ வாங்கவுள்ளது. பணவீக்கம்: நடப்பு 2021-22-ஆம் நிதியாண்டில் பணவீக்கம் 5.1 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருள்களின் விலை அதிகரிப்பு, பொதுமுடக்கத்தால் விநியோகத்தில் ஏற்பட்ட பாதிப்பு உள்ளிட்டவை காரணமாக பணவீக்கம் அதிகரித்துக் காணப்பட வாய்ப்புள்ளது.

பணவீக்கத்தை நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 2 முதல் 6 சதவீதத்துக்குள் கட்டுக்குள் வைப்பதற்கான நடவடிக்கைகளை ஆர்பிஐ தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. பணப்புழக்கத்தை அதிகரிக்க...: கரோனா தொற்று பரவல் காரணமாக கடும் பாதிப்பைச் சந்தித்துள்ள சுற்றுலா, விடுதிகள், விமானப் போக்குவரத்து உள்ளிட்ட துறைகளுக்கு கடன் வழங்குவதற்காக வங்கிகள் ரூ.15,000 கோடி கடன் பெறுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த வசதியை அடுத்த ஆண்டு மார்ச் 31-ஆம் தேதி வரை வங்கிகள் பயன்படுத்திக் கொள்ள முடியும். சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்குக் கடனளிக்கும் நோக்கில் இந்திய சிறு தொழிலக வளர்ச்சி வங்கிக்கு (எஸ்ஐடிபிஐ) ரூ.16,000 கோடி நிதி வழங்கவும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இது நிதி நிறுவனங்களுக்கு ஏற்கெனவே வழங்க முடிவெடுக்கப்பட்ட ரூ.50,000 கோடிக்கு கூடுதலாக வழங்கப்படும். இந்த நடவடிக்கைகள் பொருளாதாரத்தில் பணப்புழக்கத்தை அதிகரிக்கும்.

கரோனா தொற்றின் 2-ஆவது அலை பரவல் காரணமாக பாதிப்புகளைச் சந்தித்துள்ள தொழில் நிறுவனங்களை மீட்டெடுக்கும் நோக்கில் அந்நிறுவனங்கள் வங்கிகளில் பெற்றுள்ள கடன்களுக்கான மறுசீரமைப்புத் திட்டத்தை ஆர்பிஐ அறிவித்துள்ளது. ரூ.50 கோடி வரை கடன்நிலுவை வைத்துள்ள நிறுவனங்களுக்கும் அத்திட்டம் விரிவுபடுத்தப்படுகிறது. குறைவான பாதிப்பு: கடந்த ஆண்டில் கரோனா தொற்றின் முதல் அலை பரவியபோது நாடு முழுவதும் பொதுமுடக்கம் அமல்படுத்தப்பட்டது. அதன் காரணமாக நாட்டின் பொருளாதாரம் பெரும் பாதிப்பைச் சந்தித்தது. ஆனால், கரோனா தொற்றின் 2-ஆவது அலை பரவலின்போது தளர்வுகளுடன்கூடிய பொதுமுடக்கமே அமல்படுத்தப்பட்டது. அதன் காரணமாக பொருளாதாரத்தில் பெரிய அளவுக்கு பாதிப்பு இருக்காது என்றே நம்புகிறோம்.

கரோனா தொற்று பரவல் காரணமாக பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கங்கள் குறித்து ஆர்பிஐ தொடர்ந்து கண்காணித்து வருகிறது. பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொருளாதாரத்தில் நிதி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதில் ஆர்பிஐ உறுதியுடன் உள்ளது. கரோனா தொற்றின் 2-ஆவது அலையில் பாதிப்பும் உயிரிழப்புகளும் அதிகரித்ததன் காரணமாக பொருளாதாரம் இயல்பு நிலைக்குத் திரும்பும் சூழல் சற்று தாமதமடைந்துள்ளது. ஜிடிபி வளர்ச்சி: நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) நடப்பு நிதியாண்டில் 9.5 சதவீதமாக இருக்கும். நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் 18.5 சதவீதமாகவும் 2-ஆவது காலாண்டில் 7.9 சதவீதமாகவும், 3-ஆவது காலாண்டில் 7.2 சதவீதமாகவும், இறுதி காலாண்டில் 6.6 சதவீதமாகவும் ஜிடிபி வளர்ச்சி இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற நிதிக் கொள்கைக் குழுக் கூட்டத்தின் போது ஜிடிபி வளர்ச்சி 10.5 சதவீதம் இருக்கும் என்று கணிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதற்குப் பிறகு கரோனா தொற்று பரவல், நகரங்கள் தொடங்கி கிராமங்கள் வரை அதிகரித்துக் காணப்பட்டதால் தற்போது ஜிடிபி வளர்ச்சி மதிப்பீடு குறைக்கப்பட்டுள்ளது. அனைத்து நாள்களிலும் சேவை: தேசிய பணப் பரிவர்த்தனைக் கழகம் வழங்கி வரும் என்ஏசிஹெச் பணப் பரிவர்த்தனை சேவை, ஆகஸ்ட் 1-ஆம் தேதி முதல் வாரத்தின் அனைத்து நாள்களிலும் அளிக்கப்படும். இதன்மூலம் ஒரே நேரத்தில் பலருக்கு பணப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள முடியும். ஊதியம் அளிப்பது, ஓய்வூதியம் வழங்குவது, மின்சாரக் கட்டணம் வசூலிப்பது, கடன்களுக்கான தவணைகளை வசூலிப்பது

உள்ளிட்ட சேவைகள் இனி எளிதாகும் என்றார் ஆளுநர் சக்திகாந்த தாஸ்.

**3. மாநில தலைமை குற்றவியல் வழக்கறிஞராக அசன் முகமது ஜின்னா நியமனம் :**

சென்னை உயர் நீதிமன்றத்தில் புதிய அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். ஏற்கெனவே உயர் நீதிமன்ற அரசு தலைமை வழக்கறிஞராக ஆர்.சண்முகசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார். தற்காலிகமாக 23 பேர் அரசு வழக்கறிஞர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசின் மாநில தலைமை குற்றவியல் வழக்கறிஞராக திருவாரூர் மாவட்டம் அத்திக்கடையை சேர்ந்தஅசன் முகமது ஜின்னா (44) நியமிக்கப்பட்டுள்ளார்.

**4. கேரளாவைச் சேர்ந்த நபர் 'உலகம் தலைகீழாக போகிறது' என்ற தலைப்பில் எடுத்த ஒராங்குட்டான் புகைப்படத்துக்கு சர்வதேச விருது**

கேரளாவைச் சேர்ந்த தாமஸ் விஜயன் என்பவர் எடுத்தப் புகைப்படம் ஒன்று சர்வதேச விருதைப் பெற்றுள்ளது. அந்தப் புகைப்படத்தில் ஓராங்குட்டான் ஒன்று மரத்தை அணைத்தப்படி தலைகீழாக தொங்கிக்கொண்டு இருப்பதுபோல் இருக்கிறது. அதற்கு மேலே, மரத்தின் இலைகள், வானம் தெரிகின்றன. 'உலகம் தலைகீழாகப் போகிறது' என்று பெயரிடப்பட்ட இந்தப் புகைப்படத்துக்கு நேச்சர் டிடிஎல் என்ற சர்வதேச அமைப்பு 2021ம் ஆண்டுக்கான சிறந்த புகைப்படக் கலைஞருக்கான விருதை வழங்கியுள்ளது.

'இந்தப் புகைப்படத்தை ஒருவர் எளிதில் கடந்து செல்ல முடியாது' என்று நேச்சர் டிடிஎல் தெரிவித்துள்ளது. இந்தப் புகைப்படம் பார்ப்பவரை ஒரு கணம் குழப்பத்துக்கு ஆட்படுத்தும். ஒராங்குட்டான் தலைகீழாக தொங்கிக்கொண்டிருப்பது போல் தோன்றச் செய்யும். ஆனால், ஒராங்குட்டான் தலைக்கீழாக தொங்கவில்லை. மரத்தின் இலைகளும், வானமும் நீரில் பிரதிபலிக்கின்றன. கேரளாவைச் சேர்ந்த தாமஸ் விஜயன் தற்போது கனடா நாட்டில் வசித்து வருகிறார். வன விலங்குகளை புகைப்படம் எடுப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.

போர்னியா தீவுக்குச் சென்றபோது, அவருக்கு இப்படி ஒரு காட்சியை புகைப்படமாக எடுக்க தோன்றியிருக்கிறது. அதற்காக நீர் நடுவே இருக்கும் மரத்தை தேர்வு செய்துள்ளார். அந்த மரத்தில் ஏறி நின்று, அந்தப் பகுதிக்கு வழக்கமாக வரும் ஓராங்குட்டானுக்காக காத்திருந்தார். அவர் எதிர்பார்த்தபடி ஒராங்குட்டான் அந்த மரத்துக்கு வந்து ஏறியது. அந்தக் கணத்தைகலாப்பூர்வமாக படம் பிடித்துள்ளார் தாமஸ். 8000 க்கு மேற்பட்ட படங்கள் இடம்பெற்ற அந்தப் போட்டியில், தாமஸ் விஜயனின் இந்தப் புகைப்படம் விருது பெற்றுள்ளது. 1,500 பவுண்ட் விருதுத் தொகையாக அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

**5. 72 ரயில் நிலையங்களுக்கு ஐஎஸ்ஓ சான்றிதழ்**

சுற்றுச்சூழல் மேலாண்மையைச் செயல்படுத்தியதற்காக, தெற்கு ரயில்வேயில் 72 ரயில் நிலையங்களுக்கு ஐஎஸ்ஓ 14001 சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இந்திய ரயில்வேயில் பசுமை முயற்சிகளை அதிகப்படுத்துவதற்காக, இந்திய ரயில்வே-இந்திய தொழில் கூட்டமைப்பு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 2016-ஆம் ஆண்டு கையெழுத்தானது. இதன்பிறகு, ரயில்வேயில் பசுமை நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டது. இந்த நடவடிக்கையால், 30 பணிமனைகள், 7 உற்பத்தி நிறுவனங்கள், 8 லோகோ பணிமனைகள், ஒரு ஸ்டோர்ஸ் டிப்போ ஆகியவை 'கிரீன்கோ' சான்றிதழ் பெற்றுள்ளன. இதுதவிர, 19 ரயில்வே நிலையங்களைப் பசுமையாக மாற்றியதற்காக சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. 600-க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்களில் கடந்த 2 ஆண்டுகளில் சுற்றுச்சூழல் மேலாண்மையைச் செயல்படுத்தியதற்காக ஐஎஸ்ஓ 14001சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 718 நிலையங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

தெற்கு ரயில்வேயில் சுற்றுச்சூழல் மேலாண்மையைச் செயல்படுத்தியதற்காக 72 ரயில் நிலையங்களுக்கு ஐஎஸ்ஓ 14001சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. சென்னை ரயில்வே கோட்டத்தில் 19, திருவனந்தபுரம் கோட்டத்தில் 17, பாலக்காடு கோட்டத்தில் 15, மதுரை ரயில்வே கோட்டத்தில் 8, திருச்சி கோட்டத்தில் 7, சேலம் கோட்டத்தில் 6 ரயில் நிலையங்களும் என்று மொத்தம் 72 ரயில் நிலையங்கள் அடங்கும். இதுதவிர, தேசிய எரிசக்தி பாதுகாப்பு விருது நிகழ்ச்சியில், ரயில்வே ஒர்க்ஷாப் பிரிவில், திருச்சி பொன்மலை ஒர்க்ஷாப்-க்கு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள என தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**5. 2025-ம் ஆண்டுக்குள் பெட்ரோலுடன் 20% எத்தனால் கலப்பு: சுற்றுச்சூழலைப் பாதுகாக்க பிரதமர் நரேந்திர மோடி உறுதி**

வரும் 2025-ம் ஆண்டுக்குள் பெட்ரோலுடன் 20 சதவீத எத்தனால் சேர்க்கப்படும். இதன்மூலம் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும். விவசாயிகளின் வருவாய் பெருகும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். உலக சுற்றுச் சூழல் தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி மத்திய சுற்றுச்சூழல், பெட்ரோலிய துறை சார்பில் நடத்தப்பட்ட விழாவில் பிரதமர்மோடி காணொலி வாயிலாக பங்கேற்றார். அப்போது, பெட்ரோலில் எத்த னாலை கலப்பது தொடர்பான நிபுணர்களின் திட்ட அறிக்கையை பிரதமர் வெளியிட்டார். மேலும் நாடு முழுவதும் எத்தனால் பயன்பாட்டை ஊக்குவிக்க இ-100 என்ற திட்டத்தை அவர் தொடங்கி வைத்தார். விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

21-ம் நூற்றாண்டில் இந்தியாவில் எத்தனால் பயன்பாடு அதிகரிக்கப்படும். இதன்மூலம் சுற்றுச்சூழல் மேம்படும். விவசாயி களின் வருவாய் பெருகும். வரும் 2030-ம் ஆண்டுக்குள் 20 சதவீத எத்தனால் பயன்பாட்டை முழுமையாக அமலுக்கு கொண்டு வர இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தற்போது 2025-ம் ஆண்டுக் குள்ளேயே இலக்கை எட்ட முடிவு செய்துள்ளோம். கடந்த 2014-ம் ஆண்டில் 1.5 சதவீத எத்தனால், பெட்ரோலுடன் சேர்க்கப்பட்டது. தற்போது 8.5 சதவீதத்தை எட்டியுள்ளோம். வரும் 2025-ம் ஆண்டுக்குள் 20 சதவீதத்தை எட்டுவோம்.

கடந்த 2013-14-ம் ஆண்டில் 38 கோடி லிட்டர் எத்தனாலை கொள்முதல் செய்தோம். இப்போது 320 கோடி லிட்டர் எத்தனாலை கொள்முதல் செய்கிறோம். இதன் மூலம் நாடு முழுவதும் கரும்பு விவசாயிகள் பெரிதும் பலன் அடைந்து வருகிறார்கள். எத்தனால் உற்பத்தியை நாடு முழுவதும் விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளோம். இந்தியாவின் முயற்சியால் சர்வதேச சோலார் கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு சூரியன், ஓர் உலகம், ஒரே மின் கட்டமைப்பு என்ற கொள்கையுடன் இந்த கூட்டணியை அமைத்துள்ளோம். பூமியின் சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் சிறப்பாக செயல்படும் முதல் 10 நாடுகளின் வரிசையில் இந்தியா இடம்பெற்றிருக்கிறது.

கடந்த 6 ஆண்டுகளில் சூரிய மின் சக்தி உற்பத்தி 15 மடங்கு அதிகரித்துள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை அதிகம் உற்பத்தி செய்யும் முதல் 5 நாடுகளில் இந்தியா இடம் பிடித்துள்ளது. காற்று மாசுவைக் கட்டுப்படுத்த நீர்வழிப் போக்குவரத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. நாட்டின் 18 நகரங்களில் மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. இதன் மூலம் பொது போக்குவரத்தை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கடந்த 2014-ம் ஆண்டுக்கு முன்பு 7 விமான நிலையங்களில் மட்டுமே சூரிய மின் சக்தியை உற்பத்தி செய்யும் வசதி இருந்தது. இப்போது 50 விமான நிலையங்களில் சூரிய மின் சக்தி உற்பத்தி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

**6. பன்னாட்டு நிறுவனங்களின் வரி ஏய்ப்பைத் தடுக்கும் வரலாற்று ஒப்பந்தம்**

பன்னாட்டு நிறுவனங்கள் வரி ஏய்ப்பு செய்வதைத் தடுக்கும் சர்வதேச வரி சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தத்தில் உலகின் மிகப் பெரிய 7 பணக்கார நாடுகள் சனிக்கிழமை கையெழுத்திட்டன. இதுகுறித்து அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது: தொழில் வளர்ச்சியில் முன்னணி வகிக்கும் 7 நாடுகளின் கூட்டமைப்பான ஜி-7 அமைப்பின் 46-ஆவது மாநாடு பிரிட்டனின் கார்ன்வால் மாகாணம், பார்பிஸ் பே நகரில் வரும் 11 முதல் 13-ஆம் தேதி வரை நடைபெறவிருக்கிறது. அதற்கு முன்னதாக, அதன் உறுப்பு நாடுகளின் நிதியமைச்சர்கள் மாநாடு தலைநகர் லண்டனில் இரண்டாவது நாளாக சனிக்கிழமை நடைபெற்றது.

இதில், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, கனடா, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளின் நிதியமைச்சர்கள் பங்கேற்றனர். அந்த மாநாட்டில், பன்னாட்டு நிறுவனங்கள் நியாயமான முறையில் வரி செலுத்துவதை உறுதி செய்யும் வகையில் வரி விதிப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான சர்வதேச ஒப்பந்தம் கையெழுத்தானது. கரோனா நெருக்கடியால் நாடுகள் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இந்தச் சூழலில், வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ஒப்பந்தத்தால் நாடுகளுக்கு கணிசமான வரி வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஒப்பந்தம் அமலுக்கும் வந்தால், அமேசான், கூகுள் போன்ற மிகப்

பெரிய பன்னாட்டு தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று கூறப்படுகிறது. இதுகுறித்து சுட்டுரை (ட்விட்டா்) வலைதளத்தில் வெளியிட்டுள்ள விடியோ பதிவில் பிரிட்டன் நிதியமைச்சா் ரிஷி சுனக் கூறியதாவது:

சா்வதேச வரி விதிப்பு முறையில் சீா்திருத்தம் மேற்கொள்வது தொடா்பாக பல ஆண்டுகளாக பேச்சுவாா்த்தை நடைபெற்று வந்தது. இந்த நிலையில், இதுதொடா்பான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தத்தை ஜி–7 நாடுகளின் நிதியமைச்சா்கள் எட்டியுள்ளனா். தற்போதைய நவீன தொழில்நுட்ப யுகத்துக்கு ஏற்ற வகையிலான வரி சீா்திருத்தங்களை மேற்கொள்ள அந்த ஒப்பந்தம் வழிவகுக்கும் என்றாா் அவா். பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளுக்கு கரோனா தடுப்பூசிகளை வழங்கி உதவ வேண்டும் என்று ஜி–7 நாடுகளுக்கு நெருக்கடி அதிகரித்து வருகிறது. மேலும், பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு நிதியளிக்க வேண்டிய கட்டாயத்தில் அந்த அமைப்பின் உறுப்பு நாடுகள் உள்ளன.

இந்தச் சூழலில், அமைப்பின் 46–ஆவது மாநாடு வரும் வெள்ளிக்கிழமை தொடங்கவிருக்கிறது என்று அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. உலகின் மிகப் பெரிய பணக்கார நாடுகள் மேற்கொண்டுள்ள இந்த சா்வதேச வரி சீா்திருத்த ஒப்பந்தத்தை பிற நாடுகளும் பின்பற்ற வேண்டிய கட்டாயம் உருவாகலாம் என்று கூறப்படுகிறது. எதற்காக இந்த சீா்திருத்தம்? பல்வேறு நாடுகளில் செயல்பட்டு வரும் மிகப் பெரிய நிறுவனங்களுக்கு வரி விதிப்பதில், அரசுகள் நீண்ட காலமாக சவாலை சமாளித்து வருகின்றன.

தகவல் தொழில்நுட்பப் புரட்சி ஏற்பட்டு, மிகப் பிரம்மாண்டமான பன்னாட்டு தொழில்நுட்ப நிறுவனங்கள் உருவானதைத் தொடா்ந்து, இந்தச் சவால் மேலும் அதிகரித்தது. தற்போதைய நிலையில், மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனங்கள் எல்லா நாடுகளிலும் தொழில் செய்தாலும், மிகக் குறைந்த தொழில்வரி விதிக்கும் நாடுகளில் ஒரு கிளையைத் திறந்து அங்கு தங்களது லாபத்தை அறிவிக்க முடியும். அதன் மூலம், பிற நாடுகளில் பெற்ற லாபத்தையும் அந்த நாட்டில் கணக்கு காட்டி, குறைந்த தொழில் வரியைக் அந்த நிறுவனங்கள் செலுத்தி வருகின்றன. இதற்கு சட்டப்பூா்வமாக எந்தத் தடையும் இல்லை. இதனால், அந்த நிறுவனங்கள் பெருமளவில் தொழில் செய்து லாபம் ஈட்டும் நாடுகளுக்கு உரிய வரி கிடைக்காமல் போகிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கிலேயே சா்வதே வரி சீா்திருத்தத்தை மேற்கொள்வதற்கான ஒப்பந்தத்தை ஜி–7 நாடுகள் ஏற்படுத்தியுள்ளன.

ஒப்பந்த அம்சங்கள்... – நிறுவனங்கள் எந்த நாட்டில் செயல்பட்டு லாபமீட்டுகிறதோ, அந்த லாபத்துக்கான வரியை அந்த நாட்டில்தான் செலுத்த வேண்டும். – குறைந்தபட்சம் 10 சதவீதம் லாபமீட்டும் எல்லா பன்னாட்டு நிறுவனங்களுக்கும் இந்த விதிமுறை பொருந்தும் – நாடுகளிடையே தொழில் வரி விதிப்பில் ஏற்றத்தாழ்வுகளை களையும் வகையில், சா்வதேச குறைந்தபட்ச தொழில் வரி 15 சதவீதமாக நிா்ணயிக்கப்படவேண்டும்.

"இந்த ஒப்பந்தம் அமலுக்கும் வந்தால், அமேஸான், கூகுள் போன்ற மிகப் பெரிய பன்னாட்டு தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று கூறப்படுகிறது."

**1. பன்னாட்டு வானியல் சங்கமானது நிலவிலுள்ள அம்சங்களுக்கு எட்டுப்பெயர்களை அங்கீகரித்துள்ளது. அப்பெயர்கள் சார்ந்த மொழி?**

அ) ஆங்கிலம்

***ஆ) சீனம் ☑***

இ) ஸ்பானியம்

ஈ) பிரெஞ்சு

✓ பன்னாட்டு வானியல் நிலவில் உள்ள பகுதியைச் சுற்றியுள்ள அம்சங்க –ளுக்கான 8 சீனப்பெயர்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. கடந்த ஆண்டு, சீன ஆய்வுக்கலமான சாங்–5, நிலவின் மேற்பரப்பிலிருந்து மாதிரிகளை சேகரித்து பூமிக்கு திரும்புவதற்காக அவ்விடங்களுக்கு அருகே தரையிற –ங்கியது. சீனா, கடந்த 2010ஆம் ஆண்டு முதல் நிலவின் நிலக்கூறுகளு –க்கு பெயரிட்டு வருகிறது.

---

**2. உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் நாள் கடைப் –பிடிக்கப்படும் தேதி எது?**

**அ) ஜனவரி 30 ☑**

ஆ) பிப்ரவரி 28

இ) மார்ச் 31

ஈ) ஏப்ரல் 30

✓ தற்போது நடைபெற்றுவரும் 74ஆவது உலக நலவாழ்வு அவை, ஜனவரி.30ஆம் தேதியை "உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் நாள்" என அறிவித்துள்ளது. அந்த நாளை அங்கீகரிப்பதற்கான கோரிக்கை ஐக்கிய அரபு அமீரகத்தால் (UAE) முன்னெடுக்கப்பட்டு, உறுப்புநாடுகளால் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

✓ வைரசுகள், பாக்டீரியா, முதலுயிரி மற்றும் ஒட்டுண்ணி புழுக்கள்போன்ற பல்வேறு நோய்க்கிருமிகளால் ஏற்படும் தொற்றுகளின் தொகுப்புதான் உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள்.

---

**3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற தால் ஏரி, ஜம்மு–காஷ்மீரின் எந்த நகரத்தில் அமைந்துள்ளது?**

**அ) ஸ்ரீநகர் ☑**



ஆ) ஜம்மு

இ) அனந்த்நாக்

ஈ) லே

✓ ஜம்மு–காஷ்மீரின் கோடைகால தலைநகரமான ஸ்ரீநகர் நகரத்திலுள்ள ஓர் ஏரிதான் இந்த தால். அது "காஷ்மீரின் மகுடத்தில் உள்ள வைரக்கல்" என்றும் அழைக்கப்படுகிறது. சமீபத்தில், இந்த ஏரியில் சட்டவிரோதமாக கட்டுமானப் பணிகள் நடைபெறுவதாக வழக்குகள் பதிவாகின. ஏரிகள் & நீர்வழிகள் மேம்பாட்டு ஆணையமானது அந்த ஏரியைச் சுற்றியுள்ள 170'க்கும் மேற்பட்ட சட்டவிரோத கட்டுமானங்களை கடந்த மூன்று மாதங்களில் இடித்துத் தரைமட்டமாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**4. மழைக்கால உணர்த்தியாகக் கருதப்படும் லிட்டில் பிளட் டெயில் சார்ந்த இனம் எது?**

அ) தேன்சிட்டு

**ஆ) தட்டான் ☑**



இ) தவளை

ஈ) ஆமை

✓ லிட்டில் பிளட் டெயில் என்பது ஒரு சிறிய தட்டான்பூச்சியாகும். அது கேரள மாநிலத்தில் பரந்த அளவில் உள்ளது. இவ்வகை தட்டான் இனத்தை ஜூன் தொடக்கத்திலிருந்து செப்டம்பர் வரையிலான காலத்தில் காண –லாம். இதன் வாழ்வுச் சுழற்சி, பருவமழையுடன் மிக நெருக்கமாக ஒத்தி –ருப்பதால், அவை பருவமழையின் உணர்த்தியாகக் கருதப்படுகின்றன.

---

**5. சரக்கு & சேவைகள் வரி (GST) கூட்டமைப்பின் கூட்டத்திற்கு தலைமை தாங்குபவர் யார்?**

அ) பிரதமர்



**ஆ) நிதியமைச்சர் ☑**

இ) நிதிச்செயலாளர்

ஈ) NITI ஆயோக் தலைமைச் செயலதிகாரி

✓ சரக்கு மற்றும் சேவைகள் வரி (GST) கவுன்சில் கூட்டத்திற்கு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமைதாங்குகிறார். அண்மையில், 43ஆவது GST கவுன்சில் கூட்டம், காணொலிவழி மாநாடாக நடத்தப்பட் –டது. COVID தடுப்பூசிகளின் வரிவிகிதங்கள்குறித்த முடிவு அமைச்சர்கள் குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்டது. காலதாமதமாக GST செலுத்தினால் பெறப்படும் அபராதம் தளர்த்தப்பட்டுள்ளதாக அப்போது அறிவிக்கப்பட்டது.

---

**6.சமீபத்தில் பிரதமரால் தொடங்கப்பட்ட YUVA திட்டத்தின் நோக்கம் என்ன?**

அ) பெண்கள் அதிகாரமளித்தல்




**ஆ) ஆசிரியர் வழிகாட்டல் ☑**

இ) காலநிலை மாற்ற கட்டுப்பாடு

ஈ) குழந்தைகள் பாதுகாப்பு

✓ இளம் & வளர்ந்துவரும் எழுத்தாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் YUVA (Young, Upcoming and Versatile Authors) – இளம் எழுத்தாளர்களை வழிநடத்தும் பிரதமரின் திட்டத்தை கல்வியமைச்சகத்தின் உயர்கல்வித் துறை அறிமுகப்படுத்தியுள்ளது.

✓ India@75 திட்டத்தின் ஒருபகுதியாக இந்தத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்திய விடுதலையின் 75ஆவது ஆண்டைக் கொண்டாடவிருக்கும் தருணத்தில், விடுதலைப்போராட்ட வீரர்கள், விடுதலையுடன் தொடர்பு –டைய நிகழ்வுகள் போன்றவைப்பற்றி எழுதும் விதத்தில் இந்தத் திட்டம் செயல்படும்.

---

**7. BRICS கூட்டமைப்பின் 2021ஆம் ஆண்டுக்கான தலைமைப் பொறுப்பைக் கொண்டுள்ள நாடு எது?**

அ) பிரேஸில்

**ஆ) இந்தியா ☑**

இ) ரஷியா

ஈ) சீனா

✓ BRICS கூட்டமைப்பின் 2021ஆம் ஆண்டுக்கான தலைமைப் பொறுப்பை இந்தியா வகிக்கிறது. 2012 மற்றும் 2016'க்குப்பிறகு, இந்தியா, BRICS உச்சிமாநாட்டை நடத்துவது இது மூன்றாவது முறையாகும். சமீபத்தில், நடைபெறவிருக்கும் BRICS வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்திற்கு தயாராவதற்காக, இந்தியா, இரண்டாவது BRICS கூட்டத்தை கூட்டியது. "BRICS @ 15: Intra–BRICS Cooperation with Continuity, Consolidation and Consensus" என்பது இதன் கருப்பொருளாக அமைந்தது.

---

**8. 'தேசிய AI இணையதளத்தை (indiaAI)' தொடங்கிய ஒன்றிய அமைச்சகம் எது?**

அ) நலவாழ்வு அமைச்சகம்

**ஆ) மின்னணு & தகவல் தொடர்பு அமைச்சகம் ☑**

இ) நிதி அமைச்சகம்

ஈ) வர்த்தக அமைச்சகம்

✓ 'தேசிய AI இணையதளம்' (indiaai.gov.in) அதன் முதல் ஆண்டு விழாவை 2021 மே.28 அன்று கொண்டாடியது. இந்த இணையதளம் என்பது மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், தேசிய மின்னாளுகை பிரிவு மற்றும் NASSCOM ஆகியவற்றின் கூட்டுமுயற்சியாகும்.

✓ இது, உலகம் முழுவதும் AI தொடர்பான செய்திகள், கற்றல், கட்டுரைகள், நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகள் போன்றவற்றிற்கான மையமாக செய –ல்படுகிறது. ஒரு மெய்நிகர் நிகழ்வின்போது, 'INDIAai'இன் ஓராண்டு' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையும், வலைத்தள முகப்புப்பக்கத்தின் புதிய தோற்றமும் வெளியிடப்பட்டன.

---

**9. இந்திய தடைக்காப்புறுதி நிறுவனம் அமைந்துள்ள இடம் எது?**

அ) சென்னை

**ஆ) ஹைதராபாத் ☑**

இ) மும்பை

ஈ) புனே

- ✓ தடுப்பூசி உற்பத்தியை அதிகரிப்பதற்காக, மிஷன் COVID சுரக்ஷாவின் கீழ் சில பொதுத்துறை நிறுவனங்களுக்கு மானியங்களை வழங்க ஒன்றிய அரசு தயாராகவுள்ளது. ஹைதராபாத்தில் அமைந்துள்ள இந்திய தடைக்காப்புறுதி நிறுவனமானது தேசிய பால்வள வாரியத்தின்கீழ் இயங்கி வரும் ஒரு பிரிவாகும்.
- ✓ அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகத்தின் கூற்றுப்படி, கோவாக்சின் தடுப்பூசி தயாரிப்பதற்கான மருந்துப்பொருட்களை வழங்குவதற்காக இந்திய தடைக்காப்புறுதி நிறுவனமும் (Indian Immunological ltd) பாரத் பயோடெக் நிறுவனமும் கூட்டிணைந்துள்ளன.

---

**10. எந்த இந்திய முன்னாள் பிரதம அமைச்சரின் நினைவுநாள், "பயங்கரவாத எதிர்ப்பு நாள்" என அனுசரிக்கப்படுகிறது?**

**அ) இராஜீவ் காந்தி ☑**



ஆ) இந்திரா காந்தி

இ) அடல் பிகாரி வாஜ்பாய்

ஈ) மொரார்ஜி தேசாய்

- ✓ இந்திய முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தியின் நினைவுநாள், நாடு முழுவதும், "பயங்கரவாத எதிர்ப்பு நாள்" என அனுசரிக்கப்படுகிறது. அவரின் 29ஆவது நினைவுநாள் மே.21 அன்று அனுசரிக்கப்பட்டது.
- ✓ கடந்த 1991ஆம் ஆண்டு இதே நாளில், தேர்தல் பரப்புரையின் போது சென்னைக்கருகே அமைந்துள்ள ஸ்ரீபெரும்புதூரில் அவர் படுகொலை செய்யப்பட்டார். இராஜீவ் காந்தி தனது நாற்பதாம் வயதில் இந்தியாவின் ஆறாவது பிரதம அமைச்சராக பதவியேற்றதன்மூலம், இந்தியாவின் மிக இளவயது பிரதமராக ஆனார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஜூன் 5 – உலக சுற்றுச்சூழல் நாள்.**

**கருப்பொருள்:** Ecosystem Restoration

---

**2. தமிழ்நாட்டில் முதல்முறையாக – யானைகள் குறித்த விழிப்புணர்வு மையம் கோவையில் உருவாக்கம்:**

தமிழ்நாட்டில் முதன்முறையாக யானைகள் குறித்த விழிப்புணர்வு மையம் கோவையில் உருவாக்கப்பட்டுள்ளது. வனத்தை பாதுகாப்பதிலும், வன வளத்தைப்பெருக்குவதிலும் யானைகளின் பங்கு குறிப்பிடத்தக்கது.

யானைகள் குறித்த பல்வேறு தகவல்களை தெரிந்துகொள்வதற்கான சிறப்பு மையம் தமிழ்நாட்டில் இல்லை என்ற குறைபாடு இருந்து வந்தது. இந்நிலையில், கோயம்புத்தூர்–மேட்டுப்பாளையம் கோத்தகிரி சாலையில், வனத்துறை மரக்கிடங்கு வளாகத்தில், 'வேழம் இயலியல்'விழிப்புணர்வு மையம் உருவாக்கப்பட்டள்ளது.

இம்மையத்தில் பல்வேறு இன யானைகளின் விவரங்கள் தொகுக்கப்பட்டு, காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இயற்கைக்கும் யானைக்குமான தொடர்பு, மனிதனுக்கும் யானைக்குமான தொடர்பு, மனிதர்களால் யானைகளுக்கு –ம் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், யானைகளை ஏன் பாதுகாக்க வேண்டும் என்பன குறித்த விளக்கங்கள இங்கு இடம்பெற்றுள்ளன.

---

**3. பள்ளிக்கல்வி செயல்திறன் குறியீடு: ஏ++ மதிப்பீடு பெற்று தமிழகம் சாதனை**

பள்ளிக்கல்வி செயல்திறன் தரப்படுத்தல் குறியீட்டில் தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட மாநிலங்கள் மிக உயரிய மதிப்பீடான ஏ++ ஐ பெற்றுள்ளன. நாடுமுழுவதும் பள்ளிக்கல்வித்துறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை 70 பிரிவுகளின் கீழ் அளவிடுவதற்காக செயல்திறன் தரப்படுத்தல் குறியீட்டை அரசு அறிமுகப்படுத்தியது. மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான செயல்திறன் தரப்படுத்தல் குறியீடு 2019–20–ன் வெளியீட்டிற்கு மத்திய கல்வி அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் 'நிஷாங்க்' அனுமதி அளித்துள்ளார்.

முதன்முறையாக, கடந்த 2019–ஆம் ஆண்டு, 2017–18 ஆம் ஆண்டுக்கான குறியீடு வெளியிடப்பட்டது. 2019–20 ஆம் ஆண்டிற்கான செயல்திறன் தரப்படுத்தல் குறியீடு, இந்த வரிசையில் மூன்றாவதாகும். இந்தக் குறியீடு, கல்வித்துறையில் அதிகம் எதிர்பார்க்கப்படும் அம்சங்களை பல்முனை முயற்சிகளின் வாயிலாக மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் மேற்கொள்ள உந்துசக்தியாக இருக்கும். பள்ளிக் கல்வி முறை அனைத்து நிலைகளிலும் வலுவாக இருப்பதை உறுதி செய்வதற்கும், ஏதேனும் இடைவெளி தென்பட்டால் அதனைச் சுட்டிக்காட்டவும் இந்த குறியீடு, மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் உதவிகரமாக இருக்கும்.

2019–20 ஆம் ஆண்டில் தமிழ்நாடு, பஞ்சாப், சண்டிகர், அந்தமான் நிக்கோபார் தீவுகள் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் மிக உயரிய மதிப்பீடான ஏ++ ஐ பெற்றுள்ளன. முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2019–20 ஆண்டில் பெரும்பாலான மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் தங்களது தர நிலையில் மேம்பட்டுள்ளன. தமிழ்நாடு, புதுச்சேரி, அந்தமான் நிக்கோபார் தீவுகள், அருணாச்சல பிரதேசம், மணிப்பூர், பஞ்சாப், ஆகியவை தங்களது ஒட்டுமொத்த குறியீட்டு மதிப்பெண்ணில் கூடுதலாக 10%, அதாவது 100 அல்லது அதற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளன.

அணுகுதல் என்ற பிரிவில் அந்தமான் நிக்கோபார் தீவுகள், இலட்சத்தீவுகள் மற்றும் பஞ்சாப் ஆகியவை 10% (8 புள்ளிகள்) வளர்ச்சியைப் பெற்றுள்ளன. உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் என்ற பிரிவில் சுமார் 13 மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் 10% (15 புள்ளிகள்) வளர்ச்சியை அடைந்துள்ளன. அந்தமான் நிக்கோபார் தீவுகள் மற்றும் ஒடிசா, 20% வளர்ச்சியைப் பெற்றுள்ளன. சம விகிதம் என்ற பிரிவில் அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர், ஒடிசா ஆகிய மாநிலங்கள் 10%க்கும் அதிகமான வளர்ச்சியை அடைந்துள்ளன.

ஆளுகை செயல்முறை என்ற பிரிவில் 19 மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் 10% வளர்ச்சியை (36 புள்ளிகள்) எட்டியுள்ளன. அந்தமான் நிக்கோபார் தீவுகள், ஆந்திரப் பிரதேசம், அருணாச்சல பிரதேசம், மணிப்பூர், பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் குறைந்தபட்சம் 20 சதவீத வளர்ச்சியைப் (72 அல்லது அதற்கும் மேற்பட்ட புள்ளிகள்) பெற்றுள்ளன.

---

**4. மாநில வளர்ச்சி கொள்கைக் குழு துணைத் தலைவராக ஜெயரஞ்சன் நியமனம்: முதல்வர் உத்தரவு**

மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவுக்கு புதிய உறுப்பினர்களை நியமனம் செய்து, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக, தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

"தமிழகத்தில், மாநில திட்டக் குழு, முன்னாள் முதல்வர் கருணாநிதியால், 1971 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் நாள் ஏற்படுத்தப்பட்டது. மாநில திட்டக் குழு, முதல்வரின் தலைமையின்கீழ் ஒரு ஆலோசனை அமைப்பாக செயல்பட்டு, மாநிலத்தின் பல்வேறு வளர்ச்சிக்கான செயல்பாடுகளில் தனது பரிந்துரைகளை அரசுக்கு அளித்து வருகிறது.

மாநில திட்டக் குழு துணைத் தலைவரின் கீழ் வளர்ச்சி சார்ந்த முக்கிய துறைகளின் நிபுணர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இந்த அமைப்பு செயல்பட்டு வருகிறது. மாநில திட்டக் குழுவானது, கடந்த 23.04.2020–ல் 'மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவாக' மறுசீரமைப்பு செய்யப்பட்டு, அதன் இன்றியமையாத பணிகளான இலக்கு நிர்ணயிப்பது, கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் கொள்கைக்கான ஆலோசனை வழங்குதல், கொள்கை ஒத்திசைவு உருவாக்குதல், சிறப்பு திட்டங்களைச் செயல்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு முக்கியமான பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவைப் பின்வருமாறு திருத்தியமைத்து உத்தரவு பிறப்பித்துள்ளார். அதன்படி, பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவின் துணைத் தலைவராகவும்; பேராசிரியர். ராம. சீனுவாசன் முழுநேர உறுப்பினராகவும், பேராசிரியர்கள் ம. விஜயபாஸ்கர், சுல்தான் அஹ்மத் இஸ்மாயில், ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி மு.தீனபந்து, மன்னார்குடி சட்டப்பேரவை உறுப்பினர் டி.ஆர்.பி.ராஜா, மல்லிகா சீனிவாசன், மருத்துவர் ஜோ.அமலோற்பவநாதன், சித்த மருத்துவர் கு.சிவராமன் மற்றும் முனைவர் நர்த்தகி நடராஜ் உள்ளிட்டோர் பகுதி நேர உறுப்பினர்களாகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்". இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**5. சூழலியல் சவால்! | சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த தலையங்கம்**

உலகம் எதிர்கொள்ளும் அனைத்து பிரச்னைகளுக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புதான். இதை ஏறத்தாழ அரைநூற்றாண்டுக்கும் மேலாக அறிந்திருந்தும் போதுமான நடவடிக்கைகளை எடுக்காமல் இருக்கிறோம். 1974 முதல் ஆண்டுதோறும் ஜூன் 5-ஆம் தேதி உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்படுகிறது. அப்படியிருந்தும் இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்கிற உணர்வு மக்கள் மத்தியில் ஏற்படவில்லை.

இந்த ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்துக்கான கொள்கை வாசகம் "சூழலியல் மீட்டெடுப்பு' என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. சூழலியலுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பின் காரணமாக பருவநிலை மாற்றமும், அதன் விளைவாக உயிரினங்களுக்கு இனப்பெருக்க அச்சுறுத்தலும் உருவாகியிருக்கின்றன. இதே நிலைமை தொடர்ந்தால், அடுத்த சில நூற்றாண்டுகளில் உலகில் மனித இனமும் அழிவை நோக்கி நகரத் தொடங்கும் என்பதை நாம் ஏனோ உணர மறுக்கிறோம்.

கடந்த ஒரு நூற்றாண்டாக உலகெங்கிலும் விளைநிலங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. வனப்பரப்பு குறைந்து வருகிறது. இதனால், பல்வேறு உயிரினங்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. 1970 முதல் 2016 வரையிலான 46 ஆண்டுகளில் மட்டும் பல்வேறு உயிரினங்களின் எண்ணிக்கை சராசரியாக 68% குறைந்திருக்கிறது. சில உயிரினங்கள் முற்றிலுமாக அழிந்திருக்கின்றன. வேறு பல அழிவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன.

ஆண்டுதோறும் ஏறத்தாழ 1.1 கோடி டன் நெகிழிப் பொருள்கள் கடலில் கொட்டப்படுகின்றன. இதன் விளைவாக, கடல்வாழ் உயிரினங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தலைச் சொல்லிமாளாது. அது குறித்த ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. எண்ணிலடங்கா கடல் வாழ் உயிரினங்கள் இருப்பதால், எவையெல்லாம் முற்றிலுமாக அழிந்திருக்கின்றன என்பது குறித்த சரியான புள்ளி விவரம் கிடைக்கவில்லை. நெகிழியால் ஏற்படும் அச்சுறுத்தலைப் போலவே, புவி வெப்பமயமாதலைத் தொடர்ந்து கடல்நீர் வெப்பம் அதிகரிப்பதாலும் கடல்வாழ் உயிரினங்கள் பல அழிந்து கொண்டிருக்கின்றன.

மக்கள்தொகைப் பெருக்கமும், அதனால் தேவைப்படும் கூடுதல் நிலப்பரப்பு அவசியமும் விளைநிலங்களையும், வனப்பகுதிகளையும் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கியிருக்கின்றன. வளர்ச்சி என்கிற பெயரில் வனவிலங்கு சரணாலயங்கள்கூட விட்டுவைக்கப்படாமல் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகின்றன. இதனால், வனவிலங்குகளும், பறவைகளும், புழு பூச்சிகளும் அழிவை நோக்கி நகர்கின்றன. உலகின் இயற்கை சமநிலையை நிலைநிறுத்த அவையெல்லாம் அவசியம் என்பதை நாம் மறந்துவிடுகிறோம்.

வரலாற்று ஆய்வாளர்களின் கூற்றுப்படி, இதுவரை உலகம் ஐந்து முறை பேரழிவை எதிர்கொண்டிருக்கிறது. உலகின் ஏனைய உயிரினங்கள் பேரழிவை எதிர்கொள்ளும் போதெல்லாம் அதன் தொடர் விளைவாக மனித இனமும் ஏதாவது வகையில் பாதிக்கப்பட்டு பேரழிவுக்கு ஆளாகியிருக்கிறது. இப்போதைய சூழலியல் பாதிப்பு, உலகம் ஆறாவது பேரழிவை நோக்கி நகர்கிறதோ என்கிற அச்சத்தை ஏற்படுத்துவதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கிறார்கள்.

உலகில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 42 லட்சத்திலிருந்து 70 லட்சம் பேர் காற்றுமாசால் பாதிக்கப்பட்டு உயிரிழக்கிறார்கள். 10-இல் 9 பேர் அதிக அளவு மாசுபட்ட காற்றைத்தான் சுவாசிக்கிறார்கள். இது குறித்த அச்சத்தையும் எச்சரிக்கையையும் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே விஞ்ஞானிகளும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் வெளிப்படுத்தியும்கூட, விழிப்புணர்வு ஏற்படாததன் விளைவைத்தான் உலகம் இப்போது எதிர்கொள்கிறது. தற்போது உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொவைட் 19 கொள்ளை நோய்த்தொற்றுக்கும், சுற்றுச்சூழல் பாதிப்புக்கும் தொடர்பு உண்டு என்று விஞ்ஞானிகள் உறுதிபடத் தெரிவிக்கிறார்கள். தீநுண்மிப் பரவலில் காற்றுமாசு மிகப் பெரிய பங்கு வகிப்பதாகவும், அதனால் சுற்றுச்சூழலுக்கும் கொள்ளை நோய்த்தொற்று காரணமான மரணங்களுக்கும் தொடர்பு இருக்கக் கூடும் என்பதும் அவர்களது கருத்து.

ஒருபுறம் கொள்ளை நோய்த்தொற்றை மருத்துவத் துறையினரின் உதவியுடன் உலகம் எதிர்கொண்டு வருகிறது என்றாலும்கூட, இதுபோன்ற பேரிடர்கள் மனித இனத்தை தாக்காமல் இருக்க வேண்டுமானால், சூழலியல் மீட்பு உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். அதாவது, ஏற்பட்டிருக்கும் பாதிப்புகள் தடுக்கப்பட்டும், மேலும் பாதிப்புகள் ஏற்படாமலும், சூழலியல் மீட்டெடுக்கப்பட்டும், இயற்கை சமநிலையை நாம் உறுதிப்படுத்த வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். பல்லுயிர்ப் பெருக்கம் மேலும் தகர்ந்து விடாமல் உடனடியாகத் தடுக்கப்பட வேண்டும். பருவநிலை மாற்றம் எதிர்கொள்ளப்பட வேண்டும். அதன் மூலம்தான் மனித இனத்தின் வருங்காலத்தை உறுதிப்படுத்த முடியும் என்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மனிதர்களால் ஏற்படும் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தின் மூன்றில் ஒரு பங்கு, உணவு உற்பத்தித் துறையால் ஏற்படுகிறது என்று ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. அதற்கு வனங்கள் அழிக்கப்பட்டு, கூடுதல் நிலங்கள் விவசாயப் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டிருப்பது முக்கியமான காரணம். உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும், உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், ரசாயன உரங்களும், பூச்சி மருந்துகளும் அதிகமாக பயன்படுத்துவதும்கூட காரணிகள் என்பதை மறந்துவிடக் கூடாது. இந்தியாவில் பசுமைப் புரட்சி உணவுத் தன்னிறைவையும், விவசாயிகளுக்கு அதிக மகசூலையும் ஏற்படுத்தித் தந்திருக்கிறது என்றாலும்கூட, அதிகரித்த ரசாயன உரங்களின் விளைவாகப் பல்லுயிர்ப்பெருக்க பாதிப்பும், பசுமை இல்ல வாயு வெளியேற்ற அதிகரிப்பும் ஏற்பட்டிருப்பதை மறந்துவிடுகிறோம். பலவீனமான அஸ்திவாரத்தில் பலமான வீடு கட்டும் முயற்சிதான் இது.

---

**6. கரோனா 2-ஆவது அலை வேளாண் துறையில் பாதிப்பை ஏற்படுத்தாது: NITI ஆயோக்**

இந்தியாவில் கரோனா தொற்றின் இரண்டாவது அலை, வேளாண் துறையில் எந்த வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தாது என்று நீதி ஆயோக் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த அமைப்பின் வேளாண் பிரிவுக்கான உறுப்பினா் ரமேஷ் சந்த் ஞாயிற்றுக்கிழமை கூறியதாவது: இந்தியாவில் கரோனா தொற்றின் இரண்டாவது அலை, கடந்த மே மாதத்தில் கிராமப்புறங்களில் வேகமாகப் பரவியது. இருப்பினும் அந்த காலகட்டத்தில் வேளாண் சாா்ந்த பணிகள் பெரிய அளவில் எதுவும் நடைபெறவில்லை. கோடைக் காலம் என்பதால் சிறிய அளவில் காய்கறி சாகுபடி நடைபெற்றது தவிர, உழவு, அறுவடை என்று எந்த விவசாயப் பணிகளும் மே மாதத்தில் நடைபெறவில்லை.

வழக்கமாக, வேளாண் பணிகள் மாா்ச்-ஏப்ரல் மாதங்களில் முடிவுக்கு வந்து, ஜூன் மாதம் பருவ மழை பெய்யத் தொடங்கிய மீண்டும் வேகமெடுக்கும். இதனால், கரோனா தொற்றின் 2-ஆவது அலை வேளாண் துறையில் எந்த வழியிலும் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது என்று நம்புகிறேன். பருப்பு உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு அடையவில்லை. இதனால், பருப்பு உற்பத்தியில் இன்னும் கூடுதல் கவனம் செலுத்தி, சாகுபடி பரப்பளவை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

நமது வேளாண் மானியக் கொள்கைகள், விலைக் கொள்கை, தொழில்நுட்பக் கொள்கை ஆகியவை அரிசி, கோதுமை, கரும்பு ஆகியவற்றுக்கே சாதகமாக உள்ளன. இதேபோன்று பருப்பு வகைகளின் கொள்முதல் விலையையும் அதிகரிக்கச் செய்ய வேண்டும். சமையல் எண்ணையைப் போல் பருப்பு வகைகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய முடியாது. ஏனெனில் சா்வதேச சந்தையில் குறைவான அளவே பருப்பு வகைகள் கிடைக்கின்றன. சா்வதேச சந்தையில் சமையல் எண்ணெய் விலை உயா்வதால்தான் உள்ளூா் சந்தையில் அதன் விலை உயா்கிறது. 2020-21-ஆம் நிதியாண்டில் வேளாண் துறையின் வளா்ச்சி 3 சதவீதத்துக்கும் அதிகமாக இருக்கும் என்றாா் அவா்.

---

**7. தீவிர ஊட்டச்சத்துக் குறைபாட்டால் 9.27 லட்சம் சிறாா்கள் பாதிப்பு: மத்திய அரசு தகவல்**

நாட்டில் கடந்த ஆண்டு நவம்பா் வரை தீவிர ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட 9,27,606 சிறாா்கள் கண்டறியப்பட்டுள்ளதாகத் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மத்திய அரசு தெரிவித்துள்ளது. தீவிர ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள சிறாா்களின் விவரங்களை அளிக்குமாறு தகவலறியும் உரிமைச் சட்டத்தின் (ஆா்டிஐ) கீழ் மத்திய அரசிடம் கோரப்பட்டிருந்தது.

அதையடுத்து, நாட்டில் 6 மாதங்கள் முதல் 6 வயது வரை தீவிர ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள சிறாா்களின் விவரங்களை மத்திய மகளிா்-சிறாா்கள் நல மேம்பாட்டு அமைச்சகம் அளித்துள்ளது. அதன்படி, கடந்த ஆண்டு நவம்பா் வரை நாட்டில் 9,27,606 சிறாா்கள் தீவிர ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகபட்சமாக உத்தர பிரதேசத்தில் 3,98,359 சிறாா்களும், பிகாரில் 2,79,427 சிறாா்களும் உள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது. லடாக், லட்சத்தீவுகள், நாகாலாந்து, மணிப்பூா், மத்திய பிரதேசம் ஆகியவற்றில் தீவிர ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட சிறாா்கள் யாரும் இல்லையென அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மகாராஷ்டிரத்தில் 70,665 சிறார்களும், குஜராத்தில் 45,749 சிறார்களும், சத்தீஸ்கரில் 37,249 சிறார்களும், தமிழகத்தில் 12,489 சிறார்களும், ஆந்திரத்தில் 11,201 சிறார்களும், தெலங்கானாவில் 9,045 சிறார்களும், கர்நாடகத்தில் 6,889 சிறார்களும், கேரளத்தில் 6,188 சிறார்களும், ராஜஸ்தானில் 5,732 சிறார்களும் தீவிர ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது. அக்குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள சிறார்களுக்கு உயரத்துக்கேற்ற எடை இருக்காது. அவர்களது நோய்எதிர்ப்புத் திறன் மிகவும் குறைவாக இருக்கும் என்பதால், ஏதேனும் நோய் ஏற்பட்டால் மற்றவர்களுடன் ஒப்பிடுகையில் அவர்கள் உயிரிழப்பதற்கான வாய்ப்பு 9 மடங்கு அதிகமாக இருக்கும் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

நாட்டில் உள்ள 10 லட்சத்துக்கும் அதிகமான அங்கன்வாடி மையங்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள சிறார்களைக் கண்டறிந்து வருகின்றன. மத்திய அரசு அளித்துள்ள எண்ணிக்கை விவரங்கள் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக சுகாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். கரோனா தொற்று பரவல் காரணமாகவும் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அவர்கள் தெரிவித்தனர். உடனடி நடவடிக்கைகள் அவசியம்: இது தொடர்பாக சிறார் நல ஆர்வலர்கள் கூறுகையில், 'கரோனா தொற்று பரவல் காரணமாக பலர் வேலையிழந்துள்ளனர். அதன் காரணமாக பல குடும்பங்கள் வறுமையை நோக்கித் தள்ளப்பட்டுள்ளன. அதனால் சிறார்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்படுவது அதிகரித்துள்ளது.

இந்த விவகாரத்தில் மத்திய, மாநில அரசுகள் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம். பொது முடக்கம் காரணமாக அங்கன்வாடி மையங்களுக்கு சிறார்கள் வரமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே, அங்கன்வாடி மையங்களின் பணியாளர்கள் சிறார்களின் வீடுகளுக்கே நேரடியாகச் சென்று ஊட்டச்சத்துப் பொருள்களை வழங்க வேண்டும். நியாய விலைக் கடைகள் மூலமாக அனைத்து குடும்பங்களுக்கும் உணவுப் பொருள்கள் கிடைக்கின்றனவா என்பதையும் அரசுகள் உறுதி செய்ய வேண்டும். தீவிர ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட சிறார்கள் அதிகமாக உள்ள பகுதிகளில் தனி கவனம் செலுத்தி சிறப்புத் திட்டங்களை அரசுகள் செயல்படுத்த வேண்டும்' என்றனர்.

---

**8. ஐ.நா. இலக்குகளை அமல்படுத்துவதில் இந்தியாவுக்கு 117-ஆவது இடம்**

ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை நடைமுறைப்படுத்துவதில் இந்தியா 117-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. வறுமையை ஒழித்தல், பாலின சமத்துவத்தை ஏற்படுத்துதல் உள்ளிட்ட 17 இலக்குகளை 2030-ஆம் ஆண்டுக்குள் அடைவதற்கான ஒப்பந்தத்தில் கடந்த 2015-ஆம் ஆண்டில் ஐ.நா.வின் 193 நாடுகளும் கையெழுத்திட்டன. அந்த இலக்குகளை அடைவதற்காக ஒவ்வொரு நாடும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைக் கண்காணித்து, அந்நாடுகளை யாலே பல்கலைக்கழகம் வரிசைப்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் 2021-ஆம் ஆண்டுக்கான அறிக்கையை அந்தப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. சர்வதேச சுற்றுச்சூழல் தினத்தையொட்டி யாலே பல்கலைக்கழகம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் இந்தியா 117-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்தியா 2 இடங்கள் சரிவைச் சந்தித்துள்ளது. மொத்தமுள்ள 100 புள்ளிகளில் இந்தியா 61.9 புள்ளிகளைப் பெற்றுள்ளது. முக்கியமாக, பசியின்மையை ஒழித்து உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துதல் (இலக்கு-2), பாலின சமத்துவத்தை ஏற்படுத்துதல் (இலக்கு-5), போதுமான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் (இலக்கு-9) ஆகியவற்றில் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் காணப்படாததால், இந்தியாவின் புள்ளிகள் சரிவைச் சந்தித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை 2030-ஆம் ஆண்டுக்குள் அடைவதற்கான நடவடிக்கைகளை ஜார்க்கண்ட், பிகார் ஆகிய மாநிலங்கள் மந்தகதியில் மேற்கொண்டு வருவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கேரளம், சண்டீகர், ஹிமாசல பிரதேசம் ஆகிய மாநிலங்கள் வேகமாக முன்னேறி வருகின்றன.

ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதில் பூடான், நேபாளம், இலங்கை, வங்கதேசம் ஆகிய அண்டை நாடுகள் இந்தியாவை விடச் சிறப்பாகச் செயல்பட்டு வருவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.சுற்றுச்சூழல் குறியீடு: சுற்றுச்சூழல் நலன், பருவநிலை மாறுபாடு, காற்று மாசுபாடு, சுகாதாரம், குடிநீர், உயிரினங்கள் வாழ்வதற்கேற்ற சூழல் உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு, 180 நாடுகளில் கணக்கிடப்பட்ட சுற்றுச்சூழல் குறியீட்டில் இந்தியா 168-ஆவது இடத்தைப் பெற்றுள்ளதாக யாலே பல்கலைக்கழகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இந்தியா 148-ஆவது இடத்தைப் பிடித்திருந்தது. சுற்றுச்சூழல் பாதிப்புகளில் இருந்து தங்கள் மக்களை ஒவ்வொரு நாடும் எவ்வாறு பாதுகாக்கின்றன என்பதை அறிவதற்கான குறியீட்டில் இந்தியா 172-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

---

**9. குஜராத்தில் 'மின்சார வாகனங்களுக்கு மட்டுமே அனுமதி' பகுதி: நாட்டிலேயே முதல் முறை**

மின்சார வாகனங்கள் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் அவ்வாகனங்களுக்கான பிரத்யேக பகுதி குஜராத்தின் கேவாடியாவில் அமைக்கப்படவுள்ளது. மின்சார வாகனங்களுக்கு மட்டும் அனுமதி அளிக்கும் வகையில் பிரத்யேக பகுதி அமைக்கப்படுவது நாட்டிலேயே இது முதல் முறையாகும். சுற்றுச்சூழல் மாசுபாடு, பெட்ரோல், டீசல் விலை உயர்வு உள்ளிட்ட காரணங்களால் மின்சார வாகனங்கள் மக்களிடையே படிப்படியாக வரவேற்பைப் பெற்று வருகின்றன.

அவ்வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. அதன் ஒருபகுதியாக, குஜராத்தின் கேவாடியா பகுதியில் அமைந்துள்ள 182 மீட்டர் உயரமுள்ள வல்லபபாய் படேலின் 'ஒற்றுமைக்கான சிலையை' சுற்றியுள்ள பகுதி முழுவதையும் மின்சார வாகனங்களுக்கான பிரத்யேக பகுதியாக மாற்றுவதற்கு மாநில அரசு முடிவெடுத்துள்ளது. அப்பகுதி முழுவதிலும் மின்சார வாகனங்கள் மட்டுமே இயங்கும் வகையில் படிப்படியாக மாற்றப்படும் என்று உள்ளூர் நிர்வாகம் தெரிவித்துள்ளது. அதையடுத்து, நாட்டின் முதல் மின்சார வாகனங்கள் நகரமாக கேவாடியா மாறும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஒற்றுமைக்கான சிலை பகுதி வளர்ச்சி-சுற்றுலா நிர்வாக ஆணையம் இந்தப் பணியை மேற்கொள்ளவுள்ளது.

மின்சார பேருந்துகள், மின்சார இரண்டு, மூன்று சக்கர வாகனங்களை வாங்குவதற்காக கேவாடியா பகுதி மக்களுக்குக் கடனுதவி வழங்கப்பட உள்ளதாகவும் அந்த ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்படவுள்ளது.அரசு அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும் மின்சார வாகனங்களை வாங்குவதற்காக மானியம் வழங்கப்படும். மீதமுள்ள தொகையானது அவர்களது ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும். கேவாடியா பகுதியில் வாடகை ஆட்டோக்கள் உள்ளிட்டவையும் மின்சார வாகனங்களாக இயக்கப்படவுள்ளன. அந்தப் பொறுப்பு சில நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. அந்த வாகனங்களை இயக்குவதற்குப் பெண்கள் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர் என்றும் அவர்களுக்கு ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்படும் என்றும் ஆணையம் தெரிவித்துள்ளது.மின்சார வாகனங்களுக்கான மின்னேற்று நிலையங்களும், அந்த வாகனங்களைப் பழுது பார்ப்பதற்கான கடைகளும் கேவாடியா பகுதியில் அமைக்கப்படவுள்ளன.

கேவாடியாவில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலான தொழிற்சாலைகள் எதுவும் செயல்படவில்லை என்றும், அப்பகுதியில் இயங்கும் 2 காற்றாலைகள் மூலமாக மின்சார வாகனங்களை இயக்குவதற்குத் தேவையான மின்சாரம் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் ஆணையம் தெரிவித்துள்ளது.சுற்றுச்சூழல் தினத்தையொட்டி கடந்த 5-ஆம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, கேவாடியா பகுதியானது, முற்றிலும் மின்சார பேருந்துகள், மின்சார இருசக்கர வாகனங்கள் ஆகியவை மட்டுமே இயங்கும் பகுதியாக விரைவில் மாற்றப்படும் என்று தெரிவித்திருந்தது நினைவுகூரத்தக்கது.

---

**10. 5 ஆவது முறை ரசாயனக் கலவை பூச்சுக்கு தயாராகும் திருவள்ளுவர் சிலை**

கன்னியாகுமரி கடலின் நடுவே அமைந்துள்ள திருவள்ளுவர் சிலை உப்புக் காற்றால் சேதமடையாமல் தடுக்கும் வகையில் ரசாயனக் கலவை பூசும் பணி விரைவில் தொடங்கும் என சுற்றுலா வளர்ச்சிக் கழக அதிகாரிகள் தெரிவித்தனர். சர்வதேச சுற்றுலாத் தலமான கன்னியாகுமரியில், கடலின் நடுவே நீர்மட்டத்திலிருந்து 30 அடி உயரமுள்ள பாறையின் மீது 133 அடி உயரத்தில் அமைந்துள்ளது திருவள்ளுவர் சிலை. இந்தச் சிலை அமைக்கும் பணி 1990 ஆம் ஆண்டில் அப்போதைய முதல்வர் கருணாநிதியால் தொடங்கப்பட்டு, 1.1.2000 அன்று திறந்து வைக்கப்பட்டது. உலகில் இதுபோன்ற கருங்கற்களால் ஆன சிலை வேறெங்கும் இல்லை என்ற பெருமையை இந்தச் சிலை பெற்றுள்ளது. இந்தச் சிலை உப்புக் காற்றால் சேதமடைவதை தடுக்க 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை ரசாயனக் கலவை

பூசப்பட்டு வருகிறது. முறையான பராமரிப்பு காரணமாக கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தச் சிலை கம்பீரமாக காட்சியளிக்கிறது.

கடந்த 2004, 2008, 2013 மற்றும் 2017 ஆண்டுகளில் ரசாயனக் கலவை பூசப்பட்டது. இந்நிலையில் 5 ஆவது முறையாக திருவள்ளுவா் சிலைக்கு நிகழாண்டு ரசாயனக் கலவை பூசப்பட வேண்டும். இதுகுறித்து சுற்றுலா வளா்ச்சிக் கழக அதிகாரிகளை கேட்டபோது, இதற்கான ஒப்பந்தப் பணிகள் விரைவில் கோரப்பட உள்ளதாகவும், இதற்குப் பின்னா் முறைப்படி பராமரிப்புப் பணிகள் தொடங்கும் எனவும் தெரிவித்தனா். திருவள்ளுவா் சிலையை சுற்றுலாப் பயணிகள் நேரில் சென்று பாா்வையிட வசதியாக, தமிழக அரசின் பூம்புகாா் கப்பல் போக்குவரத்துக் கழகம் படகு சேவையை இயக்கி வருகிறது. இந்தப் படகுகள் மூலம் நாள்தோறும் காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை பாா்வையிடலாம்.

---

**11. 50–ஆவது ஆக்சிஜன் ரயில் தமிழகத்துக்கு வந்தது**

திரவ ஆக்சிஜனுடன் 50–ஆவது ரயில், தமிழகத்துக்கு ஞாயிற்றுக்கிழமை வந்து சோ்ந்தது. இதுவரை ரயில் மூலம் 3,404.85 மெட்ரிக் டன் ஆக்சிஜன் விநியோகிக்கப்பட்டுள்ளது. இது தொடா்பாக தெற்கு ரயில்வே ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: கடந்த மாதம் 14–ஆம் தேதி, ஆக்சிஜனை எடுத்துக்கொண்டு முதல் ரயில் தமிழகத்துக்கு வந்தது. இதன் தொடா்ச்சியாக ஏராளமான ரயில்கள் தமிழகத்துக்கு ஆக்சிஜன் எடுத்து வந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை வந்த 50–ஆவது ரயிலின் மூலம் இதுவரை தமிழகத்துக்கு 3,404.85 மெட்ரிக் டன் திரவ ஆக்சிஜன் கிடைத்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை மட்டும் 444 மெட்ரிக் டன் ஆக்சிஜனை தமிழகத்துக்கு விநியோகிக்கும் வகையில், 4 ஆக்சிஜன் ரயில்கள் தமிழகத்தை வந்தடைந்தன. இவ்வாறு ஒரே நாளில் அதிகளவு ஆக்சிஜன் எடுத்து வந்தது இதுவே முதன்முறை. அதில், 50–ஆவது ரயில், ஒடிஸா மாநிலம் ரூா்கேலாவில் இருந்து மதுரை கூடல் நகருக்கு, ஞாயிற்றுக்கிழமை மாலை 6 டேங்கா்களில் 89.16 மெட்ரிக் டன் திரவ ஆக்சிஜனுடன் வந்து சோ்ந்தது குறிப்பிடத்தக்கது.

---

**1. தேசிய மாணவர் படையின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

அ) மும்பை

**ஆ) புது தில்லி ☑**

இ) கொச்சின்

ஈ) விசாகப்பட்டினம்

✓ தேசிய மாணவர் படை என்பது இந்திய ஆயுதப்படைகளின் இளையோர் பிரிவாகும். அதன் தலைமையகம் புது தில்லியில் அமைந்துள்ளது.

✓ தேசிய மாணவர் படை தலைமை இயக்குநரகத்தின் திறன்பேசி பயிற்சி செயலி 2.0'ஐ 2021 மே.28 அன்று பாதுகாப்புத்துறை செயலாளர் டாக்டர் அஜய்குமார் தொடங்கிவைத்தார். COVID-19 பெருந்தொற்றின்போது நாடு முழுவதும் உள்ள தேசிய மாணவர் படையினருக்கு இணையவழியில் பயிற்சியளிப்பதற்கு இந்தச் செயலி உதவிகரமாக இருக்கும்.

---

**2. புலம்பெயர் வனவுயிரிகளுக்கான பாதுகாப்பு அமைப்பின் தூதர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட இந்தியர் யார்?**



அ) சோனு சூத்

**ஆ) ரண்தீப் ஹூடா ☑**

இ) மனோஜ் பாஜ்பாய்

ஈ) சுனில் ஷெட்டி

✓ ஐநா சுற்றுச்சூழல் அமைப்பின் கீழியங்கும் புலம்பெயர் வனவுயிரிகளின் பாதுகாப்பு அமைப்பின் தூதர் பதவியிலிருந்து ரண்தீப் ஹூடா நீக்கப்பட்டு -ள்ளார். பகுஜன் சமாஜ் கட்சி தலைவரான மாயாவதி குறித்து அவதூறா -க பேசியதற்காக நடிகர் ரண்தீப் ஹூடா ஐநா தூதர் பதவியிலிருந்து நீக் -கப்பட்டுள்ளார். CMS அல்லது பான் தீர்மானம் என்பது கடந்த 1979'இல் கையெழுத்திடப்பட்ட ஒரு சர்வதேச தீர்மானமாகும். அது புலம்பெயர்ந்த உயிரினங்களை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**3. உலக கடலாமை நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**



அ) மே 22

**ஆ) மே 23 ☑**

இ) மே 24

ஈ) மே 25

✓ ஒவ்வோர் ஆண்டும் மே.23 அன்று உலகம் முழுவதும் உலக கடலாமை நாள் அனுசரிக்கப்படுகிறது. நிலம் மற்றும் நீரில் வாழும் ஆமை மற்றும் அவற்றின் பாதிக்கப்படக்கூடிய வாழ்விடங்கள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இந்நாள் கொண்டாடப்படுகிறது.

✓ 1990'இல் நிறுவப்பட்ட அமெரிக்க ஆமை மீட்பு என்ற இலாபநோக்கற்ற அமைப்பு, கடந்த 2000ஆம் ஆண்டு முதல் உலக கடலாமை நாள் கொ -ண்டாட்டத்திற்கு தலைமைதாங்குகிறது. "Turtles Rock!" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**4. நடப்பாண்டில் (2021) வரும் பன்னாட்டு ஐநா அமைதிகாப்போர் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ) Women in Peacekeeping: A Key to Peace

ஆ) Honouring Peacekeeping

இ) Women, Peace and Security

**ஈ) The road to a lasting peace ☑**




✓ அமைதிகாக்கும் படையினரின் பங்களிப்பை போற்றுதற்காக ஒவ்வோர் ஆண்டும் மே.29 அன்று பன்னாட்டு ஐநா அமைதிகாப்போர் நாள் கொ -ண்டாடப்படுகிறது. "The road to a lasting peace: Leveraging the power of youth for peace and security" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

✓ கடந்த 1948ஆம் ஆண்டு முதல், தங்கள் சேவையின்போது உயிரிழந்த 3,900'க்கும் மேற்பட்ட ஐநா அமைதிகாக்கும் படையினரை ஐநா அவை கௌரவித்து வருகிறது.

---

**5. நடப்பாண்டில் (2021) வரும் உலக புகையிலை ஒழிப்பு நாளுக் -கான கருப்பொருள் என்ன?**

அ) Tobacco: deadly in any form or disguise

ஆ) Tobacco – a threat to development

இ) Tobacco kills, don't be duped

**ஈ) Quit Tobacco to be a Winner ☑**




✓ உலகளாவிய புகையிலை நுகர்வினை 24 மணிநேர காலத்திற்கு தவிர்ப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, ஒவ்வோர் ஆண்டும் மே.31 அன்று உலக புகையிலை ஒழிப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது.

✓ புகைப்பதனால் ஏற்படும் உடல்நலச்சீர்கேடு விளைவுகளால் தற்போது உலகெங்கிலும் கிட்டத்தட்ட 6 மில்லியனுக்கும் அதிகமானோர் மரணிக் -கின்றனர். இதில் 6 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் புகைப்பவர்களின் அருகில் இருப்பதாலேயே நோய்த்தாக்கத்திற்கு ஆளாகிறார்கள். "Quit Tobacco to be a Winner" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளு -க்கான கருப்பொருளாகும்.

---

**6. பரப்பளவில் இந்தியாவின் மிகச்சிறிய மாநிலமும் மே.30 அன்று அதன் மாநில நாளைக் கொண்டாடும் மாநிலமும் எது?**

**அ) கோவா ☑**



ஆ) சிக்கிம்

இ) திரிபுரா

ஈ) மேகாலயா

✓ கோவா – இந்தியாவின் மிகச்சிறிய மாநிலமாகவும், மக்கள்தொகை அடி -ப்படையில் நான்காவது சிறிய மாநிலமாகவும் உள்ளது. அண்மையில் இது தனது மாநில நாளை மே.30 அன்று கொண்டாடியது. 1961ஆம் ஆண்டில், 'ஆபரேஷன் விஜய்' மூலம் இந்திய ராணுவம் கோவா, டாமன் & டையூ ஆகியவற்றை இந்திய ஒன்றியத்துடன் இணைத்தது.

✓ அதன்பிறகு கோவா, டாமன் & டையூவுடன் இணைந்து இந்தியாவின் மத்திய நிர்வாக யூனியன் பிரதேசமாக வகைப்படுத்தப்பட்டது. கடந்த 1987 மே.30 அன்று அந்த யூனியன் பிரதேசம் பிளவுபட்டு, கோவா இந்தியாவின் 25ஆவது மாநிலமாக அறிவிக்கப்பட்டது. டாமன் & டையூ தொடர்ந்து யூனியன் பிரதேசமாகவே இருந்தது.

---

**7. பன்னாட்டு எவரெஸ்ட் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**



அ) மே 28

**ஆ) மே 29 ☑**

இ) மே 30

ஈ) மே 31

✓ ஆண்டுதோறும் மே.29 அன்று உலகெங்கும் பன்னாட்டு எவரெஸ்ட் நாள் கொண்டாடப்படுகிறது. கடந்த 1953ஆம் ஆண்டு இதே நாளன்று, நேபாளத்தின் டென்சிங் நோர்கே மற்றும் நியூசிலாந்தின் எட்மண்ட் ஹிலாரி ஆகியோர் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை வெற்றிகரமாக அடைந்தனர். போற்றத்தக்க இந்தச் சாதனையை நிகழ்த்திய முதல் மனி -தர்களாவர் இவ்விருவர்.

✓ 2008ஆம் ஆண்டில் எட்மண்ட் ஹிலாரி காலமானதிலிருந்து இந்நாளை பன்னாட்டு எவரெஸ்ட் நாளாகக் கொண்டாட நேபாளம் முடிவுசெய்தது.

---

**8. ஒலிபரப்பாளர்களின் உயர்மட்ட அமைப்பான இந்திய ஒலிபரப்பு அறக்கட்டளையின் புதிய பெயர் என்ன?**

அ) Indian Broadcasting Union

**ஆ) Indian Broadcasting and Digital Foundation ☑**

இ) Indian Broadcasting and OTT Union

ஈ) National Digital Broadcasting Federation

Indian Broadcasting Foundation

✓ ஒலிபரப்பாளர்களின் உயர்மட்ட அமைப்பான இந்திய ஒலிபரப்பு அறக்கட்டளையானது இந்திய ஒலிபரப்பு மற்றும் டிஜிட்டல் அறக்கட்டளை என மறுபெயரிடப்பட்டுள்ளது.

✓ டிஜிட்டல் ஊடக உள்ளடக்க ஒழுங்குமுறை கவுன்சில் என்ற தன்-கட்டுப் -பாட்டு அமைப்பை உருவாக்குவதன்மூலம், டிஜிட்டல் தளங்களை உள்ளடக்கும் வகையில் அதன் பார்வையை விசாலாமாக்குகிறது இந்த

அமைப்பு. ஒலிபரப்பாளர்களையும், OTT தளங்களையும் இது ஒரே கூரை -யின்கீழ் கொண்டுவரும்.

---

**9.** **1977 அமைதிக்கான நோபல் பரிசை வென்ற எந்த அரசு சாரா அமைப்பு, மே.28 அன்று நினைவுகூரப்படுகிறது?**

அ) ஐக்கிய நாடுகள்

ஆ) உலக நலவாழ்வு அமைப்பு

**இ) பன்னாட்டு மன்னிப்பு அவை ☑**

ஈ) உலக வங்கி

- ✓ பன்னாட்டு மன்னிப்பு அவை என்பது மனிதவுரிமைகளை மையமாகக் கொண்ட ஓர் அரசு–சாரா அமைப்பாகும். இது, கடந்த 1961ஆம் ஆண்டில் லண்டனில் நிறுவப்பட்டது. பன்னாட்டு பொது மன்னிப்பு நாளானது ஒவ்வோர் ஆண்டும் மே.28 அன்று கொண்டாடப்படுகிறது.
- ✓ சித்திரவதைக்கு எதிரான பரப்புரைக்காக, 1977ஆம் ஆண்டில் அமைதிக் -கான நோபல் பரிசும், 1978'இல் மனிதவுரிமைகள் துறையில் ஐக்கிய நாடுகள் பரிசும் வழங்கப்பட்டது.

---

**10.** **எந்த மாநிலம், சமீபத்தில் தனது கிராமப்புற வீடுகளுக்கு, சூரிய ஆற்றல் அடிப்படையிலான மின்மயமாக்கல் திட்டத்தை தொடங்கி வைத்தது?**



அ) உத்தர பிரதேசம்

ஆ) ஒடிஸா

இ) அஸ்ஸாம்

**ஈ) கோவா ☑**

- ✓ முதலமைச்சர் பிரமோத் சாவந்த் தலைமையிலான கோவா மாநில அரசு, மாநிலத்தின் கிராமப்புற வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க சூரிய ஆற்றல் அடிப்படையிலான மின்மயமாக்கல் திட்டத்தை தொடங்கியுள்ளது. மின் கட்டமைப்பின் வழியான இணைப்பு சாத்தியமில்லாத வீடுகளுக்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றலை வழங்குவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதுதொடர்பாக, கோவா எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் கன்வர்ஜென்ஸ் எனர்ஜி சர்வீசஸ் லிட்டுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கோவிஷீல்ட் தடுப்பூசி மூலமாக அதிக நோய்எதிர்ப்புத் திறன்: ஆய்வில் தகவல்**

கோவேக்ஸின் கரோனா தடுப்பூசியைவிட கோவிஷீல்ட் தடுப்பூசியின் மூலமாக அதிக நோய்எதிர்ப்புத்திறன் உருவாவதாக ஆய்வில் தெரியவந் -துள்ளது. பாரத் பயோடெக் நிறுவனம் தயாரித்த கோவேக்ஸின், சீரம் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட கோவிஷீல்ட், ரஷியாவிலிருந்து இறக்கும -தி செய்யப்படும் ஸ்புட்னிக்–வி கரோனா தடுப்பூசிகள் மக்களுக்கு செலுத் -தப்பட்டு வருகின்றன. இந்நிலையில், கோவேக்ஸின், கோவிஷீல்ட் ஆகிய தடுப்பூசிகளின் செயல்திறனை ஒப்பிடுவதற்கான ஆய்வுகள் முன் -னெடுக்கப்பட்டன.

13 மாநிலங்களைச் சேர்ந்த 22 நகரங்களில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. கரோனா தடுப்பூசிகளின் இருதவணைகளையும் செலுத்திக்கொண்ட 515 சுகாதாரப்பணியாளர்களிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் 210 பேர் பெண்களாவர். அவர்களிடமிருந்து ரத்த மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வுக்கு உள்படுத்தப்பட்டது. அதில், கரோனா தீநுண்மியை எதிர்கொள்வதற்கான நோயெதிர்பொருள் எவ்வளவு உருவாகியுள்ளது என்பது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வு தொடர்பாக கொல்கத்தாவை சேர்ந்த மருத்துவர் அவதேஷ் குமார் சிங் வெளியிட்ட சுட்டுரைப் பதிவில், 'கோவேக்ஸின், கோவிஷீல்ட் தடுப்பூசிகளின் இரு தவணைகளையும் செலுத்திக் கொண்ட பிறகு, உடலில் கரோனா தீநுண்மிக்கு எதிராக நோயெதிர்ப்புத்திறன் சிறப்பாக உருவாகிறது. எனினும். கோவேக்ஸின் தடுப்பூசியுடன் ஒப்பிடுகையில் கோவிஷீல்ட் தடுப்பூசியில் நோயெதிர்பொருள் அதிக அளவில் உருவாகி -றது. ஆய்வுக்குட்படுத்தப்பட்டவா்களில் 425 பேருக்கு கோவிஷீல்ட் தடுப்பூசி செலுத்தப்பட்டது. அவர்களில் 98.1% பேருக்கு அதிக அளவில் நோயெதிர்பொருள் உருவாகியிருந்தது.

கோவேக்ஸின் தடுப்பூசி செலுத்தப்பட்ட 90 பேரில் 80 சதவீதம் பேருக்கு மட்டுமே அதிக அளவில் நோய்எதிர்பொருள் உருவாகியிருந்தது.

கரோனா தீநுண்மியின் புறப்பரப்பு புரதத்தைத் தாக்கக்கூடிய நோய்எதிர் பொருள் கோவிஷீல்ட் தடுப்பூசியை செலுத்திக் கொண்டவா்களிடம் அதிகமாக உருவாகியிருந்தது' என்று குறிப்பிட்டுள்ளார். பாலினம், எடை, உயரம், இணை–நோய்கள் உள்ளிட்ட காரணிகள் உடலில் நோய்எதிர் பொருள் உருவாவதில் பெரிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தவில் -லை. நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு மட்டும் நோய்எதிர்ப்புத்திறன் குறைவாக உருவாகியிருந்தது.

கரோனா தொற்றால் ஏற்கனவே பாதிக்கப்பட்டு, 6 வாரங்களுக்குப்பிறகு தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களுக்கு அதிகளவில் நோய்எதிர்பொருள் உருவாகியிருந்தது. கோவிஷீல்ட் தடுப்பூசியை செலுத்திக்கொண்ட 5.5 சதவீதத்தினருக்கும், கோவேக்ஸின் தடுப்பூசியை செலுத்திக்கொண்ட 2.2 சதவீதத்தினருக்கும் கரோனா தொற்று பாதிப்பு ஏற்பட்டது என்று ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

---

**2. இந்திய MSME துறையை ஊக்குவிக்க ₹3,650 கோடி திட்டம்: உலக வங்கி ஒப்புதல்**

கரோனா பொது முடக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட இந்திய குறு, சிறு மற்றும் நடுத்தர (MSME) தொழில்துறையை புத்துயிரூட்ட ₹3,650 கோடி ($50 கோடி) திட்டத்துக்கு உலக வங்கி ஒப்புதல் அளித்திருக்கிறது. இது குறித்து உலக வங்கி அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: கரோனா பொது முடக்கத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட குறு, சிறு & நடுத்தர தொழில் துறையைப் புத்துயிரூட்ட இந்திய அரசு தேசிய அளவிலான திட்டத்தை அறிவித்துள்ளது. இதற்கு உதவும் வகையில் ₹3,650 கோடி திட்டத்துக்கு உலக வங்கியின் செயல் இயக்குநர்கள் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தத் திட்டம் இந்தியாவில் உள்ள 5,55,000 குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்த உதவும். அத்துடன், இந்தத் துறைக்கு புத்துயிரளிக்க மத்திய அரசு அறிவித்துள்ள ₹24,820 கோடி கடனுதவித் திட்டத்தின் ஒருபகுதியாக ₹1,13,150 கோடி நிதியைத் திரட்டவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு உலக வங்கி அளிக்கும் இரண்டாவது உதவித்திட்டம் இது. ஏற்கனவே, MSME அவசரகால உதவி திட்டத்தினகீழ் கடந்த 2020ஆம் ஆண்டு ஜூலையில் ₹5,475 கோடி திட்டத்துக்கு உலக வங்கி ஒப்புதல் அளித்தது. அதன்மூலம், 50 இலட்சம் குறு, சிறு நிறுவனங்கள் அரசிடமிருந்து கடனுதவி பெற்று, தொழிலை மேம்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

இப்போது புதிதாக அளித்திருக்கும் ஒப்புதல்மூலம், MSME துறையின் உற்பத்தியைப்பெருக்கவும், நிதி நிலையை மேம்படுத்துவதற்கென கடந் -த ஓராண்டில் ₹9,125 கோடி அளவில் உலக வங்கி ஒப்புதல் அளித்திருக் -கிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. மீண்டும் நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் NASA திட்டத்தை வழிநட -த்தும் தமிழ்ப்பெண்**

மீண்டும் நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் NASA'இன் திட்டத்தில் தமிழ்ப் பெண் முக்கிய பங்காற்றிவருகிறார். இந்தியாவை பூர்வீகமாகக்கொண்ட கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ் உட்பட பலர் அமெரிக்காவின் NASA விண்வெளி ஆய்வுமையத்தின் திட்டங்களில் முக்கிய பங்காற்றி உள்ளனர்.

கடந்த பிப்ரவரியில் NASA'இன் பெர்ஸிவரன்ஸ் விண்கலம் வெற்றிகரமாக செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கியது. இந்த திட்டத்தை கர்நாடகாவின் சுவாதி மோகன் வழிநடத்தி ஒட்டுமொத்த உலகத்தின் கவனத்தையும் ஈர்த்தார். இந்த வரிசையில் தமிழ்நாட்டின் கோயம்புத்தூரை பூர்வீகமாகக் கொண்ட சுபாஷினி, நிலவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்பும் NASA'இன் திட்டத்தில் முக்கிய பங்காற்றி வருகிறார்.

கடந்த 1969 ஜூலை 20ஆம் தேதி அமெரிக்காவின் அப்போலா 11 விண்கலம் நிலவில் தரையிறங்கியது. அமெரிக்க விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ராங் முதல் மனிதராக நிலவில் கால் பதித்தார்.

வரும் 2024ஆம் ஆண்டுக்குள் மீண்டும் நிலவுக்கு மனிதர்களை அனுப்ப NASA தீவிரமாக பணியாற்றி வருகிறது. இதற்காக ஓரியான் என்ற விண்கலத்தை NASA உருவாக்கியுள்ளது. இந்த விண்கலம் கடந்த 2014ஆம் ஆண்டில் ஆளில்லாமல் விண்வெளிக்கு செலுத்தப்பட்டு

பத்திரமாக பூமிக்கு திரும்பியது. நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்துக்கு ஆர்ட்டெமிஸ் என்று NASA பெயரிட்டுள்ளது.

ஆர்ட்டெமிஸ் 1 திட்டத்தில் வரும் நவம்பர் மாதம் ஓரியான் விண்கலம் ஆளில்லாமல் நிலவின் விண்வெளி பகுதிக்கு செலுத்தப்பட்டு, பூமிக்கு திரும்ப உள்ளது. இதன் பிறகு ஆர்ட்டெமிஸ் 2 திட்டத்தில் வரும் 2023 அல்லது 2024ஆம் ஆண்டில் ஓரியான் விண்கலம், விண்வெளி வீரர்க –ளுடன் நிலவில் தரையிறங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ஏவுகணை தயாரிப்பு திட்டம்**

இந்த திட்டத்தின் முதுகெலும்பாக கருதப்படும் ஏவுகணை தயாரிப்பு திட்டப் பணிகளை தமிழகத்தின் கோவையைச் சேர்ந்த சுபாஷினி அய்யர் வழிநடத்தி வருகிறார். இதுகுறித்து அவர் கூறியதாவது: ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தை NASA செயல்படுத்த உள்ளது. நிலவை தாண்டி செவ்வாய் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்பவும் இந்ததிட்டம் முன்னோடியாக இருக்கும்.

ஆர்ட்டெமிஸ் 1 திட்டத்தில் ஓரியான் விண்கலம் 4.5 இலட்சம் கி.மீ. தொலைவுக்கு அப்பால் ஆளில்லாமல் செலுத்தப்பட உள்ளது. இது 3 வார பயண திட்டமாகும். எஸ்எல்எஸ் என்ற உலகின் அதிகசக்திவாய்ந்த ஏவுகணைடில், ஓரியான் நிலவுக்கு செலுத்தப்பட உள்ளது. NASA மற்றும் போயிங் நிறுவனம் இணைந்து இந்த ஏவுகணைடை தயாரிக்கிறது. கடந்த 2 ஆண்டுகளாக போயிங்நிறுவன குழுவின் மேற்பார்வையாளரா –க பணியாற்றி வருகிறேன். 500 விநாடிகளில் 5.3 இலட்சம் அடி பாயும் வகையில் ஏவுகணை தயாரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**1. உலக பால் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ) ஜூன்.1 ☑**

ஆ) ஜூன்.2

இ) ஜூன்.3

ஈ) ஜூன்.4



✓ உலகம் முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.1 அன்று உலக பால் நாள் கொண்டாடப்படுகிறது. முதல் உலக பால் நாள், 2001ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது. பாலின் பங்கை சிறப்பித்துக்கூறுவதற்கும், பால் மற்றும் பால் உற்பத்தித் துறையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை கொண்டு சேர்ப்பதற்குமாக ஐநா அவையின் உணவு மற்றும் உழவு அமைப்பு ஜூன்.1ஆம் தேதியை உலக பால் நாளாக தேர்வுசெய்தது.

---

**2. உலக பெற்றோர் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ) ஜூன்.1 ☑**

ஆ) ஜூன்.2

இ) ஜூன்.3

ஈ) ஜூன்.4



✓ 2012'இல், ஜூன்.1ஆம் தேதியை, உலக பெற்றோர் நாளாக ஐநா பொது அவை அறிவித்தது. அதன்பின்னர், ஆண்டுதோறும் ஜூன்.1 அன்று உலக பெற்றோர் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. உலகெங்கும் உள்ள அனைத்து பெற்றோர்களையும், தங்கள் குழந்தைகளுக்காக அவர்கள் செய்யும் அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்திற்காக அவர்களை கௌரவிக்கும் நோக்கத்துடன் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

✓ "Appreciate All Parents Throughout the World" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**3. உலக மிதிவண்டி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) ஜூன்.1

ஆ) ஜூன்.2

**இ) ஜூன்.3 ☑**

ஈ) ஜூன்.4



✓ ஐநா பொது அவையானது ஜூன்.3ஆம் தேதியை உலக சைக்கிள் நாளாக அறிவித்தது. நீடித்த வளர்ச்சி மற்றும் நலத்தை மேம்படுத்துவதற்கான ஒருவழியாக, மிதிவண்டிப் பயன்பாட்டை ஊக்குவிக்க ஐநா அதன் இணை அமைப்புகளை ஊக்குவிக்கிறது. தேசிய மற்றும் உள்ளூரளவில் மிதிவண்டிப்பேரணிகளை நடத்துவதற்கும், சமூகத்தில் மிதிவண்டி ஓட்டுதல் கலாசாரத்தை வளர்ப்பதற்கும் இந்நாள் பல்வேறு முன்னெடுப்புகளுக்கு அழைப்பு விடுக்கிறது.

---

**4. ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட அப்பாவி சிறார்களுக்கான பன்னாட்டு நாள் கடைப்பிடிக்கப்படும் தேதி எது?**

அ) ஜூன்.1

ஆ) ஜூன்.2

இ) ஜூன்.3

**ஈ) ஜூன்.4 ☑**




✓ ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட அப்பாவி சிறார்களுக்கான பன்னாட்டு நாள் ஆனது ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.4ஆம் தேதி அன்று ஐநா அமைப்பால் நினைவுகூரப்படும் ஒரு நாளாகும். இது, 1982 ஆக.19 முதல் ஆண்டுதோறும் நினைவுகூரப்பட்டு வருகிறது.

✓ உடல், மன மற்றும் உணர்ச்சி ரீதியான பாதிப்புகளுக்கு ஆளான உலகெங்கிலும் உள்ள சிறார்கள் அனுபவிக்கும் வலியை உணர்ந்துகொள்வதே இதன் நோக்கமாகும். இந்த நாள் சிறார்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஐநா'இன் உறுதிப்பாட்டை வலியுறுத்துகிறது.

---

**5. நடப்பாண்டில் (2021) வரும் உலக சுற்றுச்சூழல் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ) Climate Action

**ஆ) Ecosystem Restoration ☑**

இ) Enrich Our Environment

ஈ) Environment and SDG



✓ விழிப்புணர்வு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை ஊக்குவிப்பதற்காக ஐநா அவை ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.5 அன்று உலக சுற்றுச்சூழல் நாளைக் கொண்டாடப்படுகிறது. "Ecosystem Restoration" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**6. "சட்டத்துக்குப்புறம்பான, பதிவுசெய்யப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற மீன்பிடித்தலை தடுப்பதற்கான பன்னாட்டு நாள்" அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) ஜூன்.2

ஆ) ஜூன்.3

இ) ஜூன்.4

**ஈ) ஜூன்.5 ☑**



✓ "சட்டத்துக்குப் புறம்பான, பதிவுசெய்யப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற மீன்பிடித்தலை தடுப்பதற்கான பன்னாட்டு நாள்", ஒவ்வோராண்டும் ஜூன்.5 அன்று அனுசரிக்கப்படுகிறது. கட்டுப்பாடற்ற மீன்பிடி நடவடிக்கைகளால் மீன்வளங்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் குறித்து உணர்துதலே இந்நாளின் நோக்கமாகும். கடந்த 2017 நவம்பரில், ஐநா பொது அவை, ஜூன் 5ஆம் தேதியை இந்தச் சிறப்பு நாளாக அறிவித்தது. கடந்த 2018ஆம் ஆண்டில் முதன்முறையாக இந்நாள் கொண்டாடப்பட்டது.

---

**7. நடப்பாண்டு (2021) வரும் உலக உணவு பாதுகாப்பு நாளுக்கான கருப்பொருள் என்ன?**

**அ) Safe Food Today for a Healthy Tomorrow ☑**

ஆ) Food Safety, Everyone's Business

இ) Food Safety, First and Foremost

ஈ) Food Safety is still far




✓ நாம் உண்ணும் உணவு பாதுகாப்பானது என்பதை உறுதிப்படுத்தும் முயற்சிகளை வலுப்படுத்துவதற்காக, ஜூன்.7 அன்று உலக உணவு பாதுகாப்பு நாள் கடைப்பிடிக்கப்பட்டது. "Safe Food Today for a Healthy Tomorrow" என்பது நடப்பாண்டு (2021) உலக உணவு பாதுகாப்பு நாளுக்கான கருப்பொருளாகும். உணவுப்பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்கும், தேவையான நடவடிக்கைகளை செயல்படுத்துதற்கு நாடுகள், உள்நாட்டு சமூகம் மற்றும் தனியார் நிறுவனங்களை ஒன்றிணைப்பதற்குமாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

---

**8. நடப்பாண்டில் (2021) வரும் உலக பெருங்கடல்கள் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

**அ) The Ocean: Life and Livelihoods ☑**

ஆ) Innovation for a Sustainable Ocean

இ) Oceans are our real wealth

ஈ) Optimise our Oceans



✓ உலக பெருங்கடல்கள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.8 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. பெருங்கடல்களைக் கொண்டாட மக்களை ஊக்குவிப்பதற்கும், கடல் நலத்தைப்பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.

✓ "The Ocean: Life and Livelihoods" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். கடந்த 1992ஆம் ஆண்டில் ரியோ டி ஜெனிரோவில் நடந்த புவி உச்சிமாநாட்டில், உலக பெருங்கடல்கள் நாளைக் கொண்டாடுவதற்கான கருத்தை கனடா நாடு முன்மொழிந்தது. கடந்த 2008 டிசம்பரில், ஐநா அவை ஜூன்.8ஆம் தேதியை உலக பெருங்கடல்கள் நாளாக நியமித்து அறிவித்தது.

---

**9.** **நியூ கினியாவின் மழைக்காடுகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட 'லிட்டோரியா மிரா' என்பது ஒரு____?**



அ) பாம்பு

**ஆ) தவளை ☑**


இ) நீர் நாய்

ஈ) பேரலகுப் பறவை

✓ ஆஸ்திரேலிய அறிவியலாளர்கள் குழுவானது நியூ கினியாவின் மழைக் காடுகளிலிருந்து ஒரு புதிய மரத்தவளை இனத்தைக் கண்டறிந்துள்ளது. அதன் சாக்லேட் நிறம் காரணமாக, "சாக்லேட் தவளை" என்றும் அது அழைக்கப்படுகிறது. அது லிட்டோரியா என்ற ஆஸ்திரேலிய மரத்தவளை இனத்தைச்சேர்ந்ததாகும். எனவே இப்புதிய இனத்திற்கு 'லிட்டோரியா மிரா' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த புதிய இனத்தின் நெருங்கிய இனமாக ஆஸ்திரேலிய பச்சை மரத்தவளை இனம் உள்ளது.

---

**10.** **நான்ஸி கிரேஸ் ரோமன் விண்வெளி தொலைநோக்கியை உருவாக்கும் நாடு எது?**



அ) ஜப்பான்

**ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

இ) ரஷியா

ஈ) இஸ்ரேல்

✓ நான்சி கிரேஸ் ரோமன் விண்வெளி தொலைநோக்கி என்பது NASA'இன் புதிய அடுத்த தலைமுறை விண்வெளி தொலைநோக்கியாகும். அது தற்போது உருவாக்க நிலையில் உள்ளது. முன்னர், Wide Field Infrared Survey தொலைநோக்கி என்று அழைக்கப்பட்ட இது, NASA'இன் முதல் வானியல் துறை தலைவரான நான்ஸி கிரேஸ் ரோமன் விண்வெளி தொலைநோக்கி எனப் பெயரிடப்பட்டது. அண்மையில், சூப்பர்நோவா எனப்படும் ஆயிரக்கணக்கான வெடிக்கும் விண்மீன்கள் இந்தத்தொலை நோக்கிமூலம் கண்காணிக்கப்படுவதாக NASA அறிவித்தது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தேர்தல் ஆணையராக அனூப் சந்திர பாண்டே நியமனம்**

முன்னாள் IAS அதிகாரி அனூப் சந்திர பாண்டே (62) தேர்தல் ஆணைய–ராக நியமிக்கப்பட்டார். 1984ஆம் ஆண்டு உத்தர பிரதேச பிரிவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற IAS அதிகாரியான அனூப் சந்திர பாண்டேயை தேர்தல் ஆணையராக குடியரசுத்தலைவர் நியமித்ததாக மத்திய சட்ட அமைச்சகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அவரது இந்நியமனம் உடனடி–யாக அமலுக்கு வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, தேர்தல் ஆணையராக இருந்த சுனில் அரோரா கடந்த ஏப்.12 அன்று ஓய்வுபெற்றதையடுத்து, சுஷீல் சந்திரா தலைமைத் தேர்தல் ஆணையராகப் பதவி உயர்வுபெற்றார். இதனால் ஒரு தேர்தல் ஆணை–யர் பதவி காலியானது. அந்த இடத்துக்கு, தற்போது அனூப் சந்திர பாண்டே நியமிக்கப்பட்டுள்ளார். வரும் 2024ஆம் ஆண்டு பிப்ரவரியில் அவருக்கு 65 வயது பூர்த்தியாகும் வரை அவர் தேர்தல் ஆணையராகப் பதவி வகிப்பார். உத்தர பிரதேச தலைமைச் செயலர் உள்ளிட்ட பல முக்கிய பதவிகளை அவர் வகித்துள்ளார்.

---

**2. கரோனா உறுதியானால் என்ன செய்ய வேண்டும்?**

**ஒன்றிய சுகாதார அமைச்சகத்தின் புதிய வழிகாட்டுதல்கள் வெளியீடு**

**அறிகுறிகள் இல்லாத கரோனா நோயாளிகள்**

வீட்டில் தனிமைப்படுத்திக்கொள்ளவேண்டும்

6 நிமிட நடைப்பயிற்சி பரிசோதனை

முகக்கவசம், கைகள் தூய்மை, பிறரிடமிருந்து விலகியிருத்தல் குறைந்த பாதிப்புடைய நோயாளிகள்

வீட்டில் தனிமைப்படுத்துதல்

6 நிமிட நடைப்பயிற்சி பரிசோதனை

முகக்கவசம், கைகள் தூய்மை, தனிநபர் இடைவெளி

4 மணி நேரத்துக்கு ஒருமுறை நாடித்துடிப்பு, ரத்த ஆக்சிஜன் அளவு, ரத்த அழுத்தம், உடல் வெப்ப பரிசோதனை

காய்ச்சல், சளிக்கு தேவைப்பட்டால் மருந்து உட்கொள்ளவும்

சளி, இருமல் அதிகரித்தால் மூச்சிளைப்பு நோய்க்கான இன்ஹேலர்களைப் பயன்படுத்தலாம்

**மிதமான, தீவிர பாதிப்புக்குள்ளானவர்கள்**

மிதமான பாதிப்புடையவா்கள் மருத்துவமனைகளை நாட வேண்டும்

தீவிர பாதிப்புக்கு ICU பிரிவில் சிகிச்சை அவசியம்

6 நிமிட நடைப்பயிற்சி பரிசோதனை

கைவிரலில் பல்ஸ்–ஆக்ஸி மீட்டரை பொருத்திக்கொண்டு தொடர்ந்து 6 நிமிடங்களுக்கு நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். அப்போது ரத்த ஆக்சிஜன் அளவு 94 சதவீதத்துக்கும்கீழ் குறைந்தாலோ, மூச்சுத்திணறல், மயக்கம் ஏற்பட்டாலோ மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மருத்துவ–மனைக்குச் செல்லவேண்டும்.

ஒவ்வொரு 6 – 8 மணி நேரத்துக்கு ஒருமுறை இந்தப் பரிசோதனையை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

**தேவையான ஆய்வகப் பரிசோதனைகள்**

முழு ரத்த அணு பரிசோதனை (சிபிசி)

ரத்த சர்க்கரை அளவு

சிறுநீர் பரிசோதனைகள்

சி–ரியாக்டிவ் புரோட்டின் (CRP)

சிறுநீரகம் மற்றும் கல்லீரல் செயல்திறன் பரிசோதனை

ஃபெரிட்டின் எனப்படும் ரத்த உறைதல் தொடர்பான பரிசோதனை

டி–டைமர், LDG, சிபிகே உள்ளிட்ட இரத்தத்தில் கிருமிகள் உள்ளதைக் கண்டறியும் பரிசோதனைகள்.

CRP, டி–டைமர் பரிசோதனைகள் 48 முதல் 72 மணி நேரத்துக்கு முறை மருத்துவரின் ஆலோசனைப்படி திரும்பவும் மேற்கொள்ள வேண்டும்.

நெஞ்சக ஊடு கதிர் (எக்ஸ்–ரே) பரிசோதனைகள் 48 மணி நேரத்துக்குப் பிறகு தேவைப்பட்டால் மட்டுமே மீண்டும் மேற்கொள்ள வேண்டும்.

மிதமான மற்றும் தீவிர பாதிப்புடையவர்கள் மட்டுமே நெஞ்சக CT ஸ்கேன் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். மருத்துவரின் ஆலோசனைப்படி மட்டுமே மேற்கொண்ட பரிசோதனைகளை செய்தல் வேண்டும்.

**தன்னிச்சையாக எடுக்கக் கூடாத மருந்துகள்**

ரெம்டெசிவிர்

ஸ்டீராய்டு மருந்துகள்

இரத்தம் உறைவதைத் தடுக்கும் ஆன்ட்டிகாக்ளன்ட் மருந்துகள்

டோஸிலிசுமேப் அறிகுறிகளும், பாதிப்புகளும்.

---

**3. ஐ.நா. சமூக–பொருளாதார கவுன்சில் உறுப்பினராக இந்தியா தேர்வு**

ஐ.நா. சமூக–பொருளாதார கவுன்சிலின் உறுப்பினராக 3 ஆண்டுகளுக்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஐநா'வின் 6 முக்கிய அமைப்புகளில் சமூக–பொருளாதார கவுன்சிலும் ஒன்றாக உள்ளது.

சமூகம், பொருளாதாரம், சுற்றுச்சூழல் ஆகிய விவகாரங்களில் நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அந்த கவுன்சில் மேற்கொண்டு வருகிறது. சர்வதேச அளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட இலக்கு–களை அடைவதற்கான நடவடிக்கைகளையும் கவுன்சில் மேற்கொண்டு வருகிறது. ஐநா சார்பில் நடைபெறும் மாநாடுகளில் எடுக்கப்பட்ட முடிவுகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகிா என்பதையும் கவுன்சில் கண்கா–ணிக்கும்.

ஐநா சமூக–பொருளாதார கவுன்சிலில் 54 நாடுகள் உறுப்பினர்களாக இடம்பெற முடியும். பிராந்திய ரீதியாக நாடுகள் 3 ஆண்டு காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும். ஆசிய கண்டத்தில் இருந்து 11 நாடுகளும், ஆப்பிரிக்க கண்டத்திலிருந்து 14 நாடுகளும், கிழக்கு ஐரோப்பிய பகுதிகளில் இருந்து 6 நாடுகளும், தென் அமெரிக்க கண்டத்திலிருந்து 10 நாடுகளும், மற்ற பகுதிகளில் இருந்து 13 நாடுகளும் கவுன்சிலின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படும். ஐநா சமூக–பொருளாதார கவுன்சிலுக்கான தேர்தல் நடைபெற்றது. அதில், ஆசிய கண்டத்திலிருந்து இந்தியா, ஆப்கானிஸ்தான், ஓமன், கஜகஸ்தான் ஆகிய நாடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

அந்நாடுகள் 2022–2024 வரை கவுன்சிலின் உறுப்பினர்களாகச் செயல்ப –டவுள்ளன.

ஆப்பிரிக்க கண்டத்திலிருந்து துனிசியா, மோரீஷஸ், எஸ்வதினி, தான்சானியா உள்ளிட்ட நாடுகளும், கிழக்கு ஐரோப்பிய பகுதியில் இருந்து குரோஷியா, செக் குடியரசு ஆகிய நாடுகளும், தென் அமெரிக்க கண்டத்தி –லிருந்து சிலி, பெரு உள்ளிட்ட நாடுகளும் ஐநா சமூக–பொருளாதார கவு –ன்சில் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

---

**4. 2021–இல் இந்திய பொருளாதார வளர்ச்சி 8.3%: உலக வங்கி கணிப்பு**

2021ஆம் ஆண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 8.3 சதவீதமாகவும், அதுவே 2022ஆம் ஆண்டு 7.5 சதவீதமாகவும் இருக்கும் என உலக வங்கி கணித்துள்ளது. இதே நேரத்தில் சர்வதேச பொருளாதாரம் 2021ஆம் ஆண்டு 5.6 சதவீதம் வளரும் என்று உலக வங்கி கூறியுள்ளது. உலக வங்கியின் சா்வதேச பொருளாதார அறிக்கை வாஷிங்டனில் வெளியிடப்பட்டது. அதில் இந்தியா பொருளாதாரம் குறித்து கூறப்பட்டுள்ளதாவது: கரோனா இரண் –டாவது அலையின் தாக்கத்திலிருந்து இந்தியா மீண்டு வருகிறது.

முன்னதாக, முதல் அலைத்தாக்கத்திலிருந்து இந்தியப் பொருளாதாரம் வேகமாக எழும்ப முயன்றபோது இரண்டாவது அலை தாக்கியது. எனினு –ம், கடந்த நிதியாண்டின் இரண்டாவது பகுதியில் இந்தியப்பொருளாதாரம் சிறப்பாக இருந்தது. முக்கியமாக சேவைகள் துறை சிறப்பாக செயல்பட்டது.

இப்போது இந்திய அரசு எடுத்துள்ள கொள்கை முடிவுகளால் உள்கட்டமை ப்பு, கிராமப்புற மேம்பாடு, சுகாதாரத் துறையில் செலவிடப்படுவது அதிகரித் –துள்ளது பொருளாதார வளர்ச்சிக்கு உதவும். உற்பத்தி மற்றும் சேவைகள் துறையில் எதிர்பார்த்ததைவிட வலுவான வேகமான மீட்சி இருக்கும். எனவே, 2021ஆம் ஆண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 8.3 சதவீதமாகும், 2022இல் 7.5 சதவீதமாகவும், 2023இல் 6.5 சதவீதமாகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

கரோனா பிரச்சனையால் இந்தியாவில் நுகர்வு, முதலீடு குறைந்துள்ளது. அடுத்து ஆண்டுகளில் இது பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். பணி நிரந்தரமின்மை தொடர்பான அச்சம், வருமான அதிகரிக்காதது போன்றவை பிரச்சனைக்குரிய விஷயங்களாக தொடரும். வீட்டில் போடப்படும் பட்ஜெட் தொடங்கி பெரு நிறுவனங்கள், வங்கிகள் நிதிநிலை அறிக்கை வரை இதன் தாக்கம் அடுத்து வரும் ஆண்டுகளில் இருக்கும் எனக்கூறப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் மிகப்பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட சில நாடுகளில் சிறப்பான பொருளாதார மீட்சி இருக்கும். வளரும் நாடுகளில் வறுமை, வருமான ஏற்றத்தாழ்வு அதிகரிக்கும். ஒட்டுமொத்தமா –க சர்வதேச பொருளாதார வளர்ச்சி 2021'இல் 5.6 சதவீதமாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

---

**5. நாட்டிலேயே முதல் முறையாக 100 சதவீத தடுப்பூசி இலக்கை எட்டிய காஷ்மீர் கிராமம்**

நாட்டில் 18 வயதுக்கு மேற்பட்ட 100% பேருக்கும் கரோனா தடுப்பூசி (முதல் டோஸ்) செலுத்தப்பட்ட முதல் கிராமம் என்ற பெருமையை காஷ்மீரின் வேயான் கிராமம் பெற்றுள்ளது. ஜம்மு காஷ்மீரின் பண்டிப்போரா மாவட்ட –த்தில் தொலைதூர மலைப்பகுதியில் உள்ளது வேயான் என்ற கிராமம்.

---

**6. பேஸ்புக் குறைதீர்ப்பு அதிகாரியாக ஸ்பூர்த்தி பிரியா நியமனம்**

பேஸ்புக் நிறுவனத்தின் குறை தீர்ப்பு அதிகாரியாக ஸ்பூர்த்தி பிரியா நியமிக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனத்தின் இணையதளத்தில் தெரிவிக்கப் –பட்டுள்ளது.

OTT மற்றும் சமூக ஊடகங்கள் போன்றவற்றை முறைப்படுத்தும் வகையி –ல் மத்திய அரசு புதிய தொழில்நுட்ப விதிகளைக் கொண்டுவந்துள்ளது. இதன்படி 50 இலட்சத்துக்கும் மேல் பயனாளர்களுள்ள சமூக ஊடகங்கள் குறைதீர்ப்பு அதிகாரியை நியமிக்கவேண்டும். இந்த அதிகாரிகள் இந்தியா –வில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும். இவர்களைப் பயனாளர்கள் தொடர்புகொள்ள தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி போன்றவையு –ம் வழங்கவேண்டும்.

இதன்படி பேஸ்புக் நிறுவனத்தின் குறைதீர்ப்பு அதிகாரியாக ஸ்பூர்த்தி பிரியா நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அவரைப் பயனாளர்கள் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளலாம் என்றும் அதன் இணையதள பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோல கூகுள், வாட்ஸ் அப் நிறுவனங்களும் குறைதீர்ப்பு அதிகாரிகளை நியமனம் செய்துள்ளன. இவை குறித்த விவரங்கள் அவற்றின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பயனாளர்களின் புகார்களைப் பெற்றதற்கான ஒப்புகையை 24 மணி நேரத்துக்குள் இந்த அதிகாரிகள் கொடுக்க வேண்டும். மேலும் 15 நாட்களுக்குள் புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்தப் புதிய விதிகளால் பேஸ்புக், ட்விட்டர் ஆகிய நிறுவனங்களுக்கும் அரசுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன. இந்நிலையில் அரசியல்வாதிகள், பிரபலங்கள் ஆகியோரின் பதிவுகளும் சாதாரண மக்களின் பதிவுகளைப் போலவே கருதப்படும் என இந்நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன.

---

**1. சமீப செய்திகளில் இடம்பெற்ற, அஸ்பெர்ஜில்லோசிஸ் என்பது ஒரு ______நோய்?**

அ) வைரல்

ஆ) பாக்டீரியா

**இ) பூஞ்சை ☑**

ஈ) மேற்கண்ட எதுவும் இல்லை



- ✓ அஸ்பெர்ஜிலஸ் பூஞ்சையால் ஏற்படும் தொற்று, ஒவ்வாமை அல்லது பூஞ்சை வளர்ச்சிதான் அஸ்பெர்ஜில்லோசிஸ். சமீபத்தில், இந்தியாவில் கருப்பு மற்றும் வெள்ளை பூஞ்சை பாதிப்புகள் கடுமையாக அதிகரித்த பின்னர், அஸ்பெர்ஜில்லோசிஸ் நோய்த்தொற்றுகள் பதிவாகியுள்ளன.
- ✓ COVID-19 நோயாளிகளில் பொதுவாகக் காணப்படும் வலுவிழந்த நோய் எதிர்ப்பு அமைப்புகள் (அ) நுரையீரல் நோய்கள் உள்ளவர்கள் இத்தொற்றுநோயால் பாதிக்கப்பட அதிக வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகிறது.

---

**2.முதலமைச்சரின் சிசு சேவா திட்டத்தை தொடங்கிய மாநிலம் எது?**

அ) உத்தர பிரதேசம்

**ஆ) அஸ்ஸாம் ☑**

இ) பீகார்

ஈ) சத்தீஸ்கர்

- ✓ COVID-19 காரணமாக பெற்றோரை இழந்த குழந்தைகளின் நலனுக்காக முதலமைச்சரின் சிஷு சேவா திட்டத்தை அஸ்ஸாம் அரசு சமீபத்தில் அறிவித்தது. பெற்றோரை இழந்த ஆனால் அவர்களின் குடும்ப உறுப்பினர்களைக்கொண்ட குழந்தைகளுக்கு மாதத்திற்கு மாத உதவித்தொகையாக ₹3,500 வழங்கப்படும். குடும்ப உறுப்பினர்களற்ற குழந்தைகட்கு இலவச குடியிருப்பும் கல்வி வசதிகளும் வழங்கப்படும்.

---

**3. இந்தியாவின் முதல் நகர கழிவுநீர் கண்காணிப்பு முறையை அறிமுகப்படுத்தியுள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

**ஆ) கர்நாடகா ☑**

இ) மகாராஷ்டிரா

ஈ) உத்தர பிரதேசம்



- ✓ கர்நாடக மாநில அரசானது பெங்களூரில் நகர கழிவுநீர் கண்காணிப்பு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இது ஆரம்ப கட்டத்தில் கொரோனா வைரஸைக் கண்காணிக்கும் நோக்கத்தினைக் கொண்டுள்ளது.
- ✓ கர்நாடகாவின் இந்த முன்னெடுப்பை USAID (United States Agency for International Development) மற்றும் COVIDactionCollab (CAC) ஆகியவை ஆதரிக்கின்றன. CAC ஆனது தூய்மைத்தொழிலாளர்களுக்கு மாதிரிகள் சேகரிப்பதற்கும் அவற்றை ஆய்வகங்களில் பகுப்பாய்வு செய்வதற்கும் பயிற்சியளிப்பதன்மூலம் மாநிலத்திற்கு உதவுகிறது.

---

**4. கேரளாவைச்சார்ந்த தஸ்னீம் அஸ்லாம், பின்வரும் எந்நாட்டுக்கு விதிவிலக்கான மாணவர் பிரிவில், 'தங்க விசா'வைப் பெற்றுள்ளார்?**

அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**ஆ) ஐக்கிய அரபு அமீரகம் ☑**

இ) ஜப்பான்

ஈ) ஆஸ்திரேலியா



- ✓ கேரளாவைச் சார்ந்த இந்திய மாணவர் தஸ்னீம் அஸ்லாம், ஐக்கிய அரபு அமீரகத்திடமிருந்து விதிவிலக்கான மாணவர் பிரிவின்கீழ் பத்தாண்டுக்கான 'தங்க விசா'வைப் பெற்றுள்ளார். 2031ஆம் ஆண்டு வரை அவர் ஐக்கிய அரபு அமீரகத்தில் தங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார். இந்த விசா, மிகவும் புகழ்பெற்ற கல்வியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

---

**5. சமீப செய்திகளில் இடம்பெற்ற, "கடற்கூழ்" என்பது எந்த நாட்டின் கடற்கரையில் குவிந்துவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது?**

அ) இந்தியா ஆ) சிங்கப்பூர்

**இ) துருக்கி ☑** ஈ) ஜப்பான்



- ✓ துருக்கி கடற்கரையில் கடற்கோழை அல்லது கூழ் குவிந்துவருவதாக கூறப்படுகிறது. கடற்கூழ் என்பது தடிமனான ஜெல்லிபோன்ற சேறாகும். இது அலைதாவரம் எனப்படும் நுண்தாவரங்களின் திடீர் அதீத இனப்பெருக்கத்தால் உருவாகிறது. காலநிலைமாற்றங்காரணமாக கடலின் மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிப்பதே இவ்விளைவுக்கு வழிவகுத்ததாக ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர். அதீத மீன்பிடித்தலும் இதற்கு மூல காரணமாக இருக்கும் எனச் சிலர் கருதுகிறார்கள்.

---

**6. "அகங்க்ஷா" என்ற பெயரில் இணையதளம் ஒன்றை அறிமுகம் செய்துள்ள மாநில அரசு எது?**

அ) கர்நாடகா

**ஆ) ஒடிஸா ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) ஹரியானா

- ✓ கர்நாடக மாநிலத்தின் அனைத்து பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு நடவடிக்கைகள்குறித்த விவரங்களை வழங்கும் "அகங்க்ஷா" என்ற பெயரிலான வலைத்தளத்தை கர்நாடக மாநில முதலமைச்சர் எடியூரப்பா தொடங்கினார். இந்த வலைத்தளம் மாநில அரசு அதிகாரிகள், பெரு நிறுவனங்கள் மற்றும் நன்கொடையாளர்களுக்கு உதவும்.
- ✓ சமூக பொறுப்புணர்வு நிதியைப் பயன்படுத்துவதில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த இது முயற்சி செய்கிறது.

---

**7. ஈகிள் சட்டம் என்ற புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள நாடு எது?**

**அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

ஆ) ஐக்கிய அரபு அமீரகம்

இ) ஐக்கியப் பேரரசு

ஈ) சிரியா



- ✓ அமெரிக்க சட்டமன்றத்தில், "Ensuring American Global Leadership and Engagement" அல்லது EAGLE சட்டம் என்ற பெயரிலான மசோதா ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. இம்மசோதா சீனா முன்வைக்கும் கொள்கை சவால்களுக்கு எதிர்மாறாக பார்க்கப்படுகிறது. அமெரிக்க உற்பத்தி, வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக, அதிகப்படியான முதலீட்டை இம்மசோதா எதிர்நோக்குகிறது. தைவான் & ஹாங்காங்கில் அமெரிக்காவின் தலையீட்டை அதிகரிக்கவும் இது எண்ணம் கொண்டுள்ளது.

---

**8. ஜெர்மனிக்கும் நார்வேக்கும் இடையிலான கடலுக்கடியில் உள்ள மின்வட திட்டத்தின் பெயர் என்ன?**

அ) GermanLink

**ஆ) NordLink ☑**

இ) NorwayLink

ஈ) GeNorLink



- ✓ ஜெர்மனியும் நார்வேயும் இருநாடுகளுக்கிடையில், 623 கிமீ கடலுக்கடியில் உள்ள மின்வடத்தின் செயல்பாடுகளைத் தொடங்கியுள்ளன. இந்த திட்டம் 'நார்ட்லிங்க்' என அழைக்கப்படுகிறது. இருநாடுகளுக்கும் இடையில் பசுமை ஆற்றலை பரிமாறிக்கொள்ளும் நோக்கங்கொண்டது இது. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற $2.2 பில்லியன் டாலருக்கும் அதிகமாக செலவாகியுள்ளது. இது பசுமை ஆற்றலுக்கு மாறுவதற்கான ஒரு முக்கிய முன்னெடுப்பாக கருதப்படுகிறது.

---

**9. COVID துயரத்தைத் தணிக்கும் ஒரு நடவடிக்கையாக, இந்திய பொதுத்துறை வங்கிகள், பின்வரும் எந்த அளவுவரை பிணையற்ற கடன்களை தனிநபர்களுக்கு வழங்குவதாக அறிவித்துள்ளன?**

அ) ₹1 இலட்சம்

ஆ) ₹2 இலட்சம்

**இ) ₹5 இலட்சம் ☑**

ஈ) ₹25 இலட்சம்



- ✓ COVID-19 தொற்றுநோயால் ஏற்படும் பண ரீதியான சிக்கல்களைத் தணிக்கும் ஒருநடவடிக்கையாக, இந்திய பொதுத்துறை வங்கிகள் (PSB),

தனிநபர்களுக்கு, பிணையற்ற கடன்களின் வடிவில் ₹5 இலட்சம் வரை நிதியுதவி வழங்குவதாக அறிவித்துள்ளன.

✓ தடுப்பூசி உற்பத்தியாளர்கள், மருத்துவமனைகள் / மருந்தகங்கள், நோயியல் ஆய்வகங்கள் போன்றவற்றுக்கு நிதியுதவி வழங்க PSB'கள் அறிமுகப்படுத்திய 3 புதிய கடன் தயாரிப்புகளில் இது ஒன்றாகும்.

---

**10. தொலைகடல் ரோந்துக்கப்பலான 'சஜாக்', பணியில் சேர்க்கப்பட்டுள்ள ஆயுதப்படை எது?**

**அ) இந்திய கடலோர காவற்படை ☑**

ஆ) இந்திய கடற்படை

இ) இந்திய இராணுவம்

ஈ) CRPF



✓ தொலைகடல் ரோந்துக்கப்பலான 'ICG சஜாக்', இந்திய கடலோர காவற்படையில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவாளால் பணியில் சேர்க்கப்பட்டது. இந்தக் கப்பல், கோவா கப்பல் கட்டுந்தளத்தில் கடலோர காவற்படைக்காக பிரத்தியேகமாக கட்டப்பட்டுள்ளது. இந்திய கடலோர காவல்படையானது தற்போது 160 கப்பல்களையும் 62 வானூர்திகளையும் அதன் கடற்படையில் கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. குறைந்தபட்ச ஆதார விலை நெல்லுக்கு ₹72 அதிகரிப்பு: ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல்**

தில்லியில் பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவை கூட்டத்தில், நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலை குவிண்டாலுக்கு ₹72 உயர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டது. 2021-2022 நிதியாண்டில் நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதாரவிலை ₹1,868-லிருந்து ₹72 அதிகரித்து ₹1,940-ஆக நிர்ணயிப்பதற்கு மத்திய அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. கம்புக்கான குறைந்தபட்ச ஆதார விலை குவிண்டாலுக்கு ₹2,150-லிருந்து ₹2,250-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

---

**2. கோவின் இணையதளத்தில் தமிழ் மொழி சேர்ப்பு**

கரோனா தடுப்பூசிக்கான முன்பதிவு செய்யும் கோவின் இணையதளத்தில் தமிழ் மொழி சேர்க்கப்பட்டுள்ளது.

கோவின் இணையதளத்தில் ஹிந்தி, மராத்தி, குஜராத்தி உள்ளிட்ட மாநில மொழிகள் சேர்க்கப்பட்ட நிலையில், தமிழ் மொழி சேர்க்கப்படமால் இருந்தது. இதையடுத்து மாநில மொழிகள் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், தமிழ் மொழி சேர்க்கப்படாமல் இருந்ததற்கு பல தரப்பில் இருந்தும் கண்டனம் எழுந்தது. இந்நிலையில், கோவின் இணையதளத்தில் தமிழ் மொழி சேர்க்கப்பட்டுள்ளது. கரோனா தடுப்பூசிக்கான முன்பதிவு செய்யும் இணையத்தில் செம்மொழியான தமிழ் 12ஆவது மொழியாக சேர்க்கப்பட்டுள்ளது.

---

**3. உலகத்தரவரிசை: முதல் 200 இடங்களில் 3 இந்திய பல்கலைகள்**

QS உலக பல்கலைக்கழக தரவரிசைப்பட்டியலில் 3 இந்திய பல்கலைகள் முதல் 200 இடத்துக்குள்ளாக வந்துள்ளன. ஆராய்ச்சி பிரிவில், உலக அளவில் முதலாவது இடத்தில் பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் உள்ளது. உலக அளவில் உயர்கல்விகுறித்து 'குவாக்கரெலி சைமண்ட்ஸ்' (QS) என்ற அமைப்பு ஆய்வுசெய்து தரவரிசைப் பட்டியலை ஒவ்வொரு ஆண்டும் வெளியிட்டு வருகிறது. இந்த அமைப்பு தனது 18ஆவது சர்வதேச பல்கலை தரவரிசைப்பட்டியலை வெளியிட்டது.

இதில் மும்பை ஐஐடி 177-ஆவது இடத்தையும், தில்லி ஐஐடி 185-ஆவது இடத்தையும், பெங்களூரு IISc 186-ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

---

**4. அந்தமான் கடல் பகுதியில் இந்தியா-தாய்லாந்து கடற்படைகள் கூட்டு ரோந்து**

அந்தமான் கடல் பகுதியில் இந்தியா – தாய்லாந்து கடற்படைகளின் 3 நாள் கூட்டு ரோந்து நடவடிக்கை தொடங்கியது. இந்திய கடல் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வரும் சூழலில், பிராந்திய கடல் பகுதி பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் இணைந்து குவாட் கூட்டமைப்பை உருவாக்கி, இந்தியப்பெருங்கடல் பகுதியில் கூட்டு போர்ப்பயிற்சி உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒருபகுதியாக, சாகர் திட்டத்தின்கீழ் தாய்லாந்து நாட்டு கடற்படையுடன் இணைந்து கூட்டு ரோந்து பணியையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான கூட்டு ரோந்து நடவடிக்கை தொடங்கியது. இதுகுறித்து இந்திய கடற்படை செய்தித்தொடர்பாளர் விவேக் மத்வால் கூறியதாவது: இந்தியப்பெருங்கடல் பகுதியின் பாதுகாப்பு மற்றும் சர்வதேச வர்த்தக கப்பல் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், இந்தியா – தாய்லாந்து இரு நாட்டு கடற்படைகளும் கடந்த 2005ஆம் ஆண்டு முதல் அவற்றின் சர்வதேச கடல் எல்லையை ஒட்டியப் பகுதிகளில் ஆண்டுக்கு இரு முறை 'CORPAT' என்ற கூட்டு ரோந்துப்பணியை மேற்கொண்டு வருகின்றன. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான 31ஆவது பகுதி கூட்டு ரோந்து அந்தமான் கடல் பகுதியில் தொடங்கியது.

இந்த 3 நாள்கள் கூட்டு ரோந்து நடவடிக்கையில் இந்திய கடற்படையின் ரோந்து கப்பலான INS சூர்யா, தாய்லாந்தின் கிரபி போர் கப்பல் ஆகியவை டோனியர் போர்விமானத்துடன் ரோந்து நடவடிக்கையில் பங்கேற்றுள்ளன. கடல்சார் சட்டவிரோத நடவடிக்கைகள், சட்டவிரோதமாக மீன்பிடித்தல், போதைப்பொருள் கடத்தல், கடல்சார் சுற்றுலா, கடற்கொள்ளை ஆகியவற்றைத் தடுப்பதே இந்த CORPAT கூட்டு ரோந்தின் முக்கிய நோக்கம் ஆகும். இது கடல்வழியாக சட்டவிரோதமான குடியேறுதல்களைத் தடுக்கவும், கடல்பகுதியில் தேடுதல் மற்றும் மீட்புப்பணிகளுக்கும் இந்தத்திட்டம் பெரும் உதவியாக உள்ளது.

---

**5. பிட்காயினை சட்டப்பூர்வ நாணயமாக அங்கீகரித்தது எல் சால்வடார்**

மெய்நிகர் நாணயமான பிட்காயினை பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் சட்டப்பூர்வ நாணயமாக மத்திய அமெரிக்க நாடான எல் சால்வடார் அங்கீகரித்துள்ளது. இத்தகைய அறிவிப்பை வெளியிட்டுள்ள முதல் நாடு எல் சால்வடார்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**6. தமிழ்நாட்டில் கள்ளச்சாராய விற்பனையைத் தடுக்க "ஆபரேஷன் விண்ட்": காவல்துறை நடவடிக்கை**

தமிழகத்தில் கள்ளச்சாராயம் தயாரிக்கப்படுவதை தடுக்கும் வகையில் "ஆபரேஷன் விண்ட்" (Operation Wind) என்ற பெயரில் காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியுள்ளனர். கரோனா தொற்றைத் தடுக்கும் வகையில் முழு பொதுமுடக்கம் அமல்படுத்தப்பட்டிருப்பதால், கடந்த மாதம் 10ஆம் தேதி முதல் டாஸ்மாக் மதுபானக் கடைகள் மூடப்பட்டுள்ளன.

இதனால் சட்டவிரோதமாக மதுபானம் விற்கப்படுவது அதிகரித்துள்ளது. குறிப்பாக மாநிலத்தில் மலைப்பகுதிகள், வனப் பகுதிகளில் கள்ளச்சாராயம் தயாரிக்கப்பட்டு விற்கப்படுகிறது. அதேபோல கர்நாடகம், ஆந்திரம், புதுச்சேரி மாநிலங்களிலிருந்து மதுபாட்டில்கள் கடத்தி கொண்டுவரப்பட்டு, அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. இதைத்தடுப்பதற்கு காவல்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கள்ளச்சாராயம் குறித்து தகவல் தெரிந்தால் பொதுமக்கள் 10581 என்ற தொலைபேசி எண்ணிலும், 9498410581 என்ற அலைபேசி எண்ணிலும் தொடர்புகொண்டு தெரிவிக்கலாம் என தமிழ்நாட்டின் காவல்துறையின் மதுவிலக்குப்பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

---

**1. "தியான்ஜோ -2" என்பது எந்த நாட்டின் விண்கலமாகும்?**



அ) ஜப்பான்

ஆ) ரஷ்யா

***இ) சீனா ☑***

ஈ) தென் கொரியா

✓ தியான்ஜோ-2 அல்லது "Heavenly Vessel" என்பது சீனாவின் சரக்கு கொண்டுசெல்லும் விண்கலமாகும். அது சீனாவால் உருவாக்கப்பட்டுவரும் விண்வெளி நிலையத்திற்கு பொருட்கள், உபகரணங்கள் போன்றவற்றை எடுத்துச்சென்றது. அது, அவ்விண்வெளி நிலையத்தின் ஒரு பகுதியாக இருக்கும் டியான்ஹே தொகுதியுடன் வெற்றிகரமாக இணைக்கப்பட்டது. லாங் மார்ச்-7 Y3 ஏவுகணையைப் பயன்படுத்தி புவியில் இருந்து அவ்விண்கலம் ஏவப்பட்டது.

---

**2. பூஜா இராணி போராவுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**



அ) டேபிள் டென்னிஸ்

**ஆ) குத்துச்சண்டை ☑**

இ) தடகளம்

ஈ) வில்வித்தை

✓ துபாயில் நடந்துவரும் ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய குத்துச்சண்டை வீராங்கனை பூஜா இராணி போரா தனது இரண்டாவது கண்ட அளவிலான பட்டத்தை வென்றுள்ளார். உஸ்பெகிஸ்தானின் மவ்லுடா மோவ்லோனோவாவுக்கு எதிராக 75 கிகி பிரிவில் 5-0 என்ற கோல் கணக்கில் அவர் வெற்றியை பதிவுசெய்தார்.

---

**3. ஆண்டுதோறும் உலக நலவாழ்வமைப்பால், 'உலக புகையிலை ஒழிப்பு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




அ) மே.29

ஆ) மே.30

**இ) மே.31 ☑**

ஈ) ஜூன்.01

✓ ஆண்டுதோறும் மே.31ஆம் தேதியை, உலக நலவாழ்வு அமைப்பு (WHO) "உலக புகையிலை ஒழிப்பு நாள்" எனக்கொண்டாடுகிறது. "Commit to quit" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருள் ஆகும். புகையிலை தொற்று மற்றும் புகையிலையைப் பயன்படுத்துவதால் ஏற்படும் இறப்புகள் குறித்து உலகளாவிய கவனத்தை ஈர்க்க, 1987 ஆம் ஆண்டில் WHO உறுப்பினர்களால் இந்த நாள் உருவாக்கப்பட்டது.

✓ 1988ஆம் ஆண்டு மே.31 அன்று புகையிலை ஒழிப்பு நாளாக கொண்டாட ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

**4. ECLGS 4.0'இல், பின்வரும் துறைகளுள் எது சேர்க்கப்பட்டுள்ளது?**




**அ) உள்நாட்டு வான் போக்குவரத்து ☑**

ஆ) வேளாண்மை

இ) கட்டுமானம்

ஈ) கப்பல் கட்டுமானம்

✓ ஒன்றிய அரசானது அவசரகால கடனுறுதித் திட்டம் 4.0'ஐ அறிமுகப்படுத்தியுள்ளதுடன், உள்நாட்டு வான் போக்குவரத்துத்துறையையும், உள்ளக உயிர்வளி உற்பத்திசெய்யும் நலவாழ்வு நிறுவனங்களுக்கு கடனளிப்பதையும் திட்டத்தின் நோக்கமாக விரிவுபடுத்தியுள்ளது.

✓ ECLGS 4.0'இன்கீழ் நிலுவையில் உள்ள கடனில் அதிகபட்சமாக 40% கடன் அல்லது ₹200 கோடி எது குறைவாக உள்ளதோ அதனை நிதி நிறுவனங்களிலிருந்து கடன் பெறுபவர்களால் பெறமுடியும்.

---

**5. ESIC மற்றும் EPFO திட்டங்களைச் செயல்படுத்துகிற ஒன்றிய அமைச்சகம் எது?**

அ) நிதி அமைச்சகம்

**ஆ) தொழிலாளர் அமைச்சகம் ☑**

இ) MSME அமைச்சகம்

ஈ) சமூக நீதி அமைச்சகம்

✓ ஒன்றிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகமானது ESIC மற்றும் EPFO திட்டங்களின்கீழ் இணைக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அவர்களின் குடும்பத்தின் நலவாழ்வுகுறித்த அச்சத்தையும் கவலையையும் நீக்கும் விதமாக கூடுதல் பயன்களை அறிவித்துள்ளது.

✓ இப்புதிய நன்மைகளின்படி, COVID காரணமாக ஓர் ஊழியர் இறந்தால், பணியின்போதான காயத்தால் ஏற்படும் இறப்பில் கிடைக்கப்பெறும் அதே நன்மைகளைப்போன்று, காப்பீடு செய்யப்பட்ட நபரின் அனைத்து குடும்ப உறுப்பினர்களும் பயன்கள் வழங்கப்படும்.

---

**6. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் குழந்தைகளுக்கான அவசரகால உதவி எண் என்ன?**

அ) 1075

**ஆ) 1098 ☑**

இ) 1091


ஈ) 14567

✓ ஒன்றிய அரசின் உதவி எண்கள்பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும்படி தனியார் பொழுதுபோக்கு அலைவரிசைகளுக்கு மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் ஆலோசனை வழங்கியுள்ளது.

✓ ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் உதவி எண் – 1075, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் உதவி எண் – 1098, சமூகநீதித்துறையின் மூத்த குடிமக்களுக்கான உதவி எண் – 14567, நிம்ஹான்ஸ் அமைப்பின் உளவியல் ஆதரவு உதவி எண் – 08046110007 ஆகியவற்றை தனியார் பொழுதுபோக்கு அலைவரிசைகள், தாங்கள் ஒளிபரப்பும் முக்கிய நிகழ்ச்சிகளுக்கிடையே ஒளிபரப்பி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

---

**7. NASA'இன் கியூரியாசிட்டி ஆய்வூர்தி, எந்த வான்பொருளில் அமைந்துள்ள கேல் பள்ளத்தின் மீதிருந்த மேகங்களைப் படம்பிடித்துள்ளது?**



அ) வியாழன்

**ஆ) செவ்வாய் ☑**

இ) திங்கள்

ஈ) வெள்ளி

✓ NASA'இன் கியூரியாசிட்டி ஆய்வூர்தியானது செவ்வாய் கிரகத்தின் கேல் பள்ளத்திற்கு மேல் காணப்பட்ட மேகங்களைப் படம்பிடித்துள்ளது. 154 கிமீ விட்டம்கொண்ட இப்பள்ளம், சுமார் 3.5-3.8 பில்லியன் ஆண்டுகள் பழமையானது என மதிப்பிடப்பட்டுள்ளது. கேல் பள்ளத்தின் மீது உலவும் விசித்திரவகை மேகங்கள்குறித்து ஆய்வுசெய்வதற்காக, கியூரியாசிட்டி ஆய்வூர்தியால் சமீபத்தில் எடுக்கப்பட்ட 21 தனித்தனி நிழற்படங்களின் கலவைதான் இந்த நிழற்படம்.

---

**8. உலகின் முதல் 'நானோ யூரியா'வை அறிமுகப்படுத்தியுள்ள நிறுவனம் எது?**

**அ) IFFCO ☑**

ஆ) தேசிய உரங்கள் நிறுவனம்

இ) இராஷ்டிரிய இரசாயனங்கள் மற்றும் உரங்கள்

ஈ) சம்பல் உரங்கள்

✓ உலக உழவர்களுக்காக உலகின் முதல் நானோ யூரியா திரவத்தை அறிமுகப்படுத்தியுள்ளதாக இந்திய உழவர்கள் உர கூட்டுறவு நிறுவனம் (IFFCO) தெரிவித்துள்ளது. கலோலில் உள்ள நானோ பயோடெக்னாலஜி ஆராய்ச்சி மையத்தில் இந்தத் தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டது.

✓ இது, உழவர்களின் உள்ளீட்டு செலவைக்குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இது, போக்குவரவு மற்றும் கிடங்கிற்கான செலவினத்தை கணிசமாகக் குறைக்கும்.

---

**9.** ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியானது NGC 691'இன் விவரமான நிழற்படத்தை எடுத்துள்ளது. NGC 691 என்பது ____?



அ) பேரடை ☑

ஆ) எரிகல்

இ) மேகம்

ஈ) புறக்கோள்

✓ NASA / ESA ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியானது NGC 691 எனப்படும் சுழல் பேரடையின் தெளிவான நிழற்படத்தை எடுத்துள்ளது. NGC 691 என்பது மேஷ விண்மீன் மண்டலத்தில், சுமார் 125 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ள ஒரு சுழல் பேரடை ஆகும். இது மாறுபட்ட வடிவங்கள் மற்றும் வண்ணங்கள் கொண்ட ஒன்பது பேரடைகளின் தொகுப்பான NGC 691 குழுவின் மூத்த உறுப்பினராகும்.

---

**10.** உலக மூளைக்கட்டி நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?




அ) ஜூன் 8 ☑

ஆ) ஜூன் 10

இ) ஜூன் 12

ஈ) ஜூன் 14

✓ உலக மூளைக்கட்டி நாளானது ஆண்டுதோறும் ஜூன்.8 அன்று உலகம் முழுமைக்கும் அனுசரிக்கப்படுகிறது. மூளைக்கட்டி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், அதுகுறித்து மக்களுக்கு அறிவுறுத்துவதும் இந்த நாளின் நோக்கமாகும். உலக மூளைக்கட்டி நாளை, தொடக்கத்தில், லீப்ஜிக்கைச்சார்ந்த இலாபநோக்கற்ற அமைப்பான ஜெர்மன் மூளைக்கட்டி சங்கம் கடந்த 2000ஆம் ஆண்டில் நியமித்து அறிவித்தது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நீட் தேர்வின் தாக்கம்: நீதிபதி ஏ கே ராஜன் குழுவில் 8 உறுப்பினர்கள் நியமனம்**

தமிழ்நாட்டில் மருத்துவ மாணவர் சேர்க்கையில் நீட் தேர்வின் பாதிப்பு குறித்து ஆய்வுசெய்ய நீதியர்சர் ஏ கே ராஜன் தலைமையிலான உயர் நிலைக் குழுவில் மேலும் 8 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக்குழு, உரிய புள்ளி விவரங்களை ஆய்வு செய்து, தமிழ்நாட்டிலுள்ள பின்தங்கிய மாணவர்களின் நலனைப் பாதுகாத்திடத் தேவையான பரிந்துரைகளை ஒருமாதகாலத்திற்குள் அரசுக்கு அளிக்கும். இந்தப்பரிந்துரைகளை ஆய்வுசெய்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும்.

---

**2. 2020-21 நிதியாண்டில் வேளாண் ஏற்றுமதியில் முன்னேற்றம்: மத்திய அரசு தகவல்**

கடந்த மூன்று ஆண்டுகளாக தேக்கத்தில் இருந்த வந்த வேளாண் மற்றும் அது சார்ந்த பொருள்களின் ஏற்றுமதியில் 2020-21 நிதியாண்டு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மத்திய வர்த்தகத்துறை தெரிவித்துள்ளது.

வேளாண் ஏற்றுமதி கடந்த 2017-18 நிதியாண்டில் 38.43 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. 2018-19-இல் கிட்டதட்ட இதே அளவில் தொடர்ந்தது. ஆனால், 2019-20-இல் 35.16 பில்லியன் அமெரிக்க டாலராக ஏற்றுமதி குறைந்தது. அதே சமயத்தில் நோய்த் தொற்று சிக்கல்கள் நிறைந்த 2020-21 நிதியாண்டில் இது 41.25 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்துள்ளது. இது 17.34% வளர்ச்சியாகும். இதில் வேளாண் மற்றும் தோட்டப்பொருள்கள், கடல்சார் பொருள்களும் அடக்கம் என தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து மத்திய அரசின் வர்த்தகத் துறை செயலர் டாக்டர் அனூப் வாதவன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: வேளாண் ஏற்றுமதியில் முந்தைய நிதியாண்டுகளைவிட தற்போது நாடு வளர்ச்சியைக்கண்டுள்ளது. ஏற்றுமதியின் இந்திய மதிப்பில் இது 2021-21 நிதியாண்டில் ₹3.05 இலட்சம் கோடியாகும். முந்தைய 2019-20'இல் ₹2.49 இலட்சம் கோடியாக இருந்தது. 2020-21'இல் 22.62% வளர்ச்சி பெறப்பட்டுள்ளது.

இறக்குமதியிலும் கிட்டதட்ட முந்தைய நிதியாண்டை போன்று 2020-21-இல் 20.67 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. நோய்த்தொற்று காலக்கட்டத்தில் வேளாண் பொருள்கள் வர்த்தக சமநிலை (ஏற்றுமதி – இறக்குமதி இடையேயான வேறுபாடு) 14.51 பில்லியன் டாலரிலிருந்து 20.58 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. இதிலும் 42.16 சதவீத வளர்ச்சியைக் கண்டுள்ளோம். 2020-21'இல் ஏற்றுமதியில் கடல்சார் பொருள்கள் தவிர்த்து வேளாண் பொருள்கள் மட்டும் 28.3 சதவீதம் வளர்ச்சியைப் பெற்று 29.81 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.

உலக நாடுகளில் இந்திய தானியங்கள், பாஸ்மதி அல்லாத அரிசித் தேவை அதிகரித்துள்ளது. இதில் 4,794.54 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. கோதுமையும் 549.19 மில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மற்ற வேளாண் பொருள்களில் சர்க்கரை, பருத்தி, புண்ணாக்கு, காய்கறிகள், சமையல் எண்ணெய் போன்றவையும் ஏற்றுமதி செய்யப்பட்டு கணிசமான வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது.

இஞ்சி, மிளகு, பட்டை, ஏலக்காய், மஞ்சள், குங்குமப்பூ போன்ற மசாலா பொருள்களின் ஏற்றுமதியும் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சி கண்டுள்ளோம். 2020-21'இல் மசாலா பொருள்களின் ஏற்றுமதி இதுவரை இல்லாத அளவுக்கு 4 பில்லியன் அமெரிக்க டாலரை எட்டியுள்ளது.

இயற்கை உரங்களுடன் தயாராகும் இந்திய கரிம வேளாண் பொருளின் ஏற்றுமதி 2020-21'இல் 1,040 மில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது. இதன் வளா்ச்சி 50.94 சதவீதமாகும். மாம்பலம், வாழைப்பழம், ஆரஞ்சு, சிகப்பு வெங்காயம், திராட்சை போன்றவை நமது நாட்டில் விளையும் புகழ்பெற்ற பகுதியிலிருந்து அனுப்பப்படுவதைப் போன்று, முதன் முறையாக குறிப்பிட்ட சில பகுதிகளிலிருந்து சில குறிப்பிட்ட பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இரும்புச்சத்து நிறைந்த அஸ்ஸாம் சிவப்பரிசி, கும்பகோணம் கிராம அரிசி, ஹிமாச்சல பிரதேசம், உத்தரக்கண்ட் ஆகிய மாநிலங்களில் உள்ள சில தானிய வகைகளும் இதில் அடங்கும்.

இந்திய வேளாண் பொருள்களுக்கு அமெரிக்கா, சீனா, வங்கதேசம், ஐக்கிய அரபு அமீரகம், வியட்நாம், சவூதி அரேபியா, இந்தோனேஷியா, நேபாளம், ஈரான், மலேசியா ஆகிய நாடுகளில் வரவேற்புள்ளது. இந்தோனேஷியாவுக்கான ஏற்றுமதியில் 102.42 சதவீத வளர்ச்சி கண்டு முன்னிலை பெற்றுள்ளோம். அடுத்து வங்கதேசத்துடன் 95.93 சதவீதம், நேபாளத்துடன் 50.49% ஏற்றுமதி வளர்ச்சியை இந்தியா கண்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

---

**3. கரோனா தடுப்பூசி விரயம்: ஜார்க்கண்ட் முதலிடம்**

கரோனா தடுப்பூசியை வீணடிக்கும் மாநிலங்கள் பட்டியலில் 33.95 சதவீத விரயத்துடன் ஜார்க்கண்ட் மாநிலம் முதலிடம் வகிக்கிறது.

நாட்டிலேயே மிகக்குறைந்த அளவில் தடுப்பூசிகளை விரையம் செய்யும் மாநிலங்களாக கேரளமும் (-6.37), மேற்கு வங்கம் (-5.48) என்ற எதிர் மறை புள்ளிகளைக்கொண்டிருப்பதாக மத்திய அரசின் மே மாதத்துக்கான புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. கரோனா தடுப்பூசிகளை வீணடிப்பதில் ஜார்க்கண்டுக்கு (33.95%) அடுத்த இடத்தில் 15.79% விரயத்துடன் சத்தீஸ்கர் உள்ளது.

மத்திய பிரதேசம் 7.35 சதவீத அளவிலும், பஞ்சாப் 7.08 சதவீதம், தில்லி 3.95 சதவீதம், ராஜஸ்தான் 3.91 சதவீதம், உத்தர பிரதேசம் 3.78 சதவீதம், குஜராத் 3.63%, மகாராஷ்டிரம் 3.59% என்ற அறவில் தடுப்பூசியை மே மாதத்தில் வீணடித்துள்ளன.

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு மே மாதத்தில் மொத்தம் 7.9 கோடி தடுப்பூசி டோஸ்கள் விநியோகிக்கப்பட்டதில் 6.1 கோடி டோஸ்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், முந்தைய ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடும்போது, மே மாதத்தில் குறைந்த எண்ணிக்கையிலேயே தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் 9.02 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்ட நிலையில், மே மாதம் 8.98 கோடி தடுப்பூசிகள் மட்டுமே செலுத்தப்பட்டுள்ளன.

கடந்த ஜூன்.7ஆம் தேதி முதல் அனுமதிக்கப்பட்ட 45 வயதுக்கு மேற்பட்ட பயனாளிகளில் நாடு முழுவதும் 38 சதவீதம் பேருக்கு முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இதில் திரிபுரா 92 சதவீதத்துடன் முதலிடம் வகிக்கிறது. ராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநிலங்களில் 45 வயதுக்கு மேற்பட்ட பிரிவினரில் தலா 65% பேருக்கு முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

குஜராத்தில் 53 சதவீதம் பேருக்கும், கேரளத்தில் 51 சதவீதம் பேருக்கும், தில்லியில் 49 சதவீதம் பேருக்கும், பிகாரில் 25% பேருக்கும், ஜார்க்கண்ட், உத்தர பிரதேச மாநிலங்களில் தலா 24% பேருக்கும் செலுத்தப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கையில் தமிழ்நாடு மிகவும் பின்தங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் 45 வயதுக்கு மேற்பட்ட பிரிவினரில் 19 சதவீதம் பேருக்கு மட்டுமே முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

---

**4. G7 உச்சிமாநாடு: பிரதமர் நாளை பங்கேற்பு**

G7 உச்சிமாநாட்டில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் (ஜூன்.12, 13) பிரதமர் நரேந்திர மோடி காணொலி முறையில் பங்கேற்கிறார். பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சனின் அழைப்பை ஏற்று இந்த நிகழ்ச்சியில் மோடி கலந்து கொள்கிறார். G7 நாடுகள் அமைப்புக்கு தற்போது பிரிட்டன் தலைமையே –ற்றுள்ளது. இந்தியா, ஆஸ்திரேலியா, தென்கொரியா மற்றும் தென்னாப் –பிரிக்கா ஆகிய நாடுகளை விருந்தினர்களாக G7 உச்சிமாநாட்டுக்கு பிரிட்டன் பிரதமர் அழைத்துள்ளார். நேரடி & காணொலி முறைகளில் மாநாடு நடைபெறும்.

"சிறப்பான முறையில் மீண்டும் கட்டமைப்போம்" என்பது இந்த உச்சி மாநாட்டின் மையப்பொருளாகும். கரோனாவிலிருந்து சர்வதேச அளவில் மீண்டு வருங்காலத்தில் பெருந்தொற்றுகளுக்கு எதிரான நடவடிக்கைக –ளை வலுப்படுத்துதல்; சுதந்திரமான மற்றும் நியாயமான சர்வதேச வர்த்தகத்துக்கு ஆதரவளித்து எதிர்கால வளத்தை ஊக்கப்படுத்துதல்; பருவநிலை மாற்றத்தை திறம்பட எதிர்கொண்டு பூமியின் பல்லுயிர்ப் பெருக்கத்தை காத்தல்; மற்றும் சர்வதேச அளவில் பகிர்ந்துகொள்ளும் மதிப்பீடுகள் மற்றும் வெளிப்படையான சமூகங்களை ஊக்குவித்தல் ஆகிய 4 கருத்துகளை முன்னிலைப்படுத்தி உச்சிமாநாட்டு ஆலோச –னைகளை பிரிட்டன் வகுத்துள்ளது.

கரோனா தொற்றிலிருந்து உலகம் விடுபடுவதற்கான வழிமுறைகள் குறித்த கருத்துகளை தலைவர்கள் பரிமாறிக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. G7 கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்பது இது இரண்டாவது முறையாகும். பிரான்ஸ் தலைமையில் அந்நாட்டின் பியாரி –ட்ஸ் நகரத்தில் 2019'இல் நடைபெற்ற உச்சிமாநாட்டில் "நல்லெண்ண பங்குதாரராகப் பங்கேற்ற பிரதமர் மோடி, "பருவநிலை, பல்லுயிர்ப் பெருக்கம் & கடல்கள்" மற்றும் "டிஜிட்டல் மாற்றம்" ஆகிய அமர்வுகளில் கலந்துகொண்டார்.

---

**5. 'என்–95'க்கு மாற்றாக 'எஸ்எச்ஜி–95' வீரியமிக்க மலிவு விலை முகக்கவசம்**

தீநுண்மி, நுண்ணிய கிருமிகளிடமிருந்து 99% வரை பாதுகாக்கும் வீரியமிக்க மலிவு விலை முகக்கவசங்களை இந்திய நிறுவனங்கள் உருவாக்கியுள்ளன. மறு உபயோகத்துக்குப் பயன்படாத 'என்–95' முகக் கவசங்களுக்கு மாற்றாக இது உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய அறிவிய –ல் தொழில்நுட்பத் துறை தெரிவித்துள்ளது.

கரோனா நோய்த்தொற்றிலிருந்து மனிதர்களைப் பாதுகாக்க உலக சுகா –தார அமைப்பு பரிந்துரையின்படி கிருமிநாசினிகளும், முகக்கவசங்களு –ம் முக்கிய பங்கு வகித்தன. மருத்துவர்களும் கரோனா நோய்த் தொற்றில் பாதிக்கப்பட்டவர்களும் பயன்படுத்தி வந்த 'என்–95' முகக் கவசங்களால் நோய்த்தொற்று இல்லாதவர்களுக்கு தொற்றுபரவலில் மிகுந்த பாதுகாப்பாகக் கருதப்பட்டது. அதேசமயத்தில் இதன் விலை மற்றும் மறு உபயோகமின்மை போன்ற அசௌகரியங்கள் இருந்தன.

இவற்றைப் போக்கும் விதமாக COVID–19 நிதித்திட்டத்தின் கீழ் மத்திய அரசின் உயிரிதொழில்நுட்பத் தொழில் ஆராய்ச்சி உதவிக் கவுன்சில், ஐகேபி நாலேஜ் பார்க் போன்ற அமைப்புகள், ஹைதராபாத்தில் உள்ள பரிசோதா டெக்னாலஜிஸ் என்கிற தனியார் மருத்துவ நிறுவனத்திற்கு வழங்கிய தொழில்நுட்ப உதவிகள்மூலம் 'SHG–95' என்கிற வீரியமிக்க பல அடுக்கு முகக்கவசம் தயாரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை தெரிவித்துள்ளது.

---

**6. கழிவுநீரில் கரோனா தீநுண்மி இருப்பதைக் கண்டறியும் குறைந்த விலை உணரி**

கழிவுநீரில் கரோனா தீநுண்மி இருப்பதைக் கண்டறியும் குறைந்த விலையிலான உணரி தொழில்நுட்பத்தை பிரிட்டன்–இந்திய விஞ்ஞா –னிகள் கூட்டாக உருவாக்கியுள்ளனர். அதிக மக்கள் நெருக்கம் உள்ள பெரிய பகுதிகளில் நோய்த்தொற்று எந்த அளவில் பரவியிலிருக்கிறது என்பதை சுகாதார அதிகாரிகள் சிறந்த முறையில் புரிந்துகொள்ள இந்த தொழில்நுட்பம் உதவும்.

இதனைப் பயன்படுத்த ஆய்வக வசதிகளோ, விலை உயர்ந்த ரசாயனமோ இதற்கு தேவைப்படாது. எளிதாக கையில் எடுத்துச் செல்லக் கூடிய வகையிலான இந்த தொழில்நுட்பம், குறைந்த வருவாய் மற்றும் நடுத்தர வருவாய் நாடுகளுக்கு நோய்த் தொற்று பரவலைக் கண்டறிய இந்த தொழில்நுட்பம் மிகுந்த உதவிகரமாக இருக்கும் என்கின்றனர் ஆராய்ச்சியாளார்கள். பிரிட்டனைச்சேர்ந்த ஸ்டிராத்கிளைட் பல்கலைக்க –ழக மற்றும் மும்பை IIT ஆராய்ச்சியாளர்கள் இணைந்து உருவாக்கிய இந்த சென்ஸார் தொழில்நுட்பம் தொடர்பான ஆய்வுக்கட்டுரை, 'சென்ஸா –ர்ஸ் & ஆக்சுவேடர்ஸ் பி கெமிக்கல்' ஆய்விதழில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுக்காக மும்பையில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையில் இருந்து கழிவுநீர் சேகரிக்கப்பட்டு அதனுடன் SARS CoV–2 ரிபோநியூக் –ளிக் அமிலத்தை கலந்து, அதில் இந்த சென்ஸார் தொழில்நுட்பத்தை பரிசோதித்துள்ளனர்.

---

**1. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தம், நியூசிலாந்துக்கும் எந்நிறுவனத்துக்கும் இடையேயான விண்வெளி ஆய்வுக்கான ஒப்பந்தமாகும்?**

அ) ROSCOSMOS

ஆ) ISRO

**இ) NASA ☑**

ஈ) ESA

✓ நியூசிலாந்து, NASA உடனான விண்வெளி ஆய்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன்மூலம், ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டும் பதினொன்றாவது நாடாக நியூசிலாந்து திகழ்கிறது. வரும் 2024ஆம் ஆண்டளவில் மனிதர்களை நிலவுக்கும், மேலும் செவ்வாய் கோளுக்கும் அனுப்பும் திட்டத்தின் ஒருபகுதியாக NASA உடனான இந்த ஒப்பந்தம் உள்ளது.

---

**2. அண்மையில் அறிவிக்கப்பட்ட H1ON3 என்பது எதன் திரிபு?**

**அ) பறவைக்காய்ச்சல் ☑**

ஆ) கொரோனா வைரஸ்

இ) ஆந்த்ராக்ஸ்

ஈ) பன்றிக்காய்ச்சல்



✓ H1ON3 எனப்படும் அரிய பறவைக்காய்ச்சலின் முதல் மனித நோய்த்தொற்றை சீனா தெரிவித்துள்ளது. இந்தப்பாதிப்பு, 41 வயதுடைய நபருக்கு ஏற்பட்டுள்ளதாக சீனாவின் தேசிய சுகாதார ஆணையத்தால் உறுதிப்படுத்தியுள்ளது.

✓ இப்பறவைக்காய்ச்சல் திரிபானது குறைந்த நோய்ப்பரவல் தன்மையை கொண்டுள்ளது. அதாவது ஒப்பீட்டளவில் கோழிப்பண்ணையில் ஏற்படுத்தும் தொற்றைவிட குறைவான தொற்றையே இது ஏற்படுத்துகிறது. உலகில் வேறெங்கும் இது பாதித்தாக இதுவரை பதிவாகவில்லை.

---

**3. 'Ecowrap' என்ற பொருளாதார ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ள வங்கி எது?**

**அ) பாரத வங்கி ☑**

ஆ) பஞ்சாப் தேசிய வங்கி

இ) ஆக்ஸிஸ் வங்கி

ஈ) HDFC வங்கி

✓ பாரத வங்கி (SBI) தனது பொருளாதார ஆய்வறிக்கையான 'Ecowrap'இல் 2021-22 நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.9%ஆக உயரும் எனக் கணித்துள்ளது. முன்னர் இவ்வறிக்கை 10.4% வளர்ச்சி இருக்கும் எனக் கணித்திருந்தது. COVID-19 தொற்றுநோயின் இரண்டாம் அலையின் காரணமாக கணிப்பில் சரிவு ஏற்பட்டுள்ளது.

---

**4. ஜப்பானிய வீராங்கனை நவோமி ஒசாகாவுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ) பூப்பந்து

**ஆ) டென்னிஸ் ☑**

இ) வில்வித்தை

ஈ) பளு தூக்குதல்



✓ முன்னணி டென்னிஸ் சாம்பியனும், உலகின் நெ.2 வீராங்கனையுமான நவோமி ஒசாகா, பிரெஞ்சு ஓபன் போட்டியிலிருந்து விலகுவதாகவும், களத்திலிருந்து சிறிதுகாலம் விலகியிருக்கவுள்ளதாகவும் அறிவித்துள்ளார். மனநல காரணங்களுக்காக, போட்டிக்கு பிந்தைய பத்திரிகையாளர் சந்திப்புகளை புறக்கணிப்பதாக அவர் பதிவிட்டிருந்தார். இதையொட்டி, போட்டி அமைப்பாளர்கள் அவருக்கு அபராதம் விதித்தனர்.

---

**5. நடப்பாண்டின் உலக பால் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

**அ) Sustainability in the dairy sector ☑**

ஆ) Milk for All

இ) Leaving No one Behind

ஈ) Milk and SDG




✓ ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.1 அன்று, ஐநா அவையின் உணவு & உழவு அமைப்பு உலக பால் நாளை அனுசரிக்கிறது. உலகளாவிய உணவாக பாலின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதற்கும், பால் தொழிற்துறையை போற்றுவதற்குமாக, இந்நாள், முதன்முதலில் கடந்த 2001ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. "Sustainability in the dairy sector" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**6. கோவா குறித்த அண்மைய செய்திகளின் சூழலில், 'GIFT' என்ற சுருக்கம் பின்வரும் எதைக்குறிக்கிறது?**

**அ) Goa Institution For Future Transformation ☑**

ஆ) Goa Institution For Financial Transformation

இ) Goa Institution For Fin Tech

ஈ) Goa Institution For Foreign Affairs

✓ கோவா மாநில அரசானது Goa Institution For Future Transformation (GIFT) என்ற பெயரில் ஒரு மதியுரையகத்தை அமைத்துள்ளது. இந்த நிறுவனம், கொள்கைசார்ந்த பல்வேறு விஷயங்கள் மற்றும் நலன்புரி முடிவுகளில் கோவா மாநில அரசுக்கு உதவும், அறிவுறுத்தும் மற்றும் வழிகாட்டும். GIFT இன் செயல்பாடுகள் NITI ஆயோகின் செயல்பாடுகளுக்கு மிகவும் ஒத்ததாக இருக்கும்.

---

**7. தற்போதைய இரண்டு குழந்தைகள் வரம்பை மீறி, சமீபத்தில், 3 குழந்தைகளுக்கான கொள்கையை கொண்டுவந்துள்ள நாடு எது?**

அ) இந்தியா

ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

இ) ஜப்பான்

***ஈ) சீனா ☑***



✓ கடந்த 2016ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட தற்போதைய இரண்டு குழந்தைகள் வரம்பைமீறி, தம்பதியினர் மூன்று குழந்தைகளைப் பெற அனுமதிப்பதாக சீனா அறிவித்துள்ளது. நாட்டின் பிறப்பு விகிதங்கள் சரிவை பதிவுசெய்துள்ளதை அடுத்து சீன அரசாங்கத்தால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

---

**8. நடப்பாண்டின் (2021) P4G உச்சிமாநாட்டை நடத்திய நாடு எது?**

அ) இந்தியா

ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**இ) தென் கொரியா ☑**

ஈ) வட கொரியா

✓ P4G – Partnering for Green Growth and the Global Goals – 2030 உச்சிமாநாட்டை கொரிய குடியரசு / தென் கொரியா நடத்தியது. அது சியோலில் நடத்தப்பட்டது.

✓ நீடித்த மற்றும் நெகிழ்வான பொருளாதாரங்களை உருவாக்குவதற்காக சந்தை அடிப்படையிலான கூட்டாண்மைகளை மேம்படுத்துவதற்கான நிகழ்வு இதுவாகும். "Inclusive Green Recovery Towards Carbon Neutrality" என்பது இந்த நிகழ்வின் கருப் பொருளாகும்.

---

**9. "தோட்டக்கலை தொகுதி மேம்பாட்டு திட்டத்தை" செயல்படுத்தும் நிறுவனம் எது?**

அ) உணவு மற்றும் உழவு அமைப்பு

**ஆ) தேசிய தோட்டக்கலை வாரியம் ☑**


இ) NABARD

ஈ) உணவுப்பதப்படுத்துதல் தொழிற்சாலைகள் அமைச்சகம்

✓ மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர், "தோட்டக்கலை தொகுதி மேம்பாட்டு திட்டத்தை" தொடங்கிவைத்தார். இந்தத் திட்டம், 11 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களை உள்ளடக்கிய 12 தொகுதிகளில் முன்னோட்ட அடிப்படையில் தொடங்கப்பட்டுள்ளது. இனங்காணப்பட்ட தோட்டக்கலை தொகுதிகளை உலகளாவிய போட்டிக்கு உட்படுத்துவதை நோக்கமாகக்கொண்டுள்ள இந்தத் திட்டம் தேசிய தோட்டக்கலை வாரியத்தால் செயல்படுத்தப்படுகிற ஒரு மத்திய துறை திட்டமாகும்.

---

**10.** COVID–19 பின்னணியில், 'கப்பா' & 'டெல்டா' என்றால் என்ன?



அ) COVID பரவலுக்கு எதிரான புதிய நடவடிக்கை

**ஆ) COVID திரிபுகளுக்கான புதிய பெயர்கள் ☑**

இ) COVID பாதிப்பு விகிதத்தில் புதிய வகைப்பாடு

ஈ) புதிய உலகளாவிய தடுப்பூசி முன்னெடுப்பு

✓ COVID–19 தொற்றின் பல்வேறு திரிபுகளுக்கு கிரேக்க எழுத்துக்களைப் பயன்படுத்தி புதிய பெயர்களை உலக நலவாழ்வு அமைப்பு அறிவித்துள்ளது. உலக நலவாழ்வு அமைப்பின் கூற்றுப்படி, இந்தியாவில் முதன்முதலில் காணப்பட்ட COVID திரிபு (B.1.617.2) டெல்டா என குறிப்பிடப்படும், அதேசமயத்தில் நாட்டில் முன்னர் காணப்பட்ட திரிபு (B.1.617.1) கப்பா என அறியப்படும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

### 1. எழும்பூர் இரயில்நிலையத்தின் 113ஆவது பிறந்தநாள்

சென்னை எழும்பூர் ரயில்நிலையத்தின் 113ஆவது ஆண்டு பிறந்தநாள் ஜூன்.11 அன்று கொண்டாடப்பட்டது.

**தென்மாவட்டங்களை இணைக்கும்:** சென்னை நகரத்தில் 4 நகரங்களுக்கு இடையேயான இரயில்வே முனையங்களில் ஒன்றாக எழும்பூர் இரயில் நிலையம் திகழ்கிறது. சென்னையை தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களை இணைக்கும் முனையமாக இது உள்ளது.

தென்தமிழ்நாட்டின் நுழைவு வாயிலாக திகழும் இந்த இரயில் நிலையம் ஒரு நூற்றாண்டு கடந்து பல்வேறு சாதனைகளைப் படைத்து, தற்போது கம்பீரமாக காட்சி அளித்து வருகிறது.

**நிலையத்தின் வரலாறு:**

இந்நிலையத்தின் கட்டடப்பணி முடிந்து, 1908 ஜூன்.11 அன்று திறக்கப்பட்டது. இந்தக் கட்டடத்தின் பொறியாளராக ஹென்றி இர்வின் இருந்தார். இக்கட்டடம் கட்டுவதற்கான ஒப்பந்ததாரராக சாமிநாத பிள்ளை என்பவர் செயல்பட்டார். ₹17 இலட்சம் செலவில் 300 அடி நீளம், 71 அடி அகலத்தில் எழும்பூர் ரயில் நிலையத்தின் கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டது. தரைத்தளம், முதல்தளத்துடன் இந்தக்கட்டடம் அமைக்கப்பட்டது.

இந்நிலைய கட்டடம் முடிந்த பிறகு, எழும்பூரிலிருந்து தனுஷ்கோடிக்கு போர்ட் மெயில் இரயில் இயக்கப்பட்டது. இந்த இரயில் நிலையத்தில் 3 நடைமேடைகளும், ஒரு நடைமேம்பாலமும் இருந்தது. இதன்பிறகு, பல்வேறு காலகட்டத்தில் வளர்ச்சியடைந்து, இப்போது 11 நடைமேடைகள் இருக்கின்றன. இரயில் நிலையத்தில் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து, மீண்டும் நன்னீராக மாற்றி, நடைமேடை உள்பட பல்வேறு இடங்களில் சுத்தப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில் உள்ள 70 இரயில் நிலையங்களுக்கு பயணிகள் வசதிகளுக்காக தலா ₹20 கோடி ஒதுக்கீடு செய்ய இரயில்வே வாரியம் அறிவித்தது.

இதில், எழும்பூர் இரயில் நிலையமும் ஒன்றாகும். பயணிகளின் வசதிக்காக பல்வேறு பணிகள் நடைபெற்று வந்தன. தற்போது கரோனா பொதுமுடக்கம் காரணமாக, பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளன.

**விரைவு இரயில்கள்:** எழும்பூர் இரயில் நிலையத்தில் இருந்து தினமும் 50'க்கும் அதிகமான விரைவு ரயில்கள் இயக்கப்பட்டு வந்தன. இதுதவிர, தாம்பரம்–கடற்கரை மற்றும் செங்கல்பட்டு வரை இயக்கப்படும் 250 மின்சார இரயில்கள் எழும்பூர் இரயில் நிலையம் வழியாக செல்லும்.

விரைவு மற்றும் மின்சார இரயில்களில் பயணம் செய்வதற்காக தினமும் சுமார் 1,20,000 பயணிகள் வந்து செல்வார்கள். இந்த எண்ணிக்கை பண்டிகை காலங்கள், விடுமுறைக்கு ஊருக்கு செல்லும் வேளைகளில் அதிகமாக இருக்கும். தற்போது கரோனா பொதுமுடக்கம் காரணமாக, மின்சார இரயில்கள் மற்றும் சிறப்பு இரயில்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளன.

---

### 2. வேளாண் இயந்திரமயமாக்கல்: தமிழ்நாடு, ஆந்திரம் முன்னிலை

வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தில் பயன்பெற்ற மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடும் ஆந்திரமும் முன்னிலையில் உள்ளன. இந்தத் திட்டத்தின்மூலம் உழவர்களின் வருமானம் பெருகி, வேளாண் பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமளித்துள்ளது என மத்திய வேளாண் துறை தெரிவித்துள்ளது. இதுகுறித்து மத்திய வேளாண்துறை கூறியுள்ளதாவது: சிறு, குறு விவசாயிகளின் வேளாண்மைகளில் இயந்திரமயமாக்கலின் வரம்பை அதிகரிக்கும் நோக்கில் மத்திய வேளாண்துறை 2014–15 நிதி ஆண்டில் 'வேளாண் இயந்திரமயமாக்கல்' என்கிற துணைத்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. நிலங்களின் பயன்பாடு, நீர்வளங்கள் போன்றவற்றைத் திறம்பட பயன்படுத்தி வேளாண் தொழிலை ஒரு இலாபகரமாக மாற்றுவதிலும் ஊரகப்பகுதி இளைஞர்கள் இந்தத் தொழிலார்வத்துடன் பங்கேற்கவும் இயந்திரமயமாக்கல் முக்கியத்துவம் பெறுகிறது.

வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்கள், நவீன வேளாண்மைக்கு உரிய உள்ளீடுகள், உயர்தொழில்நுட்பம் மையங்கள், வேளாண் எந்திர வங்கிகள் ஆகியவற்றிற்கு மத்திய அரசு பல்வேறு மாநிலங்களுக்கு நிதியுதவிகளை வழங்கியது. இதன்மூலம் மனித துயரங்கள், சாகுபடிச் செலவுகள் குறைந்து பயிர்களின் உற்பத்தித்திறன் மேம்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தால் விவசாயிகள் வருமானம் அதிகரித்து வேளாண் பொருளாதார வளர்ச்சி ஊக்கவிக்கப்பட்டுள்ளன.

2014–15 முதல் 2020–21ஆம் ஆண்டு வரை ஆந்திரத்திற்கு ₹621.23 கோடி, தமிழகத்துக்கு ₹421.65 கோடி வேளாண் கூட்டுறவு மற்றும் உழவர்கள் நலத்துறைமூலம் நிதி வழங்கப்பட்டுள்ளது. நடப்பு 2021–22 நிதியாண்டில் முதல்தவணையாக ₹21.74 கோடி வேளாண் இயந்திரமயமாக்கல் துணைத்திட்டத்தின்கீழ் தமிழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 269 வேளாண் இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் வழங்கப்படுகின்றன. மேலும், 115 வேளாண் கருவிகள் வாடகை மையங்கள் அமைக்கப்படும். 10 உயர்தொழில்நுட்ப மையங்கள் மற்றும் 100 விவசாய இயந்திர வங்கிகள் கிராம அளவில் அமைக்கப்படுகின்றன.

இந்த நிதியைப் பெற்ற 11 மாநிலங்களில் கேரளம் ₹89.94 கோடி, உத்தர பிரதேசம் ₹294.74 கோடி பெற்றுள்ளன. குறைவாக பெற்ற மாநிலமாக மேற்கு வங்கம் (₹53.81 கோடி) உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### 3. வண்டலூர் பூங்காவில் குட்டி ஈன்றது சிம்பன்ஸி

சென்னையை அடுத்த வண்டலூர் உயிரியல் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வரும் சிம்பன்ஸி குட்டி ஈன்றது. வண்டலூர் உயிரியல் பூங்காவில் யானை, சிங்கம், புலி உள்ளிட்ட 2,500'க்கும் மேற்பட்ட வனவிலங்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதில், கடந்த 2005ஆம் ஆண்டு, சிங்கப்பூர் உயிரியல் பூங்காவிலிருந்து இணை சிம்பன்ஸிகள் வாங்கப்பட்டன. அவ்வாறு வாங்கப்பட்ட கோம்பி (28) என்ற ஆண் சிம்பன்ஸியும், கௌரி (23) என்ற பெண் சிம்பன்ஸியும் நன்முறையில் பராமரிக்கப்பட்டு வந்தன.

ஆப்பிரிக்க கண்டத்தில் வாழும் இவ்வகை சிம்பன்ஸியானது அழியும் நிலையில் உள்ளதாக பன்னாட்டு வனவுயிரின பாதுகாப்பு அமைப்பு வரையறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

---

### 4. கருப்புப் பூஞ்சை மருந்துக்கு GST இரத்து:

கருப்புப்பூஞ்சை தொற்றுக்குப் பயன்படுத்தப்படும் ஆம்போடெரிசின் பி மருந்துக்கு GST ரத்து செய்யப்படுவதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். நிர்மலா சீதாராமன் தலைமையிலான GST கவுன்சில் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பல்வேறு மருத்துவப்பொருள்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு ஜிஎஸ்டி குறைக்கப்பட்டுள்ளது. ஆம்போடெரிசின் பி மற்றும் டோசிலிசுமாப் மருந்துகளுக்கு விதிக்கப்பட்டு வந்த 5% GST இரத்து செய்யப்பட்டுள்ளது.

ரெம்டெசிவிர் மற்றும் ஹெபரின் போன்ற மருந்துகளுக்கான ஜிஎஸ்டி 12 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மருத்துவத்துக்குப் பயன்படுத்தப்படும் உயிர்வளி, உயிர்வளி செறிவூட்டிகள், செயற்கை சுவாச வழங்கி உள்ளிட்ட சாதனங்களுக்கான ஜிஎஸ்டி விகிதம் 12 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. பல்ஸ் ஆக்சிமீட்டர், சானிடைசர்ஸ், வெப்பபரிசோதனை கருவி உள்ளிட்டவற்றின் ஜிஎஸ்டியும் 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

---

### 5. கரோனாவால் உயிரிழந்த பெற்றோரின் குழந்தைகளுக்கு நிதியுதவி: வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு

கரோனா நோய்த் தொற்றால் உயிரிழந்த அரசு ஊழியர்களின் வாரிசுகள் சிறப்பு நிதித்திட்டத்தின்கீழ் பயன்பெற முடியாது என்று தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், மற்றவர்கள் இந்த உதவியைப் பெறுவதற்கான வயது வரம்பு 18'க்குக் கீழே இருக்க வேண்டும். கரோனா நோய்த் தொற்றால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு நிதியுதவிகள் வழங்குவது தொடர்பான தனித்த வழிகாட்டு நெறிமுறைகளை சமூக நலன் மற்றும் மகளிர் அதிகாரமளித்தல் துறைக்கான முதன்மைச் செயலாளர் ஷம்பு கல்லோலிகர் வெளியிட்டார். அதன் விவரம்:

கரோனா நோய்த்தொற்றால் பெற்றோர் அல்லது தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைக்கு ₹5 லட்சம் வைப்பீடு செய்யப்படும். இந்தத் தொகை அவர்கள் 18 வயது நிறைவடையும்போது வட்டியோடு சேர்த்து திருப்பித் தரப்படும். ஏற்கெனவே, தாய் அல்லது தந்தையை இழந்து, இப்போது கரோனா நோய்த்தொற்றால் தாய் அல்லது தந்தையை இழந்திருந்தால் அவர்களுக்கும் ₹5 இலட்சம் வைப்பீடு செய்யப்படும். 18 வயது பூர்த்தியா –னவுடன் வட்டியுடன் தொகை அளிக்கப்படும்.

அத்தகைய குழந்தைகளுக்கு அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவி பெறும் இல்லங்கள், விடுதிகளில் சேருவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். குழந்தைகள் கல்லூரிப் படிப்பை முடிக்கும் வரையிலும் அவர்களுக்கான கல்வி மற்றும் விடுதிச் செலவை அரசே ஏற்றுக் கொள்ளும் என்று தமிழக அரசு அறிவித்திருந்தது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான வழிகா –ட்டு நெறிமுறைகளை வகுத்திட நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தலைமையில் குழு அமைக்கப்பட்டிருந்தது. இந்தக் குழு அண் –மையில் கூடி ஆலோசித்தது. அதன்படி, வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

**என்னென்ன நடைமுறைகள்?** கரோனா நோய்த்தொற்று காரணமாக, பெற்றோரை இழந்த குழந்தைகள் முதலில் அடையாளம் காணப்படுவர். இதற்காக மாவட்ட ஆட்சியர் தலைமையில் தனியாகக்குழு அமைக்கப்படு –ம். மாவட்டங்களில் உள்ள சுகாதாரத்துறைமூலமாக இறப்புச்சான்றிதழ் போன்ற ஆவணங்கள் சரிபார்க்கப்படும். சம்பந்தப்பட்ட ஆவணங்களை வைத்து குடும்பத்தாரிடம் நேரிலும் விசாரணை நடத்தப்படும். கரோனா காரணமாக வீட்டிலேயே பெற்றோரின் இறப்புநேரிடலாம். அப்போது, சம்பந்தப்பட்ட குழந்தையின் பாதுகாவலர் அல்லது தாய் அல்லது தந்தை ஆகியோரில் ஒருவர், தங்களிடம் இருக்கும் மருத்துவ ஆவணங்களின் அடிப்படையில் இறப்புச்சான்றுக்கு விண்ணப்பிக்கலாம்.

கரோனா காரணமாகத்தான் இறந்தார் என்பதற்கான சான்று ஆவணங் –களாக அவை இருக்கவேண்டும். குறிப்பாக, RT–PCR பரிசோதனை, ஸ்கேன், X–கதிர் பரிசோதனை ஆகியவையாக இருக்கலாம்.

**18 வயதுக்குள் இருக்க வேண்டும்:** கரோனா காரணமாக பெற்றோர், தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகளின் வயது 18 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும். பெற்றோரை இழந்திருக்கும் பட்சத்தில் ஆண்டுவருமானம் ஏதும் கணக்கில் கொள்ளப்படாமல் சம்பந்தப்பட்ட குழந்தைக்கு அரசு நிதி அளிப்பதுடன், கல்விச்செலவும் ஏற்கப்படும்.

பெற்றோரில் தாய் அல்லது தந்தை இறந்திருக்கும் பட்சத்தில், அந்த நபர் வருமானம் ஈட்டியவராக இருந்தால் அவரது பெயர் வறுமைக் கோட்டுக் –குக்கீழ் உள்ளவர்களின் பட்டியலில் இருக்கிறாரா என ஆராயப்படும். இந்தப் பட்டியல் தமிழ்நாடு பெண்கள் மேம்பாட்டுக் கழகத்திடம் உள்ளது. அந்தப் பட்டியலில் பெயர் இல்லாத பட்சத்தில் வறுமைக் கோட்டுக்குக்கீழ் உள்ளவர்களின் பட்டியலில் இடம்பெறுவதற்கான தகுதி இருக்கிறதா என ஆராயப்பட்டு பட்டியலில் சேர்க்கப்படும்.

**அரசு ஊழியர் குழந்தைகளுக்கு சிறப்பு நிதி கிடையாது:** பெற்றோர், தாய் அல்லது தந்தை அரசு ஊழியராகவோ, பொதுத்துறை நிறுவன பணியாள –ராகவோ இருப்பின் அந்தக் குழந்தை அரசின் சிறப்பு நிதி மற்றும் கல்விச் செலவு சலுகையைப் பெற முடியாது.

**தனியார் பள்ளி:** குழந்தைகள் எந்தப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கி –றார்களோ அதே பள்ளியில் தொடர்ந்து படிக்கலாம். அது, அரசு அல்லது அரசு உதவி பெறும் பள்ளியாக இருக்க வேண்டும். தனியார் பள்ளியாக இருந்தால், கல்வி உரிமைச்சட்ட விதியின்கீழ் அப்பள்ளிக்கு கல்விக்கான கட்டணத்தொகை அளிக்கப்படும். இந்தத்தொகையானது PM–CARES அல்லது மாநில அரசின் நிதியிலிருந்து கொடுக்கப்படும். குழந்தைகளுக்கு உரிய பள்ளிச்சீருடைகள், நூல்கள் ஆகியனவும் அதே நிதியின் வழியாக அளிக்கப்படும். பள்ளிப்படிப்பு முடிந்ததும் இளநிலை பட்டப்படிப்பு வரையி –லான அனைத்து செலவையும் அரசே ஏற்கும். அரசு வழங்கும் இலவச கல்வியை ஏற்காத பட்சத்தில், இளநிலை கல்விக்கான செலவினை வங் –கிக்கடனை வழியாகப் பெற்று படிக்கலாம். இதற்கான வட்டித் தொகை –யை அரசே ஏற்றுக்கொள்ளும்.

**கண்காணிப்புக் குழு:** இந்தத் திட்டத்தை மாவட்டங்களில் கண்காணித்து செயல்படுத்த ஆட்சியர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் உறுப்பினர் செயலாளராக, மாவட்ட குழந்தைகள்நல அலுவலர் இருப்பார். முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட சமூக நல அலுவலர், குழந்தைகள் நல குழுவின் உறுப்பினர், தன்னார்வ தொண்டு நிறுவனத் –திலிருந்து ஒருவர் ஆகியோர் இதன் உறுப்பினர்களாக இருப்பர் என்று தனது உத்தரவில் ஷம்பு கல்லோலிகர் தெரிவித்துள்ளார்.

---

**6. இந்திய கடலோரக் காவல்படையில் Mk–3 அதிநவீன இலகு இரக ஹெலிகாப்டர்கள் சேர்ப்பு**

உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அதிநவீன இலகு ரக ஹெலிகாப்டர் Mk–3, இந்திய கடலோரக் காவல்படையில் சேர்க்கப்பட்டது. "தற்சார்பு இந்தியா" திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டவை இந்த ஹெலிகாப்டர்கள். இந்த நவீன ஹெலிகாப்டர்களை பெங்களூரில் உள்ள ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

இந்த இலகு ரக ஹெலிகாப்டர்கள் படையில் இணைக்கப்பட்டிருப்பதன் மூலம் கப்பல் சார்ந்த நடவடிக்கைகள், கண்காணிப்புப்பணிகளில் புதிய மாற்றம் ஏற்படும். விமானங்கள் மற்றும் கப்பல்களுடன் ஒருங்கிணைந்து குறிப்பிட்ட பகுதிகளில் சேவைகளின் திறனை வலுப்படுத்துவதற்காக இந்த ஹெலிகாப்டர்கள் பணியில் அமர்த்தப்படும் என்றார் அவர்.

சென்னை, புவனேசுவரம், கொச்சி மற்றும் போர்பந்தரில் உள்ள இந்திய கடலோரக் காவல்படை பிரிவுகளில் 16 Mk–3 ஹெலிகாப்டர்கள் சேர்க்கப் –படவுள்ளன.

---

**7. 1,50,000 ஆரம்ப, துணை சுகாதார நிலையங்கள் ஆயுஷ்மான் பாரத் சுகாதார மையங்களாக மாற்றப்படும்: மத்திய அரசு**

அடுத்த ஆண்டு டிசம்பருக்குள் 1,50,000 துணை சுகாதார மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார மையங்கள் ஆயுஷ்மான் பாரத் சுகாதார மற்றும் நல மையங்களாக மாற்றப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்ததாவது: கடந்த மார்ச்.31ஆம் தேதி நிலவரப்படி, நாட்டின் கிராமப்புறங்களில் 1,55,404 துணை சுகாதார மையங்களும், 24,918 ஆரம்ப சுகாதார மையங்களும், நகர்ப்புறங்களில் 5,895 ஆரம்ப சுகாதார மையங்களும் உள்ளன.

அம்மையங்களில் விரிவான மருத்துவ சேவைகள் அளிக்கப்படும். துணை சுகாதார மையங்களில் 14 நோய் கண்டறிதல் பரிசோதனைகளு –ம், ஆரம்ப சுகாதார நிலையங்களில் 63 நோய் கண்டறிதல் பரிசோத –னைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. துணை சுகாதார மையங்களில் 105 அத்தியாவசிய மருந்துகள், ஆரம்ப சுகாதார மையங்களில் 172 அத்தியாவசிய மருந்துகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. சஞ்சீவனி தளம்மூலம் 60 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தொலைபேசி வழியாக மருத்துவ ஆலோசனைகள் பெற்றுள்ளனர். அவர்களில் 26.42 இலட்சம் பேருக்கு சுகாதார மற்றும் நல மையங்கள்மூலம் ஆலோசனைகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**7. இந்திய வம்சாவளி செய்தியாளர்களுக்கு புலிட்ஸர் பரிசு**

இந்த ஆண்டுக்கான அமெரிக்காவின் புலிட்ஸர் பரிசுக்கு, இந்திய வம்சா –வளியைச் சேர்ந்த இரு செய்தியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது: ஊடகத் துறைக்கான அமெரிக்காவில் மிக உயரிய விருதான புலிட்ஸர் விருதை, இந்திய வம்சாவளியைச்சேர்ந்த இருவர் இந்த ஆண்டு வென்றுள்ளனர்.

சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்திலுள்ள முஸ்லிம்கள் தடுப்பு முகாம் குறித்து புதுமையான முறையில் செய்திகள் சேகரித்து வெளிப்படுத்திய இந்திய வம்சாவளி செய்தியாளர் மேகா ராஜகோபாலன் இப்பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அமெரிக்காவின் 'புஸ்பீட் நியூஸ்' இணைய தள செய்தி ஊடகத்தில் அவர் பணியாற்றி வருகிறார். இதுதவிர, டம்பா பே டைம்ஸ் இதழில் பணியாற்றிவரும் நீல் பேடியும் இந்த ஆண்டுக்கான புலிட்ஸர் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அவர், சக செய்தியாளரான கேதலீன் மெக்கிரோரியுடன் சேர்ந்து இந்தப்பரிசை வென்றுள்ளார்.

எதிர்காலத்தில் குற்றவாளிகளாகக்கூடியவர்கள் என்று சந்தேகிக்கப்படு –வர்கள்குறித்து கணனி முறையில் கண்டறியும் உள்ளூர் காவல் அலுவ –லகத்தின் சர்ச்சைக்குரிய முயற்சிகள்குறித்து செய்திகள் வெளியிட்ட –மைக்காக அவர்களுக்கு புலிட்ஸர் விருது வழங்கப்படுகிறது என பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

**8. சமூக செயல்பாட்டுக்காக TNPL ஆலைக்கு தங்கமயில் விருது**

கரூர் மாவட்டம் புகளூர் TNPL ஆலைக்கு தங்கமயில் விருது கிடைத்துள் –ளது. இன்ஸ்டிட்யூட் ஆப் டைரக்டர்ஸ் நியு தில்லி என்ற அமைப்பானது ஒவ்வோர் ஆண்டும் வேளாண்மை, எண்ணெய் உற்பத்தி, பொறியியல், புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் உற்பத்தி, வங்கித்துறை, சிமெண்ட், காகித உற்பத்தி, சுரங்கம் மற்றும் உலோகம் போன்ற நிறுவனங்களில் சமுதாய

பொறுப்புணர்வு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் நிறுவனத்தை உலக அளவிலும், தேசிய அளவிலும் தேர்வுசெய்து தங்கமயில் விருதை வழங்கி வருகிறது.

இந்நிலையில், கரூர் மாவட்டம் புகழூர் TNPL ஆலையானது, ஆலையை சுற்றியுள்ள கிராமங்களைச்சேர்ந்த நலிவுற்ற சமுதாய குழந்தைகளுக்கு இலவசக்கல்வி வழங்குதல், அரசுப்பள்ளிகளில் மாணவர்களுக்கு ஆங்கி–லம் பேச்சுத்திறன் பயிற்சி அளித்தல், இலவச மருத்துவ முகாம்கள், கண் மருத்துவ முகாம்கள் நடத்தி தேவையான உதவிகள் வழங்குதல், அரசு மருத்துவமனைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்குதல், திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல், கிராம மக்களுக்கு குடிநீர் வழங்குதல், ஏரி குளங்கள், கால்வாய்கள் தூர்வாரல், மரக்கன்றுகள் வழங்குதல், நடுதல் போன்ற எண்ணற்ற சமுதாய நலப்பணித்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

2020ஆம் ஆண்டுக்கான சமுதாய பொறுப்புணர்வுக்காக வழங்கப்படும் தங்கமயில் விருதுக்கு தேசிய அளவில் புகழூர் காகித (TNPL) ஆலை தேர்வு செய்யப்பட்டது.

---

**9. தடுப்பூசி செலுத்தினாலும் தற்காப்பு அவசியம்!**

கரோனா தடுப்பூசிகள் செலுத்திக்கொண்டவர்கள் அலட்சியத்துடன் செயல்படாமல் கூடுதல் கவனத்துடன் இருக்கவேண்டும் என்று மருத்து–வர்கள் அறிவுறுத்தியுள்ளனர். இருமுறை தடுப்பூசி செலுத்தினாலும் கூட தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இருந்தபோதிலும் தடுப்பூசிகள் செலுத்தியவர்களுக்கு கரோனா பாதிப்பு குறைவாக இருப்பதும், இறப்புநேரிடுவதில்லை என்பதும் ஆதாரப்பூர்வ–மாக உறுதிசெய்யப்பட்டுள்ளது.

**இந்தியாவில் தடுப்பூசிகள்...**

**கோவிஷீல்ட்:** பிரிட்டனின் ஆக்ஸ்போர்ட் மற்றும் ஆஸ்ட்ரா ஜெனிகா நிறுவனத்தால் கண்டறியப்பட்டது கோவிஷீல்ட் தடுப்பூசி. இந்தியாவில் மகாராஷ்டிர மாநிலம் புணேவில் உள்ள சீரம் நிறுவனத்தில் உள்நாட்டுத் தேவைக்காக அவை உற்பத்தி செய்யப்படுகின்றன. மாதந்தோறும் 6 கோடி தடுப்பூசிகள் அங்கு தயாரிக்கப்படுகின்றன.

சிம்பன்ஸியிலிருந்து பெறப்பட்ட வீரியம் குறைக்கப்பட்ட தீநுண்மியை (அடினோ வைரஸ்) மரபணுரீதியாக சில மாற்றங்கள் செய்து அதனை மனித உடலுக்குள் செலுத்தும் நுட்பத்தில் உருவாக்கப்பட்டது கோவி ஷீல்ட் தடுப்பூசி. முதல் தடுப்பூசிக்கும் இரண்டாவது தடுப்பூசிக்கும் இடையேயான கால இடைவெளி 12 வாரங்கள்.

**கோவேக்ஸின்:** தெலங்கானா மாநிலம், ஹைதராபாதில் உள்ள பாரத் பயோடெக் நிறுவனத்தின் மூலம் இத்தடுப்பூசிகள் தயாரிக்கப்படுகின்றன. செயலிழந்த கரோனா தீநுண்மியை மருத்துவ நுட்பத்தில் உரிய மாற்றங்கள் செய்து உடலில் செலுத்தும் வகையில் இந்த தடுப்பூசி தயாரிக்கப்படுகிறது. முதல் தடுப்பூசிக்கும் இரண்டாவது தடுப்பூசிக்குமான கால இடைவெளி 4 வாரங்கள்.

**ஸ்புட்னிக் வி:** ரஷியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இந்த வகை தடுப்பூசியும் அடினோ வைரஸ் தொழில்நுட்பத்திலானவைதான். இந்தியாவைப் பொருத்தவரை ஹைதராபாதில் உள்ள டாக்டர் ரெட்டிஸ் ஆய்வகத்தில் இத்தடுப்பூசிகளை உற்பத்தி செய்ய அவசரகால அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உள்நாட்டில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் அத்தடுப்பூசிகள் இருப்பில் இருந்தாலும் அவற்றின் பயன்பாடு இன்னமும் பரவலாக்கப்படவில்லை.

**ஏன் தேவை தடுப்பூசி?** பொதுவாக மனித உடலுக்குள் எந்த வகை கிருமி நுழைந்தாலும், அதனை விரட்டக்கூடிய எதிர்ப்புசக்தி தானாக உருவாகு–ம். அதுபோலத்தான் கரோனாவுக்கு எதிரான எதிர்ப்பாற்றலும் உருவா–கின்றன. பொதுவாக எவருக்கும் வாழ்நாள் முழுவதும் நிரந்தரமாக எதி–ர்ப்பாற்றல் உடலில் இருந்துகொண்டே இருப்பதில்லை. குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு அது மறைந்துவிடும்.

அதேவேளையில், உடலில் உள்ள பி–செல்கள் மற்றும் டி–செல்கள் அந்த எதிர்பாற்றலை நினைவில் வைத்திருக்கும். மீண்டும் அத்தகைய தீ நுண்மி உடலுக்குள் நுழைந்தால் உடனடியாக அவை செயல்பட்டு எதிர்–ப்பாற்றலை உருவாக்கிவிடும். அவ்வகையில் தடுப்பூசிகள் செலுத்துவத–ன்மூலம் நோய் பாதிப்பின்றி உடலில் எதிர்ப்பாற்றல் உருவாகிவிடும். அதன்பின்னர் தீநுண்மி தாக்கினாலும்கூட எதிர்ப்பாற்றல் தூண்டப்பட்டு நோய்வராமல் காக்கும்.

**எப்போது எதிர்ப்பாற்றல் உருவாகும்?** பொதுவாக இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்திய 3 வாரங்களுக்குப்பிறகு உடலில் நோய் எதிர்ப்பாற்ற–ல் உருவாகும். கரோனாவுக்கு எதிரான எதிர்ப்பாற்றல் உருவாகியுள்ள–தா என்பதை IGG என்ற இரத்தப்பரிசோதனைமூலம் கண்டறியலாம். ஒரு மில்லி ரத்தத்தில் எத்தனை ஆர்ப்பிட்டரி யூனிட்ஸ் (AU) எனப்படும் எதிர்ப்பாற்றல் உள்ளது என்பதை அதில் அறியலாம்.

**தடுப்பூசிக்குப் பிறகும் அவசியம் தேவை**

முகக்கவசம், கைகள் தூய்மை, தனி நபர் இடைவெளி, ஊட்டச்சத்துமிக்க உணவுகள், குறைந்தது 7 மநேர தூக்கம் உடற்பயிற்சி மற்றும் மூச்சுப் பயிற்சி, இரத்த சர்க்கரை மற்றும் இரத்த அழுத்தக்கட்டுப்பாடு மற்றும் மது, புகைப்பழக்கங்கள் இல்லாமை.

**எவருக்கெல்லாம் தடுப்பூசி கூடாது?** கரோனா சிகிச்சையிலிருப்போர், கரோனா அறிகுறிகள் காணப்படுவோர், பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணிகள், தடுப்பூசியால் கடுமையான ஒவ்வாமைக்குள்ளாவோர் மற்றும் குழந்தைகள்.

**தடுப்பூசிகள் செயல்திறன்**

1) கோவிஷீல்ட் – 70 சதவீதம்.

2) கோவேக்ஸின் – 81 சதவீதம்.

3) ஸ்புட்னிக் வி – 90 சதவீதம்.

---

**10. அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையத்தில் பயின்றால் போதும் ஓட்டுநர் உரிமம் பெறலாம்: ஜூலை 1 முதல் புதிய விதி அமல்**

ஜூலை.1 முதல் ஓட்டுநர் உரிமம்பெற அங்கீகாரம் பெற்ற ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளில் முறையாகப் பயிற்சியை முடித்தாலே போதுமானது என மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்தப்புதிய விதிமுறை வரும் ஜூலை.1ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் எனத்தெரிகிறது.

புதிய விதிமுறையால், சிறப்புப்பயிற்சி பெற்ற ஓட்டுநர்கள் கிடைப்பார்கள் இதனால் சாலை விபத்துகள் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மோட்டார் வாகன திருத்தச் சட்டம், 2019'இன் 8ஆம் பிரிவின்படி ஓட்டுநர் பயிற்சிப்பள்ளிகளின் அங்கீகார விதிகளை மாற்ற முடியும். அதன்படியே இந்தப் புதிய விதிமுறைகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.

**மத்திய அரசின் இந்தப்புதிய விதிமுறையின்படி அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையங்களின் முக்கிய அம்சங்கள் என்னென்ன?**

1. இத்தகைய மையங்களில் பயிற்சியாளார்களுக்கு உயர்தர பயிற்சி அளிக்கும் வகையில் பிரத்யேக ஓடுதளங்கள் இருக்கும். இதனால், சிறப்பான பயிற்சி உறுதிசெய்யப்படும்.

2. இந்த மையங்கள் மூலம் மோட்டார் வானச் சட்டம் 1988ன் படி, ஒரு வாடிக்கையாளர் தனது வண்டி ஓட்டும் திறனை புதுப்பித்துக் கொள்ளும் வகையிலும் பயிற்சிகளை வடிமைக்கலாம்.

3. இத்தகைய அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையங்களில் பயிற்சி பெறுபவர்கள் RTO அலுவலகத்தில் உரிமம் வழங்கப்படும்போது நடத்தப்–படும் தேர்வுகளில் பங்கேற்கத் தேவையில்லை. இதனால், பயிற்சி முடிந்தவுடனேயே வாகன ஓட்டிகளுக்கு உரிமம் கிடைத்துவிடும்.

4. அதேபோல் இந்த மையங்களில் தொழிற்சாலைகளுக்கான வாகனங்–களை இயக்கும் வகையிலும் பிரத்யேக பயிற்சியளிக்கப்படும். இதனால், பிரத்யேக, சிறப்பு வாகனங்களை இயக்குவோரின் பற்றாக்குறை தீரும். இதனால், சாலை விபத்துகள் தவிர்க்கப்படும்.

---

**11. இந்திய கடலோரக் காவல்படை புதிய ஐ.ஜி. பொறுப்பேற்பு**

இந்திய கடலோரக் காவல்படையின் கிழக்கு பிராந்திய புதிய IGஆக ஆனந்த் பிரகாஷ் படோலா பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதற்கு முன்பு IGஆக இருந்த எஸ் பரமேஷ், இந்திய கடலோரக் காவல் படையின் மேற்கு பிராந்திய கமாண்டராக மாற்றப்பட்டார். புதிதாக பொறுப்பேற்றுள்ள ஆனந்த் பிரகாஷ், இந்திய கடலோரக் காவல் படை பணியில் 1990'இல் சேர்ந்தார். உத்தரகண்ட் மாநிலத்தைச் சேர்ந்த ஆனந்த் பிரகாஷ், கடலோரக்காவல்படையில் சிறப்பாக பணியாற்றியதற்–காக, குடியரசுத்தலைவரின் தட்ரக்ஷக் விருதை பெற்றார். இத்தகவலை பாதுகாப்புத் துறை பத்திரிகை அலுவலகம் தெரிவித்துள்ளது.

---

**12. மருத்துவ கல்வி சேர்க்கை 51% அதிகரிப்பு: பொறியியல் சேர்க்கை 13% சரிந்தது**

இந்தியாவில் கடந்த 5 ஆண்டுகளில் மருத்துவக் கல்வி சேர்க்கை 51% அதிகரித்துள்ளது. இதே காலகட்டத்தில் பொறியியல் கல்விச்சேர்க்கை 13.4% சரிந்திருக்கிறது என மத்திய கல்வி அமைச்சக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய கல்வி அமைச்சகத்தின்கீழ் செயல்படும் அகில இந்திய உயர்கல்வி ஆய்வுப்பிரிவு, நாடு முழுவதும் செயல்படும் உயர்கல்வி நிறுவனங்கள் குறித்து ஆய்வுசெய்து ஆண்டுதோறும் அறிக்கை வெளியிட்டுவருகிறது. அதன்படி 2019–20 ஆண்டுக்கான ஆய் –வறிக்கை வெளியிடப்பட்டது. அதில் கூறியிருப்பதாவது:

நாடு முழுவதும் 1,043 பல்கலைக்கழகங்கள், 42,434 கல்லூரிகள், 11,779 சுயநிதி கல்வி நிறுவனங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. கடந்த 2019–20 கல்வியாண்டில் 3.85 கோடிபேர் உயர்கல்வியில் சேர்ந்துள்ள –னர். இதில் 1.96 கோடிபேர் மாணவர்கள், 1.89 கோடிபேர் மாணவிகள்.

**உத்தர பிரதேசம் முதலிடம்**

உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் உத்தர பிரதேசம் முதலிடத்தில் உள்ளது. மகாராஷ்டிரா 2ஆவது இடத்திலும் தமிழ்நாடு 3ஆவது இடத்தி –லும் உள்ளன. ராஜஸ்தான், கர்நாடகம், மத்திய பிரதேச மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன. நாடு முழுவதும் உயர்கல்வி நிறுவனங்களில் 15,03,156 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். இதில் 57.5 சதவீதம் பேர் ஆண்கள். 42.5 சதவீதம் பேர் பெண்களாவர்.

நாட்டின் உயர்கல்விநிறுவனங்களில் 78.6% நிறுவனங்கள் தனியாரை சேர்ந்தவை அதிகபட்சமாக ஆந்திராவில் 81%, தெலங்கானாவில் 80%, உத்தர பிரதேசத்தில் 78.5%, தமிழ்நாட்டில் 77.6 சதவீத தனியார் கல்வி நிறுவனங்கள் செயல்படுகின்றன.

கடந்த 5 ஆண்டுகளில் மருத்துவக்கல்வி மாணவர் சேர்க்கை 51.1% அதிகரித்திருக்கிறது. இதே காலகட்டத்தில் பொறியியல் கல்வி மாணவர் சேர்க்கை 13.4% சரிந்திருக்கிறது.

**1. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பண்டிட் தீனதயாள் ஆற்றல் பல்கலைக்கழகம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) மகாராஷ்டிரா

**ஆ) குஜராத் ☑**

இ) உத்தர பிரதேசம்

ஈ) கர்நாடகா

✓ குஜராத் மாநில அரசானது மாநிலத்தின் ஏழு தனியார் பல்கலைக்கழகங்களுக்கு சிறப்பு அந்தஸ்தை வழங்க முடிவுசெய்துள்ளது. நிர்மா பல்கலைக்கழகம், CEPT பல்கலைக்கழகம், பண்டிட் தீனதயாள் ஆற்றல் பல்கலைக்கழகம், DAIICT, ஆமதாபாத் பல்கலைக்கழகம், சரோட்டர் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் மார்வாடி பல்கலைக்கழகம் உள்ளிட்ட ஏழு பல்கலைக்கழகங்களுக்கு சிறப்பு அந்தஸ்தை வழங்க குஜராத் மாநில முதலமைச்சர் விஜய் ரூபானி கொள்கை அடிப்படையில் ஒப்புதல் அளித்தார்.

---

**2. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'Canadarm2' என்றால் என்ன?**



அ) COVID தடுப்பு மருந்து

ஆ) உள்நாட்டு வான் போக்குவரத்து திட்டம்

**இ) பன்னாட்டு விண்வெளி நிலையத்தின் எந்திரக்கை ☑**

ஈ) கஞ்சா ஒழிப்புத் திட்டம்

✓ சமீபத்தில், 'Canadarm2' என அழைக்கப்படும் ISS'இன் எந்திரக்கையின் ஒருபகுதியை விண்வெளி குப்பைகள் தாக்கி சேதப்படுத்தின. கையின் செயல்பாடுகள், சேதத்தால் பாதிக்கப்படாது என்பதை வானியலாளர்கள் உறுதிப்படுத்தினர். விண்வெளி நிலைய தொலைநிலை கையாளுதல் அமைப்பான 'Canadarm2', நிலையத்திற்கு வெளியே பொருட்களை நகர்த்தவும், நிலையத்தில் பணிகளை சரிசெய்யவும் பயன்படுகிறது.

---

**3.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'செஞ்சுற்றுலா' என்பதுடன் தொடர்புடைய நாடு எது?**



அ) இந்தோனேசியா

ஆ) இந்தியா

**இ) சீனா ☑**

ஈ) இலங்கை

✓ கம்யூனிஸ்ட் கட்சிசார்ந்த வரலாற்று மற்றும் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை மேம்படுத்துவதற்காக, சீனா, 2004ஆம் ஆண்டில் 'செஞ்சுற்றுலா'வை அறிமுகப்படுத்தியது. இது நாட்டில் சுற்றுலாவோடு இணைந்து உள்ளூர் வணிகங்களை மேம்படுத்துவதையும் நோக்கமாகக்கொண்டது. அண்மையில், 'செஞ்சுற்றுலா'வின்கீழ் உள்ள இடங்கள் அதிக எண்ணிக்கையிலான பயணிகளுடன் சாதனைபடைத்தது.

✓ 1921ஆம் ஆண்டில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் தேசிய காங்கிரஸ் நடைபெற்ற நன்ஹூ ஏரி மற்றும் மாவோ சேதுங்கின் பிறப்பிடமான ஷோஷன் ஆகியவை அடங்கும்.

---

**4. அண்மையில் 7 மநேர விண்வெளி நடைபயணத்தை நிகழ்த்திய ஒலெக் நோவிட்ஸ்கி மற்றும் பியோட்ர் டுப்ரோவ் ஆகியோர் சார்ந்த நாடு எது?**



அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**ஆ) ரஷ்யா ☑**

இ) இஸ்ரேல்

ஈ) பிரான்ஸ்

✓ ஒலெக் நோவிட்ஸ்கி மற்றும் பியோட்ர் டுப்ரோவ் ஆகிய இரண்டு ரஷ்ய விண்வெளி வீரர்கள், பன்னாட்டு விண்வெளி நிலையத்திலிருந்து 7 மநேர விண்வெளியில் நடைபயணத்தில் ஒரு புதிய ரஷ்ய தொகுதிக்கு வந்து சேரந்தனர்.

✓ ஏப்ரலில் விண்வெளி நிலையத்திற்கு வந்த இவ்விரு விண்வெளி வீரர்களுக்கும் இது முதல் விண்வெளிப்பயணமாகும். புதிய நௌகா (அறிவியல்) பல்நோக்கு ஆய்வக தொகுதி வருவதற்கு முன்பு, பன்னாட்டு விண்வெளி நிலையத்திற்கு வெளியே பழைய மின்கலங்களை மாற்றுவது உள்ளிட்ட தொழில்நுட்ப பணிகளை அவர்கள் மேற்கொள்வர்.

---

**5. மதுரா மற்றும் பானஸ்கந்தா ஆகியவற்றை எந்தத் துறையில் ஏற்றுமதி மேம்பாட்டுக்கான தொகுதிகளாக APEDA இனங்கண்டுள்ளது?**

அ) ஜவுளி

**ஆ) பால் ☑**

இ) பருத்தி

ஈ) பழங்கள்

✓ வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டாணையமானது (APEDA) பால்பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்காக ஒரு ஏற்றுமதி ஊக்குவிப்பு மன்றத்தை அமைத்துள்ளது. இத்துறையிலுள்ள பல்வேறு சிக்கல்களுக்கு தீர்வுகாண்பதும் இதன் நோக்கமாகும். பால் வர்த்தகத்தை அபிவிருத்தி செய்வதற்காக உத்தர பிரதேச மாநிலத்தில் மதுரா மற்றும் குஜராத்தில் பானஸ்காந்தா ஆகிய இரண்டு தொகுதிகளுக்கு இந்த ஆணையம் அங்கீகரித்துள்ளது.

✓ இத்தொகுதிகளில் உள்ள உழவர்கள் மற்றும் சிறு பால் வணிகர்களுக்கு ஏற்றுமதியில் திறனை வளர்ப்பதற்கு பயிற்சியும் உதவியும் வழங்கப்படும்.

---

**6. CSIR-NCL ஆனது பின்வரும் எந்த மருத்துவ முறையைப் பயன்படுத்தி, தண்ணீரைக் கிருமிநீக்கம் செய்ய, 'SWASTIIK' என்ற தொழில்நுட்பத்தை உருவாக்கியது?**

அ) சித்த மருத்துவம்

**ஆ) ஆயுர்வேதம் ☑**

இ) ஹோமியோபதி

ஈ) சோவா-ரிக்பா

✓ புனேவில் உள்ள CSIR-தேசிய வேதியியல் ஆய்வகமானது (CSIR-NCL) இயற்கை எண்ணெய்களைப் பயன்படுத்தி தண்ணீரைக் கிருமிநீக்கம் செய்வதற்காக, 'SWASTIIK' என்ற தொழினுட்பத்தை உருவாக்கியுள்ளது.

✓ அறிவியல் & தொழில்நுட்பத் துறையின் தொழில்நுட்ப முன்முயற்சியின் ஆதரவுடன், இத்தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது.

✓ அழுத்தக்குறைப்பின் (குழிவுறுதல்) மூலமாக ஒரு திரவத்தை கொதிக்கச் செய்து, பின்னர் கிருமிநீக்கம் செய்வதற்கு, நுண்ணுயிர்க்கொல்லி பண்புகளைக் கொண்ட இயற்கை எண்ணெய்களை இது பயன்படுத்துகிறது.

---

**7. நிலையாக வளர்ச்சியுறும் அமைப்பு (Standard Developing Organization) என அறிவிக்கப்பட்ட இந்தியாவின் முதல் நிறுவனம் எது?**

**அ) RDSO ☑**

ஆ) IRCTC

இ) DRDO

ஈ) RITES

✓ இந்திய இரயில்வேயின்கீழ் செயல்படும் ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தரநிலைகள் அமைப்பானது (RDSO) சமீபத்தில் நிலையாக வளர்ச்சியுறும் அமைப்பு என அறிவிக்கப்பட்ட நாட்டின் முதல் நிறுவனமாக மாறியுள்ளது. அரசாங்கத்தின் "ஒரு நாடு ஒரு தரம்" என்ற இலக்கை அடைவதற்காக, 'SDOஐ அங்கீகரித்தல்' என்ற திட்டத்தை இந்திய தரநிர்ணய அமைப்பு (BIS) அறிமுகப்படுத்தியது.

---

**8.PMGKP'இல் உள்ள புதிய முறையின்படி, காப்பீட்டு நிறுவனங்கள் ____சான்றிதழின் அடிப்படையில் இழப்பீடுகளுக்கு ஒப்புதலளித்து தீர்வு காணலாம்.**

அ) உள்துறை அமைச்சகம்

**ஆ) மாவட்ட ஆட்சியர் ☑**

இ) தலைமைப் பதிவாளர்

ஈ) மாவட்ட நீதிமன்றம்

✓ COVID-19 தொற்றுடன் போராடும் சுகாதார ஊழியர்களுக்கான பிரதமர் கரீப் கல்யாண் தொகுப்பு (PMGKP) காப்பீட்டு திட்டம், அனைத்து சுகாதார ஊழியர்களுக்கும் ₹50 லட்சம் என்ற காப்பீடு வரம்புடன் தொடங்கப்பட்ட

திட்டமாகும். சமீபத்தில், இழப்பீடு கோருவோரை அங்கீகரிப்பதற்கான புதிய அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இழப்பீடுகோரல் திட்டத்தின் நடைமுறைக்கு இணங்க மாவட்ட ஆட்சியர் சான்றளிப்பார்.

- ✓ மேலும் இந்தச் சான்றிதழின் அடிப்படையில், காப்பீட்டு நிறுவனம், 48 மணி நேரத்திற்குள்ளாக இழப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்து தீர்வு காணும்.

---

**9.பன்னாட்டு நைட்ரஜன் முன்முயற்சி – 2021'ஐ நடத்திய நாடு எது?**

அ) பிரான்ஸ்

ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**இ) ஜெர்மனி ☑**

ஈ) ஆஸ்திரேலியா

- ✓ பன்னாட்டு நைட்ரஜன் முன்முயற்சியை ஜெர்மனியின் பெடரல் சுற்றுச்சூழல் முகமை (Umweltbundesamt–UBA) நடத்தியுள்ளது. ஐநா அவையின் நீடித்த வளர்ச்சி இலக்குகள், மூன்றாண்டுக்கு ஒருமுறை நடக்கும் எட்டாவது பன்னாட்டு நைட்ரஜன் முன்முயற்சி மாநாட்டின் முக்கிய கருப்பொருளாக இருந்தது. இது, 2021 மே.31 முதல் ஜூன்.3 வரை மெய்நிகர் முறையில் நடைபெற்றது.

---

**10.நடுவணரசால் மாநிலங்களவைக்கு பரிந்துரைக்கப்பட்ட மகேஷ் ஜெத்மலானியின் தொழில் என்ன?**

அ) மருத்துவர்

**ஆ) வழக்குரைஞர் ☑**

இ) அறிவியலாளர்

ஈ) வங்கியாளர்



- ✓ புகழ்பெற்ற வழக்குரைஞரான மகேஷ் ஜெத்மலானி, சமீபத்தில், நடுவண் அரசால் மாநிலங்களவைக்கு பரிந்துரைக்கப்பட்டார். மேலும், முன்னாள் பத்திரிகையாளர் சுவபன் தாஸ்குப்தாவும் மாநிலங்களவைக்கு பரிந்து–ரைக்கப்பட்டுள்ளார். ரகுநாத் மோகபத்ராவின் மறைவின் காரணமாக ஏற்பட்ட காலியிடங்களை நிரப்பும் பொருட்டு மகேஷ் ஜெத்மலானி மாநில–ங்களவைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இஸ்ரேல் புதிய பிரதமராக பென்னட் பதவியேற்பு: நெதன்யாகு ஆட்சி முடிவுக்கு வந்தது**

இஸ்ரேலின் புதிய பிரதமராக நப்தாலி பென்னட் பதவியேற்றுக்கொண்–டார். 2009ஆம் ஆண்டிலிருந்து இஸ்ரேலின் பிரதமராக பெஞ்சமின் நெதன்யாகு பதவிவகித்தார். பெஞ்சமின் நெதன்யாகு மீது ஊழல், மோசடி மற்றும் நம்பிக்கை மோசடி புகார்கள் கடந்த சில ஆண்டுகளாக எழுந்து வந்தன. அங்கு இரண்டு ஆண்டுகளாக 4 முறை நாடாளுமன்ற தேர்தல் நடந்தும் எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை.

கடந்த மார்ச் மாதம் 23ஆம் தேதி நடந்த தேர்தலில், மொத்தம் உள்ள 120 இடங்களில் பெஞ்சமின் நெதன்யாகு கட்சி 54 இடங்களைப் பிடித்தது. தனிப்பெரும் கட்சியாக வந்தபோதும் அவரால் கூட்டணி அரசு அமைக்க முடியவில்லை. இதனால் இழுபறி நிலைமை நீடித்தது. அங்கு எட்டு எதிர்–க்கட்சிகள் ஒன்றாக சேர்ந்து கூட்டணி அமைத்தன. இஸ்ரேலில் அரபு கட்சி தலைமையில் எட்டு அரசியல் கட்சிகள் கூட்டாக இணைந்து நெதன்யாகுவின் ஆட்சிக்குத் தற்போது முற்றுப்புள்ளி வைத்துள்ளன.

இக்கூட்டணிக்கட்சிகள் சுழற்சி முறையில் பிரதமர் பதவியைப் பகிர்ந்து கொள்ளவுள்ளன. இதன்படி வலதுசாரி கட்சியான யாமினா கட்சியின் தலைவர் நப்தாலி பென்னட் பிரதமராகப் பதவியேற்பார் என்றும் அறிவிக்–கப்பட்டது. இதன்மூலம் பெஞ்சமின் நெதன்யாகுவின் 12 ஆண்டுகால ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. இதனைத்தொடர்ந்து இஸ்ரேல் நாடாளும–ன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் யமினா கட்சி தலைவர் நப்தாலி பெனட் வெற்றிபெற்றார். இதையடுத்து, இஸ்ரேலின் புதிய பிரதமராக நப்தாலி பென்னட் பதவியேற்றுக்கொண்டார்.

***இஸ்ரேல்: சில தகவல்கள்***

**தலைநகரம்:** ஜெருசலம்

**அலுவல் மொழி:** ஹீப்ரு

**நாணயம்:** இஸ்ரேலிய சேக்கல்

**2. பிரெஞ்சு ஓப்பன்: ஜோகோவிச் சாம்பியன்**

பிரெஞ்சு ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரில் செர்பியாவின் ஜோகோவிச் சாம்பியன் பட்டம் வென்றார். பிரெஞ்சு ஓப்பன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் பாரீஸ் நகரத்தில் நடைபெற்றது. இதில் உலகின் முதல் நிலை வீரர் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஐந்தாம் நிலை வீரரான கிரீஸ் நாட்டைச் சிட்ஸிபாஸை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் 6–7, 2–6, 6–3, 6–2, 6–4 என்ற செட் கணக்கில் சிட்ஸிபாஸை வீழ்த்தி வாகை சூடினார் ஜோகோவிச். இது ஜோகோவிச் வெல்லும் 19ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும். ரோஜர் பெடரர், ரஃபேல் நடால் தலா 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று முதலிடத்தில் உள்ளனர்.

---

**3. ஜூன்.14 – உலக குருதிக்கொடை நாள்**

**கருப்பொருள்:** Give Blood and Keep the World Beating.

---

**1.** சமீபசெய்திகளில் இடம்பெற்ற SATAT திட்டத்துடன் தொடர்புடைய துறை எது?

அ) கிராமப்புற மின்மயமாக்கல்

**ஆ) மலிவு விலை போக்குவரத்து ☑**

இ) LPG மானியம்

ஈ) MSME'இல் முதலீடு



✓ இந்தியாவில் எண்ணெய் துறை பொதுத்துறை நிறுவனங்கள், அதாவது இந்தியன் ஆயில், HPCL, BPCL, GAIL மற்றும் IGL ஆகியவை SATAT திட்டத்தை மேம்படுத்துவதற்கான ஓர் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளன.

✓ Sustainable Alternative Towards Affordable Transportation (கட்டுப்படியா–கக்கூடிய போக்குவரத்தை நோக்கிய நிலையான மாற்று) என்பதன் சுருக்கந்தான் SATAT. இது அழுத்தப்பட்ட உயிரிவாயு உற்பத்தி ஆலைக–ளை அமைத்து, சந்தையில் அழுத்தப்பட்ட உயிரிவாயு கிடைப்பை உறுதிசெய்வதற்காக 01.10.2018 அன்று தொடங்கப்பட்டது.

---

**2.** ஐநா அமைப்பால் உலக பெற்றோர் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

**அ) ஜூன்.01 ☑**

ஆ) ஜூன்.05

இ) ஜூன்.10

ஈ) ஜூன்.15




✓ ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.1 அன்று ஐக்கிய நாடுகள் அவையால் உலக பெற்றோர் நாள் அனுசரிக்கப்படுகிறது. இதுதொடர்பான தீர்மானம், ஐநா பொது அவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. முதன்முறையாக 2012ஆம் ஆண்டில் உலக பெற்றோர் நாள் அனுசரிக்கப்பட்டது. பெற்றோருத்துவத்–தையும் அதன் தன்னலமற்ற அர்ப்பணிப்பையும் கொண்டாட இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.

---

**3.** WHOஆல் ஒப்புதல் வழங்கப்பட்ட சினோவாக் என்ற COVID–19 தடுப்பூசியை உருவாக்கிய நாடு எது?

அ) இந்தோனேசியா

ஆ) இந்தியா

**இ) சீனா ☑**

ஈ) இலங்கை




✓ சீனாவின் சினோவாக் பயோடெக் லிமிடெட் உருவாக்கிய சினோவாக் தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பின் அவசரகால பயன்பாட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தடுப்பூசியை 18 வயது மற்றும் அதற்கு மேற்ப–ட்டவர்கள் பயன்படுத்த WHO பரிந்துரைத்துள்ளது. 2–4 வார இடைவெளியுடன் 2 டோஸ்களாக இத்தடுப்பூசியை எடுத்துக்கொள்ளலாம்.

---

**4.** ILO மதிப்பீடுகளின்படி, வரும் 2022ஆம் ஆண்டில் உலகளாவிய வேலையின்மை விகிதம் என்னவாக இருக்கும்?

அ) 1%

ஆ) 3%

**இ) 5.7% ☑**

ஈ) 10.4%



✓ உலகளாவிய வேலையின்மை விகிதமானது வரும் 2022ஆம் ஆண்டில், 5.7 சதவிகிதமாக இருக்கும் என பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு (ILO) மதிப்பிடப்பட்டுள்ளது. உலகெங்கிலும் கிட்டத்தட்ட 205 மில்லியன் பேர் பணியற்றோராக இருப்பார்கள் என ILO மதிப்பிட்டுள்ளது. இது, 2019ஆம் ஆண்டின் 187 மில்லியன் எண்ணிக்கையைவிட அதிகமாக உள்ளது. மேலும் 108 மில்லியன் பணியாளர்கள் ஏழைகள் அல்லது வறியவர்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளதாக ILO தெரிவித்துள்ளது.

---

**5.** WHO நிர்வாகக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள Dr பேட்ரிக் அமோத் சார்ந்த நாடு எது?

அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**ஆ) கென்யா ☑**

இ) நியூசிலாந்து

ஈ) பிரேஸில்



✓ இந்திய ஒன்றிய சுகாதார அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன், ஜூன்.02 அன்று உலக சுகாதார அமைப்பின் நிர்வாகக் குழுவின் தலைவராக தனது பதவிக்காலத்தை நிறைவுசெய்தார். உலக சுகாதார அமைப்பின் நிர்வாகக்குழுவின் 149ஆவது அமர்வின்போது, கென்யாவின் சுகாதார அமைச்சகத்தின் சுகாதார இயக்குநர் ஜெனரல் டாக்டர் பேட்ரிக் அமோத் நிர்வாகக் குழுவின் தலைவராக அறிவிக்கப்பட்டு நியமிக்கப்பட்டார்.

---

**6.** அதிக மகசூல் தரக்கூடிய விதைகளை, உழவர்களுக்கு விநியோ–கிக்கும் அரசாங்க திட்டத்தின் பெயரென்ன?

**அ) Seed Minikit Programme ☑**

ஆ) HYV Seeds Programme

இ) Seeds Distribution Programme

ஈ) Seeds to Farmers Programme



✓ மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர், விதை சிறு தொகுப்பு திட்டத்தை, உழவர்களுக்கு அதிக மகசூல் தரும் விதைகளின் தொகுப்பினை விநியோகித்து தொடங்கிவைத்தார். இது, உழவர்களுக்கு புதிய வகை விதைகளை அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. இந்த சிறு தொகுப்புகளை தேசிய விதை கழகம், NAFED மற்றும் குஜராத் மாநில விதை கழகம் வழங்குகின்றன.

✓ தேசிய உணவுப்பாதுகாப்பு திட்டத்தின்மூலம் ஒன்றிய அரசால் முழுமை–யாக இந்தத் திட்டத்திற்கு நிதியளிக்கப்படுகின்றது.

---

**7.** தேசிய மனிதவுரிமைகள் ஆணையத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**அ) அருண் மிஸ்ரா ☑**

ஆ) A K சிக்ரி

இ) மார்க்கண்டேய கட்ஜூ

ஈ) ரஞ்சன் கோகோய்



✓ தேசிய மனிதவுரிமைகள் ஆணையத்தின் புதிய தலைவராக முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர் அருண் மிஸ்ரா பொறுப்பேற்றார். 2019ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மனிதவுரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் திருத்தத்திற்குப் பின்னர், NHRC தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்ட முதல் இந்தியத் தலைமை நீதியரசரல்லாத ஒருவர் மிஸ்ரா ஆவார். முன்னாள் தலைவரான நீதியரசர் H L தட்டுவின் பதவிக்காலம் கடந்த டிசம்பருடன் நிறைவடைந்தது. இந்த ஆணையத்தில் மேலும் இரண்டு உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

---

**8.** NITI ஆயோக்கின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் (SDG) குறியீட்டில் முதலிடம் வகிக்கும் இந்திய மாநில அரசு எது?

அ) தமிழ்நாடு

**ஆ) கேரளா ☑**

இ) இராஜஸ்தான்

ஈ) அஸ்ஸாம்

✓ நடப்பாண்டில் (2021) வெளியிடப்பட்ட NITI ஆயோக்கின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் (SDG) குறியீட்டில் கேரளா முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டது. SDGகளில், 2019ஆம் ஆண்டில் 60ஆக இருந்த இந்தியாவின் ஒட்டுமொத்த மதிப்பெண், 2021ஆம் ஆண்டில் 66ஆக அதிகரித்துள்ளது.

✓ ஆண்டுதோறும் வெளியிடப்படுகிற இக்குறியீடு சமூகம், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் அளவுருக்களில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்கிறது. ஹிமாச்சல பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப்பிடித்தன. பீகார் மாநிலம், இக்குறியீட்டின் கடைசி இடத்தில் உள்ளது.

---

**9. சமீபத்தில், பெஞ்சியுன்–4B என்ற புதிய தலைமுறை வானிலை செயற்கைக்கோளை ஏவிய நாடு எது?**



அ) ஜப்பான்

**ஆ) சீனா ☑**

இ) இஸ்ரேல்

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

- ✓ அண்மையில் சீனா, பெஞ்சியுன்–4B (FY–4B) என்ற புதிய தலைமுறை வானிலை செயற்கைக்கோளை வெற்றிகரமாக அதன் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தியது. பெஞ்சியுன்–4B செயற்கைக்கோள், லாங் மார்ச் 3B என்ற ஏவுகணைமூலம் புவிசுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது.
- ✓ அது பெஞ்சியுன் செயற்கைக்கோள்களின் வலையமைப்பில் இணைந்த –து. பெஞ்சியுன் தொடரின் முதல், தாழ்நிலை புவிசுற்றுப்பாதை செயற் –கைக்கோள் சோதனை இயந்திரமான FY–1A, 1988'இல் ஏவப்பட்டது.

---

**10. ஐநா நீடித்த போக்குவரத்து மாநாடு–2021'ஐ நடத்துகிற நாடு எது?**

அ) இந்தியா

**ஆ) சீனா ☑**

இ) ஜப்பான்

ஈ) ஆஸ்திரேலியா

- ✓ ஐநா நீடித்த போக்குவரத்து மாநாடு – 2021 ஆனது அக்.14–16 வரை சீனாவின் பெய்ஜிங்கில் நடைபெறவுள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் காலநிலைமாற்றம் தொடர்பான பாரிஸ் ஒப்பந்தத்தை அடைய, நீடித்த போக்குவரத்தை ஊக்குவிப்பதே இம்மாநாட்டின் நோக்கமாகும்.
- ✓ மிதிவண்டிகளின் நீண்ட ஆயுள், பல்திசையியக்கத்திறம் மற்றும் சுற்றுச் சூழல் தோழமைத்தன்மையை அங்கீகரிப்பதற்காக, ஐநா பொது அவை ஆனது ஜூன்.3'ஐ உலக மிதிவண்டி நாளாக அறிவித்தது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பருவநிலை மாற்றம்: கடந்த 200 ஆண்டுகளில் இந்தியாவின் தாக்கம் 3 சதவீதம்தான்: பிரகாஷ் ஜாவடேகர்**

பருவநிலை மாற்றத்தில் இந்தியாவின் தாக்கம் 3 சதவீதம்தான் என்று மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் தெரிவித்தார். சுற்றுச்சூழல் குறித்து நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் காணொலி வழியாக அவர் பேசியதாவது: கடந்த 200 ஆண்டுகளில் பருவநிலை மாற்றம் அடைந்ததில் இந்தியாவின் பங்கு 3 சதவீதம்தான். பருவநிலை மாற்றத்தில் குறைந்த தாக்கத்தை ஏற்படுத்திய நாடுகளில் இந்தியாவும் ஒன்று என அவர் கூறினார்.

---

**2. இந்தியாவில் கண்டறியப்பட்டிருக்கும் புதிய 'டெல்டா–பிளஸ்' வகை கரோனா தீநுண்மி**

இந்தியாவில் முதலில் கண்டறியப்பட்டு வேகமாகப் பரவி வந்த டெல்டா (பி.1.617.2) வகை தீநுண்மி இப்போது டெல்டா–பிளஸ் (ஏஒய்.1) வகையாக உருமாற்றம் பெற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்தப் புதிய உருமாறிய வகை கரோனா தாக்கம் இப்போது குறைந்த அளவில் இருப்பதால், இதனால் இந்தியாவில் இப்போதைக்கு ஆபத்தில்லை என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இந்தியாவில் முதலில் கண்டறியப்பட்ட உருமாறிய கரோனா தீநுண்மிகளான கப்பா (பி.1.617.1) டெல்டா ஆகியவற்றின் பரவல் கடந்த ஏப்ரல், மே மாதங்களில் அதிகரித்து காணப்பட்டது. இதனால், நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் பாதிப்புக்கு உள்ளாகினர். குறிப்பாக, டெல்டாவகை உருமாறிய கரோனா தீநுண்மியின் பரவல் அதிக அளவில் காணப்பட்டது என்று மத்திய அரசு சார்பில் அமைக்கப்பட்ட 10 தேசிய ஆய்வகங்களை உள்ளடக்கிய ஆய்வுக் குழு தெரிவித்தது.

இந்த நிலையில், இந்த அதிக பரவல் வீரியம் கொண்ட டெல்டா வகை தீநுண்மி இப்போது டெல்டா–பிளஸ் வகையாக உருமாற்றம் பெற்றிருப்பது கண்டறியப்பட்டுள்லது. இதுகுறித்து சிஎஸ்ஐஆர் மரபியல் மற்றும் ஒருங்கிணைந்த உயிரியயல் ஆய்வு நிறுவன மருத்துவ அறிவியல் விஞ்ஞானி வினோத் ஸ்கேரியா தனது சுட்டுரைப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது–

டெல்டா வகை தீநுண்மியிலிருந்து புதிய உருமாறிய வகை உருவாகியி –ருக்கிறது. அது கே417என் உருமாறிய டெல்டா–பிளஸ் தீநுண்மி பி.1.617.2.1 அல்லது ஏஒய்.1 என வகைப்படுத்தப்பட்டுள்ளது. சார்ஸ்–கொவைட்2 ஸ்பைக் புரதத்தில் இடம்பெற்றிருக்கும் இந்த உருமாறிய தீநுண்மி, மனித உடலுக்குள் நுழைந்து திசுக்களை சேதப்படுத்துகின்ற –ன. இலண்டன் சுகாதாரத் துறை வெளியிட்ட அறிக்கையின்படி, இந்த டெல்டா–பிளஸ் வகை தீநுண்மி கடந்த ஜூன்.7–ஆம் தேதி வரையிலான நிலவரப்படி இந்தியாவில் அதிக அளவில் பரவவில்லை. பெரும்பாலும் ஐரோப்பா, ஆசியா மற்றும் அமெரிக்கா பகுதிகளிலேயே இந்த வகை உருமாற்றம் காணப்படுகிறது.

இந்த டெல்டா–பிளஸ் பாதிக்கப்பட்டவர்களுக்கு, இந்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பு அண்மையில் அவசரக்கால பயன்பாட்டுக்கு அனுமதியளித்த கேசிரிவிமாப் மற்றும் இம்டெவிமாப் ஆகிய மருந்துகள் நல்ல பலனளிக்கும் என்பதை மருத்துவ ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இந்த மருந்து ஒரு டோஸ் ₹59,750 என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

3. **ஜூன்.15 – முதியோர் கொடுமை விழிப்புணர்வு ஊட்டும் நாள்** (World Elder Abuse Awareness Day)

**கருப்பொருள்:** "Access to Justice".

---

**4. சேதி தெரியுமா?**

**ஜூன்.5:** கரோனா காரணமாக +2 பொதுத்தேர்வு ரத்து செய்யப்படுவதாக தமிழ்நாடு அரசு அறிவித்தது.

**ஜூன்.5:** உலகின் இரண்டாம் நிலை டென்னிஸ் வீராங்கனை யான ஜப்பானின் நவோமி ஒசாகா பிரெஞ்சு ஓபன் போட்டித் தொடரிலிருந்து மனநலப் பிரச்சனைகள் காரணமாக இடையிலேயே விலகினார்.

**ஜூன்.5:** தேசிய மனிதவுரிமைகள் ஆணையத்தின் தலைவராக ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி அருண் மிஸ்ரா பொறுப்பேற்றார்.

**ஜூன்.6:** ஆசிரியர் தகுதித்தேர்வின் (TET) சான்றிதழ் இனி வாழ்நாள் முழுவதும் செல்லும் என மத்திய கல்வி அமைச்சகம் அறிவித்தது.

**ஜூன்.6:** எட்டு அணிகள் பங்கேற்கும் ICC சாம்பியன்ஸ் டிராபி 2025 முதல் மீண்டும் தொடங்கும் என்றும் 50 ஓவர் உலகக் கோப்பையில் 14 அணிகளும், T20 உலகக்கோப்பையில் 20 அணிகளும் பங்கேற்கும் என்றும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் அறிவித்தது.

**ஜூன்.7:** நாவல் கரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான ரஷ்யாவின் ஸ்புட்னிக்–வி தடுப்பூசியைத் தயாரிக்க சீரம் நிறுவனத்துக்கு இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதி அளித்துள்ளது.

**ஜூன்.8:** தமிழ்நாடு இந்துசமய அறநிலையத்துறை அலுவலகக்கோப்புகள், கோவில் சொத்துகள் ஆகியவற்றை டிஜிட்டல் மயப்படுத்தும் பணிகள் தொடங்கின.

**ஜூன்.8:** மத்திய அரசு வெளியிட்ட எத்தனால் கொள்கையில், 2025ஆம் ஆண்டுக்குள் பெட்ரோலில் 20% எத்தனாலைக் கலந்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஜூன்.9:** எண்பது கோடி மக்களுக்கு நவம்பர் மாதம் வரை ரேஷன் கடைகளில் உணவு தானியம் இலவசமாக வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

---

**1.** நடப்பாண்டுக்கான (2021) புக்கர் பரிசை வென்றவர் யார்?

**அ) டேவிட் டியோப் ☑**

ஆ) டக்ளஸ் ஸ்டுவர்ட்

இ) மார்கரெட் அட்வுட்

ஈ) பெர்னார்டின் எவரிஸ்டோ



✓ நடப்பாண்டுக்கான (2021) விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதை அடுத்து, பன்னாட்டு புக்கர் பரிசை வென்ற முதல் பிரெஞ்சு எழுத்தாளர் என்ற பெருமையை டேவிட் டியோப் பெற்றுள்ளார். அவரது இரண்டாவது புதினமான 'அட்நைட் ஆல் பிளட் இஸ் பிளாக்'ஐ அமெரிக்க எழுத்தாளரும் கவிஞருமான அன்னா மோஸ்கோவாக்கிஸ் மொழிபெயர்த்தார்.

---

**2.** Experimental Advanced Superconducting Tokamak (EAST) என்ற அறிவியல் பரிசோதனையை மேற்கொள்ளும் நாடு எது?

அ) இந்தியா

ஆ) ஜப்பான்

இ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**ஈ) சீனா ☑**



✓ சீனாவின் Experimental Advanced Superconducting Tokamak (EAST) ஆனது அதன் சமீப சோதனையில் புதிய சாதனையை படைத்துள்ளது. இச்சோதனை, 101 விநாடிகளில் 216 மில்லியன் பாரன்ஹீட் பிளாஸ்மா வெப்பநிலையை அடைந்தது. "செயற்கை சூரியன்" திட்டத்தில் பணிபுரி-யும் அறிவியலாளர்கள், 20 விநாடிகளில் 288 மில்லியன் பாரன்ஹீட் வெப்பநிலையை அடைந்தனர். டோகாமாக் சாதனம் என்பது சூரியன் விண்மீன்களில் நிகழும் இயற்கையான அணுக்கரு இணைவு செயல் முறையை நகலாக்கம் செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

---

**3.** சுற்றுச்சூழல் மீட்டுருவாக்கம் தொடர்பான ஐநா தசாப்தமாக அறிவி-க்கப்பட்டுள்ள தசாப்தம் எது?

அ) 2001–2010

ஆ) 2011–2020

**இ) 2021–2030 ☑**

ஈ) 2031–2040

UNITED NATIONS DECADE ON ECOSYSTEM RESTORATION 2021-2030

✓ ஐநா சுற்றுச்சூழல் திட்டம் மற்றும் ஐநா'வின் உணவு மற்றும் வேளாண் அமைப்பால், சமீபத்தில், சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு தொடர்பான ஐநா தசாப்தமாக 2021–2030 அறிவிக்கப்பட்டது. இதன் தொடக்கத்தை குறிக்-கும் வகையில் '#GenerationRestoration: Ecosystem restoration for People, Nature and Climate' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையையும் அந்த நிறுவனங்கள் வெளியிட்டன. அடுத்த தசாப்தத்தில், குறைந்தது 1 பில்லியன் சீரழிந்த ஹெக்டேர் நிலத்தையாவது மீட்டுருவாக்கம் செய்ய, இந்த அறிக்கை, உலக நாடுகளை வலியுறுத்துகிறது.

---

**4.** 'நிரல்படுத்தக்கூடிய டிஜிட்டல் ஃபைபர்'ஐ அறிமுகப்படுத்திய பன்-னாட்டு நிறுவனம் எது?

**அ) MIT ☑**

ஆ) கூகிள்

இ) மைக்ரோசாப்ட்

ஈ) IBM



✓ மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தின் (MIT) ஆராய்ச்சியாளர்கள் முதன்முறையாக 'நிரல்படுத்தக்கூடிய டிஜிட்டல் ஃபைபர்' ஒன்றை உரு-வாக்கியுள்ளனர். இந்த டிஜிட்டல் ஃபைபர் உடலியல் செயல்பாடுகளை ஊகிப்பதற்காக நினைவகம், வெப்பநிலை உணரிகள் மற்றும் ஒரு நரம்-பணு வலையை நிரல் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

✓ நூற்றுக்கணக்கான சதுர சிலிக்கான் மைக்ரோஸ்கேல் டிஜிட்டல் சில்லு-களை ஒரு முன்னுரிவடிவில் வைப்பதன்மூலம் இது உருவாக்கப்படு-கிறது. அது பின்னர் பாலிமர் ஃபைபர் உருவாக்க பயன்படுகிறது.

---

**5.** அண்மையில் உருவாக்கப்பட்ட 'சிப்–ஆஃப் நுட்பத்தின்' முக்கிய நோக்கம் என்ன?

**அ) தரவு மீட்டெடுப்பு ☑**

ஆ) தங்கச்சுரங்கம்

இ) கிரிப்டோகரன்சி தேடல்

ஈ) உயிரி–எரிவாயு உற்பத்தி



✓ ஹைதராபாத்தின் மத்திய தடய அறிவியல் ஆய்வகத்தின் அறிவியலாளர்-கள் ஓர் உள்நாட்டு சிப்–ஆஃப் நுட்பத்தை உருவாக்கியுள்ளனர்.

✓ பூட்டப்பட்ட மற்றும் கடுமையாக சேதமடைந்த திறன்பேசிகளிலிருந்து மறைகுறியாக்கப்பட்ட தரவுகளை மீட்டெடுப்பதே இந்நுட்பத்தின் முக்கிய நோக்கமாகும். குற்றவாளிகளுக்கு எதிராக நம்பகமான ஆதாரங்களை உருவாக்க, இது புலனாய்வு அமைப்புகளுக்கு பயனளிக்கும்.

---

**6.** SAGE (Senior–care Aging Growth Engine) என்பது எந்த மத்திய அமைச்சகத்தின் முன்முயற்சியாகும்?

அ) பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

**ஆ) சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑**

இ) சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

ஈ) சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம்



✓ முதியோர்களுக்கான சேவைகளை அளிக்கும் SAGE (முதியோர் பராம-ரிப்பு வளர்ச்சி இயந்திரம்) இணையதளத்தை மத்திய சமூக நீதி மற்றும் மேம்பாட்டுத்துறை அமைச்சர் தவார்சந்த் கெலாட் தொடங்கிவைத்தார். இந்த SAGE இணையதளத்தில் முதியோர் பராமரிப்புக்கான அனைத்து பொருட்களையும் வாங்கமுடியும். மேலும், துளிர்நிறுவனங்கள் அளிக்கும் நம்பகமான சேவைகளையும் பெறமுடியும்.

---

**7.** எந்த நோயைக் குணப்படுத்துவதற்காக, நானோ–ஃபைபர் அடிப்-படையிலான மாத்திரைகளான 'AmB'ஐ, IIT–H உருவாக்கியுள்ளது?

**அ) கருங்காய்ச்சல் ☑**

ஆ) மலேரியா

இ) டெங்கு

ஈ) ஜப்பானிய மூளைக்காய்ச்சல்




✓ ஹைதராபாத் – இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் (IIT–H) ஆராய்ச்சி-யாளர்கள் ஆம்போடெரிசின் B'இன் நானோ ஃபைபர் அடிப்படையிலான வாய்வழி உட்கொள்ளும் மாத்திரைகளை உருவாக்கியுள்ளனர்.

✓ கருங்காய்ச்சலை குணப்படுத்துவதற்காக, ஆம்போடெரிசின் – B'இன் நானோ ஃபைப்ரஸ் அடிப்படையிலான வாய்வழி உட்கொள்ளும் மாத்தி-ரைகளை உருவாக்குவதற்கான முதல்முயற்சி இதுவாகும். கருங்காய்ச்-சலுக்கான சிகிச்சை தற்போது கருப்புப் பூஞ்சைக்கான சிகிச்சையாகப் பயன்படுத்தப்படுவதால், COVID–19 சிகிச்சைக்குப் பின்னான பூஞ்சை தொற்றுநோய்களுக்கு சிகிச்சையளிக்க இது பயன்படுத்தப்படலாம்.

---

**8.** 2021 ஜூனில் நடைபெற்ற ரிசர்வ் வங்கியின் பணவியல் கொள்-கைக்குழு கூட்டத்திற்குப் பிறகு, ரெப்போ விகிதம் _______ என நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

அ) 3.75 %

**ஆ) 4.00 % ☑**

இ) 4.25 %

ஈ) 4.50 %

4.00 %

✓ ஆளுநர் சக்திகாந்த தாஸ் தலைமையிலான இந்திய ரிசர்வ் வங்கியின் ஆறு உறுப்பினர்களைக்கொண்ட பணவியல் கொள்கைக்குழு, முக்கிய வட்டி விகிதத்தை மாற்றாமல் வைத்திருந்தது. ரெப்போ விகிதம் 4.00% ஆகவும், தலைகீழ் ரெப்போ விகிதம் 3.35% ஆகவும் தொடரும்.

✓ இதன்மூலம், ரெப்போ விகிதம் தொடர்ந்து ஆறாவது முறையாக மாறாமல் உள்ளது. கொரோனா வைரஸால் ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற தன்மை & பணவீக்கம்குறித்த அச்சங்களுக்கிடையில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

---

**9. உலக நீடித்த வளர்ச்சி உச்சிமாநாட்டை நடத்துகிற நிறுவனம் எது?**

அ) IEA

ஆ) உலக வங்கி

**இ) TERI ☑**

ஈ) NITI ஆயோக்

✓ உலக நீடித்த வளர்ச்சி உச்சிமாநாடு என்பது எரிசக்தி மற்றும் வள நிறுவனத்தின் ஆண்டுதோறும் நடத்தப்படும் ஒரு முதன்மை நிகழ்வாகும்.

✓ "Redefining Our Common Future: Safe and Secure Environment for All" என்ற கருப்பொருளின்கீழ் நடைபெறுகிறது. உலக சுற்றுச்சூழல் நாளை முன்னிட்டு சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர், இவ்வுச்சிமாநாட்டில் உரையாற்றினார்.

---

**10. உணவுப்பொருட்களின் பன்னாட்டு விலைகளைக் கண்டறிவதற்காக, உணவு விலைக்குறியீட்டை வெளியிடுகிற அமைப்பு எது?**

**அ) உணவு மற்றும் உழவு அமைப்பு ☑**

ஆ) உலக வங்கி

இ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஈ) பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு

✓ ஐநா – உணவு மற்றும் உழவு அமைப்பின் (FAO) உணவு விலைக்குறியீடு என்பது தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பால் பொருட்கள், இறைச்சி மற்றும் சர்க்கரை உள்ளிட்ட உணவுப் பொருட்களின் பன்னாட்டு விலையில் மாதந்தோறும் ஏற்படுகிற மாற்றத்தை அளவிடும் ஒரு நடவடிக்கையாகும். சமீப குறியீட்டின்படி, மே மாதத்திய உணவு விலை ஏப்ரல் மாதத்தைவிட 4.8% அதிகமாக இருந்தது. இது 2010 அக்டோபர் மாதத்திற்குப்பிறகு நிகழும் அதிகப்படியான மாதாந்திர விலை உயர்வாகும். இந்த விலைகள், 2020 மே மாதத்தைவிட 39.7% அதிகமாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தொழிற்படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களின் சேர்க்கை நிலை: ஆராய நீதிபதி முருகேசன் தலைமையில் ஆணையம்**

தொழிற்கல்விப் படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களின் சேர்க்கை அளவினை ஆராய்ந்து, பரிந்துரை செய்ய ஓய்வுபெற்ற நீதிபதி முருகேசன் தலைமையில் அமைக்கப்பட்ட ஆணையத்தின் ஆலோசனைக்கூட்டம் தொடங்கியது.

---

**2. காப்பீட்டுத் துறையில் 74% அந்நிய நேரடி முதலீடு: டிபிஐஐடி அறிவிப்பு**

காப்பீட்டுத் துறையில் அரசின் முன்னனுமதியின்றி 74% அந்நிய நேரடி முதலீடு பெறுவது தொடர்பான அறிவிக்கையை மத்திய தொழிலக மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத்துறை முறையாக வெளியிட்டுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டு உச்சவரம்பை 26 சதவீதத்திலிருந்து 49 சதவீதமாக மத்திய அரசு அதிகரித்தது. இந்நிலையில் அந்தத் துறையில் அரசின் முன்னனுமதியின்றி 74% அந்நிய நேரடி முதலீட்டை பெறுவதற்கு வழிவகை செய்ய மத்திய அரசு முடிவுசெய்தது. அதுதொடர்பான காப்பீட்டுச் சட்டத்திருத்த மசோதா– 2021 கடந்த மார்ச் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. அந்த மசோதா நிறைவேறியதன்மூலம் 23 தனியார் காப்பீட்டு நிறுவனங்கள், 21 ஆயுள் காப்பீடு அல்லாத இதர தனியார் காப்பீட்டு நிறுவனங்கள், 7 தனியார் சிறப்பு மருத்துவக்காப்பீட்டு நிறுவனங்கள் பலனடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் அந்நிய நேரடி முதலீட்டு உச்சவரம்பு அதிகரிப்பு குறித்து மத்திய தொழிலக மற்றும் உள்நாட்டு வா்த்தக மேம்பாட்டுத் துறை முறையாக அறிவிக்கை வெளியிட்டுள்ளது. இதுதொடர்பாக அந்தத் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில், காப்பீட்டுத் துறையில் 74% அந்நிய நேரடி முதலீட்டை அனுமதித்து மத்திய அரசு மேற்கொண்டிருக்கும் முடிவு அந்நிய செலாவணி மேலாண்மை சட்ட அறிவிக்கை வெளியிடப்பட்ட தேதியில் இருந்து அமலுக்கு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. 'விவாடெக்' தொழில்நுட்ப மாநாடு**

ஐரோப்பிய நாடுகளின் மிகப்பெரிய டிஜிட்டல், புதுமை கண்டுபிடிப்புகளுக்கான அறிவியல் தொழில்நுட்ப மாநாடு, 'விவாடெக்' என்ற பெயரில் பிரான்ஸ் தலைநகரம் பாரீஸில் கடந்த 2016ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்பட்டு வருகிறது. ஐந்தாவது மாநாடு, ஜூன் 16–19 வரை நடைபெறவுள்ளது.

---

**1.** ICAR – இந்திய நறுமணப்பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனமானது எந்தத் தாவரத்தின் நுண்ணூட்டச்சத்து இலைசார் உருவாக்கத்திற்கான காப்புரிமையைப் பெற்றுள்ளது?



**அ) கருமிளகு ☑**

ஆ) வெண்மிளகு

இ) மஞ்சள்

ஈ) ஏலக்காய்

✓ இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின்கீழ் (ICAR) இயங்கும் இந்திய நறுமணப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனம் கருமிளகு நுண்ணூட்டச்சத்து இலைசார் உருவாக்கத்திற்கான காப்புரிமையைப் பெற்றுள்ளது.

✓ ICAR–IISR ஆனது நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளை கையாளுவதற்காக முக்கிய நறுமணப் பொருட்களுக்கு (கருமிளகு, இஞ்சி, மஞ்சள் & ஏலக்காய்) நுண்ணூட்டச்சத்து இலைசார் சூத்திரங்களை உருவாக்கியுள்ளது.

---

**2.** 3 புதிய குகைகள் கண்டுபிடிக்கப்பட்ட திரிராஷ்மி பௌத்த குகை வளாகம் அமைந்துள்ள மாநிலம் எது?



அ) தமிழ்நாடு

**ஆ) மகாராஷ்டிரா ☑**

இ) பீகார்

ஈ) ஒடிஸா

✓ மகாராஷ்டிராவின் நாசிக் அருகே அமைந்துள்ள திரிராஷ்மி பௌத்த குகை வளாகத்தில் 3 புதிய குகைகளை இந்திய தொல்பொருள் ஆய்வு நிறுவனம் கண்டறிந்துள்ளது. இந்தக் குகை வளாகம் பாண்டவ் லெனி என்றும் அழைக்கப்படுகிறது. இத்தளம் கிட்டத்தட்ட இருபதாண்டுகளுக்கு முன்னர் ஒரு பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியால் ஆவணப்படுத்தப்பட்டது.

---

**3.** அண்மையில் காலமான 'பத்மஸ்ரீ' விருது பெற்ற இலட்சுமி நந்தன் போரா சார்ந்த எது?



அ) விளையாட்டு

**ஆ) இலக்கியம் ☑**

இ) இசை

ஈ) நடனம்

✓ அஸ்ஸாமியைச் சார்ந்த பிரபல அஸ்ஸாமிய கல்வியாளர் மற்றும் 'பத்மஸ்ரீ' விருதாளருமான இலட்சுமி நந்தன் போரா சமீபத்தில் COVID காரணமாக காலமானார். அவருக்கு வயது 89. இலட்சுமி நந்தன் போரா, அஸ்ஸாமி மொழியில் அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். பதல் பைரவி மற்றும் காயகல்பா ஆகியவை அவரது சிறந்த படைப்புகளாகும். கடந்த 2015ஆம் ஆண்டில் அவருக்கு 'பத்மஸ்ரீ' விருது வழங்கப்பட்டது.

---

**4.** அண்மையில் திறந்துவைக்கப்பட்ட இன்டஸ் பெஸ்ட் பிரம்மாண்ட உணவுப் பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?



அ) பஞ்சாப்

ஆ) ஹரியானா

**இ) சத்தீஸ்கர் ☑**

ஈ) ஒடிஸா

✓ மத்திய உணவு பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர், சத்தீஸ்கர் மாநிலம் இராய்ப்பூரில் இன்டஸ் பெஸ்ட் பிரம்மாண்ட உணவுப்பூங்காவை தொடங்கிவைத்தார். மதிப்புக்கூட்டல், வேளாண் பொருட்களை நீண்டநாட்கள் சேமிப்பதற்கான வசதி, விவசாயிகளுக்கு அதிக வருவாய், தலைசிறந்த பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் இப்பகுதியின் உழவர்களுக்கு சந்தைப்படுத்துவதற்கான மாற்றுமுறைகள் போன்றவற்றை இந்த உணவுப்பூங்கா உறுதிசெய்யும்.

✓ இந்தப் பூங்காவின்மூலம் சுமார் 5000 பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

---

**5.** 4700'க்கும் மேற்பட்ட பன்றிகளைக் கொன்ற ஆப்பிரிக்க பன்றிக் காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ள இந்திய மாநிலம் எது?



அ) கோவா

**ஆ) மிசோரம் ☑**

இ) உத்தரபிரதேசம்

ஈ) பீகார்

✓ முதல் பாதிப்பு பதிவாகியதிலிருந்து, 2 மாதங்களுக்குள்ளாக 4,700'க்கும் மேற்பட்ட பன்றிகளின் மரணத்திற்குக் காரணமான ஆப்பிரிக்க பன்றிக் காய்ச்சலால் மிசோரம் மாநிலம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

✓ இப்போதைக்கு, மாநிலத்தின் 99 கிராமங்களையும், வட்டாரங்களையும் "பாதிக்கப்பட்ட பகுதிகளாக" மிசோரம் மாநில அரசு அறிவித்துள்ளது, அவற்றுள் 56, தலைநகரான ஐஸால் மாவட்டத்தில் அமைந்துள்ளன.

---

**6.** நுகர்வோர் நம்பிக்கைக்குறியீட்டை வெளியிடுகிற அமைப்பு எது?

அ) பாரத வங்கி

ஆ) நுகர்வோர் விவகாரங்கள்

இ) இந்தியா மதிப்பீடுகள்

**ஈ) இந்திய ரிசர்வ் வங்கி ☑**

✓ நுகர்வோர் நம்பிக்கை ஆய்வானது இந்திய ரிசர்வ் வங்கியால் (RBI) நடத்தப்படுகிறது. அது, பொதுவான பொருளாதார நிலைமைகள் குறித்து பங்கேற்பவரின் கருத்துக்களை வழங்குகிறது. சமீபத்தில், ரிசர்வ் வங்கி, நுகர்வோர் நம்பிக்கைக் குறியீட்டை வெளியிட்டுள்ளது. அது, COVID–19 தொற்றின் இரண்டாவது அலை காரணமாக இதுவரையில்லா அளவுக்கு வீழ்ச்சியை பதிவுசெய்துள்ளது. தற்போதைய சூழ்நிலைக் குறியீடு 48.5 ஆகவும், எதிர்கால எதிர்பார்ப்புக்குறியீடு 96.4 ஆகவும் சரிந்துள்ளது.

---

**7.** அண்மையில் பணியிலிருந்து நீக்கப்பட்ட இந்திய கடற்படையின் மிகப்பழைமையான நீரியல் ஆய்வுக்கப்பல் எது?



அ) INS கொல்கத்தா

**ஆ) INS சந்தயக் ☑**

இ) INS சிந்துராக்ஷக்

ஈ) INS சுவீர்

✓ இந்திய கடற்படையின் மிகப்பழைமையான நீரியல் ஆய்வுக்கப்பலான INS சந்தயக், 2021 ஜூன்.4 அன்று விசாகப்பட்டினத்தில் உள்ள கடற்படையிலிருந்து நீக்கப்பட்டது. 40 ஆண்டுகள் பழமையான இந்தக்கப்பல், 200'க்கும் மேற்பட்ட பெரிய நீரியல் ஆய்வுகளை நடத்தியுள்ளது. இது, இலங்கையில் நடத்தப்பட்ட 'ஆபரேஷன் பவன்' (1987), 'ஆபரேஷன் ரெயின்போ' (2004) போன்ற முக்கியமான ஆபரேஷன்களின் ஒருபகுதியாகவும் இருந்துள்ளது.

---

**8.** திட்டமிடப்பட்ட செயற்கைத் தீவான லினெட்டெஹோம் கட்டப்படவுள்ள நாடு எது?



அ) ஆஸ்திரியா

ஆ) ரஷ்யா

இ) உக்ரைன்

**ஈ) டென்மார்க் ☑**

✓ லினெட்டெஹோம் என்ற செயற்கைத் தீவை நிர்மாணிக்க டென்மார்க் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 1 சதுர மைல் (2.6 சதுரகிமீட்டர்) பரப்பளவில் இத்தீவு அமையவுள்ளது. மேலும் அதன் துறைமுகத்தை உயரும் கடல் மட்டங்கள் மற்றும் புயல்களிலிருந்து பாதுகாக்க, அதன் சுற்றளவு முழுவதும் ஒரு தடுப்பு அமைப்பு இருக்கும். இத்தீவு, சுரங்கச்சாலைகள் மற்றும் மெட்ரோ பாதைகள் வழியாக முதன்மை நிலத்துடன் இணைக்கப்படும்.

---

**9.** மாணவர்களுக்கான 'YounTab' திட்டம் தொடங்கப்பட்டுள்ள மாநிலம் அல்லது யூனியன் பிரதேசம் எது?



அ) தில்லி ஆ) புதுச்சேரி

இ) கர்நாடகா **ஈ) லடாக் ☑**

- ✓ லடாக் யூனியன் பிரதேசம், "YounTab" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இதன்கீழ் லடாக் துணைநிலை ஆளுநர் R K மாத்தூர், 9-12 வரை படிக்கும் மாணவர்களுக்கு டேப்லெட் வகை கைக்கணினிகளை வழங்குவார். லடாக் அரசுப்பள்ளிகளில் பயிலும் 6 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான கிட்டத்தட்ட 12,300 மாணவர்களுக்கு இலவச கைக்கணி -னிகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

---

**10.எந்த நிறுவனத்தால் தயாரிக்கப்படும், 'கார்பேவாக்ஸ்' என்னும் தடுப்பூசியை கொள்முதல்செய்வதாக இந்திய அரசு அறிவித்துள்ளது?**




**அ) பயாலாஜிக்கல் E ☑**

ஆ) SII

இ) ரான்பாக்ஸி

ஈ) பாரத் பயோ டெக்

- ✓ பயாலாஜிக்கல் E நிறுவனத்தால் தயாரிக்கப்படும் "கார்பேவாக்ஸ்" என்ற COVID-19 தடுப்பூசியினை 30 கோடி டோஸ்கள் கொள்முதல் செய்வதாக இந்திய அரசு அறிவித்துள்ளது. இந்த நிறுவனத்தின் தலைமையகம் ஹைதராபாத்தில் உள்ளது.
- ✓ உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இத்தடுப்பூசியானது, "Recombinant Protein Sub Unit Vaccine" (அதாவது) COVID வைரசின் ஸ்பைக் புரதத்திலிருந்து தயாரிக்கப்படுகிறது. இது, கோவாக்ஸின் (அ) கோவிஷீல்ட் தடுப்பூசிகளி -லிருந்து வேறுபட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சென்னை – குமரி தொழில்வழித்தடத்திற்கு 484 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தம்.**

பின்தங்கியுள்ள தமிழ்நாட்டின் கிழக்கு கடற்கரையோர மாவட்டங்களின் போக்குவரத்து இணைப்பு, தொழில்வளர்ச்சிகளை உருவாக்கும் சென் -னை – கன்னியாகுமரி தொழில்வழித்தடத் திட்டத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கி அளிக்கும் 484 மில்லியன் டாலர் கடனுக்கான ஒப்பந்தத்தில் மத்தி -ய அரசு கையெழுத்திட்டது.

மேற்கு வங்கத்திலிருந்து தமிழகம் வரையிலான 'சாகர்மாலா' என்கிற கிழக்குக் கடற்கரை பொருளாதார வழித்தடத் திட்டத்தை மத்திய தொழில் துறையின் தொழில் கொள்கை, மேம்பாட்டுப் பிரிவு உருவாக்கியது. இந்த கிழக்குக்கடற்கரை பொருளாதார வழித்தடத்திட்டதின் ஒருபகுதி சென் -னை – கன்னியாகுமரி தொழில்வழித்தடமாகும். இதில் தமிழக அரசும் முக்கிய பங்கு வகிக்கிறது.

சென்னை – கன்னியாகுமரி வழித்தடத்திட்டத்தில் தமிழகத்தின் 23 மாவட்டங்கள் பயன்பெறுகின்றன. குறிப்பாக மதுரை – தூத்துக்குடி; சென்னை – திருச்சி தொழில் வழித்தடங்களும் இணைந்துள்ளன. இந்த மாவட்டங்களில் உள்ள ஆயிரக்கணக்கான கிமீட்டரில் சிறிய சாலைகள், சுமார் 590 கிமீட்டர் வரையிலான மாநில நெடுஞ்சாலைகள், எண்ணூர், தூத்துக்குடிபோன்ற பெரிய துறைமுகங்கள், காட்டுப்பள்ளி, காரைக்கால் போன்ற சிறிய துறைமுகங்களும் இந்தத் திட்டத்தின்மூலம் தரமுயர்த்தப் -படவுள்ளது.

கடலோரத்தில் உள்ள நிலப்பகுதிகளில் உருவாகும் தொழில் முனையங் -கள், துறைமுகங்களுடன் இணைப்பதன் வாயிலாக, குறிப்பாக, சர்வதே -ச உற்பத்தி இணைப்புகள் மற்றும் சா'வதேச மதிப்பு சங்கிலிகளில் இந் -திய தயாரிப்புகளின் பங்கு அதிகரிக்கப்படுகிறது. மேலும், இந்த வழித்தட -த்தில் வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்படுகிறது. இதற்கான முதலீட் -டிற்கான கடன் வழங்க ஆசிய வளர்ச்சி வங்கி தமிழகத்தில் சாலைகள் உள்ளிட்ட பலவற்றில் பல ஆய்வுகளை மேற்கொண்டு வந்தது.

இறுதியாக கடந்த ஏப்ரலில் 484 மில்லியன் டாலர் கடன் அளிக்க ஆசிய வளர்ச்சி வங்கி முடிவுசெய்தது. தற்போது இதற்கான ஒப்பந்தம் அதிகாரபூர்வமாக கையெப்பமானது. கிழக்குக் கடற்கரை பொருளாதார வழித்தடத்தின்மூலம் தெற்கு, தென்கிழக்கு மற்றும் கிழக்கு ஆசியாவின் தொழில் உற்பத்தியோடு இந்தியா இணைகிறது. இதனால், கிழக்குக் கடற்கரை பொருளாதார மண்டலத்தை மேம்படுத்தும் பணிகளில் ஆசிய வளர்ச்சி வங்கி, இந்திய அரசுடன் ஆர்வத்துடன் பங்கேற்று செயல்பட்டுள் -ளது குறிப்பிடத்தக்கது.

---

**2. ரோபோட்டிக் அறுவை சிகிச்சை கருவிகண்டுபிடிப்புக்கு தேசிய விருது**

உள்நாட்டு தொழில்நுட்பத்துடன் குறைந்த விலையில் அதிநவீன ரோபோட்டிக் அறுவை சிகிச்சை கருவியை உருவாக்கிய சென்னை S S இன்னொவேஷன்ஸ் நிறுவனத்துக்கு சிறந்த கண்டுபிடிப்புக்கான தேசிய விருது அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

---

**3. அமெரிக்காவில் அதிகாரம் படைத்த பெடரல் நீதிபதியாக சரளா வித்யா நியமனம்**

அமெரிக்காவின் கனெக்டிகட் மாவட்ட நீதிமன்றத்தின் பெடரல் நீதிபதியா -க, இந்திய வம்சாவளியை சேர்ந்த சரளா வித்யா நாகலாவை செனட் சபை தேர்வுசெய்துள்ளது. இதன்மூலம், அமெரிக்காவில் முதல் முறையா -க பெடரல் நீதிபதியாக நியமிக்கப்படும் தெற்காசியாவை சேர்ந்தவர் என்ற பெருமையை சரளா பெற்றுள்ளார். இவர், கடந்த 2017ஆம் ஆண்டு முதல் கனெக்டிகட் மாவட்ட அட்டார்னி அலுவலகத்தில் முக்கிய குற்றப்பி -ரிவின் துணை தலைமை அதிகாரியாக பணியாற்றிவருகிறார். அதற்கு முன்பு, 2012ஆம் ஆண்டு முதல், அமெரிக்க அட்டார்னி அலுவலகத்தில் குற்றப்பிரிவு ஒருங்கிணைப்பாளராக பணியாற்றி வந்தார்.

பெடரல் நீதிபதி பதவி வாழ்நாள் பதவியாகும். பிரதிநிதி மற்றும் செனட் அவையில் பதவி நீக்க தீர்மானம் நிறைவேற்றினால் மட்டுமே பெடரல் நீதிபதியை பதவி நீக்க முடியும். பெடரல் நீதிபதி ஒருவர் அவர் விரும்பும் வரை அப்பணியில் தொடரலாம் என்பது உள்ளிட்ட பல்வேறு சிறப்பு அதிகாரங்கள் இப்பதவிக்கு உள்ளன.

---

**4. முதியோர் நல மருத்துவர் வி எஸ் நடராஜனுக்கு சாரகா விருது:**

முதியோர் நல மருத்துவர் வி எஸ் நடராஜனுக்கு சாரகா விருது வழங்கி ரோட்டரி சங்கம் கவுரவித்துள்ளது. மருத்துவத் துறையில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுவரும் சிறந்த நிபுணர்கள் மற்றும் எளியமக்களுக்குப் பயனளிக் -கும் வகையில் சமூகசேவை செய்துவரும் மருத்துவர்களுக்கு ரோட்டரி சங்கத்தின் கிண்டி கிளையின் சார்பாக சாரகா விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, 2020-21ஆம் ஆண்டுக்கான சாரகா விருது வழங்கும் நிகழ்ச்சி இணையவழியில் நடைபெற்றது.

அதில், முதியோருக்கு கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக மருத்துவம் மற்றும் சமுதாய விழிப்புணர்வு செய்து வரும் முதியோர் நல மருத்துவர் V S நடராஜனுக்கு சாரகா விருது மற்றும் நினைவுப்பரிசு வழங்கப்பட்டது.

---

**5. நாட்டிலேயே முதல்முறையாக மத்திய பிரதேசத்தில் கரோனாவில் இருந்து மீண்டவருக்கு பச்சை பூஞ்சை நோய் பாதிப்பு**

மத்திய பிரதேசத்தில் கரோனாவிலிருந்து மீண்டவருக்கு நாட்டிலேயே முதல் முறையாக பச்சைபூஞ்சை நோய் பாதிப்பு ஏற்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. கரோனா தொற்றிலிருந்து மீண்டவர்களுக்கு கடந்த சில மாதங்களுக்கு முன்பு கருப்பு பூஞ்சை பாதிப்பு ஏற்பட்டது. இது முகம், மூக்கு, கண் அல்லது மூளையை பாதிக்கிறது. இதனால் பார்வையிழப்பு ஏற்படவும் நுரையீரலுக்கு பரவவும் வாய்ப்பு உள்ளது. பின்னர் சிலருக்கு மஞ்சள், வெள்ளை பூஞ்சை பாதிப்பும் ஏற்பட்டது.

**நுரையீரலை தாக்கும்**

பச்சை பூஞ்சை என்பது அஸ்பெர்ஜில்லோசிஸ் தொற்று ஆகும். இதுகுறித்து ஆய்வுசெய்ய வேண்டியது அவசியம். மிகவும் அரிதாக ஏற்படும் இந்த நோய் நுரையீரலையும் தாக்கும். கருப்புப்பூஞ்சை மற்றும் பச்சை பூஞ்சையை குணப்படுத்தும் மருந்துகள் வெவ்வேறானவை.

---

**1.** **செயல்பாட்டிலுள்ள எரிமலைகளில் ஒன்றான மெராபி எரிமலை அமைந்துள்ள நாடு எது?**

**அ) இந்தோனேசியா ☑**

ஆ) ஆஸ்திரேலியா

இ) கனடா

ஈ) கென்யா



✓ மெராபி எரிமலை என்பது இந்தோனேசியாவின் மத்திய ஜாவா மாகாண -த்திற்கும் யோகசுர்த்தா பிராந்தியத்திற்கும் இடையில் அமைந்துள்ள செயல்பாட்டில் உள்ள ஒரு எரிமலையாகும். மிகவும் கொந்தளிப்பு மிக்க எரிமலையான இது கடந்த 1548ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வெடித்து வருகிறது. இவ்வெரிமலை தற்போது மீண்டும் வெடிக்கத் தொடங்கியது.

---

**2.** **ஜூன்.5 அன்று நடப்பாண்டுக்கான (2021) உலக சுற்றுச்சூழல் நாள் கொண்டாட்டங்களை நிகழ்த்திய நாடு எது?**

அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஆ) சீனா

**இ) பாகிஸ்தான் ☑**

ஈ) ரஷ்யா




✓ ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.5ஆம் தேதியை உலக சுற்றுச்சூழல் நாளாக ஐநா அவை கொண்டாடுகிறது. இந்நாள் முதன்முதலில் கடந்த 1972ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது. "Reimagine – Recreate – Restore" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். நடப்பாண்டின் (2021) உலக சுற்றுச்சூழல் நாள் கொண்டாட்டங்களை பாகிஸ்தான் நடத்தியது.

---

**3.** **அண்மையில் தொடங்கப்பட்ட 'E-100' என்ற சோதனை அடிப்ப -டையிலான திட்டத்துடன் தொடர்புடையது எது?**

அ) மின்னாளுகை

ஆ) மின்னணு இரசீது

**இ) எத்தனால் உற்பத்தி ☑**

ஈ) மின்னுற்பத்தி



✓ உலக சுற்றுச்சூழல் நாளை முன்னிட்டு புனேவில் பிரதமர் மோடி E-100 என்ற சோதனை அடிப்படையிலான திட்டத்தை தொடங்கினார். இந்தத் திட்டம், நாடு முழுவதும் எத்தனால் உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கா -ன ஒரு வலையமைப்பை அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ 'இந்தியாவில் 2020-2025இல் எத்தனால் கலப்பிற்கான செயல்திட்டம் குறித்த நிபுணர் குழுவின் அறிக்கையை' பிரதமர் வெளியிட்டார். 2025ஆம் ஆண்டுக்குள், 20 சதவீதம் எத்தனால் கலக்கும் இலக்கை அடைய இந்தியா தீர்மானித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

---

**4.** **அண்மையில் தேசியப்பூங்காவாக அறிவிக்கப்பட்ட ரைமோனா காப்புக்காடு அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ) அஸ்ஸாம் ☑**

ஆ) மத்திய பிரதேசம்

இ) உத்தர பிரதேசம்

ஈ) கேரளா



✓ அஸ்ஸாம் மாநிலத்தின் போடோலாந்து பிராந்தியத்திலுள்ள ரைமோனா காப்புக்காடு அம்மாநிலத்தின் ஆறாவது தேசியப்பூங்காவாக தரமுயர்த்தப் -பட்டுள்ளது. கசிரங்கா, மனாஸ், நமேரி, ஒராங் மற்றும் திப்ரு-சைகோ -வா ஆகியவை அஸ்ஸாமில் உள்ள பிற 5 தேசியப்பூங்காக்களாகும்.

✓ வளமான தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு குறிப்பாக தங்கநிற மந்தி, படைச்சிறுத்தை, இந்தியக்காட்டெருது மற்றும் இருவாச்சி ஆகியவ -ற்றிற்கு பிரபலமானதாகும் இந்தப் பூங்கா.

---

**5.** **பன்னாட்டு நிறுவனங்கள் மீதான குறைந்தபட்ச உலகளாவிய வரியை அறிவித்துள்ள பன்னாடுகளுக்கு இடையேயான குழு எது?**

அ) BRICS **ஆ) G7 ☑**

இ) ஐரோப்பிய ஒன்றியம் ஈ) G20

✓ ஏழு மேம்பட்ட பொருளாதாரங்களின் குழுவானது (G7) அண்மையில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு வரி விதிப்பது குறித்து ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இது "குறைந்தபட்ச உலகளாவிய வரி விகிதம்" ஆக இருக்கும். மேலும் அதன்கீழ் குறைந்தபட்ச வரம்பு 15% ஆக நிர்ணயிக்கப் -பட்டுள்ளது. G7 என்பது கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், ஐக்கியப்பேரரசு மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகள் உள்ளடக்கிய ஒரு பன்னாட்டு அரசாங்கங்களுக்கு இடையேயான ஓர் அமைப்பு ஆகும்.

---

**6.** **"I-Familia" என்ற தரவுத்தளத்தை தொடங்கிய அமைப்பு எது?**

அ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஆ) உலக வங்கி

**இ) இன்டர்போல் ☑**

ஈ) CBI




✓ பன்னாட்டு சட்ட அமலாக்க நிறுவனமான இன்டர்போல் "ஐ-பேமிலியா" என்ற உலகளாவிய தரவுத்தளத்தை தொடங்கியுள்ளது. இத்தரவுத்தளம் குடும்ப உறுப்பினர்களின் DNA'ஐப் பயன்படுத்தி காணாமல் போனவர்க -ளை அடையாளங்காணும் நோக்கங்கொண்டது.

✓ DNA தகவல்கள்கொண்ட பிரத்யேக உலகளாவிய தரவுத்தளம், போன -பர்டே எனப்படும் DNA'ஐப் பொருத்திப் பார்க்கும் மென்பொருள் மற்றும் இன்டர்போல் உருவாக்கிய விளக்க வழிகாட்டுதல்கள் ஆகிய மூன்று கூறுகளை 'ஐ-பேமிலியா' கொண்டுள்ளது.

---

**7.** **BIMSTEC'இன் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

**அ) டாக்கா ☑**

ஆ) புது தில்லி

இ) பெய்ஜிங்

ஈ) கொழும்பு




✓ Bay of Bengal Initiative for Multi-Sectoral Technical and Economic Cooperation (BIMSTEC) என்பது தெற்காசியா மற்றும் தென்கிழக்காசியா -வின் ஏழு நாடுகளை உள்ளடக்கிய ஓரமைப்பாகும். இதன் தலைமைய -கம் வங்காளதேசத்தின் டாக்காவில் அமைந்துள்ளது. இந்த அமைப்பு, முதன்முதலில், 1997ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. 24ஆவது BIMSTEC நாள், 2021 ஜூன்.6 அன்று கொண்டாடப்பட்டது.

---


**8.** **எத்தனை அளவுருக்களின் அடிப்படையில், செயல்திறன் தரவரி -சைக்குறியீடு அல்லது PGI 2019-20 வெளியிடப்பட்டது?**

அ) 5

ஆ) 10

இ) 25

**ஈ) 70 ☑**




✓ செயல்திறன் தரவரிசைக்குறியீடு அல்லது PGI 2019-20 என்பது இந்திய மாநிலங்கள் & யூனியன் பிரதேசங்களின் கல்வி தொடர்பான குறியீடு ஆகும். இதனை வெளியிட மத்திய கல்வி அமைச்சகம் ஒப்புதல் அளித்து -ள்ளது. இக்குறியீடு, 70 அளவுருக்களின் தொகுப்பை அடிப்படையாகக் கொண்டது. இக்குறியீட்டின்கீழ், பஞ்சாப், சண்டிகர், தமிழ்நாடு, அந்தமான் & நிக்கோபார் தீவுகள் மற்றும் கேரளா ஆகியவை 2019-20ஆம் ஆண்டி -ற்கான குறியீட்டில் முதல் 5 இடங்களைப் பிடித்துள்ளன.

---

**9.** **இந்திய சுற்றுச்சூழல் அறிக்கை – 2021'இன்படி, 17 நீடித்த வளர்ச் -சி இலக்குகளை அடைவதில் இந்தியாவின் தரநிலை என்ன?**

அ) 67

ஆ) 89

**இ) 117 ☑**

ஈ) 123



✓ இந்தியாவின் சுற்றுச்சூழல் அறிக்கை – 2021 என்பது டௌன் டூ எர்த் இதழின் வருடாந்திர வெளியீடு ஆகும். இந்த அறிக்கையின்படி, 2030 நீடித்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்துவதிலும், அடைவதிலும் இந்தியா 117ஆவது இடத்திலுள்ளது. கடந்த ஆண்டு, இந்தியா, 115ஆவது இடத்திலிருந்தது. பட்டினியில்லாமை, பாலின சமத்துவம்போன்ற முதன் -மை சவால்களின் காரணமாக ஈரிடங்களை இந்தியா இழந்துள்ளது.


**10.விருச்சிக விண்மீன் குழாம், கோடைத்திருப்புநிலை மற்றும் ஸ்ட் –ராபெரி நிலவு ஆகிய பல்வேறு விண் நிகழ்வுகள் நிகழும் என்று எதிர்பார்க்கப்படுகிற மாதம் எது?**

**அ) ஜூன் ☑**

ஆ) ஜூலை

இ) ஆகஸ்ட்

ஈ) செப்டம்பர்




✓ ஜூன்.10 அன்று சூரிய கிரகணமும், ஜூன்.20–21 ஆகிய தேதிகளில், வசந்த காலத்தின் வானியல் ரீதியிலான முடிவும் கோடைகாலத்தின் தொடக்கமும் ஏற்படும். இது நீண்டபகலைக்கொண்ட காலமாக இருக்கும். கோடைகால அந்திகளில், தென்வானம் முழுவதும் விண்மீன்களின் குழுவாகக் காணப்படுகிறது. அது விருச்சிக விண்மீன் குழாம் ஆகும். அது ஜூன் மாதத்தில் காணப்படுகிறது. ஜூன் முழு நிலவு, 'ஸ்ட்ராபெரி நிலவு' என்றும் அழைக்கப்படுகிறது.

**1. அலெக்சாண்டர் புஷ்கின் என்பவர் பின்வரும் எந்த மொழிசார்ந்த புகழ்பெற்ற கவிஞராவார்?**

அ) ஸ்பானிய மொழி

ஆ) பிரெஞ்சு

**இ) உருஷிய மொழி ☑**

ஈ) ஆங்கிலம்



✓ அலெக்சாண்டர் புஷ்கின் என்பவர் ஒரு உருஷிய கவிஞராவார். அவர், நவீன உருஷிய மொழியின் தந்தையாக கருதப்படுகிறார். அவரது பிறந்த நாள் ஐநா உருஷிய மொழி நாளாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த நாள், ஆண்டுதோறும் ஜூன்.6 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது.

✓ இந்த நிகழ்வு, தொடக்கத்தில் ஐநா கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பால் (UNESCO) கடந்த 2010ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. ஐநா மொழி நாட்கள், பன்மொழித்துவத்தைக் கொண்டாடுவதையும் ஐநா'இன் ஆறு அலுவல்பூர்வ மொழிகளின் சமமான பயன்பாட்டை ஊக்குவிப்பதை –யும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

---

**2. நடப்பாண்டின் (2021) உலக பெருங்கடல்கள் நாளுக்கான கருப் –பொருள் என்ன?**

**அ) The Ocean: Life and Livelihoods ☑**

ஆ) Save Our Oceans

இ) Stop Plastic Pollution

ஈ) Sustainably–sourced Fish




✓ உலக பெருங்கடல்கள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.8 அன்று அனுசரிக்கப்படுகிறது. அன்றைய நாளில், ஐநா அவை, பெருங்கடல்க –ளைக் காப்பதற்காக நிலையான முன்னெடுப்புகள் மற்றும் நெகிழி மாசு –பாட்டை ஒழிப்பதற்காக அழைப்புவிடுத்துள்ளது. கொரோனா வைரஸ் தொற்றுநோயால், ஐநா உலக பெருங்கடல்கள் நாளைக் கொண்டாட்டங் –கள் இரண்டாமாண்டாக இவ்வாண்டும் மெய்நிகர் முறையில் நடந்தது. "The Ocean: Life and Livelihoods" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**3. 'உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூக பார்வை: போக்குகள் 2021' என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ) ILO ☑**

ஆ) UN

இ) உலக வங்கி

ஈ) IMF

✓ பன்னாட்டு தொழிலாளர் அமைப்பானது (ILO) 'உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூக பார்வை: போக்குகள் 2021' என்ற தலைப்பில் மதிப்பீட்டை வெளியிட்டது.

✓ இந்த அறிக்கையின்படி, உலகளாவிய நெருக்கடியால் உண்டாக்கப்பட்ட 'வேலைவாய்ப்பு இடைவெளி', 2022ஆம் ஆண்டில் 23 மில்லியனாக ஆவதற்கு முன்னர், நடப்பு 2021ஆம் ஆண்டில் 75 மில்லியனை எட்டும். குறைந்தது 2023ஆம் ஆண்டு வரை, ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய, வேலைவாய்ப்பு வளர்ச்சி போதுமானதாக இராது என்றும் அவ்வறிக்கை கணித்துள்ளது.

---

**4. 'குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (MSME) செயல்திறன் திட்டத்தை வளர்ப்பது மற்றும் விரைவுபடுத்துவது' என்பது எந்த அமைப்பின் முன்னெடுப்பாகும்?**

அ) பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு

ஆ) ஐக்கிய நாடுகள் அவை

**இ) உலக வங்கி ☑**

ஈ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

✓ இந்தியாவின் MSME துறையை உயர்த்த உதவும் வகையில் $500 மில் –லியன் டாலர் திட்டத்திற்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. RAMP என்பது Raising and Accelerating Micro, Small and Medium Enterprise (MSME) Performance என்பதை குறிக்கிறது.

✓ MSME'களுக்கான நிதி மற்றும் செயல்பாட்டு மூலதனத்திற்கு சிறந்த அணுகலை வழங்குவதன்மூலம் 5 லட்சத்து ஐம்பதாயிரம் MSME'களின் செயல்திறனை மேம்படுத்த இத்திட்டம் இலக்கு கொண்டுள்ளது. உலக வங்கியானது முன்னதாக கடந்த ஜூலை மாதத்தில், ₹750 மில்லியன் மதிப்புள்ள MSME அவசரகால உதவித்திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

---

**5. 107 ஆண்டுகள் பழைமையான பில்லிமோரா–வாகாய் பாரம்பரிய இரயில் இயங்குகிற மாநிலம் எது?**

**அ) குஜராத் ☑**

ஆ) மகாராஷ்டிரா

இ) கர்நாடகா

ஈ) பீகார்



✓ நவ்சாரியில் உள்ள பில்லிமோராவிற்கும், தெற்கு குஜராத்தின் டாங்ஸில் உள்ள வாகாய்க்கும் இடையே 107 ஆண்டுகள் பழைமையான குற்றக –லப்பாதையில் பாரம்பரிய இரயில் சேவையின் முதல் சோதனை ஓட்டம் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்டது. 2020 டிசம்பரில், மேற்கு ரயில்வே இந்த சேவையை இரத்துசெய்தது. பின்னர் அது மறுபரிசீலனை செய்யப்பட்டது. இந்த ரயில் சேவை, 1913ஆம் ஆண்டில், பரோடாவின் மன்னர் அரசான கெய்க்வாட் வம்சத்தால் தொடங்கப்பட்டது.

---

**6. "Safe food today for a healthy tomorrow" என்பது ஜூன்.7 அன்று கடைப்பிடிக்கப்பட்ட எந்த நாளின் கருப்பொருளாகும்?**

**அ) உலக உணவுப்பாதுகாப்பு நாள் ☑**

ஆ) உலக பெருங்கடல்கள் நாள்

இ) உலக டுனா நாள்

ஈ) உலக சுற்றுச்சூழல் நாள்




✓ கடந்த 2018ஆம் ஆண்டில், ஐநா பொது அவையானது ஆண்டுதோறும் ஜூன்.7 – உலக உணவு பாதுகாப்பு நாளாக கொண்டாடப்படும் என்று அறிவித்தது. ஐநா'இன் கூற்றுப்படி, பாதுகாப்பற்ற உணவினால் ஒவ்வோர் ஆண்டும் 420,000 பேர் மரணிக்கின்றனர். "Safe food today for a healthy tomorrow" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**7. உச்சநீதிமன்றத்தால் அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்றுவத –ற்கு உத்தரவிடப்பட்ட ஆரவல்லி வனப்பகுதி அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ) ஹரியானா ☑**

ஆ) மத்திய பிரதேசம்

இ) ஒடிஸா

ஈ) மகாராஷ்டிரா



✓ பரிதாபாத்தில் உள்ள ஒரு சிற்றூருக்கு அருகிலுள்ள ஆரவல்லி காட்டில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்றுமாறு ஹரியானா மாநில அரசுக்கும் பரிதாபாத் மாநகராட்சிக்கும் இந்திய உச்சநீதிமன்றம் ஆணை –யிட்டுள்ளது. இந்த ஆக்கிரமிப்புகள் சுமார் 10,000 குடியிருப்புகளைக் கொண்டுள்ளன.

---

**8. பின்வரும் திட்டங்களுள், ஆத்மநிர்பார் பாரத் தொகுப்பின் ஒருபகு –தியாக மத்திய அரசால் தொடங்கப்பட்ட உணவுப்பாதுகாப்புத்திட்டம் எது?**

அ) PM – FBY

**ஆ) PM – GKAY ☑**

இ) PM – GSY

ஈ) PM – JJBY



✓ ஏழைகள் மற்றும் புலம்பெயர்ந்தோருக்கு உணவு தானியங்களை இல –வசமாக வழங்குவதை நோக்கமாகக் கொண்ட ஆத்மநிர்பார் பாரத் தொகுப்பின் ஒருபகுதியாக இந்திய அரசு பிரதம மந்திரி கரீப் கல்யாண் அன்ன யோஜனா (PM–GKAY) என்ற உணவுப் பாதுகாப்புத் திட்டத்தை தொடங்கியது. அண்மையில், 2021 தீபாவளி (அதாவது) நவம்பர் 2021 வரை இந்தத் திட்டம் நீட்டிக்கப்படும் என்று பிரதமர் அறிவித்துள்ளார்.

---

**9.** **எந்நாட்டிடமிருந்து, MH–60 ரோமியோ உலங்கு வானூர்திகளை இந்தியக் கடற்படை வாங்குகிறது?**



அ) ரஷ்யா

ஆ) இஸ்ரேல்

**இ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

ஈ) ஈரான்

- ✓ இந்தியக்கடற்படையானது ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்து MH–60 ரோமியோ உலங்கு வானூர்திகளைக் வாங்கவுள்ளது. முன்னதாக, 2020ஆம் ஆண்டில் இந்தியா, ஐக்கிய அமெரிக்க நாடுகளுடன் ₹16,000 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- ✓ இந்திய விமானிகள் குழு ஐக்கிய அமெரிக்க நாடுகளை (USA) அடைந்து, இதனை இயக்குவதற்கான பயிற்சியைப் பெற்றனர்.

---

**10.** **ஐநா பொருளாதார மற்றும் சமூக அவை (ECOSOC), எத்தனை உறுப்பினர்களைக் கொண்டுள்ளது?**

அ) 192

ஆ) 100

**இ) 54 ☑**

ஈ) 20

- ✓ ஐநா பொருளாதார மற்றும் சமூக அவை (ECOSOC) என்பது ஐநா'இன் முக்கிய உறுப்புகளுள் ஒன்றாகும். அது 54 உறுப்பினர்களைக்கொண்டு –ள்ளது. இதன் உறுப்பினர்கள் ஒவ்வோராண்டும் 3 ஆண்டு பதவிகாலத் –திற்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- ✓ ரகசிய வாக்கெடுப்பின்மூலம் 2022–2024 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு, இந்தியா, ECOSOC'க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஐநா பொதுச்செயலராக குட்டெரெஸ் மீண்டும் தேர்வு**

ஐநா பொதுச்செயலராக அன்டோனியோ குட்டெரெஸ் மீண்டும் நியமிக்க –ப்பட்டார். இதையடுத்து, அவர் அந்தப்பொறுப்பை மேலும் 5 ஆண்டுகளு –க்கு வகிப்பார். இதுகுறித்து 75ஆவது ஐநா பொதுச் சபைக் கூட்டத்தின் தலைவர் வோல்கான் போஸ்கிர் தெரிவித்துள்ளதாவது: ஐநா பொதுச் செயலர் பதவிக்கு தற்போது அந்தப் பொறுப்பை வகித்துவரும் அன்டோனி –யோ குட்டெரெஸ் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். அவரது இரண்டாவது பதவிக்காலம் வரும் 2022 ஜன.1ஆம் தேதி தொடங்கி, 2026 டிச.31ஆம் தேதியுடன் நிறைவடையும் என்றார் அவர். அதனைத் தொடர்ந்து, ஐநா பொதுச்சபை அரங்கில் குட்டெரெஸுக்கு போஸ்கிர் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார்.

---

**2. முன்னாள் தடகள வீரர் 'பறக்கும் சீக்கியர்' மில்கா சிங் மறைவு**

முன்னாள் தடகள வீரர் மில்கா சிங் (91) மறைந்தார். கரோனாவிலிருந்து மீண்டவர், கரோனாவுக்கு பிந்தைய பாதிப்புகளால் உயிரிழந்தார்.

'பறக்கும் சீக்கியர்' என்று அழைக்கப்பட்ட மில்கா சிங், ஆசிய விளையாட் –டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகளில் 400 மீ ஓட்டப்பந்த –யப் பிரிவில் தங்கம் வென்ற ஒரே இந்தியர். கடந்த 1958ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் மில்கா சிங் 200 மீ மற்றும் 400 மீ பிரிவில் தங்கப்பதக்கங்களை வென்றார்.

1960ஆம் ஆண்டு ரோமில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை சிறிய வித்தியாசத்தில் தவறவிட்டாலும் அப்போட்டி அவருக்கு சர்வதேச அடையாளத்தை தந்தது. 1962ஆம் ஆண்டு இந்தோனேசியத் தலைநகர் ஜகார்தாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில், 400 மீ ஓட்டப்பந்தயம் மற்றும் 400 மீட்டர் தொடர் ஓட்டப்பிரிவில் தங்கப் பதக்கங்களை வென்றார்.

---

**3. கனடா உச்சநீதிமன்ற நீதிபதியாக இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் நியமனம்**

கனடா உச்சநீதிமன்ற நீதிபதியாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மஹ்மூத் ஜமால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதன்மூலம் அந்நாட்டு உச்சநீதிமன்றத்துக்கு நியமிக்கப்படும் கருப்பினத்தைச் சேர்ந்த முதல் நீதிபதி என்கிற பெருமையையும் அவர் பெறுகிறார்.

---

**4. செல்வாக்குமிகுந்த தலைவர்களில் உலக அளவில் மோடி முதலிடம்: அமெரிக்க நிறுவன கருத்துக் கணிப்பில் தகவல்**

உலக அளவில் செல்வாக்கு மிகுந்த தலைவர்களில் பிரதமர் மோடி முதலிடத்தைப் பிடித்துள்ளார். அமெரிக்க தலைநகர் வாஷிங்டனை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் பிரபல கருத்துக் கணிப்பு நிறுவனமான 'மார்னிங் கன்சல்ட்', உலக தலைவர்களின் தலைமை குறித்து அண்மையில் ஆய்வுநடத்தியது. இதன்படி அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி, கனடா, ஆஸ்திரேலியா, ஜப்பான், தென்கொரியா, பிரேசில், இந்தியா, மெக்ஸிகோ ஆகிய 13 நாடுகளின் மக்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது.

இக்கருத்துக்கணிப்பில், பிரதமர் நரேந்திர மோடி முதலிடம் பிடித்துள்ளார். இந்தியாவில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 66 சதவீதம் பேர் பிரதமர் மோடிக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். 28% பேர் மட்டும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

கடந்த 2019 ஆகஸ்டில் மார்னிங் கன்சல்ட் இதேபோல கருத்துக் கணிப்பு நடத்திமுடிவுகளை வெளியிட்டது. அப்போது பிரதமர் நரேந்திர மோடிக்கு 82 சதவீதம் பேர்ஆதரவும், 11 சதவீதம் பேர் எதிர்ப்பும் தெரிவித்திருந்தனர். தற்போதைய கருத்துக் கணிப்பில் பிரதமர் மோடியின் செல்வாக்கு சரிந்திருந்தாலும் உலகளாவிய அளவில் செல்வாக்கு மிகுந்த தலைவர்க –ளில் அவர் முதலிடத்தைப் பிடித்திருக்கிறார்.

மார்னிங் கன்சல்ட் கருத்துக் கணிப்பில் இத்தாலி பிரதமர் மரியோ தொராகி 65 சதவீத ஆதரவினைப் பெற்று 2–வது இடத்தில் உள்ளார். மெக்ஸிகோ அதிபர் லோபஸ் ஒபரடோர் 63%, ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசன் 53%, ஜெர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்கல் 53%, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் 53%, கனடா பிரதமர் ஜஸ்டின் 48%, பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜான்சன் 44%, தென்கொரிய அதிபர் மூன் ஜே இன் 37%, ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்சஸ் 36%, பிரேசில் அதிபர் ஜேர் போல்சோனரோ 35%, பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் 35%, ஜப்பான் பிரதமர் யோசிகிடோ சுகா 29% வாக்குகளை பெற்று அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

---

**5. ஈரான் அதிபராகிறார் இப்ராஹிம் ரய்சி**

ஈரானில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் தீவிர நிலைப்பாட்டைக்கொண்ட அந்த நாட்டின் தலைமை நீதிபதி இப்ராஹிம் ரய்சி வெற்றிபெற்றார்.

ஈரான் அதிபராகப் பொறுப்பேற்ற பிறகு, பதவியேற்பதற்கு முன்னதாகவே அமெரிக்கவால் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட முதல் அதிபராக இப்ராஹிம் ரய்சி இருப்பார். கடந்த 1988ஆம் ஆண்டில் ஏராளமான அரசியல் கைதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்ற உத்தரவிட்ட விசாரணைக்குழுவில் அங்கம் வகித்ததால் அவருக்கு எதிராக அமெரிக் –கா பொருளாதாரத்தடைகளை விதித்துள்ளது. அமெரிக்காவால் பொரு –ளாதாரத் தடை விதிக்கப்பட்ட ஈரானின் முதல் தலைமை நீதிபதியும் ரய்சிதான் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**6. உலகின் மூன்றாவது மிகப்பெரிய வைரம் போட்ஸ்வானாவில் கண்டுபிடிப்பு:**

உலகின் மூன்றாவது மிகப்பெரிய வைரம் போட்ஸ்வானா நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆப்பிரிக்க கண்டத்தின் தென்பகுதியில் போட் –ஸ்வானா நாடு உள்ளது. அந்நாட்டில் 23 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். அங்கு நான்கு மிகப்பெரிய வைரசுரங்கங்கள் செயல்படுகின்றன. அரசின் வருவாயில் 50% வைரங்கள் விற்பனைமூலம் கிடைக்கிறது. கரோனா வைரஸால் எழுந்துள்ள அசாதாரண சூழ்நிலையால் வைரங்கள் விற்பனை குறைந்து போட்ஸ்வானா நாட்டில் பொருளாதார நெருக்கடிக –ள் எழுந்துள்ளன.

இந்நிலையில் போட்ஸ்வானா நாட்டின் சுரங்கம் ஒன்றில் அண்மையில் 1,098 காரட் வைரம் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. 73 மிமீ நீளம், 52 மிமீ அகலம், 27 மிமீ தடிமன்கொண்ட இது உலகின் மூன்றாவது மிகப்பெரிய வைரமாகும். கடந்த 1905ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவில் 3,106 காரட் வைரம் கண்டுபிடிக்கப்பட்டது. இதுதான் உலகத்தின் மிகப்பெரிய வைரமாகும். கடந்த 2015ஆம் ஆண்டில் போட்ஸ்வானா நாட்டில் 1,109 காரட் வைரம் தோண்டி எடுக்கப்பட்டது. இது உலகத்தின் 2ஆவது பெரிய

வைரமாகும். தற்போது போட்ஸ்வானா நாட்டிலேயே உலகின் 3ஆவது மிகப்பெரிய 1,098 காரட் வைரம் கிடைத்துள்ளது.

சர்வதேச சந்தை நிலவரம் மேம்பட்ட பிறகு, 3ஆவது மிகப்பெரிய வைரம் ஏலம் விடப்படும் என போட்ஸ்வானா அரசுதரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**1. ஐநா அவையின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அப்துல்லா ஷாஹித் சார்ந்த நாடு எது?**



**அ) மாலத்தீவுகள் ☑**

ஆ) ஈரான்

இ) பாகிஸ்தான்

ஈ) சௌதி அரேபியா

✓ தற்போது மாலத்தீவுகளின் வெளியுறவுத் துறை அமைச்சராக இருக்கும் அப்துல்லா ஷாஹித், ஐக்கிய நாடுகள் அவையின் அடுத்த தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஐநா'இன் தலைமைப்பொறுப்பை மாலத்தீவுகள் கைப்பற்றுவது இதுவே முதல்முறையாகும். ஐநா'இன் 76ஆவது அமர்வு (2021–22), ஆசிய–பசிபிக் குழுமத்தின் முறையாகும்.

---

**2. A. cooperensis என்பது அண்மையில் எந்த நாடு / பிராந்தியத்தின் மிகப்பெரிய தொன்மாவாக அடையாளங்காணப்பட்டுள்ளது?**



அ) ரஷ்யா

**ஆ) ஆஸ்திரேலியா ☑**

இ) ஆப்பிரிக்கா

ஈ) அண்டார்டிகா

✓ ஆசுதிரேலியாவின் மிகப்பெரிய தொன்மாவாக Australotitan cooperensis அடையாளங்காணப்பட்டுள்ளது. அண்மையில் அதன் எலும்புகள் கண்டு–பிடிக்கப்பட்டதை அடுத்து இந்த அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. இது சுமார் 100 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்வாழ்ந்த டைட்டனோசர் குடும்பத்தி–ன் ஒருபகுதியாகும். இது 5–6.5 மீ., உயரமும் 25–30 மீட்டர் நீளமும் கொண்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மூட்டளவு ஒப்பீடுகளின் அடிப்படையி–ல், இப்புதிய டைட்டனோசர், உலகின் முதல் 5 இடங்களுள் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

---

**3. 'சுரக்ஷித் ஹம் சுரக்ஷித் தும் அபியான்' என்பது எந்நிறுவனத்தின் முன்னெடுப்பாகும்?**

அ) AIIMS

**ஆ) NITI ஆயோக் ☑**

இ) ICMR

ஈ) IMA

NITI Aayog

✓ அறிகுறியற்ற மற்றும் மிதமான COVID–19 பாதிப்புள்ள நோயாளிகளுக்கு, வீட்டுக்குச்சென்று பராமரிப்பு உதவிகளை அளிப்பதில் மாவட்ட நிர்வாகத்–துக்கு உதவ, 'சுரக்ஷித் ஹம் சுரக்ஷித் தும் அபியான்' (எங்களுக்கும் பாதுகாப்பு, உங்களுக்கும் பாதுகாப்பு) என்ற திட்டத்தை 112 இலக்கு மாவட்டங்களில் NITI ஆயோக்கும் பிரமல் அறக்கட்டளையும் தொடங்கின.

---

**4. சர்வதேச கோல் எண்ணிக்கைகளில் லியோனல் மெஸ்ஸியை விஞ்சிய இந்திய கால்பந்து வீரர் யார்?**



அ) குர்பிரீத் சிங் சந்து

**ஆ) சுனில் சேத்ரி ☑**

இ) முகமது யாசிர்

ஈ) அம்ரிந்தர் சிங்


✓ இந்திய கால்பந்து வீரரான சுனில் சேத்ரி சர்வதேச கோல் எண்ணிக்–கைகளில் லியோனல் மெஸ்ஸியை விஞ்சியுள்ளார். அண்மையில் தோகாவில், வங்கதேசத்தை எதிர்த்து இந்தியா பெற்ற 2–0 என்ற கோல் கணக்கில், இருகோல்களையும் அவரே அடித்தார். 2022 FIFA உலகக் கோப்பை மற்றும் 2023 AFC ஆசிய கோப்பைக்கான தகுதிப்போட்டியில் அடித்த கோல்களின்மூலம் மெஸ்ஸியின் 72 கோல் எண்ணிக்கையை சேத்ரி கடந்தார். சர்வதேச பட்டியலில், போர்ச்சுகல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, 103 கோல்களுடன் முதலிடத்தில் உள்ளார்.

---

**5. இந்தியாவின் முதல் CAR–T செல் சிகிச்சையானது அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. கீழ்காணும் எந்த நோயில் இச்சிகிச்சைமுறை பயன்படுத்தப்படுகிறது?**

அ) காசநோய் **ஆ) புற்றுநோய் ☑**

இ) COVID ஈ) AIDS




✓ மும்பையில் உள்ள TATA நினைவு மருத்துவ மனை, மும்பை IIT குழு ஆகியவை இணைந்து புற்றுநோய்க்கான முதல் CAR–T செல் சிகிச்சை –யை, எலும்பு மஜ்ஜை மாற்று மையத்தில் மேற்கொண்டன. இதற்கு உயிரித்தொழில்நுட்பத்துறை ஆதரவு தெரிவித்துள்ளது.

✓ இந்தக்குழுவினர் தங்கள் ஆய்வு திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாவது கட்டப்பரிசோதனைகளை மனிதர்களிடம் மேற்கொள்ள, உயிரித்தொழில் நுட்பத்துறை மற்றும் பிராக் ஆகியவை தேசிய பயோபார்மா திட்டம் மூலம் ₹19.15 கோடி நிதியுதவி அளிக்கின்றன. இந்த மரபணு சிகிச்சை இந்தியாவில் முதல்முறையாக மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

---

**6. சமீப செய்திகளில் இடம்பெற்ற வட அட்லாண்டிக் வல திமிங்கலம், IUCN செம்பட்டியலில், எவ்வகையின்கீழ் வைக்கப்பட்டுள்ளது?**



அ) அழிவாய்ப்பு நிலையிலுள்ள இனம்

ஆ) அருகிவிட்ட இனம்

**இ) மிகவும் அருகிவிட்ட இனம் ☑**

ஈ) இயலிடத்தில் அற்றுவிட்ட இனம்

✓ ஓர் அண்மைய ஆய்வின்படி, வட அட்லாண்டிக் வல திமிங்கலங்களின் இளந்தலைமுறைகள், இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்த திமிங்கலங் –களைவிட 3 அடி நீளங்குறைவாக உள்ளன. மீன்பிடி கருவி உடனான சிக்கல்கள், கப்பல்களுடனான மோதல்கள் மற்றும் அவற்றின் உணவுப் பரவலை வடக்கே நகர்த்தும் காலநிலைமாற்றம் ஆகியவை இந்நிகழ்வு –க்கு காரணங்கள் என்று கூறப்படுகிறது. இவ்வகை திமிங்கலங்களை IUCN, 'மிகவும் அருகிவிட்ட இனம்' என வகைப்படுத்தியுள்ளது.

---

**7. எந்த ஆற்றின்மீது, ஜங்கி தோபன் பொவாரி நீர்மின்சார திட்டத்தை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது?**



அ) கங்கை

**ஆ) சட்லெஜ் ☑**

இ) சிந்து

ஈ) யமுனா

✓ திட்டமிடப்பட்டுள்ள 804 MW ஜங்கி தோபன் பொவாரி நீர்மின்சாரத் திட்டத்திற்கு ஹிமாச்சலப் பிரதேச மாநில மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இது, சட்லெஜ் ஆற்றின்மீது நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. ஆற்றின் போக்கிலான இத்திட்டத்தில், சட்லெஜ் ஆற்றின் குறுக்கே ஒரு திண்காறை ஈர்ப்பணை & கரையையொட்டி நிலத்தடி மின்நிலையம் அமைத்தல் ஆகியவை அடங்கும்.

---

**8. சமீப செய்திகளில் இடம்பெற்ற எகோ டம்பிங் மலை அமைந்துள்ள மாநிலம் எது?**



அ) உத்தரகண்ட்

ஆ) சிக்கிம்

**இ) அருணாச்சல பிரதேசம் ☑**

ஈ) ஹிமாச்சல பிரதேசம்

✓ சமீபத்தில், வனவுயிரி ஆர்வலர்கள் குழு ஒன்று கடல் மட்டத்திலிருந்து 4,173 மீ உயரத்தில், எகோ டம்பிங் மலையில், இரண்டு வகையான மோனல் பறவைகளைக்கண்டது. அது அருணாசல பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ளது. இமயமலை மோனல் (*Lophophorus impejanus*) ஆப்கா –னிஸ்தான் மற்றும் வடகிழக்கு இந்தியாவில் பரவலாக காணப்படுகிறது. கொண்டையற்ற (*Lophophorus sclateri*) மோனல்கள் சீனா மற்றும் மியான்மரில் பரவலாக காணப்படுகிறன.

---

**9. நெல், எள், துவரை மற்றும் உளுந்து ஆகியவற்றின் குறைந்தபட்ச ஆதரவு விலைகள் அண்மையில் உயர்த்தப்பட்டன. இவை _____ வகை பயிர்கள்.**



அ) ரபி

**ஆ) காரீப் ☑**

இ) சயீத்

ஈ) மேற்கூறிய எதுவும் இல்லை

- ✓ 2021–22ஆம் ஆண்டில் காரீப் சந்தை பருவத்தின் அனைத்து பயிர்களு–க்கும் குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்த பொருளாதார விவகா–ரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழு ஒப்புதல் அளித்தது.
- ✓ அதிகபட்ச உயர்வாக, எள்ளுக்கு கடந்த ஆண்டு குறைந்தபட்ச ஆதரவு விலையைவிட குவின்டால் ஒன்றுக்கு ₹452 அதிகரிக்க பரிந்துரைக்கப்–பட்டுள்ளது. துவரை மற்றும் உளுந்துக்கு ₹300 அதிகரிக்க பரிந்துரைக்–கப்பட்டுள்ளது. நிலக்கடலைக்கு குவின்டாலுக்கு ₹275 அதிகரிக்க பரிந்–துரைக்கப்பட்டுள்ளது. நெல் பொதுவான ரகத்தின் குறைந்தபட்ச ஆதரவு விலை குவின்டாலுக்கு ₹1868'லிருந்து ₹1940 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முதல் இரக நெல்லின் விலை ₹1960 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

---

**10.** QS உலக தரவரிசை 2022'இன் படி, உலகின் சிறந்த ஆராய்ச்சி பல்கலைக்கழகமாக இடம்பெற்றுள்ள இந்திய நிறுவனம் எது?

அ) IIT சென்னை

ஆ) IIT மும்பை

இ) IIT பெங்களூரு

**ஈ) IISc, பெங்களூரு ☑**

- ✓ பல்கலைக்கழக தரவரிசைகளின் வருடாந்திர வெளியீடான குவாக்கரெ–ல்லி சைமண்ட்ஸ் (QS) உலக தரவரிசை 2022 ஆனது அண்மையில் வெளியிடப்பட்டது. இவ்வெளியீட்டின்படி, பெங்களூரு இந்திய அறிவியல் நிறுவனம் (IISc), "உலகின் சிறந்த ஆராய்ச்சி பல்கலைக்கழகமாக" இடம் பெற்றுள்ளது. இந்நிறுவனம், 'ஒருவர் சமர்ப்பித்துள்ள ஆய்வுக்கட்டுரை' என்ற மதிப்பீட்டின்கீழ் 100/100 மதிப்பெண் பெற்றுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஜூன்.21 – பன்னாட்டு யோகா நாள்**

**கருப்பொருள்: யோகாவுடன் இணைந்திருங்கள், வீட்டிலேயே இருங்கள்**

---

**2. தமிழகத்தில் 'மின்னகம்' நுகர்வோர் சேவை மையம் திறப்பு**

பொதுமக்கள் மின்துறை சார்ந்த குறைகளைத் தெரிவித்திட 'மின்னகம்' என்ற புதிய மின்நுகர்வோர் சேவை மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் தொடக்கிவைத்தார்.

---

**1.** **'உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள்' என்ற அறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?**

அ) NITI ஆயோக்

ஆ) இந்திய ரிசர்வ் வங்கி

**இ) உலக வங்கி ☑**

ஈ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

✓ உலக வங்கியானது 2021–22ஆம் நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8.3 சதவீதமாக இருக்கும் என்று கணித்துள்ளது. அது முந்தைய மதிப்பீட்டில் 10.1 சதவீதமாக கணிக்கப்பட்டிருந்தது. இது, உலக வங்கியின் 'உலகளாவிய பொருளாதார வாய்ப்பு' அறிக்கையின் சமீபத்திய இதழில் வெளியிடப்பட்டுள்ளது. COVID–19'இன் இரண்டாவது அலையின் தாக்கத்தின் காரணமாக இந்தச் சரிவு ஏற்பட்டுள்ளது.

---

**2.2021ஆம் ஆண்டில், உலகின் மிகவும் வாழத்தகுந்த நகரங்களைப் பற்றிய த எகனாமிஸ்ட்டின் வருடாந்திர ஆய்வுப்பட்டியலில் முதலிடம் பிடித்த நகரம் எது?**



அ) புது தில்லி

**ஆ) ஆக்லாந்து ☑**

இ) மதுரை

ஈ) வியன்னா

✓ 2021ஆம் ஆண்டில் உலகின் மிகவும் வாழத்தகுந்த நகரங்களைப்பற்றிய த எகனாமிஸ்ட்டின் வருடாந்திர ஆய்வின்படி, ஆக்லாந்து (நியூசிலாந்து) உலகின் மிகவும் வாழத்தகுந்த நகரங்களின் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது. இதைத் தொடர்ந்து ஜப்பானின் ஒசாகா மற்றும் டோக்கியோ ஆகிய நகரங்கள் உள்ளன.

✓ முன்னர் உலகின் மிகவும் வாழத்தகுந்த நகரமான வியன்னா 12ஆவது இடத்திற்கு வந்துவிட்டது. COVID–19'ஐ கையாளுவதில் வெற்றிகரமான அணுகுமுறை காரணமாக ஆக்லாந்து முதலிடத்தைப் பிடித்துள்ளது.

---

**3.** **எந்த அரசியலமைப்பு ரீதியான பதவிக்கு அனுப் சந்திர பாண்டே நியமிக்கப்பட்டுள்ளார்?**



அ) இந்திய தலைமை நீதிபதி

**ஆ) தேர்தல் ஆணையர் ☑**

இ) CAG

ஈ) தலைமை வழக்குரைஞர்

✓ மூத்த தேர்தல் அதிகாரியான அனுப் சந்திர பாண்டே, இந்திய தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 1984ஆஆம் ஆண்டு இஆப அதிகாரியான அவர், உத்தர பிரதேச மாநிலத்தின் தலைமைச்செயலராக பணியாற்றியுள்ளார். உத்தர பிரதேசம், பஞ்சாப், கோவா, மணிப்பூர் மற்றும் உத்தரகண்ட் ஆகிய மாநிலங்களின் சட்டமன்றத் தேர்தல்களை அனுப் சந்திர பாண்டே மேற்பார்வையிடவுள்ளார்.

---

**4.** **2030ஆம் ஆண்டளவில் AIDS'ஐ முடிவுக்குக்கொண்டுவருவதற்கான அரசியல் ரீதியான தீர்மானத்தை ஏற்றுக்கொண்ட சர்வதேச நிறுவனம் எது?**

**அ) ஐநா பொது அவை ☑**

ஆ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

இ) WHO

ஈ) UNICEF

✓ வரும் 2030ஆம் ஆண்டிற்குள் AIDS'ஐ உலகிலிருந்து முற்றாக ஒழித்துக் கட்டுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐநா பொது அவைய அழைப்பு விடுத்துள்ளது. இதுதொடர்பான ஒப்புதலையும் அது அளித்துள்ளது. இந்தத் தீர்மானத்தற்கு 165 வாக்குகள் ஆதரவாகவும் 4 வாக்குகள் எதிராகவும் கிடைத்தது.

---

**5.** **ஆபரேஷன் பாஞ்சியா XIV'ஐ நடத்திய அமைப்பு எது?**

அ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஆ) இந்திய இராணுவம்

இ) இந்திய வான்படை

**ஈ) பன்னாட்டுக் காவலகம் ☑**

✓ "ஆபரேஷன் பாஞ்சியா XIV" என்ற பெயரிலான ஒரு பயிற்சியை பன்னாட்டுக்காவலகம் (INTERPOL) நடத்தியது. இதில், மருந்துகள் மற்றும் மருத்துவ தயாரிப்புகளை சட்டவிரோதமாக விற்பனை செய்வதில் ஈடுபட்ட வலைத்தளங்கள் மற்றும் இணையசந்தைகள் உட்பட 1.10 லட்சத்துக்கும் மேற்பட்ட இணைய இணைப்புகளை அவ்வமைப்பு தடை செய்துள்ளது. இந்த நடவடிக்கையில் இந்தியாவும் பங்கேற்றது. இந்தியாவுடன் 92 நாடுகளும் இந்தப் பயிற்சியில் பங்கேற்றன.

---

**6.** **டிஜிட்டல் இந்தியா கார்ப்பரேஷன் என்பது எந்த அமைச்சகத்தின் கீழுள்ள ஒரு நிறுவனமாகும்?**

அ) உள்துறை அமைச்சகம்

**ஆ) மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

இ) நிதி அமைச்சகம்

ஈ) கார்ப்பரேட் விவகார அமைச்சகம்

✓ டிஜிட்டல் இந்தியா கார்ப்பரேஷன் என்பது ஒரு இலாபநோக்கற்ற நிறுவனமாகும். அது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின்கீழ் செயல்படுகிறது. சமீபத்தில் இந்நிறுவனம், உழவர்களுக்கு 'தேவை அடிப்படையிலான தொலைநிலை வேளாண் ஆலோசனைகளை' வழங்குவதற்காக இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

✓ இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்கீழ், ICAR'இன் "DIC'இன் அளவளாவும் தகவல் பரவல் அமைப்பு மற்றும் மற்றும் கிசான்சாரதி இயங்குதளம்" ஆகியவை ஒருங்கிணைந்து சிறந்த சேவைகளை வழங்கும்.

---

**7.** **"இந்தியாவில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள்" என்ற அறிக்கையின்படி, காலநிலை மாற்றம் காரணமாக 2040ஆம் ஆண்டளவில், இந்தியாவின் வறுமை விகிதம் எவ்வளவு உயரும்?**

அ) 2%

**ஆ) 3.5% ☑**

இ) 4%

ஈ) 10%

✓ 'இந்தியாவில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள்' என்ற தலைப்பில் இலண்டனைச்சார்ந்த உலகளாவிய மதியுரையகமான ஓவர்சீஸ் டெவலப்மெண்ட் இன்ஸ்டிடியூட் வெளியிட்டுள்ளது. காலநிலை மாற்றம் காரணமாக 2040ஆம் ஆண்டளவில் இந்தியாவின் வறுமை 3.5 சதவிகிதம் அதிகரிக்கும் என்று அவ்வறிக்கை கூறுகிறது.

✓ 2100ஆம் ஆண்டளவில் காலநிலை மாற்றம் காரணமாக, இந்தியா தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 முதல் 10% வரை இழக்கும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---

**8.** **எந்த நிறுவனத்துடன் இணைந்து, ILO, 'குழந்தைத் தொழிலாளர்: உலகளாவிய மதிப்பீடுகள் 2020, போக்குகள் மற்றும் முன்னோக்கி செல்லும்பாதை' என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிட்டுள்ளது?**

**அ) UNICEF ☑**

ஆ) உலக நலவாழ்வு அமைப்பு

இ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஈ) உலக வங்கி

✓ பன்னாட்டு தொழிலாளர் அமைப்பும் UNICEFஉம் இணைந்து 'குழந்தைத் தொழிலாளர்: உலகளாவிய மதிப்பீடுகள் 2020, போக்குகள் மற்றும் முன்னேற்ற பாதை' என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன. இது, ஜூன்.12 அன்று வரும் குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான உலக நாளுக்கு முன்னதாக வெளியிடப்பட்டுள்ளது.

✓ உலகெங்கிலும் குழந்தைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை 16 கோடியாக உயர்ந்துள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.

---

**9. வட இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில், சூறாவளி உருவாவதைக் கண்டறியும் தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ள நிறுவனம் எது?**

அ) IIT மெட்ராஸ்

ஆ) IISc, பெங்களூரு

**இ) IIT கரக்பூர் ☑**

ஈ) தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனம்

✓ கரக்பூரில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் சீனாவின் கரையோர மண்டல ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள், வட இந்தியப்பெருங்கடல் பிராந்தியத்தில் சூறாவளி உருவாவதைக்கண்டறிவதற்கான ஒரு நுட்பத்தை உருவாக்கியுள்ளனர். இந்த ஆய்வு, காலநிலை மாற்றத் திட்டத்தின்கீழ், மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் ஆதரவுடன் நடத்தப்பட்டது.

---

**10. உழவின் பின்னணியில், 'NUE' என்பது எதைக் குறிக்கிறது?**

அ) Nitrogen Utility Exposure

**ஆ) Nitrogen Use Efficiency ☑**

இ) Nitrogen Ultra Efficiency

ஈ) Nitro Benzene Use Efficiency

✓ Nitrogen Use Efficiency (NUE) என்பது தாவரத்தால் உறிஞ்சப்பட்டு பயன்படுத்தப்படும் பயனுறு நைட்ரஜனின் பின்னம் என வரையறுக்கப்படுகிறது. சமீபத்தில், இந்திய உயிரி தொழில்நுட்ப வல்லுநர்கள், அரிசியில் நைட்ரஜன் பயன்பாட்டு செயல்திறனுக்கான மரபணுக்களை அடையாளங்கண்டுள்ளனர். இது, நைட்ரஜன் மாசையும் பில்லியன் கணக்கான ரூபாய் மதிப்புள்ள உரங்களையும் மிச்சப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. 16000'க்கும் மேற்பட்ட மரபணுக்களை ஆராய்ந்த பின்னர், ஆராய்ச்சியாளர்கள் 6 உயர்திறன் மரபணுக்களை பட்டியலிட்டனர்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு**

ஐந்து பேர் அடங்கிய பொருளாதார ஆலோசனைக் குழு அமைக்கப்படும் என்ற அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் இடம்பெறுவோர்:

1. இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் இரகுராம் இராஜன்

2. நோபல் பரிசுபெற்ற அமெரிக்கப்பொருளாதார நிபுணர் எஸ்தர் டஃப்ளோ

3. மத்திய அரசின் முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்ரமணியன்.

4. ராஞ்சி பல்கலைக்கழக தில்லி ஸ்கூல் ஆப் எகனாமிக்ஸ் ஜீன் ட்ரெஸ்

5. மத்திய அரசின் முன்னாள் நிதித்துறைச் செயலர் நாராயணன்

இவர்கள் பணிப்பொருளாதார நிலையை ஆராய்ந்து, பொருளாதாரத்தை மேம்படுத்த முதலமைச்சருக்கு ஆலோசனைகளை அளிப்பார்கள். இந்த முயற்சி அரசியல் வரலாற்றில் முதல்முயற்சி என்பதாகப் பார்க்கப்படுகிறது.

---

**2. உலக அளவில் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்ததில் இந்தியாவுக்கு ஐந்தாவது இடம்**

கடந்த 2020–ஆம் ஆண்டில் அதிக அளவில் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்த நாடுகளின் பட்டியலில் 6,400 கோடி டாலர் (₹4.7 லட்சம் கோடி) முதலீட்டுடன் இந்தியா ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளது. இதுகுறித்து ஐநா'இன் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளதாவது:

கரோனா பேரிடர் சா'வதேச அந்நிய நேரடி முதலீட்டில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதன் காரணமாக, கடந்த 2020'இல் சர்வதேச நாடுகளில் அந்நிய நேரடி முதலீட்டின் அளவு 35 சதவீதம் சரிவடைந்து 1 இலட்சம் கோடி டாலர்களாக குறைந்துள்ளது.

அதேசமயம், கரோனா பாதிப்புக்கு முந்தைய 2019'ஆம் ஆண்டில் இந்த முதலீடு 1.5 இலட்சம் கோடி டாலராக காணப்பட்டது. அதேசமயம், இந்தியாவில் கடந்த 2019ஆம் ஆண்டில் 5,100 கோடி டாலராக (₹3.78 லட்சம் கோடி) காணப்பட்ட அந்நிய நேரடி முதலீடு பேரிடர் காலமான 2020ஆம் ஆண்டிலும் 27% வளர்ச்சியைக்கண்டு 6,400 கோடி டாலராக (₹4.7 லட்சம் கோடி) அதிகரித்துள்ளது. இதற்கு, தகவல் & தொலைத்தொடர்பு தொழில்நுட்பத் துறையே முக்கிய காரணம். இது, உலக அளவில் அந்நிய நேரடி முதலீட்டை அதிகம் ஈர்த்த நாடுகளின் பட்டியலில் இந்தியா 5ஆவது இடத்தை பிடிக்க உதவியுள்ளது.

கரோனா பேரிடர் காரணமாக, சர்வதேச அளவில் டிஜிட்டல் கட்டமைப்பு, சேவைகளுக்கான தேவை சூடுபிடித்துள்ளது. இதன் விளைவாக, ITC துறையில் புதிய அந்நிய நேரடி முதலீட்டு திட்டங்களுக்கான அறிவிப்புகள் 22% அதிகரித்து 8,100 கோடி டாலராக (₹6 இலட்சம் கோடி) அதிகரித்துள்ளது. இதில், இந்தியாவில் ITC உள்கட்டமைப்பை உருவாக்க அமேஸான் அறிவித்துள்ள 280 கோடி டாலர் (₹20,773 கோடி) திட்டமும் முக்கிய அங்கமாகும் என ஐநா வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

---

**3. பள்ளிகளில் புகார்பெட்டி, மாணவர் பாதுகாப்பு ஆலோசனைக் குழு, ஆடை கட்டுப்பாடு: வழிகாட்டுதல்கள் வெளியீடு**

பள்ளிக் குழந்தைகளைப் பாலியல் வன்முறையிலிருந்து பாதுகாப்பது குறித்த வழிகாட்டுதல் மற்றும் இணையவழி வகுப்புகளுக்கான நெறிமுறைகள் அரசின் சார்பில் வெளியிடப்பட்டுள்ளன. இதுகுறித்த அரசாணையை பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலர் காகர்லா உஷா பிறப்பித்துள்ளார்.

**வழிகாட்டுதல்கள், நெறிமுறைகளின் விவரம்:**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கல்வி வாரியங்களைச் சேர்ந்த அனைத்துப் பள்ளிகளுக்கும் இந்த நெறிமுறைகள் பொருந்தும். மாணவர் பாதுகாப்பைத் தொர்ச்சியாக மேற்பார்வை செய்யவும், அதுசார்ந்த நடவடிக்கைகளை மேற்பாா'வை செய்யவும் ஒவ்வொரு பள்ளியிலும், 'மாணவர் பாதுகாப்பு ஆலோசனைக்குழு' அமைக்கப்படும்.

இக்குழுவில் பள்ளியின் தலைமையாசிரியர், ஆசிரியரிருவர், பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர் இருவர், பள்ளி நிர்வாக உறுப்பினர் ஒருவர், ஆசிரியரல்லாத பணியாளர் ஒருவர் மற்றும் தேவைக்கேற்ப பள்ளி சாரா வெளிநபர் ஒருவர் என உறுப்பினர்களாக இருப்பர்.

**வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகளின் முக்கிய அம்சங்கள்...**

* பள்ளிகளில் மாணவர் பாதுகாப்பு ஆலோசனைக்குழு
* ஆசிரியர்கள், மாணவர்களுக்கு ஆடைக்கட்டுப்பாடு
* புகார்களைத் தெரிவிக்க கட்டுப்பாட்டு அறை
* போக்ஸோ சட்டம் குறித்து பயிற்சி
* புகார்களைத் தெரிவிக்க பாதுகாப்புப் பெட்டிகள்
* நவ.15 முதல் 22 வரை குழந்தைகள் துன்புறுத்தலைத் தடுக்கும் வாரம்

---

**4. சேதி தெரியுமா?**

**ஜூன்.11:** பிட்காயினைச் சட்டபூர்வ நாணயமாக அங்கீகரித்து அறிவிப்பு வெளியிட்ட முதல் நாடாகியுள்ளது மத்திய அமெரிக்காவில் உள்ள எல் சால்வடார்.

**ஜூன்.12:** நெதர்லாந்தில் நடைபெற்ற ஒலிம்பிக் தகுதிச் சுற்றுக்கான மகளிர் 10,000 மீ ஓட்டத்தை எத்தியோப்பியாவைச்சேர்ந்த லெட்சென்பெட் கிடி 29:01:03 நிமிடங்களில் கடந்து புதிய உலக சாதனை படைத்தார்.

**ஜூன்.13:** கரோனா தடுப்பூசிகளை அதிகம் வீணடித்த மாநிலங்களில் ஜார்கண்ட் முதலிடம் பெற்றது. சத்தீஸ்கர், மத்திய பிரதேசம் அடுத்தடுத்த இடங்களில் இருப்பதாக மத்திய அரசு தெரிவித்தது.

**ஜூன்.14:** இந்தியாவில் உருவாக்கப்பட்ட கோவேக்சின் தடுப்பூசிக்கு அவசரகால அனுமதிதர அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பு மறுத்துவிட்டது.

**ஜூன்.15:** சீனாவின் மனித உரிமைமீறல்களை அம்பலப்படுத்திய இந்திய வம்சாவளி செய்தியாளர் மேகா ராஜகோபாலனுக்கு புலிட்சர் பரிசு அறிவிக்கப்பட்டது. ஆப்ரிக்க அமெரிக்கர் ஜார்ஜ் ஃபிளாய்ட் கொலையைப் படம் பிடித்த 18 வயது இளம்பெண் டார்னெல்லா ஃபிரேசியர் புலிட்சர் விருதின் சிறப்புப் பரிசுக்குத் தேர்வானார்.

**ஜூன்.15:** இந்தியாவில் விற்பனை செய்யப்படும் தங்க நகைகள் அனைத்துக்கும் 'ஹால்மார்க்' முத்திரை கட்டாயம் என்கிற புதிய விதிமுறை அமலுக்கு வந்தது.

**ஜூன்.15:** தமிழ்நாட்டில் அரிசி குடும்ப அட்டைத்தாரர்களுக்கு இரண்டாம் கட்டமாக ₹2,000 COVID நிவாரண நிதி வழங்கும் திட்டம் தொடங்கியது.

**ஜூன்.17:** பிரெஞ்சு ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரில் செர்பி–யாவின் ஜோகோவிச் சாம்பியன் பட்டம் வென்றார். இது அவருடைய 19ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம்.

**1.** **உலக நலவாழ்வு அமைப்பின் ஓர் அண்மைய அறிக்கையின்படி, ஒவ்வோர் ஆண்டும் சுமார் ____ மில்லியன் மக்கள் உணவுமூலம் பரவும் நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.**

அ) 250

ஆ) 350

**இ) 600 ☑**

ஈ) 750

✓ உலக நலவாழ்வு அமைப்பு உணவுமூலம் பரவும் நோய்களின் பாதிப்புக -ளை மதிப்பிடுவதற்கு உதவும் ஒரு கையேட்டை வெளியிட்டது.

✓ சுகாதார உட்கட்டமைப்பை வலுப்படுத்துதற்கு உதவும் தரவு இடைவெளி -களைக் கண்டறிவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, ஒவ்வோர் ஆண்டும் 600 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் உணவுமூலம் பரவும் நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். ஐந்து வயதிற்கு உட்பட்ட 0.12 மில்லியனுக்கும் மேற்பட்ட சிறார்கள் பாதுகாப்ப -ற்ற உணவை உட்கொள்வதால் மரணிக்கின்றனர் என்பதையும் இது எடுத்துக்காட்டுகிறது.

---

**2.** **இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட கோவிஃபைண்ட் (CoviFind) என்பது ____?**

**அ) விரைவான பிறபொருளெதிரியாக்கி பரிசோதனை ☑**



ஆ) RT-PCR பரிசோதனை

இ) ஊனீரியல் பரிசோதனை

ஈ) குருதிப்பரிசோதனை

✓ இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது அண்மையில் மெட்வெக் நிறு -வனத்தின் தன்பயன்பாட்டு COVID-19 விரைவான பிறபொருளெதிரி -யாக்கி பரிசோதனையான CoviFind'க்கு ஒப்புதல் அளித்துள்ளது.

✓ உள்நாட்டிலேயே ஆராய்ச்சி செய்யப்பட்டு உருவாக்கப்பட்ட இப்பரிசோத -னையின்மூலம், SARS-CoV-2 வைரஸை பதினைந்து நிமிடங்களுக் -குள் விரைவாக கண்டறிய முடியும்.

---

**3.** **பின்வரும் எந்தப் பதவிக்கு, அண்மையில், மகேஷ்குமார் ஜெயின் மீண்டும் நியமிக்கப்பட்டார்?**

**அ) ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் ☑**



ஆ) SEBI தலைவர்

இ) NABARD தலைவர்

ஈ) SBI தலைவர்

✓ துணை ஆளுநர் மகேஷ்குமார் ஜெயின் பதவிக்காலத்தை மேலும் இரு ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளதாக ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. M K ஜெயின், 2018ஆம் ஆண்டு ஜூன் மாதம், மூன்றாண்டுகளுக்கு துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார். ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர்களாக பணியாற்றும் மற்ற மூன்று பேர் – மைக்கேல் பத்ரா, M ராஜேஸ்வர் ராவ் மற்றும் T இரவிசங்கர்.

---

**4.** **தேகிங் பட்கை வனவுயிரி சரணாலயமானது எந்த மாநிலத்தின் தேசியப்பூங்காவாக அறிவிக்கப்பட்டுள்ளது?**

**அ) அஸ்ஸாம் ☑**



ஆ) சிக்கிம்

இ) பீகார்

ஈ) ஹிமாச்சல பிரதேசம்

✓ அஸ்ஸாம் மாநிலத்தின் தேகிங் பட்கை வனவுயிரி சரணாலயமானது அஸ்ஸாம் மாநிலத்தின் ஏழாவது தேசியப்பூங்காவாக அறிவிக்கப்பட்டது. அண்மையில், ரைமோனா, அஸ்ஸாம் மாநிலத்தின் தேசியப்பூங்காவாக அறிவிக்கப்பட்டது. மத்திய பிரதேச மாநிலத்திற்குப்பின் (11), நாட்டில் அதிக எண்ணிக்கையிலான தேசியப்பூங்காக்களைக்கொண்ட மாநிலம் அசாம். அந்தமான் மற்றும் நிகோபார் 9 தேசியப்பூங்காக்களைக் கொண்டுள்ளது.

---

**5.** **சூரியக்குடும்பத்தின் மிகப்பெரிய நிலவான கனிமீடு, பின்வரும் எந்தக் கோளின் துணைக்கோளாகும்?**

அ) சனி



**ஆ) வியாழன் ☑**

இ) புதன்

ஈ) வெள்ளி

✓ NASA'இன் ஜூனோ விண்கலமானது சூரியக்குடும்பத்தின் மிகப்பெரிய நிலவான கனிமீடை பார்வையிட்டது. அது வியாழன்கோளின் துணைக் கோளும் சூரியக்குடும்பத்தில் ஒன்பதாவது மிகப்பெரிய வான்பொருளும் ஆகும். இந்த ஆய்வுக்கலம் கனிமீடின் உயர்தெளிவுத்திறன்கொண்ட நிழற்படங்களை எடுத்துள்ளது. இந்த நிழற்படங்கள், கனிமீடின் பள்ளம் மற்றும் மேற்பரப்பு அம்சங்களை அடையாளங்காண உதவக்கூடும்.

---

**6.** **பெரும்பாலும் 'மூன்றாம் துருவம்' என அழைக்கப்படுகிற மலைத் தொடர் எது?**

**அ) ஹிந்துகுஷ் இமயமலை மலைத்தொடர் ☑**



ஆ) மேற்குத்தொடர்ச்சி மலைத்தொடர்

இ) கிழக்குத்தொடர்ச்சி மலைத்தொடர்

ஈ) ஆரவல்லி மலைத்தொடர்

✓ பெரும்பாலும் 'மூன்றாம் துருவம்' என்று அழைக்கப்படும் ஹிந்துகுஷ் இமயமலைப்பகுதி இந்தியா, நேபாளம், சீனா உள்ளிட்ட எட்டு நாடுகளில் 3,500 சகிமீ பரப்பளவில் பரவியுள்ளது. UNDP'ன் சமீபத்திய ஆய்வின்படி, ஹிந்துகுஷ் இமயமலை மலைத்தொடர்கள் 2100ஆம் ஆண்டுவாக்கில் அதன் மூன்றில் இரண்டு பங்கு பனியை இழக்கும் காரணத்தால் தென் கிழக்காசியாவில் உள்ள 2 பில்லியன் மக்கள்வரை உணவு மற்றும் நீர் பற்றாக்குறையை எதிர்கொள்ளவுள்ளனர்.

---

**7.** **பின்வரும் எவ்வமைப்புக்கு, 5 MHz அலைக்கற்றையை ஒதுக்கீடு செய்து நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?**

**அ) இந்திய இரயில்வே ☑**

ஆ) AIIMS

இ) விண்வெளி அமைச்சகம்

ஈ) BSNL

✓ இரயில்கள் & இரயில் நிலையங்களில் பொதுமக்களின் பாதுகாப்பிற்காக 700 MHz கற்றையில் 5 MHz அலைக்கற்றையை இந்திய ரயில்வேக்கு ஒதுக்க நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இது இந்திய இரயில்வேயின் தகவல்தொடர்பு மற்றும் சமிக்ஞை முறைகளை மேம்படு -த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. போக்குவரத்து வலையமைப்பில் பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்தவும் இது உதவும்.

✓ இந்த அலைக்கற்றைவாயிலாக நீண்டகால பரிணாமத்தின் அடிப்படை -யில் வழித்தடங்களில் நடமாடும் ரயில் வானொலி தொலைத்தொடர்பை வழங்க இந்திய இரயில்வே திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கு மதிப் -பிடப்பட்டுள்ள முதலீடு சுமார் ₹25,000 கோடியாகும். அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்தத் திட்டம் நிறைவடையும்.

---

**8.** **சர்வதேச இருப்புப்பாதைக்கடவு குறித்த விழிப்புணர்வு நாளை எந்த நகரத்தை அடிப்படையாகக்கொண்டு பன்னாட்டு இரயில்வே யூனியன் கடைப்பிடிக்கிறது?**

அ) ஜெனீவா




**ஆ) பாரிஸ் ☑**

இ) நியூயார்க்

ஈ) ரோம்

✓ பன்னாட்டளவிலான இருப்புப்பாதைக்கடவு குறித்த விழிப்புணர்வு நாள் என்பது இருப்புப்பாதைக்கடக்கும்போது செய்யக்கூடிய பாதுகாப்பு குறித்த விஷயங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இதனை பன்னாட்டு இரயில் போக்குவரத்து தொழிலமைப்பான பாரிஸைச் சார்ந்த சர்வதேச இரயில்வே யூனியன் முன்னெடுத்துள்ளது.

---

**9.** **நடப்பாண்டில் வரும் உலக அங்கீகார நாளுக்கான கருப்பொருள் என்ன?**

**அ) Supporting the Implementation of the SDGs ☑**

ஆ) Safety Accreditation

இ) Quality Accreditation

ஈ) Quality Certification

✓ வணிகம் மற்றும் பொருளாதாரத்தில் அங்கீகாரத்தின் பங்கை முன்னி–லைப்படுத்தவும் ஊக்குவிக்கவுமாக உலக அங்கீகார நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.9 அன்று கொண்டாடப்படுகிறது. "Supporting the Implementation of the SDGs" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும். இது, பன்னாட்டு அங்கீகார மன்றம் & பன்னாட்டு ஆய்வக அங்கீகார ஒத்துழைப்பு ஆகியவற்றால் தீர்மானிக்கப்–படுகிறது.

---

**10.** **2021'இல் G7'இன் தலைமைப்பொறுப்பைக்கொண்டுள்ள நாடு எது?**

அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**ஆ) ஐக்கியப் பேரரசு ☑**

இ) ஜெர்மனி

ஈ) பிரான்ஸ்

✓ நடப்பு 2021'இல் G7'இன் தலைமைப்பொறுப்பை வகித்துவரும் ஐக்கியப் பேரரசு இந்தியா, ஆஸி, தென்னாப்பிரிக்கா மற்றும் தென்கொரியாவை உச்சிமாநாட்டிற்கு அழைத்துள்ளது. இந்தியப்பிரதமர் மோடி, இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் நடத்திய G7 உச்சிமாநாட்டின் அமர்வுகளில் மெய்நிகராக பங்கேற்கவுள்ளார். கடந்த 2019ஆம் ஆண்டில், பிரான்ஸ், இந்தியாவை 'நல்லெண்ண கூட்டாளராக' அழைத்த பின்னர், G7 உச்சி மாநாட்டில் இந்தியப்பிரதமர் பங்கேற்பது இது இரண்டாம் முறையாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கடல்சார் மாசுக் கட்டுப்பாட்டுக் கப்பல்களை உருவாக்கும் ஒப்பந்தத்தில் மத்திய பாதுகாப்பு அமைச்சகம், ஜிஎஸ்எல் நிறுவனம் கையெழுத்து**

இந்திய கடலோரக்காவல்படையின் பயன்பாட்டிற்காக ₹583 கோடி மதிப்–பில் கடல்சார் மாசுவைக் கட்டுப்படுத்தும் 2 கப்பல்களை உருவாக்குவத–ற்காக கோவா ஷிப்யார்டு நிறுவனத்துடன் (GSL) மத்திய பாதுகாப்பு அமைச்சகம் ஜூன்.22 அன்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு, GSL நிறுவனத்தால் இந்தச் சிறப்பு கப்பல்கள் உருவாக்கப்படும். கடலில் எண்ணெய் கசிவால் ஏற்படும் இடர்பாடுகளை எதிர்கொள்ளுதல் மற்றும் மாசு ஏற்படுவதைத் திறம்பட கையாளும் வகையில் இந்திய கடலோரக்காவல்படையின் செயல்திற–னை இந்த ஒப்பந்தம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கும். இந்த இரு கப்பல்களை நவம்பர் 2024 மற்றும் 2025 மேயில் விநியோகிக்க திட்டமி–டப்பட்டுள்ளது.

---

**1.இந்தியாவின் முன்னேற எண்ணும் மாவட்டங்கள் திட்டம் குறித்த மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டுள்ள உலகளாவிய நிறுவனம் எது?**

அ) FAO

**ஆ) UNDP ☑**

இ) IMF

ஈ) உலக வங்கி

✓ ஐநா வளர்ச்சித்திட்டமானது (UNDP) இந்தியாவின் முன்னேற எண்ணும் மாவட்டங்கள் திட்டம்குறித்த சுயாதீன மதிப்பீட்டு அறிக்கையை வெளியி –ட்டுள்ளது. இவ்வறிக்கையின்படி, இந்தத்திட்டத்தின் விளைவாக துறை வளர்ச்சி & ஆளுகை மற்றும் நிர்வாகத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

✓ இது முன்னேற எண்ணும் மாவட்டங்கள் திட்டத்தின் முன்னேற்றத்தை பகுப்பாய்வு செய்து முன்னேற்றத்திற்கான பரிந்துரைகளை வழங்கியது. UNDP'இன் இந்திய பிரதிநிதி, NITI ஆயோக்கிற்கு இந்த அறிக்கையை வழங்கினார்.

---

**2. ஐநா பாதுகாப்பு அவையானது ____ உறுப்பினர்கள்கொண்ட ஓர் அமைப்பாகும்.**

அ) 10

**ஆ) 15 ☑**

இ) 20

ஈ) 30

✓ ஐநா பாதுகாப்பு அவை என்பது 15 உறுப்பினர்கள்கொண்ட ஓர் அமைப்பு ஆகும். இவ்வவையின் வீட்டோ அதிகாரம்பெற்ற நிரந்தர உறுப்பினர்கள் ஆக அமெரிக்கா, இரஷ்யா, சீனா, ஐக்கியப் பேரரசு மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் உள்ளன. சமீபத்தில், பிரேசில், ஐக்கிய அரபு அமீரகம், அல்பேனியா, கானா மற்றும் காபோன் ஆகிய 5 நாடுகள் ஐநா பாதுகாப்பு அவையில் சேருவதற்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளன.

---

**3. சமூகத்தில் _____'இன் பரவலைத் தீர்மானிப்பதற்காக செரோ ஆய்வு பயன்படுத்தப்படுகிறது.**

அ) பிறபொருளெதிரியாக்கி



**ஆ) பிறபொருளெதிரி ☑**

இ) வைரஸ் திரிபு

ஈ) மேற்கண்ட எதுவும் இல்லை

✓ சமூகத்தில் பிறபொருளெதிரிகள் இருப்பதை தீர்மானிப்பதற்காக செரோ ஆய்வு பயன்படுத்தப்படுகிறது. இந்தச்செயல்பாட்டில், இரத்த மாதிரிகளில் IgG (இம்யூனோகுளோபுலின் G) பிறபொருளெதிரிகள் இருப்பது சோதிக்க –ப்படுகின்றன. அவை COVID காரணமாக ஏற்பட்ட கடந்தகால தொற்றை தீர்மானிக்கின்றன. இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது 4ஆவது நாடு தழுவிய COVID–19 செரோ ஆய்வைத் தொடங்கவுள்ளதாக NITI ஆயோக் உறுப்பினர் Dr V K பால் அறிவித்தார்.

---

**4. வணிக அமைச்சகத்தின் சமீபத்திய தரவுகளின்படி, இந்தியாவின் இயற்கை வேளாண் பொருட்களின் ஏற்றுமதி, 2020–21இல் ____ சதவீதம் உயர்ந்துள்ளது.**

அ) 11

ஆ) 31




**இ) 51 ☑**

ஈ) 71

✓ வணிக அமைச்சகத்தின் அண்மைய தரவுகளின்படி, 2020–21ஆம் ஆண்டில், இந்தியாவின் இயற்கை வேளாண் பொருட்களின் ஏற்றுமதி 51% உயர்ந்துள்ளது. இயற்கை வேளாண் பொருட்களின் வெளிப்புற ஏற்றுமதியானது கடந்த ஆண்டின் 689 மில்லியன் டாலர்களை விஞ்சி 1,040 மில்லியன் டாலர்களைத் தொட்டது.

---

**5. IMD'இன் அண்மைய தரவுகளின்படி, கடந்த 121 ஆண்டுகளில், இந்தியாவில், 2ஆவது அதிகபட்ச மாதாந்திர மழைப்பொழிவைப் பதிவு செய்துள்ள மாதம் எது?**

அ) ஏப்ரல் 2021

**ஆ) மே 2021 ☑**



இ) ஜூன் 2021

ஈ) ஜூலை 2021

✓ இந்திய வானிலை ஆய்வு மையத்தின் (IMD) சமீபத்திய தரவுகளின்படி, கடந்த 121 ஆண்டுகளில் இந்தியாவில் மே மாதம் அதிகபட்சமாக 107.9 மிமீ மழை பதிவாகியுள்ளது. கடந்த 1901'க்குப் பிறகு இந்த மே மாதத்தில் சராசரியாக 34.18°C வெப்பநிலை, நான்காவது மிகக்குறைந்த வெப்பநி –லையாக பதிவாகியுள்ளது.

✓ மே மாதத்தில், இந்தியாவில் இம்மழைப்பொழிவு கடந்த 1901ஆம் ஆண்டில் இருந்து இரண்டாவது அதிகபட்சமாகும். அரபிக்கடல் மற்றும் வங்காள விரிகுடாவில் தலா ஒரு சூறாவளி உருவானது. 'தக்தே' புயல் அரபிக் கடலிலும், 'யாஷ்' சூறாவளி வங்காள விரிகுடாவிலும் உருவாகியது.

---

**6. AISHE அறிக்கை 2019–20'இன்படி, ஒட்டுமொத்த உயர்கல்வி சேர்க்கை விகிதம் என்ன?**

**அ) 27.1 ☑**

AISHE
ALL INDIA SURVEY ON HIGHER EDUCATION

ஆ) 37.1

இ) 47.1

ஈ) 57.1

✓ 2019–20ஆம் ஆண்டுக்கான அகில இந்திய உயர்கல்வி ஆய்வறிக்கை –யை மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்டது. ஒட்டுமொத்த உயர் கல்வி சேர்க்கை விகிதம், 2019–20ஆம் ஆண்டில் 27.1%ஆக உள்ளது.

✓ இது கடந்த 2018–19ஆம் ஆண்டில் 26.3%ஆகவும், 2014–15ஆம் ஆண்டில் 24.3%ஆகவும் இருந்தது. கடந்த 2018–19ஆம் ஆண்டு 3.74 கோடியாக இருந்த ஒட்டுமொத்த மாணவர் சேர்க்கை, 2019–20ஆம் ஆண்டில் 3.85 கோடியாக அதிகரித்து, 11.36 லட்சமாக (3.04%) வளர்ச்சியடைந்துள்ளது. இந்தக் காலக்கட்டத்தில் உயர்கல்வியில் சேர்ந்த மாணவிகளின் எண்ணிக்கை 18.2% அதிகரித்தது.

---

**7. உலகின் மிகநீள வடமான 'ஃபிர்மினா'வை கட்டமைத்த தொழில் நுட்ப நிறுவனம் எது?**

அ) மைக்ரோசாப்ட்



**ஆ) கூகிள் ☑**

இ) ஆப்பிள்

ஈ) அமேசான்

✓ ஐக்கிய அமெரிக்க நாடுகள், பிரேசில், உருகுவே & அர்ஜென்டினாவை இணைக்கும் 'Firmina' என்ற கடலடிசெல்லும் வடத்தை உருவாக்கவுள் –ளதாக கூகிள் அறிவித்தது. உலகின் மிகநீளமான வடமாக இருக்கும் இந்த வடம், குறிப்பிடப்பட்டுள்ள பிராந்தியங்களுக்கு இடையில் இணைய இணைப்புத்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இந்த வடம், அமெரிக்காவின் கீழைக்கடற்கரையிலிருந்து அர்ஜென்டினா வரை இயங்கும். மேலும் தென்னமெரிக்காவிலுள்ள பயனர்களுக்கான கூகிள் சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்தும்.

---

**8. மாசுபாட்டைக் கட்டுப்படுத்துவதற்காக 'நச்சுக்காற்று கோபுரத்தை' அமைக்கவுள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ) கர்நாடகா




ஆ) குஜராத்

**இ) புது தில்லி ☑**

ஈ) மகாராஷ்டிரா

✓ தில்லி சுற்றுச்சூழல் அமைச்சரின் கூற்றுப்படி, ஆக.15ஆம் தேதிக்குள் தேசிய தலைநகரத்தில் முதல் 'நச்சுக்காற்று கோபுரம்' அமைக்கப்படும். சோதனை அடிப்படையிலான இத்திட்டம் கடந்த ஆண்டு தொடங்கப்பட் –டாலும், தற்போது நிலவிவரும் COVID தொற்றால் அதன் கட்டுமானம் தாமதமானது. 25 மீ கட்டமைப்பில் தூசி மாசு, வாகன மாசுபாடு முதல்

அண்டை பகுதிகளில் பயிர்த்தூர் எரிப்பால் ஏற்படும் மாசுபாடு வரை 10 விதமான சிக்கல்கள் இதனால் தீர்க்கப்படும்.

---

**9.எந்த விண்வெளி நிறுவனம் தனது வெள்ளிக்கோள் பயணத்தின் ஒருபகுதியாக 'என்விஷன்' ஆய்வுக்கலத்தை அறிவித்துள்ளது?**

அ) NASA

ஆ) JAXA

இ) ISRO

ஈ) ESA ☑

- ✓ ஐரோப்பிய விண்வெளி முகமை தனது வெள்ளிக்கோள் பயணத்தின் ஒருபகுதியாக 'என்விஷன்' என்ற ஆய்வுக்கலத்தை அண்மையில் அறி -வித்தது. அமெரிக்க (USA) விண்வெளி ஆய்வு நிறுவனமான NASA, வெரிட்டாஸ் மற்றும் டாவின்சி+ என அழைக்கப்படும் 2 வெள்ளிக்கோள் பயணத்திட்டங்களைத் அறிவித்த ஒருவாரகாலத்திற்குப்பின் ESA இதை அறிவித்தது. ESA'வைப் பொறுத்தவரை, 2034–35'க்குள் இந்த ஆய்வுக் கலம் தயாராக இருக்கும்.

---

**10. ஃபோர்ப்ஸின் உலகின் சிறந்த வங்கிகள் – 2021 பட்டியலில், இந்தியாவில் முதலிடத்தில் உள்ள வங்கி எது?**

அ) இந்தியன் வங்கி

ஆ) பாரத வங்கி

இ) கனரா வங்கி

ஈ) DBS ☑

- ✓ உலகளாவிய வாடிக்கையாளர் கருத்துக்கேட்பின் அடிப்படையில் ஃபோர்ப்ஸின் உலகின் சிறந்த வங்கிகள் – 2021 பட்டியலில் DBS வங்கி இடம்பெற்றுள்ளது. இந்தியாவின் 30 உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வங் -கிகளில் முதலிடத்தில் DBS வங்கி உள்ளது.
- ✓ சந்தை ஆராய்ச்சி நிறுவனமான ஸ்டாடிஸ்டாவுடன் இணைந்து நடத்தப்ப -ட்ட ஃபோர்ப்ஸின் 'உலகின் சிறந்த வங்கிகள்' பட்டியலின் மூன்றாவது பதிப்பு இதுவாகும். இந்தப் பட்டியலில் இரண்டாவது வங்கியாக கேரள மாநிலத்தைச் சார்ந்த CSB வங்கியும், அதனைத் தொடர்ந்த இடங்களில் ICICI வங்கியும் HDFC வங்கியும் உள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்: நியூஸிலாந்து சாம்பியன்**

உலக டெஸ்ட் சாம்பியன்சிப் போட்டியின் இறுதியாட்டத்தில் நியூசிலாந்து 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி சாம்பியனானது. டெஸ்ட் கிரிக்கெட்டின் 144 ஆண்டுகால வரலாற்றில் முதல்முறையாக நடத்தப்பட்ட இந்த சாம்பியன்ஷிப் போட்டியில் பட்டத்தை வென்று புதிய வரலாறு படைத்துள்ளது நியூஸிலாந்து. இரு இன்னிங்ஸ்களிலுமாக 7 விக்கெட்டுகள் சாய்த்த கைல் ஜேமிசன் ஆட்டநாயகன் ஆனார்.

உலக டெஸ்ட் சாம்பின்ஷிப்பில் பட்டம் வென்றுள்ள நியூஸிலாந்து அணிக்கு ₹11.7 கோடியும், 2ஆம் இடம்பிடித்த இந்திய அணிக்கு ₹5.8 கோடியும் ரொக்கப்பரிசு வழங்கப்பட்டது.

---

**2. 'கவியரசு' கண்ணதாசன் – 95ஆவது பிறந்தநாள்**

---

**3. இந்திய பெருங்கடல் பகுதியில் இந்தியா–அமெரிக்கா கூட்டு போர்ப் பயிற்சி**

இந்தியாவும், அமெரிக்காவும் இந்திய பெருங்கடல் பகுதியில் மிகப்பெரிய அளவிலான 2 நாள் கூட்டு போர்ப்பயிற்சியை தொடங்கின. தென்சீன கடல்பகுதி மற்றும் இந்திய பெருங்கடல் பகுதிகளில் சீனா ஆதிக்கம் செலுத்திவரும் நிலையில், அதன்மூலம் எழும் எவ்விதமான சவாலையும் எதிர்கொள்ளும் வகையில் இந்தக் கடல் பிராந்திய பகுதிகளில் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் நாடுகள் கூட்டு போர்ப் பயிற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றன.

அமெரிக்கா சார்பில் அணுசக்தியில் இயங்கக்கூடிய 'USS ரொனால்ட் ரீகன்' விமானம் தாங்கி போர்க்கப்பல், F–18 இரக போர் விமானங்கள், தட்பவெப்பநிலைகளிலும் ஆபத்துகுறித்து துல்லியமாக முன்னெச்சரிக் -கை செய்யும் இ–2சி விமானம் ஆகியவை இந்தப் போர்ப்பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்தியா சார்பில் ஜாகுவார் மற்றும் சுகோய்–30 MKI போர் விமானங்கள், விண்ணில் பறந்தபடி எரிபொருள் நிரப்பும் IL–78 விமானம், விண்ணில் பறந்தபடி முன்னெச்சரிக்கை மற்றும் கட்டுப்பாட்டு தொழில்நுட்பத்துடன் கூடிய விமானம், கொச்சி மற்றும் டெக் போர்க்கப்பல்கள் ஆகியவை ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அமெரிக்கா சார்பில் ஏற்கெனவே, போர்க்கப்பல் குழு ஒன்றும் இந்திய பெருங்கடல் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தப் போர்க் கப்பல் குழுவில் ஏராளமான போர் விமானங்களுடன் கூடிய ஒரு விமானம் தாங்கி போர்க்கப்பல், சிறிய அளவிலான போர்க் கப்பல்கள் மற்றும் பிற கப்பல்களும் இடம்பெற்றிருக்கும்.

இந்த 2 நாள் போர்ப்பயிற்சி இந்தியா–அமெரிக்க நாடுகளிடையேயான உறவை வலுப்படுத்தும் என்பதோடு, கடல்சார் நடவடிக்கைகளிலும் இரு நாடுகளிடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்தும். வான்வழி சவால்க -ளை திறம்பட எதிர்கொள்வது, நீர்மூழ்கிக்கப்பல் எதிர்ப்பு நடவடிக்கை -ள் என்பன உள்ளிட்ட பலதரப்பட்ட போர்ப்பயிற்சிகள் இந்த இரண்டு நாள் பயிற்சியில் மேற்கொள்ளப்படும்.

---

**1.** **பாலைவனமயமாக்கலுக்கு எதிரான 14ஆவது ஐநா உயர்மட்ட கூட்டத்திற்கு தலைமைதாங்கியவர் யார்?**

**அ) நரேந்திர மோடி ☑**



ஆ) யோஷிஹைட் சுகா

இ) ஜி ஜின்பிங்

ஈ) கோத்தபய இராஜபக்ஷ

✓ இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி, பாலைவனமாதலை எதிர்த்துப்போரா-டுவதற்கான ஐநா உடன்படிக்கை நாடுகளின் (UNCCD) 14ஆவது உய-ர்மட்ட கூட்டத்திற்கு தலைமைதாங்கினார்.

✓ அண்மையில் ஐநா – 'பாலைவனமாதல், நிலச்சீரழிவு மற்றும் வறட்சி குறித்த உயர்மட்டப்பேச்சுவார்த்தை'யில் பிரதமர் மோடி, காணொலிக் காட்சி வாயிலாகப் பங்கேற்று சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வை ஐநா பொது அவையின் 75ஆவது அமர்வின் தலைவர் வோல்கன் போஸ்கிர் கூட்டினார்.

---

**2.** COVID-19 **இரண்டாவது அலைக்குப் பிறகு மருத்துவ உயிர்வளி தேவையைச் சமாளிக்க, 'இந்தியாவுக்கான $O_2$ திட்டத்'தை அறிமுகம் செய்துள்ள நாடு எது?**

அ) இலங்கை

**ஆ) இந்தியா ☑**

இ) ரஷ்யா

ஈ) இந்தோனேசியா

✓ COVID-19 இரண்டாவது அலைக்குப் பிறகான மருத்துவ உயிர்வளியின் தேவையை எதிர்கொள்வதற்கு, 'இந்தியாவிற்கான $O_2$ திட்டத்'தை இந்-தியா அறிமுகப்படுத்தியுள்ளது.

✓ இந்தத் திட்டத்தின்கீழ், அவசரகால மூலப் பொருட்களை தேசிய அளவில் விநியோகிப்பது, சிறிய அளவிலான $O_2$ ஆலைகளை நிறுவுவது, அழுத்த கருவிகள், $O_2$ கருவிகள், செறிவூட்டிகள், செயற்கை சுவாச வழங்கிகள் உள்ளிட்ட இறுதிகட்ட பொருட்களைத் தயாரிப்பது முதலிய பணிகளை தேசிய பிராணவாயுக் கூட்டமைப்பு மேற்கொள்கிறது.

---

**3.** **நடப்பாண்டு (2021) உலக யோகா நாளை முன்னிட்டு** AYUSH **அமைச்சகம் வெளியிட்ட செயலியின் பெயர் என்ன?**

அ) யோகா சைன்ஸ்

**ஆ) நமஸ்தே யோகா ☑**



இ) யோகா ஃபார் ஆல்

ஈ) பாரத் யோகா

✓ 7ஆவது உலக யோகா நாளின் தொடக்க நிகழ்வின்போது, "நமஸ்தே யோகா" என்ற திறன்பேசிசெயலி வெளியிடப்பட்டது. DD இந்தியா அலை வரிசையில் ஒளிபரப்பப்படவுள்ள காமன் யோகா புரோட்டோகால் தொடரி-ன் தொடக்கத்தை இந்நிகழ்வு குறித்தது. மொரார்ஜி தேசாய் தேசிய யோ-கா நிறுவனம் இந்தத்தொடரை தயாரிக்கிறது. உலக யோகா நாளானது ஜூன்.21 அன்று கொண்டாடப்படுகிறது.

---

**4.** COVID **தடுப்பூசிகளுக்கு, இந்தியாவில், எத்தனை சதவீதம்** GST **வரி விதிக்கப்படுகிறது?**

**அ) 5% ☑**



ஆ) 10%

இ) 18%

ஈ) 28%

✓ 44ஆவது GST கவுன்சில் கூட்டத்தின்போது, பொருட்களின் வரி விகிதம் குறைக்கப்பட்டது மற்றும் கருப்புப்பூஞ்சை நோய்த்தொற்றுக்கு சிகிச்சைய-ளிப்பதற்கான மருந்துகளுக்கு GST'யிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டன.

✓ COVID தொடர்பான அத்தியாவசிய பொருட்களின் வரிவிகிதங்கள் குறித்-து ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட அமைச்சர்கள் குழு-வின் பரிந்துரைகளின் அடிப்படையில் இது முடிவுசெய்யப்பட்டது. COVID தடுப்பூசிகளுக்கு 5% GST வரிவிதிக்கப்பட்டுள்ளது.

---

**5.** **நடப்பாண்டு (2021) 'குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான உலக நாளின்' கருப்பொருள் என்ன?**

**அ) Act now: end child labour ☑**



ஆ) Leaving No one Behind

இ) Child Labour against Humanity

ஈ) Stop Child Labour

✓ குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான உலக நாள் ஜூன்.12 அன்று அனுசரிக்கப்படுகிறது. நடப்பாண்டு (2021) வரும் இந்நாளுக்காக ஜூன் 10 அன்று "Week of Action" என்பது தொடங்கப்பட்டது. "Act now: end child labour" என்பது நடப்பாண்டு (2021) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**6.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற** PRABANDH **வலைத்தளத்துடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**

அ) MSME அமைச்சகம்

**ஆ) கல்வி அமைச்சகம் ☑**

இ) வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம்

ஈ) சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம்

✓ பள்ளிசெல்லா குழந்தைகள்குறித்த தரவுகளை தொகுப்பதற்காக கல்வி அமைச்சகம், இணைய தொகுப்பியை அறிமுகப்படுத்தியுள்ளது. சமக்கிர சிக்ஷாவின் 'பிரபந்த்' வலைத்தளத்துடன் இந்தத்தரவுகள் இணைக்கப்பட உள்ளது. 6-14 வயதுக்குட்பட்ட பின்தங்கிய பிரிவுகளைச்சார்ந்த சிறார்க ளின் சேர்க்கைகளை விரைவாக கண்காணிக்க இது உதவலாம். 16-18 வயதுக்குட்பட்ட பள்ளி குழந்தைகளுக்கு, தொலைதூரக் கல்விமுறை மூலம் கல்வியைத் தொடர நிதியுதவி வழங்கப்படும்.

---

**7.** **'**CAIMS**' எனப்படும் மேலாண்மை அமைப்புடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**

அ) MSME அமைச்சகம்

**ஆ) இளையோர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் ☑**

இ) வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம்

ஈ) சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம்

✓ மத்திய இளையோர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு, மத்திய தடகள காய மேலாண்மை முறையை (CAIMS) தொடங்கினார். இது விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் மருந்து & மறுவாழ்வு ஆதரவை நெறிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ விளையாட்டு வீரர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே சிறந்த விளை-யாட்டு காய மேலாண்மை ஆதரவை வழங்குவதையும் CAIMS தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு, காய சிகிச்சை நெறிமுறையை தரப்படுத்த இது உதவும்.

---

**8.** **ஒரே நாளில் ஐம்பது இலட்சம் மரங்களை நடவு செய்வதற்காக நாடு முழுவதும் பேரியக்கத்தை நடத்திய ஆப்பிரிக்க நாடு எது?**

**அ) கானா ☑**



ஆ) நைஜீரியா

இ) காங்கோ

ஈ) சூடான்

✓ மேலை ஆப்பிரிக்க நாடான கானா, "பசுமை கானா" என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது. அது 50 இலட்சம் கன்றுகளை நடவுசெய்வதற்கான பேரியக்கமாகும். இவ்வியக்கம், குறைந்துவரும் வனப்பரப்புகளைக் காப்-பாற்றுவதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

✓ கானா அதிபர் நானா அகுபோ-அடோ, தலைநகர் அக்ராவில் ஜூபிலி இல்ல தோட்டத்தில் நினைவுமரக்கன்று ஒன்றை நட்டார். உலகில் அதி-க சதவீதம் மழைக்காடுகளை இழந்துவரும் வெப்பமண்டல நாடுகளுள் கானாவும் ஒன்றாகும்.

---

**9. அண்மையில் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட புவிசார் குறியீடு பெற்ற ஜர்தாலு மாம்பழங்களை விளைவிக்கின்ற மாநிலம் எது?**

**அ) பீகார் ☑**

ஆ) மகாராஷ்டிரா

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) உத்தர பிரதேசம்



✓ புவிசார் குறியீடுபெற்ற ஜர்தாலு மாம்பழங்கள் பீகாரிலிருந்து இங்கிலாந்து–க்கு வர்த்தக ரீதியில் முதல்முறையாக ஏற்றுமதி செய்யப்பட்டன. லக்னோவில் உள்ள APEDA'இன் கட்டும் மையத்திலிருந்து பீகார் அரசு, இந்திய தூதரகம் மற்றும் இன்வெஸ்ட் இந்தியாவுடன் இணைந்து சாறு மற்றும் வாசனைமிக்க மாம்பழங்களை இங்கிலாந்துக்கு APEDA அனுப்–பியது. சிறந்த சுவை மற்றும் வாசனை கொண்ட ஜர்தாலு மாம்பழங்கள் 2018'ல் புவிசார் குறியீட்டை பெற்றன.

---

**10. உலகின் முதல் மர செயற்கைக்கோளான 'WISA Woodsat'ஐ ஏவவுள்ளதாக அறிவித்துள்ள நாடு எது?**

அ) ரஷ்யா

**ஆ) நியூசிலாந்து ☑**

இ) ஜெர்மனி

ஈ) இத்தாலி



✓ 'WISA Woodsat' என்பது ஒரு நானோ செயற்கைக்கோளாகும். அது, நியூ–சிலாந்திலிருந்து இவ்வாண்டின் இறுதிக்குள் விண்வெளிக்கு ஏவப்பட உள்ளது. இது உலகின் முதல் மர செயற்கைக்கோள் ஆகும். இந்த நானோ செயற்கைக்கோள் என்பது கனசதுர வடிவ கட்டமைப்பாகும். பிர்ச் ஒட்டுப்பலகையால் ஆன அதன் உணரிகள் ஐரோப்பிய விண்வெளி முகாமையால் உருவாக்கப்பட்டதாகும். இது, ஓர் அமெரிக்க விண்வெளி நிறுவனமான 'இராக்கெட் லேப்' உருவாக்கிய ஏவுகணை எலக்ட்ரானி–லிருந்து ஏவப்படும்.

---

**1. அண்மையில், சிறப்பு புலிட்சர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட டார்னெல்லா ஃப்ரேஷியர் சார்ந்த நாடு எது?**

**அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

ஆ) ஐக்கியப் பேரரசு

இ) ஜெர்மனி

ஈ) ஆஸ்திரேலியா



✓ புலிட்சர் பரிசு என்பது இதழியல் துறையில் வழங்கப்படும் மிகவும் மதிப்பு மிக்க விருதாகும். ஜார்ஜ் பிலாய்டின் மரணத்தை படமாக்கியதற்காக அமெரிக்க இளைஞியான டார்னெல்லா ஃப்ரேஷியர் இந்த விருதைப் பெற்றார். COVID தொற்றுநோய்குறித்த செய்திகளை சிறப்புற முறையில் வழங்கியதற்காக மதிப்புமிக்க பொது சேவைக்கான விருதை, நியூயார்க் டைம்சுக்கு புலிட்சர் குழுமம் வழங்கியது.

---

**2.** நடப்பாண்டு (2021) பிரஞ்சு ஓபன் போட்டியின் மகளிர் பட்டத்தை வென்றவர் யார்?

**அ) பார்போரா கிரெஜிகோவா ☑**

ஆ) நவோமி ஒசாகா

இ) சிமோனா ஹாலெப்

ஈ) ஜெனிபர் பிராடி



✓ 2021ஆம் ஆண்டு பிரெஞ்சு ஓபன் போட்டியில் பார்போரா கிரெஜிகோவா தனது முதல் கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பட்டத்தை வென்றார். இதன் மூலம் இந்தப்பட்டத்தை வென்ற முதல் செக் பெண் என்ற பெருமையை அவர் பெற்றார். 2018 பிரெஞ்சு ஓபன், 2018 விம்பிள்டன் மற்றும் 2021 பிரெஞ்சு ஓபன் ஆகியவற்றில் மகளிர் இரட்டையர் பட்டங்களையும், 2019, 2020, மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளில் ஆஸ்திரேலிய ஓபனில் கலப்பு இரட்டையர் பட்டங்களையும் அவர் வென்றுள்ளார்.

---

**3.** கடந்த 52 ஆண்டுகளில், 4 கிராண்ட்ஸ்லாம்களையும் இருமுறை வென்ற முதல் வீரர் யார்?

அ) ரோஜர் பெடரர்

**ஆ) நோவக் ஜோகோவிச் ☑**

இ) ரபேல் நடால்

ஈ) ஸ்டீபனோஸ் சிட்சிபாஸ்



✓ 2021ஆம் ஆண்டு பிரெஞ்சு ஓபன் போட்டியின் இறுதிப்போட்டியில் மூத்த டென்னிஸ் வீரர் நோவக் ஜோகோவிச் தனது 19ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்று வரலாற்று சாதனை படைத்தார். ஜோகோவிச், 52 ஆண்டுகளில், 4 கிராண்ட்ஸ்லாம்களை இரண்டு முறை வென்ற முதல் வீரரும் ஆனார்.

---

**4.** தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகம் உருவாக்கப்படவுள்ள மாநில -ம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) மகாராஷ்டிரா

**இ) குஜராத் ☑**

ஈ) கேரளா



✓ குஜராத் மாநிலத்தில் உள்ள லோத்தலில் தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகத்தை உருவாக்குவதற்கான ஒத்துழைப்பிற்காக நடுவண் கலாசா -ரம் மற்றும் மத்திய துறைமுகங்கள், கப்பல் & நீர்வழிப்போக்குவரத்து அமைச்சகங்களுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

✓ குஜராத்தின் ஆமதாபாத்திலிருந்து சுமார் 80 கிமீட்டர் தொலைவிலுள்ள லோத்தல் தளத்திற்கு அருகில், உலகத்தரம்வாய்ந்த வசதியுடன் உருவா -க்கப்படவுள்ளது. பன்னாட்டு சுற்றுலாத்தலமாக உருவாக்கப்படும் இந்த வளாகத்தில், இந்தியாவின் கடல்சார் பாரம்பரியம் காட்சிப்படுத்தப்படும்.

---

**5.** BRICS நெட்வொர்க் பல்கலைக்கழகத்திற்கான இந்தியாவின் முதன்மை நிறுவனம் எது?

அ) IISc, பெங்களூர்

**ஆ) IIT மும்பை ☑**

இ) IIT தில்லி

ஈ) IIT சென்னை

✓ மும்பை இந்திய தொழில்நுட்ப நிறுவனமானது மின்சார போக்குவரத்து குறித்த BRICS நெட்வொர்க் பல்கலைக்கழகங்களின் முந்நாள் மெய்நிகர் மாநாட்டை நடத்தியது. இவ்வாண்டு 13ஆவது BRICS உச்சிமாநாடானது, கல்வித்துறையின்கீழ் இந்தியா நடத்தும் நிகழ்வுகளின் ஒருபகுதியாக நடத்தப்பட்டது. BRICS நெட்வொர்க் பல்கலைக்கழகம் என்பது 5 BRICS உறுப்புநாடுகளைச்சார்ந்த உயர்கல்வி நிறுவனங்களின் ஒன்றியமாகும். BRICS நெட்வொர்க் பல்கலைக்கழகத்திற்கான இந்தியாவின் முதன்மை நிறுவனமாக IIT–மும்பை உள்ளது.

---

**6.** சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'Data Lake' என்பது பின்வரும் எந்த அமைப்பின் வலைத்தளமாகும்?

அ) RBI

**ஆ) NHAI ☑**

இ) CBI

ஈ) DRDO

✓ வெளிப்படைத்தன்மை, சமீப தொழில்நுட்பம் ஆகியவற்றை அதிகரிக்க, நெடுஞ்சாலை திட்டப்பணிகளில், ஆளில்லா வானூர்திகள்மூலமான படப்பதிவை கட்டாயமாக்க சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின்கீழ் செயல்படும் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) கட்டாயமாக்கியுள்ளது.

✓ இதன்படி ஒப்பந்ததாரர்கள், நடைபெற்றுவரும் தேசிய நெடுஞ்சாலை திட்டப்பணிகளை மேற்பார்வை ஆலோசகரின் குழு தலைவர் முன்னி -லையில் டிரோன்மூலம் காணொளி எடுத்து, தேசிய நெடுஞ்சாலை ஆணைய இணையதளத்தின் 'டேட்டா லேக்'கில் பதிவேற்றம் செய்ய வேண்டும். மேற்பார்வை ஆலாசகர்கள் இதை ஆய்வு செய்து தங்கள் கருத்துக்களை, டிஜிட்டல் மாதாந்திர அறிக்கையில் சமர்ப்பிக்கவேண்டும்.

---

**7.** ஆழ்கடல் திட்டத்தை செயல்படுத்தும் நடுவண் அமைச்சகம் எது?

அ) MSME அமைச்சகம்

**ஆ) புவி அறிவியல் அமைச்சகம் ☑**

இ) வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம்

ஈ) சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம்



✓ நடுவண் புவி அறிவியல் அமைச்சகத்தின் ஆழ்கடல் ஆய்வுத்திட்டத்துக்கு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழு ஒப்புதலளித்து -ள்ளது. இதன்மூலம் ஆழ்கடல் வளங்கள் ஆராயப்பட்டு நிலையான பயன்பாட்டுக்கான ஆழ்கடல் தொழில்நுட்பங்கள் உருவாக்கப்படும்.

✓ ஒவ்வொரு கட்டமாக, ஐந்தாண்டு காலத்துக்கு அமல்படுத்தப்படவுள்ள இந்த ஆழ்கடல் ஆய்வுத்திட்டத்தின் செலவு ₹4,077 கோடியாக இருக்கும்.

---

**8.** கிழக்கு கடற்கரை பொருளாதார வழித்தடத்தை உருவாக்குவதில் இந்தியாவின் முன்னணி பங்காளராக இருக்கும் வங்கி எது?

அ) AIIB

**ஆ) ADB ☑**

இ) உலக வங்கி

ஈ) IMF

✓ நாட்டின் கிழக்கு கடற்கரை பொருளாதார (ECEC) வழித்தடத்தை உரு வாக்குவதில் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) இந்தியாவின் முன்னணி பங்காளராக இருக்கும். தமிழ்நாட்டில் சென்னை–கன்னியாகுமரி வரை -யிலான தொழிலக வழித்தடத்தின் (CKIC) வழியாக போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துவதற்காக ADB'உம் நடுவணரசும் $484 மில் -லியன் டாலர் மதிப்பிலான கடனொப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

✓ CKIC, கிழக்கு கடற்கரை பொருளாதார வழித்தடத்தின் ஒருபகுதியாகும்; அது மேற்கு வங்கத்திலிருந்து தமிழ்நாடு வரை நீண்டுள்ளது.

---

**9.** நடப்பாண்டின் (2021) உலக குருதிக்கொடை நாள் நிகழ்வுகளை நடத்திய நாடு எது?

அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஆ) ஜெர்மனி

**இ) இத்தாலி ☑**

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்



- ✓ ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.14 அன்று உலக குருதிக்கொடை நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. பாதுகாப்பான குருதியின் தேவை மற்றும் குருதி மாற்றத்திற்குத் தேவையான குருதியின் உயிர்காக்கும் கூறுகள்குறித்து உலகம் முழுவதும் இந்நாள் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. 2021ஆம் ஆண்டில் வரும், உலக குருதிக்கொடை நாளுக்கான வாசகமாக, "Give blood and keep the world beating" உள்ளது.
- ✓ இத்தாலி தனது தேசிய குருதி மையம்மூலம், நடப்பாண்டின் (2021) உலக குருதிக்கொடை நாள் நிகழ்வுகளை நடத்தியது.

---

**10.** 2021 NATO உச்சிமாநாடு ஏற்பாடு செய்யப்பட்ட நகரம் எது?

**அ) பிரஸ்ஸல்ஸ் ☑**

ஆ) ஜெனீவா

இ) கெய்ரோ

ஈ) தாவோஸ்

- ✓ வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் நடப்பாண்டுக்கான (2021) உச்சிமாநாடு, NATO உறுப்புநாடுகளின் அரச தலைவர்கள் மற்றும் அரசாங்கத் தலைவர்களின் 31ஆவது கூட்டமாகும். இது பெல்ஜியத்தின் பிரஸ்ஸலில் நடைபெற்றது. சீனா, உலகிற்கு சவால்களை முன்வைக்கிறதென NATO தலைவர்கள் எச்சரித்தனர். அமெரிக்க அதிபர் ஜோ பிடன் கலந்துகொண்ட முதல் NATO உச்சிமாநாடும் இதுதான்.
- ✓ முன்னதாக G7 நாடுகளின் குழுமம், சீனா மற்றும் தைவானில் நிலவும் மனித உரிமைகள்குறித்தான ஓர் அறிக்கையை வெளியிட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்திய – அமெரிக்க படைகள் கூட்டுப் பயிற்சி நிறைவு**

இந்திய பெருங்கடல் பகுதியில் அமெரிக்க கடற்படையுடன் இணைந்து இந்திய கடற்படை மற்றும் இந்திய வான்படை மேற்கொண்ட இரண்டு நாள் ஒருங்கிணைந்த கூட்டு பயிற்சி நிறைவடைந்தது. இதுதொடர்பாக மத்திய செய்தி தகவல் பிரிவு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இந்திய கடற்படையின் மிக் 29கே விமானம், நீண்டதூர ரோந்துவிமானம், கப்பல்கள், உலங்கூர்திகள் உள்ளிட்டவையும், இந்திய வான்படையின் ஜாகுவார் மற்றும் சு 30 MKI போர்விமானங்கள், வானிலேயே எரிபொருள் நிரப்பும் விமானம் உள்ளிட்டவையும் இக்கூட்டுப் பயிற்சியில் பங்கேற்றன.

அமெரிக்கா தரப்பில் இருந்து ரொனால்ட் ரீகன் விமானம் தாங்கி போர்க்கப்பல், F18 போர்விமானங்கள், தாக்குதல் உலங்கூர்திகள் உள்ளிட்டவை 2 நாள் ஒருங்கிணைந்த கூட்டு பயிற்சியில் பங்கேற்றன. இரு நாடுகள் இடையேயான பாதுகாப்புப்படைகள் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், கூட்டு இராணுவங்கள் பகிர்ந்துகொள்ளக்கூடிய விஷயங்களை வலியுறுத்தவும், சர்வதேச கடல்பகுதிகளில் சுதந்திரத்தை உறுதிசெய்யவும், திறந்தவெளி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய இந்தோ–பசிபிக் பகுதிக்கான உரிமையை நிலைநாட்டவும், விதிமுறைகள் சார்ந்த படை நடவடிக்கைகள், சர்வதேச நெறிமுறைகளுக்கும் மற்றுமொரு மைல்கல்லாக இந்தக் கூட்டுப் பயிற்சி அமைந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**2. சீர்மிகு நகரங்கள் திட்டத்தைச் செயல்படுத்துவதில் உத்தர பிரதேசம் முதலிடம்: தமிழ்நாட்டுக்கு மூன்றாமிடம்**

சீர்மிகு நகரங்கள் (ஸ்மார்ட்சிட்டி) திட்டத்தைச் செயல்படுத்துவதில் உத்தர பிரதேச மாநிலம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. தமிழ்நாடு மூன்றாமிடம் பெற்றுள்ளது. நகரங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் கடந்த 2015 ஜூன்.25 அன்று சீர்மிகு நகரங்கள் திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டத்தின்படி, நாட்டில் 100 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு கட்டமைப்புவசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு நிதி ஒதுக்கி வருகிறது.

இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதன் ஆறாம் ஆண்டையொட்டி சிறப்பு விருதுகளை மத்திய வீட்டுவசதி–நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் அறிவித்தது. அதன்படி, சீர்மிகு நகரங்கள் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்துவதில் உத்தர பிரதேசம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இதில் மத்திய பிரதேச மாநிலம் இரண்டாமிடத்தையும் தமிழ்நாடு மூன்றாமிடத்தையும் பிடித்துள்ளன. யூனியன் பிரதேசங்களின் பட்டியலில் சண்டிகர் முதலிடத்தைப் பிடித்துள்ளது. சிறந்த சீர்மிகு நகரத்துக்கான விருது மத்திய பிரதேசத்தின் இந்தூர், குஜராத் மாநிலத்தின் சூரத் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. சீர்மிகு நகரங்கள் தலைமைத்துவ விருது ஆமதாபாத், வாராணசி, ராஞ்சி ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சமூக அம்சங்கள், நிர்வாகம், கலாசாரம், நகர சுற்றுச்சூழல், சுகாதாரம், பொருளாதாரம், நீர்பயன்பாடு, நகரப்போக்குவரத்து உள்ளிட்ட பிரிவுகளின்கீழ் கடந்த 2018ஆம் ஆண்டு முதல் இந்த விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் கரோனா தொற்று மேலாண்மை, ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையங்கள், போக்குவரத்து நெரிசல் மேலாண்மை, திறந்தவெளியை முறையாகப் பயன்படுத்துதல், கழிவுகளிலிருந்து எரிசக்தி உற்பத்தி உள்ளிட்ட பிரிவுகளின்கீழ் விருதுகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய வீட்டுவசதித்துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

சுற்றுச்சூழலை மேம்படுத்தியதற்கான பிரிவில் இந்தூர், சூரத், ஈரோடு ஆகிய நகரங்கள் விருதுகளைப் பெற்றுள்ளன. நகரப் போக்குவரத்து பிரிவில் ஔரங்காபாத், சூரத், ஆமதாபாத் ஆகிய நகரங்கள் முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளன. நகர சுற்றுச்சூழல் பிரிவில் போபால், சென்னை நகரங்கள் முதலிடத்தைப் பிடித்துள்ளன. நிர்வாகப் பிரிவில் வதோதராவும், கலாசாரப் பிரிவில் இந்தூர், சண்டிகர் நகரங்களும், சுகாதாரப்பிரிவில் திருப்பதி, இந்தூர் நகரங்களும் முதலிடம் பிடித்துள்ளன.

---

**3. பினாகா ராக்கெட் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது DRDO**

இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட நீண்டதூரம் சென்று தாக்கும் பினாகா ராக்கெட் சோதனையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (DRDO) நடத்தியது. ஒடிஸா மாநிலம் பாலேசுவரம் மாவட்டத்திலுள்ள சந்திப்பூரில் மொத்தம் 25 பினாகா ராக்கெட்கள் வெற்றிகரமாக பரிசோதனை நடத்தப்பட்டது.

---

**4. 'பொலிவுரு நகரம்' திருப்பதிக்கு 5 விருதுகள்**

மத்திய அரசு வெளியிட்டுள்ள ஸ்மார்ட் நகரங்களின் தரவரிசைப் பட்டியலில் திருப்பதி மாநகருக்கு 5 விருதுகள் கிடைத்துள்ளன. நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஸ்மார்ட் சிட்டிகளில் (பொலிவுரு நகர்) திருப்பதியும் ஒன்று. அதனால் திருப்பதியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இங்கு சுத்தம் சுகாதாரமும் நன்றாகப்பேணப்பட்டு வருகிறது. இதற்காக ஒவ்வொரு ஆண்டும் திருப்பதி மாநகரம் மத்திய அரசிடமிருந்து ஒரு விருதை பெற்று வந்த நிலையில் இந்த ஆண்டு ஒட்டு மொத்தமாக 5 விருதுகளை பெற்றுள்ளது.

இந்தூர், சூரத் நகரங்களுக்கு அடுத்து ஐந்து விருதுகளைப் பெற்ற ஒரே 'பொலிவுரு நகர்' திருப்பதி என்ற பெருமையைப் பெற்றுள்ளது. அதில் சுத்தம் சுகாதாரம் பேணுதற்கும், இ–ஹெல்த் பிரிவுகளின் கீழ் நாட்டின் முதலிடமும், சிறந்த நகரம் மற்றும் எகானமி பிரிவுகளின் கீழ் இரண்டாம் இடமும், நகர்ப்புற சுற்றுச்சூழல் பிரிவின் கீழ் மூன்றாம் இடத்தையும் தக்க வைத்துக்கொண்டுள்ளது. முதன்முறையாக திருப்பதி நகருக்கு ஐந்து விருதுகள் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**1. இந்திய வானிலை ஆய்வு மையமும் ICMR'உம், கீழ்காணும் எந்த நோய்க்கான வல்லுநர் குழுவை அமைத்துள்ளன?**

அ) AIDS



**ஆ) மலேரியா ☑**

இ) COVID

ஈ) டெங்கு

✓ இந்திய வானிலை ஆய்வு மையமும் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமும் (ICMR), "மலேரியா நோ மோர்" என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்துடன் இணைந்து மலேரியா மற்றும் காலநிலை தொடர்பான இந்திய இருமுகமை வல்லுநர் குழுவை உருவாக்கியுள்ளது.

✓ இந்தியாவில் மலேரியாவை விரைவாக கண்டறிவதற்கான காலநிலை அடிப்படையிலான தீர்வுகளை ஆராய்ந்து வழங்குவதை இக்குழு நோக்க –மாகக் கொண்டுள்ளது.

---

**2. மேற்கூரையில் பொருத்துவதன்மூலம் COVID தொற்றைக் கண்ட –றியக்கூடிய 'COVID அலாரம்' என்றவொன்றை உருவாக்கியுள்ள நாடு எது?**

அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்



ஆ) சீனா

**இ) ஐக்கியப் பேரரசு ☑**

ஈ) இந்தியா

✓ மேற்கூரையில் பொருத்துவதன்மூலம் 15 நிமிடங்களில் பாதிக்கப்பட்ட நபர்களைக் கண்டறியும் திறன்பெற்ற 'COVID அலாரம்' என்றவொன்றை ஐக்கியப்பேரரசைச் சார்ந்த அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

✓ இந்தத் துல்லியமான சாதனத்தை வானூர்தி அறைகள், வகுப்பறைகள், பராமரிப்பு இல்லங்கள் மற்றும் அலுவலகங்களில் சோதனையிட பயன்ப –டுத்தலாம். தோலால் உற்பத்தி செய்யப்படும் வேதிப்பொருட்களைக் உணர்வதன்மூலமோ அல்லது கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நபர்களின் சுவாசத்தின்மூலமோ இதன் உணரி செயல்படுகிறது.

---

**3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற 'நியூ ஷெப்பர்ட்' என்பது எந்த விண்வெளி முகமையின் ஏவுகல அமைப்பாகும்?**

அ) ஸ்பேஸ்X



ஆ) NASA

**இ) புளூ ஆர்ஜின் ☑**

ஈ) ரோஸ்கோஸ்மோஸ்


✓ அமேசான் நிறுவனரான ஜெஃப் பெசோஸின் விண்வெளி நிறுவனமான புளூ ஆர்ஜின், அண்மையில், நியூ ஷெப்பர்டில் பயணிப்பதற்கான முதல் இருக்கைக்கான இணையவழி ஏலத்தை நிறைவு செய்தது.

✓ சுற்றுலாப் பயணிகளை விண்வெளிக்கு அழைத்துச் செல்வதற்காக உருவாக்கப்பட்ட ஏவுகல அமைப்பு இது. இவ்விருக்கையை ஏலமெடுக்க 159 நாடுகளிலிருந்து 7,600'க்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளனர். $28 மில்லியன் டாலருக்கு இதனை ஒருவர் ஏலத்தில் எடுத்தார். அவர், ஜெஃப் பெசோஸுடன் 'நியூ ஷெப்பர்டில்' விண்வெளிக்கு பறப்பார்.

---

**4. இரத்தசோகை முக்த் பாரத் குறியீட்டில் முதலிடத்திலுள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு



ஆ) மகாராஷ்டிரா

**இ) மத்திய பிரதேசம் ☑**

ஈ) கேரளா

✓ இரத்தசோகை முக்த் பாரத் குறியீட்டில் மத்திய பிரதேச மாநிலம் 64.1 மதிப்பெண்களுடன் முதலிடத்தில் உள்ளது. இது தேசிய சுகாதார இயக்க –த்தால் வெளியிடப்படுகிறது. மத்திய பிரதேசத்தைத் தொடர்ந்து ஒடிஸா 59.3 மதிப்பெண்களுடன் இரண்டாமிடத்தில் உள்ளது. ஹிமாச்சல பிரதேச மாநிலம் இந்த ஆண்டு மூன்றாமிடத்திற்கு முன்னேறியுள்ளது; அது 2018-19ஆம் ஆண்டில் 18ஆவது இடத்தில் இருந்தது.

✓ கர்ப்பிணிப் பெண்களில் கிட்டத்தட்ட 50%, ஐந்து வயதிற்கு குறைவான குழந்தைகளில் 59%, வளரிளம்பருவ பெண்கள் 54% மற்றும் கர்ப்பிணி அல்லாத பாலூட்டாத பெண்களில் 53% பேர் இந்தியாவில் இரத்த சோகை நோய்க்கு ஆளாகியுள்ளனர்.

---

**5. ICAN'இன் ஒரு சமீப அறிக்கையின்படி, அணுவாயுதங்களுக்காக அதிக செலவினம் செய்துள்ள நாடு எது?**

**அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

ஆ) சீனா

இ) இந்தியா

ஈ) ரஷ்யா

✓ அணுவாயுதங்களை ஒழிப்பதற்கான ஜெனீவாவைச் சார்ந்த பன்னாட்டு இயக்கம் (ICAN) "Complicit: 2020 Global Nuclear Weapons Spending" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

✓ ஆயுதங்களுக்காக செலவு செய்த நாடுகள், இலாபமீட்டிய நிறுவனங்கள் குறித்த தகவல்களை இந்த அறிக்கை விவரிக்கிறது. இந்தத் தொகை கடந்த ஆண்டைவிட $1.4 பில்லியன் டாலர் அதிகரித்துள்ளது. $37.4 பில்லியன் டாலர்கள் செலவு செய்து அமெரிக்கா முதலிடத்திலும், $10.1 பில்லியன் டாலர்கள் செலவு செய்து சீனா இரண்டாமிடத்திலும் உள்ளது. இரஷ்யா, இங்கிலாந்து & பிரான்ஸ் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

---

**6. 2021 – உலக கொடுக்கும் குறியீட்டை வெளியிடுகிற நிறுவனம் எது?**

**அ) சேரிட்டீஸ் எய்ட் பவுண்டேஷன் ☑**




ஆ) உலக வங்கி

இ) பன்னாட்டு மன்னிப்பு அவை

ஈ) உலக நலவாழ்வு அமைப்பு

✓ நடப்பாண்டிற்கான (2021) உலக கொடுக்கும் குறியீட்டை சேரிட்டீஸ் எய்ட் பவுண்டேஷன் வெளியிட்டுள்ளது. COVID-19 மற்றும் அதனுடன் தொடர்புடைய முடக்கங்கள், உலகெங்குமுள்ள நாடுகளின் போக்கை மாற்றியுள்ளதாக அவ்வறிக்கை கூறுகிறது. உலகின் தாராள மனப்பாங்கு –டைய நாடுகளில் இந்தியா பதினான்காவது இடத்தில் உள்ளது. அந்தக் குறியீட்டில், இந்தோனேசியா முதலிடத்தில் உள்ளது.

---

**7. கெல்ஃபாண்ட் சவால் – 2021'ஐ வென்ற செஸ் வீரர் யார்?**

அ) கொனேரு ஹம்பி



**ஆ) D குகேஷ் ☑**

இ) விஸ்வநாதன் ஆனந்த்

ஈ) பெண்டாலா ஹரிகிருஷ்ணா

✓ இந்திய செஸ் வீரர் D குகேஷ், $15,000 பரிசு மதிப்புடைய கெல்ஃபாண்ட் சவால் செஸ் பட்டத்தையும், மெல்ட்வாட்டர்ஸ் சாம்பியன்ஸ் செஸ் சுற்றுப் பயணத்திற்கான நுழைவுச்சீட்டையும் வென்றார். 15 வயதான குகேஷ், பிரக்னானந்தாவுக்கு எதிரான போட்டி உட்பட நான்கு சுற்றுகளையும் வென்றார். 2019 மார்ச்சில், கிராண்ட்மாஸ்டர் பட்டத்திற்கு தகுதிபெற்ற இரண்டாவது இளம் வீரரானார் இவர்.

---

**8. உலக மூத்தோர் வன்கொடுமை ஒழிப்பு விழிப்புணர்வு நாள் கடைப்பிடிக்கப்படும் தேதி எது?**

அ) ஜூன்.10

**ஆ) ஜூன்.15 ☑**

இ) ஜூன்.20

ஈ) ஜூன்.25

✓ ஐநா அவையானது ஒவ்வோர் ஆண்டும் வரும் ஜூன்.15ஆம் தேதியை உலக மூத்தோர் வன்கொடுமை ஒழிப்பு விழிப்புணர்வு நாளாக (World Elder Abuse Awareness Day) அனுசரிக்கிறது. இந்த நாள், மூத்தோர் வன்கொடுமையைத் தடுப்பதற்கான பன்னாட்டு வலையமைப்பால் (INPEA) 2006'இல் தொடங்கப்பட்டது. ஐநா பொது அவை, இது தொடர்பாக 2011ஆம் ஆண்டில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. "Safeguard older persons during COVID-19 and beyond" என்ற தலைப்பில் இந்த ஆண்டுக்கான நாள் கொண்டாடப்பட்டது.

**9.** 'நீடித்த வளர்ச்சி இலக்குகள் அறிக்கை – 2021'இன்படி SDG குறியீட்டில் முதலிடம் பிடித்த நாடு எது?

அ) இந்தியா

ஆ) சீனா

இ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**ஈ) பின்லாந்து ☑**



✓ நீடித்த வளர்ச்சி தீர்வுகள் வலையமைப்பானது அண்மையில் நீடித்த வளர்ச்சி அறிக்கை – 2021'ஐ வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையின்படி, SDG குறியீட்டில் பின்லாந்து 85.9 மதிப்பெண்களுடன் முதலிடத்திலும், சுவீடன் மற்றும் டென்மார்க் இரண்டாமிடத்திலும் உள்ளன. 193 நாடுக–ளுள், 60.1 மதிப்பெண்களுடன் இந்தியா 120ஆவது இடத்தில் உள்ளது.

**10.** அண்மையில் வெளியிடப்பட்ட எந்த அறிக்கை "The race against time for smarter development" என்ற தலைப்பில் இருந்தது?

அ) உலக வளர்ச்சி அறிக்கை

ஆ) உலகளாவிய பொருளாதார முன்னேற்றம்

இ) ஐநா நீடித்த வளர்ச்சி அறிக்கை

**ஈ) UNESCO அறிவியல் அறிக்கை ☑**

✓ UNESCO அறிவியல் அறிக்கையின் ஏழாவது பதிப்பானது அண்மையில், "The race against time for smarter development" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையானது அறிவியல் துறையில், கடந்த ஐந்து ஆண்டுகளில், நாடுகள் பின்பற்றி வரும் வளர்ச்சிப்பாதை குறித்து விரிவாக பகுப்பாய்வு செய்கிறது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வங்கிகள் தனியார்மயமாக்கம்: அமைச்சரவை செயலர் தலைமையில் முக்கிய கூட்டம்**

இரு பொதுத்துறை வங்கிகளைத் தனியார்மயமாக்குவது தொடர்பாக அமைச்சரவை செயலர் தலைமையிலான முக்கிய கூட்டம் நடைபெற்றது. இரு பொதுத்துறை வங்கிகள் தனியார்மயமாக்கப்படும் என்று நடப்பு 2021-22ஆம் நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும்போது மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்திருந்–தார். அதைத்தொடர்ந்து, தனியார்மயமாக்கப்பட வேண்டிய வங்கிகள் குறித்த பரிந்துரைகளை NITI ஆயோக் அமைப்பு, அமைச்சரவை செயலர் தலைமையிலான குழுவுக்கு வழங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், பொதுத்துறை வங்கிகளைத் தனியார்மயமாக்கும் நடவடி–க்கைகளைத் துரிதப்படுத்துவது தொடர்பான கூட்டம் அமைச்சரவை செயலர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. பொதுத்துறை வங்கிகளைத் தனியார்மயமாக்குவதற்கான வழிமுறைகளை வகுப்பது தொடர்பாகவும் கூட்டத்தின்போது ஆலோசிக்கப்பட்டது. தனியார்மயமாக்–கப்பட வேண்டிய வங்கிகளின் விவரங்களை பங்கு விலக்கலுக்கான அமைச்சர்கள் அடங்கிய குழுவுக்கு அமைச்சரவை செயலர் தலைமையி–லான குழு வழங்கவுள்ளது.

நடப்பு நிதியாண்டில் இரு பொதுத் துறை வங்கிகள், ஒரு பொதுத்துறை காப்பீட்டுவிநிறுவனம் உள்ளிட்டவற்றைத் தனியாருக் வாயிலாக ₹1.75 லட்சம் கோடியைத் திரட்டுவதற்கு மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ள–து. கடந்த நிதியாண்டில் இந்த இலக்கு ₹2.10 லட்சம் கோடியாக நிர்ண–யிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த 4 ஆண்டுகளில் 14 பொதுத்துறை வங்கிகள் மற்ற வங்கிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. கடந்த நிதியாண்டில் மட்டும் 10 பொதுத்துறை வங்கிகள் ஒன்றிணைக்கப்பட்டு 4 வங்கிகளாக மாற்றப்பட்டன. மத்திய அரசின் நடவடிக்கைகள் காரணமாக, பொதுத்துறை வங்கிகளின் எண்ணிக்கை 27'இலிருந்து 12ஆகக் குறைந்துள்ளது.

**2. தேசிய தடகள சாம்பியன்ஷிப்: கம்பு ஊன்றித்தாண்டுதலில் தமிழ்நாட்டு–க்கு தங்கம்**

தேசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிருக்கான கம்பு ஊன்றித் தாண்டுதலில் தமிழ்நாட்டின் பரணிகா இளங்கோவன் முதலிடம் பிடித்தார். அவர் 3.90 மீட்டர் தாண்டி தங்கம் வெல்ல, மத்திய பிரதேச மாநிலத்தின் பபிதா படேல் (3.40 மீ), தமிழ்நாட்டின் ரோசி மீனா பால்ராஜ் (3.30 மீ) ஆகியோர் முறையே அடுத்த இரு இடங்களைப் பிடித்தனர்.

மகளிருக்கான உயரந்தாண்டுதலில், கேரளத்தின் ஏஞ்செல் பி தேவசியா (1.65 மீ) முதலிடமும், தமிழக வீராங்கனை ஜிஜி ஜார்ஜ் ஸ்டீபன் (1.60 மீ) 2ஆம் இடம் பிடித்தனர்.

ஆடவர் 800 மீ ஓட்டத்தில் ஹரியானாவின் கிருஷன் குமார் 1 நிமிடம் 50.15 விநாடிகளில் இலக்கை எட்ட, உத்தரகண்டின் அனு குமார் (1 நிமிடம் 51.05 விநாடி) 2ஆம் இடமும், ஹரியாணாவின் மஞ்சித் சிங் (1 நிமிடம் 51.44 விநாடி) 3ஆம் இடமும் பிடித்தனர்.

மகளிர் பிரிவில் ஹார்மிலன் 2 நிமிடம் 2.57 விநாடிகளில் பந்தயத்தை நிறைவு செய்ய, தில்லியின் சந்தா (2 நிமிடம் 3.36 விநாடி) 2ஆம் இடம், நிமலி (2 நிமிடம் 5.69 விநாடி) 3ஆம் இடமும் பிடித்தனர்.

**1. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற, இணையதளமான 'ISIபீடியா' என்பதுடன் தொடர்புடைய துறை எது?**

அ) நலம்

**ஆ) பருவநிலை மாற்றம் ☑**

இ) சமயம்

ஈ) விளையாட்டு

✓ பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கம் குறித்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் போட்ஸ்டாம் நிறுவனத்தின் தலைமையிலான பன்னாட்டு ஆராய்ச்சியாளர்கள் குழு, 'ISIபீடியா' என்றவொரு இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இது அணுகக்கூடிய தரவு, வரைபடங்கள் மற்றும் கோட்டுருக்கள் மற்றும் உலகளாவிய ஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட நாடு அளவிலான தகவல்களை வழங்குகிறது. காலநிலை தாக்க அறிவியலை பொதுமக்கள் அணுகுமாறு செய்வதைத் தவிர, பகுப்பாய்வுகள்பற்றிய நுண்ணறிவையும் இது வழங்குகிறது.

---

**2. CSIR–மத்திய அறிவியல் கருவிகள் அமைப்பானது PIVA என்ற கருவியை உருவாக்கியுள்ளது. அது எதன் மதிப்பை அளவிடுகிறது?**

அ) பாஸ்பரஸ்



**ஆ) ஐயோடின் ☑**

இ) அம்மோனியம்

ஈ) மேற்கூறிய எதுவும் இல்லை

✓ அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றத்தின் மத்திய அறிவியல் கருவிகள் அமைப்பானது Precision Iodine Value Analyzer தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது. PIVA என்பது ஐயோடின் மதிப்பை அளவிடுவதற்கான ஒரு கருவியாகும். இது, தாவர எண்ணெய்களில், நிறைவுறாத அளவை அளவிடும். உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்த உணவு சோதனை உபகரணத்திற்கு இந்திய உணவுப்பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் (FSSAI) அங்கீகாரம் வழங்கியுள்ளது.

---

**3. பின்வரும் எந்தச்சட்டத்தின்கீழ் NAFED பதிவு செய்யப்பட்டுள்ளது?**

அ) நிறுவனங்கள் சட்டம்

ஆ) வங்கி ஒழுங்குமுறை சட்டம்

**இ) கூட்டுறவு சங்கங்கள் சட்டம் ☑**

ஈ) NABARD சட்டம்

✓ இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு லிட் (NAFED) கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. வேளாண் விளைபொருட்களின் கூட்டுறவு சந்தைப்படுத்தலை ஊக்குவிப்பதற்காக இது நிறுவப்பட்டுள்ளது. அண்மையில், NAFED "NAFED செறிவூட்டப்பட்ட தவிட்டெண்ணெயை" அறிமுகப்படுத்தியது.

✓ இது, இவ்வெண்ணெயின் இறக்குமதியை வெகுவாகக் குறைப்பதோடு, ஆத்ம நிர்பார் பாரத் முன்னெடுப்புக்கு ஓர் உத்வேகத்தை அளிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

---

**4. பைன் தீவு பனிப்பாறை அமைந்துள்ள இடம் எது?**

அ) இமயமலை



ஆ) ஆல்ப்ஸ்

**இ) அண்டார்டிகா ☑**

ஈ) கிரீன்லாந்து

✓ பைன் தீவு பனிப்பாறை என்பது அண்டார்டிகாவின் மிகப்பெரிய பனி நீரோடைகளுள் ஒன்றாகும். மேலும் அது அப்பகுதியில் வேகமாக உருகி வரும் பனியடுக்குகளுள் ஒன்றாகவும் உள்ளது. வாஷிங்டன் பல்கலை மற்றும் பிரிட்டிஷ் அண்டார்டிக் ஆய்வு ஆகியவற்றின் ஓர் அண்மைய ஆய்வின்படி, பைன் தீவு பனிப்பாறையின் பனி அடுக்குகள் விரைவாக உடைந்துவிடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது முழுமையாக உருகினால் உலகின் கடல் மட்டங்களில் 0.5 மீ உயர்வு ஏற்படக்கூடும்.

---

**5. விவாடெக் தொழில்நுட்ப மாநாட்டை நடத்திய நாடு எது?**

**அ) பிரான்ஸ் ☑**

ஆ) சீனா

இ) இந்தியா

ஈ) ரஷ்யா

✓ 'விவாடெக்' என்பது ஆண்டுதோறும் நடைபெறும் ஒரு தொழில்நுட்ப மாநாடு ஆகும். அது பிரான்ஸின் பாரிஸில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 2016 முதல் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்தியப் பிரதமர் மோடி, 2021 விவாடெக் மாநாட்டில் சிறப்புரையாற்றினார். அங்கு, தொழில்நுட்ப முன்னணியில் இந்தியா மற்றும் பிரான்ஸின் நெருங்கிய தொடர்பை அவர் எடுத்துரைத்தார்.

---

**6. சில்வர்லைன் என்பது பின்வரும் எந்த மாநிலத்தின் முதன்மை இரயில் திட்டமாகும்?**

அ) கர்நாடகா

**ஆ) கேரளா ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) உத்தர பிரதேசம்


✓ பகுதியளவு அதிவேக இரயில் திட்டமான சில்வர்லைன் திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்துவதற்கு கேரள மாநில அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. ₹63,940 கோடி செலவிலான இத்திட்டம், கேரளத்தின் வட மற்றும் தென்பகுதிகளை இரயில் மூலம் இணைத்து பயண நேரத்தைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இது, சமீபத்திய காலங்களில் அம்மாநிலத்தில் நிகழ்த்தப்படும் மிகப்பெரிய உட்கட்டமைப்பு திட்டங்களுள் ஒன்றாகும்.

---

**7. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற, 'இன்டர்ஸ்டெல்லர் பவுண்டரி எக்ஸ்ப்ளோரர் (IBEX) செயற்கைக்கோளை' ஏவிய விண்வெளி நிறுவனம் எது?**

**அ) NASA ☑**



ஆ) ESA

இ) ISRO

ஈ) JAXA

✓ NASA'இன் புவியைச் சுற்றிவரும் இன்டர்ஸ்டெல்லர் பவுண்டரி எக்ஸ்ப்ளோரர் (IBEX) செயற்கைக்கோளிலிருந்து பெறப்பட்ட தரவைப்பயன்படுத்தி முதன்முறையாக பரிதிசார்கோளத்தின் எல்லையை அறிவியலாளர்கள் வரைபடமாக்கியுள்ளனர். இது சூரியனும் விண்மீன் வளிகளும் எவ்வாறு தொடர்புகொள்கின்றன என்பதற்கான சிறந்த புரிதலை வழங்கும். இந்தப்பகுதியின் முப்பரிமாண வரைபடம் பரிதிசார்கோளம் என்று அழைக்கப்படுகிறது.

---

**8. போலந்து ஓப்பன் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற இந்திய மல்யுத்த வீராங்கனை யார்?**

அ) சாக்ஷி மாலிக்



ஆ) கவிதா தேவி

இ) பபிதா குமாரி

**ஈ) வினேஷ் போகத் ☑**

✓ வார்சாவில் நடந்த போலந்து ஓப்பனில் இந்திய மல்யுத்த வீரர் வினேஷ் போகத், 53 கிலோ எடைப்பிரிவில் தங்கம் வென்றார். இதற்கு முன்னர் மேட்டியோ பெல்லிகோன் நிகழ்வு (மார்ச்) மற்றும் ஆசிய சாம்பியன்ஷிப் (ஏப்ரல்) ஆகியவற்றில் அவர் தங்கப்பதக்கங்களை வென்றுள்ளார்.

✓ இறுதிப்போட்டியில், 8–0 என்ற புள்ளிக்கணக்கில் உக்ரைனின் கிறிஸ்டியானா பெரெசாவுக்கு எதிராக வினேஷ் வெற்றிபெற்றார். இந்த வெற்றி, அவரை டோக்கியோ ஒலிம்பிக்கில் முதலிடத்திற்கு கொண்டுசெல்லும்.

---

**9.** **பாலைவனமாக்கல் மற்றும் வறட்சிக்கு எதிரான உலக நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ) ஜூன்.17 ☑**

ஆ) ஜூன்.18

இ) ஜூன்.19

ஈ) ஜூன்.20

✓ பாலைவனமயமாதலை தடுப்பதற்காக பன்னாட்டளவில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள்குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் ஜூன்.17 அன்று பாலைவனமயமாதல் மற்றும் வறட்சிக்கு எதிரான உலக நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

✓ வலுவான சமுதாய ஈடுபாடு மற்றும் ஒத்துழைப்புமூலம் நிலச்சீரழிவை தடுக்கமுடியும் என்பதை அனைவருக்கும் நினைவூட்டுவதற்கான ஒரு தனிப்பட்ட தருணமாக இந்நாள் அமைந்துள்ளது. "Restoration.Land.Reco-very: We build back better with healthy land" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**10.** **சர்வதேச 'குடும்பத்திற்கு பணமனுப்புதல்' நாள் கடைப்பிடிக்கப்படும் தேதி எது?**

அ) ஜூன்.15

**ஆ) ஜூன்.16 ☑**

இ) ஜூன்.17

ஈ) ஜூன்.18

✓ சர்வதேச 'குடும்பத்திற்கு பணமனுப்புதல்' நாளானது உலகம் முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.16 அன்று கொண்டாடப்படுகிறது.

✓ "Recovery and resilience through digital and financial inclusion" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும். தனிநபர்கள் அல்லது கூட்டு செயற்பாடுகள்மூலம் பணமனுப்புவதன் தாக்கத்தை அதிகரிக்கக்கூடிய வழிகளைக்கண்டறிய அரசாங்கங்கள், தனியார்துறை நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு சமூகங்கள் ஆகியவற்றுக்கு இந்நாள் அழைப்புவிடுக்கிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அக்னி பிரைம் ஏவுகணை சோதனை வெற்றி**

அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் திறன் கொண்ட, கண்டம் விட்டு கண்டம் பாயும் அதிநவீன அக்னி பிரைம் ஏவுகணை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது. அக்னி இரக ஏவுகணைகளில் அதிநவீன, மேம்பட்ட வகையாக அக்னி பிரைம் ஏவுகணை விளங்குகிறது. 1000 கிமீ முதல் 2000 கிமீ தூரம்வரையுள்ள இலக்குகளை எட்டும் திறனை இந்த ஏவுகணை பெற்றுள்ளது.

பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு அமைப்பு (DRDO) உருவாக்கிய இந்த ஏவுகணை, ஒடிஸா மாநிலத்தின் பாலேசுவரம் அருகே உள்ள APJ அப்துல் கலாம் தீவிலிருந்து விண்ணில் ஏவி வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது. கிழக்குக் கடற்கரையோரத்தில் அமைக்கப்பட்டிருந்த பல்வேறு தொலைதூரத் தொடர்பு நிலையங்கள் மற்றும் ரேடார் நிலையங்களின்மூலம் ஏவுகணை கண்காணிக்கப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட பாதையில் பயணித்து இந்த ஏவுகணை மிகத்துல்லியமாக இலக்கைத் தாக்கியது.

---

**2. 5 லட்சம் வெளிநாட்டு பயணிகளுக்கு இலவச விசா**

சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில் இந்தியாவுக்கு வருகை தரும் 5 லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு நுழைவு இசைவு இலவசமாக வழங்கப்படும். அடுத்த ஆண்டு மார்ச்.31 வரை செயல்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்தின்கீழ், முதல் ஐந்து இலட்சம் வெளிநாட்டுப் பயணிகளுக்கு மட்டும் கட்டணமின்றி நுழைவு இசைவு வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின்மூலமாக இந்தியாவுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். இந்தத் திட்டத்துக்காக ₹100 கோடி ஒதுக்கப்படவுள்ளது. பதிவுசெய்யப்பட்ட சுற்றுலா வழிகாட்டிகளுக்கு ₹1 இலட்சம் வரையும், சுற்றுலாத்துறை சார்ந்த மற்ற தொழிலாளர்களுக்கு ₹10 லட்சம் வரையும் 100% உத்தரவாதத்துடன் கடன் வழங்கப்படும்.

---

**3. இந்திய வீராங்கனை ராஹி சர்னோபாத் தங்கம் வென்றார்**

உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி குரோஷியாவில் உள்ள ஒசிஜெக் நகரத்தில் நடைபெற்று வருகிறது. இதில் பெண்களுக்கான 25 மீ பிஸ்டல் பந்தயத்தில் இறுதிச்சுற்றில் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு தகுதிபெற்றுள்ள இந்திய வீராங்கனையான மராட்டியத்தைச்சேர்ந்த ராஹி சர்னோபாத் 39 புள்ளிகள் பெற்று தங்கம் வென்றார். இந்தப் போட்டியில், இந்தியா வெல்லும் முதல் தங்கம் இதுவாகும். ஏற்கனவே இந்தியா ஒரு வெள்ளியும், 2 வெண்கலப்பதக்கமும் வென்றுள்ளது.

---

**4. புதிய சட்டம் – ஒழுங்கு டிஜிபியாக சைலேந்திர பாபு நியமனம்**

தமிழ்நாடு காவல்துறை சட்டம் – ஒழுங்கு DGP திரிபாதி ஓய்வுபெறுவதால், புதிய சட்டம் – ஒழுங்கு டிஜிபியைத் தேர்வு செய்யும் பணி சில நாட்களாக நடந்து வந்தது. இந்நிலையில், UPSC'இலிருந்து வந்த பட்டியல் அடிப்படையில் புதிய சட்டம் – ஒழுங்கு டிஜிபியாக சைலேந்திர பாபுவை நியமித்து அரசு அறிவித்துள்ளது.

தமிழகக் காவல்துறையில் உயரிய பதவி, சட்டம்– ஒழுங்கு டிஜிபி பதவி. தீயணைப்புத் துறை, சிபிசிஐடி, சீருடைப் பணியாளர் தேர்வாணையம், சிறைத்துறை, லஞ்ச ஒழிப்புத்துறை என பல டிஜிபிக்கள் பதவியில் இருந்தாலும் அனைத்திற்கும் தலையாயப் பதவி சட்டம்– ஒழுங்கு டிஜிபி அல்லது காவல்துறை தலைமை இயக்குநர் பதவி. இதை ஹெட் ஆஃப் தி போலீஸ் ஃபோர்ஸ் (HOPF) என்றும் அழைக்கிறார்கள்.

இந்தப் பதவிக்கு வரும் IPS அதிகாரியை தமிழ்நாடு அரசு நேரடியாகத் தேர்வுசெய்தாலும் அதற்கான பட்டியலை மத்திய அரசு தேர்வாணையத்துக்கு (UPSC) சமர்ப்பித்து அவர்கள் அளிக்கும் பட்டியலிலிருந்தே ஒருவரைத் தேர்வு செய்ய முடியும். இது உச்சநீதிமன்ற உத்தரவு. அப்படித் தேர்வு செய்யப்படுபவர் அடுத்த 2 ஆண்டுகளுக்குக் கட்டாயம் பதவியில் இருப்பார்.

புதிய சட்டம் – ஒழுங்கு டிஜிபி சைலேந்திர பாபு 1987ஆம் ஆண்டு பேட்ச் ஐபிஎஸ் அதிகாரி. தற்போது ரயில்வே டிஜிபியாகப் பதவி வகிக்கிறார். காவல்துறையில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி சட்டம் – ஒழுங்கு பிரிவிலும் அதிக அனுபவம் உள்ளவராவார். அவர், 'நீங்களும் ஐபிஎஸ் அதிகாரி ஆகலாம்', 'சாதிக்க ஆசைப்படு', 'உடலினை உறுதிசெய்' உள்ளிட்ட 10'க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

---